# சரணம் சரணம்

கி. வா. ஜகந்நாதன்



அமுத நிலையம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சரணம் சரணம்

(அபிராமி அந்தாதி விளக்கம்—பகுதி 3)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
46, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை-14.
தொ. பேசி. 8261343

(C) உரிமை பதிவு
அமுதம்—239
முதற் பதிப்பு—டிசம்பர், 1970
மூன்றும் பதிப்பு

விலை ரூ. 30-00

Sri Yeses Print House.
4, 5. Thanappa Chetty Street,
Madras-600 005.

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி

## (15 முதல் 75 வரை)

எண்கள் - பாட்டின் எண்கள்


| | |
|---|---|
| அரணம் பொருள் | 51 |
| அருணும் புயத்தும் | 58 |
| அழகுக் கொருவரும் | 71 |
| இல்லாமை சொல்லி | 54 |
| என் குறை தீர | 72 |
| ஐயன் அளந்த | 57 |
| ஒன்றுய் அரும்பி | 56 |
| ககனமும் வானும் | 65 |
| கண்களிக்கும்படி | 70 |
| சின்னஞ் சிறிய | 53 |
| தங்கச் சிலை | 62 |
| தங்குவர் கற்பக | 75 |
| தஞ்சம் பிறிதில்லை | 59 |
| தனம்தரும் | 69 |
| தாமம் கடம்பு | 73 |
| தேறும்படி | 63 |
| தோத்திரம் செய்து | 67 |
| நயனங்கள் மூன்றுடை | 74 |
| நாயேனையும் | 61 |
| பாரும் புனலும் | 68 |
| பாலினும் சொல் | 60 |
| மின்னுயிரம் | 55 |
| வல்லபம் ஒன்றறி | 66 |
| வீணே பலிகவர் | 64 |
| வையம் துரகம் | 52 |

# பொருளடக்கம்


முன்னுரை
செய்யுள் முதற் குறிப்பு அகராதி
1. சரணம் சரணம் .... 1
2. தவம் புரிந்தவர்களின் அடையாளங்கள் .... 6
3. பெரிய தவம் ... 13
4. வறுமையைப் போக்கும் வழி .... 20
5. யாருக்குப் பயன்? .... 28
6. அன்னையின் எளிமை .... 35
7. அறப் பெருஞ் செல்வி .... 42
8. மேலான புகலிடம் .... 52
9. அன்னையின் இயல்பு .... 61
10. திருவடி வைக்கும் இடங்கள் .... 71
11. பெற்ற பேறு .... 77
12. குறியிட்ட நாயகி .... 86
13. பாறையில் அடித்த முளை .... 94
14. எங்கும் அன்னை .... 102
15. அம்பிகையின் வல்லபம் .... 112
16. இலையும் மலரும் .... 118
17. வித்தும் விளைவும் .... 126
18. அடியார் பெறும் செல்வம் .... 141
19. எல்லாம் தரும் .... 148
20. கண்டு கொண்ட அழகு .... 157
21. என்ன குறை? .... 164
22. யார் குறை? .... 175
23. அவர் எழுதிய உருவம் .... 185
24. அடியார் இயல்பு .... 191
25. சொர்க்கமும் முக்தியும் .... 199

# முன்னுரை

ஸ்ரீவித்யா உபாசகராகிய அபிராமிபட்டர் பாடியருளிய அபிராமி அந்தாதி சிறந்த பாராயண நூல். அதனை நாள்தோறும் பயபக்தியுடன் ஓதிவந்தால் பல நல்ல பயன்கள் உண்டகும். தமிழில் அம்பிகையைப் பற்றி இத்தகைய நூல் வேறு இல்லை. அன்னையைப்பற்றிய துதி நூல்கள் பல இருந்தாலும், அவளைப் பரதேவதையாகக் கொண்டு வழிபடும் உபாசகர் இயற்றிய நூல் இது ஒன்றே என்று தோன்றுகிறது. இவ்வாசிரியர் அபிராமியம்மை பதிகமும் படியிருக்கிறுர்.

அன்னையிடம் இடைவிடாத பக்தி செய்து மனமுருகித் தம்மை மறந்து நின்று அவளுடைய அருளுருவத்தை உள்முகத்தே தரிசனம் செய்யப் பெற்றவர், இந்தப் பேரன்பர். அபிராமி அந்தாதியில் தாம் பெற்ற அநுபவத்தை இவ்வாசிரியர் சொல்லும் இடங்கள் சில உண்டு. அவை மணிவாசகர் திருவாக்கோடும், அருணகிரியார் அநுபவ அருட் பாடல்களோடும் ஒப்புநோக்குவதற்குரியன. பொருள் மிகத் தெளிவாக விளங்கும் சொற்களால் இயன்ற பாடல்களானுலும் ஆழமான அநுபவத்தில் எழுந்தவை இவை.

அம்பிகையின் திருவுருவ வருணனையும், அவளுடைய தனித்தலைமையும், அவளுடைய அருட் செயல்களும் இப் பாடல்களில் விரவி வருகின்றன. எம்பெருமாட்டியின் பெருங்கருணைத் திறத்தை இவ்வாசிரியர் எடுத்து உரைக்கும்போது நம்முடைய உள்ளம் உருகுகிறது. அத்தகைய இடங்களே அபிராமிபட்டரின் தனித்தன்மையைக் காட்டுவனவாக இருக்கின்றன.

அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்கிறவர்கள் இப்போது மிகுதியாகி வருகிறுர்கள். டில்லி, பம்பாய், சென்னை முதலிய இடங்களிலுள்ள பெண்மணிகள் வெவ்

வேறு வகையான இராகங்களில் நூல் முழுவதையும் பாடி அம்பிகையை வழிபாடு செய்து வருகிறார்கள். ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகள் அருளிய சௌந்தர்ய லஹரியை இசையுடன் ஓதி இன்பம் காணுவதைப் போல இந்த அருள் நூலையும் பாடி இன்புறுகிறார்கள். இந்த அந்தாதியின் நடை மிகவும் தெளிவாக இருப்பதால் எளிதில் மனப் பாடம் செய்வதற்கு ஏற்றதாக இருக்கிறது.

திருப்பனந்தாள் காசிமடாலயத்தில் தலைவர்களாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நூலுக்கு உரை எழுதி வெளியிட வேண்டுமென்று பணித்தார்கள். அவ்வாறே எழுதி அதைக் காசிமடத்து வெளியீடாக வெளியிட்டேன். அதற்குமுன் திரு ம. கா. வேற்பிள்ளை அவர்களின் உரை ஒன்றுதான் அபிராமி அந்தாதிக்கு இருந்தது. இப்போது இந்த நூலுக்குப் பலர் உரை எழுதியிருக்கிறார்கள். இந்த அருளாளர் திருவாக்கு அன்னையின் அருளால் பாராயணத்தாலும் இசைப்பாட்டாகப் பாடுவதாலும் உரை வகுப்பதாலும் வரவர எங்கும் மிகுதியாகப் பரவிவருவது இன்பத்தைத் தருகிறது.

அபிராமி அந்தாதி முழுவதுக்கும் பதவுரையாக எழுதிய உரையே முதலில் வெளியாயிற்று. ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு அவர்களின் அருளாசியோடு ஸ்ரீரங்கத்தில் 'சங்கர கிருபா' என்ற மாதப்பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. அப்போது அதன் ஆசிரியராக இருந்த அமரர் ஸ்ரீ கே. ஆர். வேங்கடராமையரவர்கள் அந்தப் பத்திரிகைக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வர வேண்டுமென்று பணித்தார். அவர் விருப்பப்படியே சில கட்டுரைகள் எழுதினேன். அப்பால் அபிராமி அந்தாதியில் உள்ள ஒவ்வொரு பாட்டுக்கும் கட்டுரை வடிவில் விளக்கம் எழுதலாம் என்று தோன்றியது. திருமுறைப் பாடல்கள், கந்தர் அலங்காரப் பாடல்கள் ஆகியவற்றுக்குக் கட்டுரை வடிவில் விளக்கம் எழுதிப் புத்தகங்களாக

வெளியிட்டிருக்கிறேன். அவற்றைப் படித்த அன்பர்கள் அந்த முறையைப் பாராட்டினார்கள். அந்த முறையையே பின்பற்றி அபிராமி அந்தாதி விளக்கக் கட்டுரைகளைச் சங்கர கிருபாவில் மாதந்தோறும் எழுதத் தொடங்கினேன். இன்னும் இந்தக் கட்டுரை வரிசை அந்தப் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கிறது.

கட்டுரைகளைப் படித்த அன்பர்கள் அவை புத்தக வடிவில் வந்தால் ஒருசேரப் படித்துப் பயன் பெறலாம் என்று சொன்னார்கள்; கடிதம் எழுதினார்கள். அவர்கள் விருப்பத்தை அறிந்து சங்கர கிருபாவில் வந்த கட்டுரைகளைத் தொகுத்துச் செப்பம் செய்து இருபத்தைந்து பாடல்கள் அடங்கிய பகுதிகளாக வெளியிட முன்வந்தேன். முதல் இருபத்தைந்து பாடல்களின் விளக்கம் 'எழில் உதயம்' என்னும் பெயரோடு வெளியாயிற்று. 26 முதல் 50 வரையில் உள்ள பாடல்களின் விளக்கம், ''மாலை பூண்ட மலர்'' என்ற பெயரோடு வெளிவந்தது. இப்போது 51 முதல் 75 வரையில் உள்ள பாடல்களுக்குரிய விளக்கம் ''சரணம் சரணம்'' என்ற பெயருடன் வெளியாகிறது.

எந்தக் கடவுளை அன்பர்கள் உபாசனை செய்தாலும் அவர்களுக்கு உண்டாகும் அநுபவம் ஒரே மாதிரிதான் இருக்கும். ஆற்றுநீர், குளத்துநீர், ஊற்றுநீர் என்று வெவ்வேறு நிலைகளிலுள்ள நீரைக் குடித்தாலும் தாகம் தீர்வது என்ற அநுபவம் எல்லோருக்கும் ஒன்றாகவே இருக்கும். இறைவனை வழிபட்டு அவன் அருளநுபவத்தைப் பெற்றவர்களின் திருவாக்கை ஊன்றிப் பார்த்தால், தாம் பெற்ற அநுபவத்தை அவர்கள் சொல்லும் பகுதிகள் பெரும்பாலும் ஒத்து நிற்பதைக் காணலாம். ஆதலால் இந்த விளக்கக் கட்டுரைகளில் மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், தாயுமானவர் முதலிய அநுபூதிமான்களின் திருவாக்குகளை ஒப்புமையாகக் காட்டியிருக்கிறேன். எந்த வகையான நூலானாலும் அதிலுள்ள பல கருத்துக்களுக்கு அரண் செய்வனவாகத் திருக்குறட்பாக்கள் விளங்கு

கின்றன. இந்தக் கட்டுரைகளில் குறள் பல இடங்களில், மேற்கோளாக எடுத்தாளப்பெறுகிறது.

அன்னையின் உருவ அழகையும், கருணையையும், தலைமையையும், வீரத்தையும், திருவிளையாடல்களையும் எடுத்துரைக்கும் நூல்களில் சிறந்து நிற்பது லலிதா சகசிர நாமம் அன்னையின் திருநாமங்கள் ஆயிரத்தில் அவளுடைய பல்வேறு திறங்களும் அடங்கியிருக்கின்றன. அபிராமிபட்டர் சிறந்த தேவி உபாசகர்; அன்னையை லலிதா சகசிரநாமத்தால் பலமுறை அருச்சித்து வழிபட்டவர். ஆகவே அந்தத் திருநாமங்களும் அவற்றின் பொருளும் அவர் உள்ளத்தே நின்று நிலவுவது இயல்பே. இந்தப் பாடல்களில் அந்த உணர்வு பலவாறு வெளியாகின்றது. லலிதா சகசிரநாமத்திலுள்ள திருநாமங்கள் பலவற்றை அங்கங்கே மேற்கோளாகக் காட்டியிருக்கிறேன்.

முருகன் திருவருளால் அபிராமி அந்தாதி விளக்கக் கட்டுரைகளின் மூன்றாவது பகுதியாகிய இது இப்போது வெளியாகிறது. நான்காவது பகுதியும் வெளி வந்தால் இந்தக் கட்டுரைகள் நிறைவுறும். வடிவேற்பெருமான் அதையும் நிறைவேற்றிக் கொடுப்பான் என்று நம்புகிறேன்.

இந்தக் கட்டுரைகளைச் சங்கர கிருபாவில் வெளியிட்டு உதவிய அப்பத்திரிகையின் ஆசிரியருக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் துணையாசிரியராக இருக்கும் வியாகரண சிரோமணி, வேதாந்த வித்வான் பிரம்மஸ்ரீ கே. எஸ். வேங்கடராம சாஸ்திரிகள் இத்தக் கட்டுரைகள் வெளிவருவதில் மிக்க ஆர்வமுடையவர்; நான் தாமதித்தாலும் என்னைத் தூண்டி எழுதும்படி செய்கிறவர். அவருக்கும் என்னுடைய நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காந்தமலை'<br>3 - 5 - 75

கி. வா. ஜகந்நாதன்

# சரணம் சரணம்

அபிராமியம்மையின் திருவடிகள் நமக்கு அரணுக உள்ளன என்று பாடிய அபிராமிபட்டருக்குத் தொடர்ந்து ஒரு நினைவு வருகிறது. அப்பெருமாட்டியின் திருவடிகளையே புகலாகப் புகுகின்ற அடியார்களையும் உள்ளிட்டே, "சரணம் அரண் நமக்கே" என்று பாடினுர். அம்பிகையினிடம் சரணுகப் புகுகின்றவர்கள் இந்த உலகத்தில் உள்ள அடியார்கள் மட்டுமா? தேவர்களெல்லாம் அவ்வாறு அடைக்கலம் புகுந்து உய்பவர்களே. தேவர்கள் புகுவது பெரிய காரியமா? தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவனுகிய மகாதேவனே அவளுடைய அடியார் கூட்டத்தில் சேர்ந்தவன்தான். திருமாலும் அத்தகையவனே. இந்த நினைப்பு வருகிறது பட்டருக்கு.

மகாதேவனுடைய பெருமையை நினைத்துப் பார்க்கிருர். திரிபுரசங்காரம் செய்த பராக்கிரமம் அவருடைய எண்ணத்தில் மிதக்கிறது. பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று மதில்களைத் தனித்தனி உடையவை திரிபுரங்கள். அவற்றுக்குத் தலைவர்களாக இருந்தவர்கள் வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்னும் மூன்று அசுரர்கள். மூன்று புரங்களும் வானில் பறந்துகொண்டே இருக்கும். திடீரென்று பூமியில் இறங்கும். அவற்றின்கீழ் அகப்பட்டுப் பல மக்கள் நசுங்கி மடிவார்கள். தமக்கு எந்த விதமான லாபமும் இல்லாவிட்டாலும் பிறர் துன்புறுவதைக் கண்டு இன்புறுவது அசுரர் இயல்பு. அந்த மதில்களே தங்களுடைய பெருஞ் சொத்தாக எண்ணி இறுமாந்து வாழ்ந்தார்கள் அசுரர்கள். இத்தனை பேரை அழிக்கிறோமே

என்ற இரக்கம் சிறிதும் அவர்களுடைய உள்ளத்தில் இல்லை. அரக்கர், அசுரர் ஆகியவர்கள் நெஞ்சில் ஈரம் இல்லாதவர்கள். "இரக்கம் என்றொருபொருள் இலாத நெஞ்சினர் அ ர க் க ர்" என்று கம்பர் பாடுவார். இரக்கத்தையே அருள் என்றுகூறுவர். மற்ற உயிர்களிடம் இரக்கம் காட்டுவது உயர்ந்த பண்பு. எல்லா உயிர்களிடத்திலும் அருளுடையவராக நடந்துகொள்பவர்கள் இந்த உலகத்தில் வாழும் தேவர்களைப் போன்றவர்கள். அருள் என்பது தெய்விகமான பண்பு. அதற்கு மாறாகப் பிறருக்குத் துன்பம் செய்யும் உள்ளமுடையவர்கள் அரக்கருக்கும் அசுரருக்கும் ஒப்பானவர்கள். விலங்கு கூடத் தனக்குத் தீங்கு வரும் என்ற பயத்தினாலோ உணவின் பொருட்டோ பிற உயிரைக் கொல்லும். அப்படியின்றி எந்தக் காரணமும் இல்லாமல் பிறரை நலிந்து அதனால் மகிழ்ச்சி அடைகின்ற உள்ளம் விலங்கின் உள்ளத்தை விடக் கொடியது; அது தான் இராட்சச உள்ளம்; அசுர உள்ளம்.

திரிபுரங்களையே தங்களுக்கு உரிய நிலையான செல்வம் என்று எண்ணிக்கொண்டு வாழ்ந்தவர்கள் அவற்றை உடையவர்களாகிய அசுரர்கள். தம்முடைய செயலால் பல உயிர்கள் அழிகின்றனவே என்ற அருள் சிறிதும் இல்லாதவர்கள். நாமும் அவர்களைப் போலத்தான் இருக்கிறோம். இந்த உடம்பே சதமென்று எண்ணி வாழ்கிறோம். பிறருக்குத் துன்பம் தருகிறோம். ஜீவகாருண்யம் இல்லாமல் இருக்கிறோம்.

முப்புரங்களின் தலைவர்களாகிய அசுரர்களைச் சிவபெருமான் அடக்கினான். அவர்களுடைய வலிமையை அழித்தான். அவர்களை அழிக்கவில்லை. அவர்களுடைய அகந்தைக்கும் கொடுமைக்கும் பக்க பலமாக இருந்த திரிபுரங்களை மட்டும் சிரித்து எரித்தான். அதனால் திரிபுராந்தகன் என்ற பெயர் அப்பெருமானுக்கு அமைந்தது. அவன் அம்பிகையைச் சரணம் புகும் அடியார்களில் ஒருவன்.

அரணம் பொருள் என்று அருள் ஒன்று
இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும்.

மூன்று அசுரர்களுடைய வலிமையும் அழிந்துபடும்படி அவன் கோபித்தான்.

சிவாராத்யா (406) என்று லலிதா சகசிரநாமம் சொல்கிறது. சிவபெருமானால் வழிபடப்பெறுபவள் அம்பிகை.

மகாதேவனே இறைவியைச் சரண்புகும்போது மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? திருமாலும் சரணம் புகுகிருன். அவர்களுக்கெல்லாம் வேண்டியவற்றைத் தரும் பெருமாட்டியாக அபிராமியம்மை எழுந்தருளியிருக்கிருள்; நிலையாக இருக்கிருள்.

பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி.

தேவர்கள் தங்களுக்கு ஏதேனும் குறை உண்டாயின் வணங்கிச் சரணம் என்று அடைக்கலம் புகுந்தால், அவர்களுடைய துன்பத்தைப் போக்கி அருள் புரிபவர்கள் திரிபுராந்தகனும் முகுந்தனும். அத்தகையவர்களே எம்பெருமாட்டியின் திருவடியில் சரணம் என்று தஞ்சம் புகுகிருர்களாம்.

தங்கள் தங்களுக்குரிய கடமைகளை ஆற்றுவதற்குரிய வலிமையைப் பெறுவதற்காகவே இவ்வாறு பெரிய தலைவர்களாக இருக்கும் தேவர்கள் அம்பிகையை வழிபடுகிருர்கள்; ஹரிப்ரம்ஹேந்திர ஸேவிதா (297) என்பது லலிதாம்பிகையின் திருநாமங்களில் ஒன்று.

மிகப் பெரியவர்களுக்கும் புகலிடமாக இருக்கும் பெரு மாட்டியிடம் இந்த நிலவுலகத்து அடியார்களும் சரணம் என்று அடைக்கலம் புகுகிறார்கள். அவர்கள் எதற்காக அவ்வாறு செய்கிறார்கள்? மக்களுக்கு உண்டாகும் துன்பங் களில் மிகக் கொடியவை இறப்பதும் பிறப்பதும். இந்த இரண்டையும் நம்முடைய முயற்சியினால் போக்கிக் கொள்ளல் முடியாது. எத்தனை வலிமையுடையவர்களானா லும் இந்த இரண்டுக்குள்ளும் அகப்பட்டுத் துன்புறுகிற வர்களே. அறிவோ, பணமோ, பலமோ எதுவும் அந்தத் துன்பங்களைப் போக்கமுடியாது, பிறப்பினாலும் இறப்பினா லும், இடைப்பட்ட முதுமை முதலியவற்றாலும் அலைக்கப் படும் மக்களுக்கு அவற்றைப் போக்கிப் பேரின்பமாகிய அமைதி பெற்ற வாழ்வை அருளுகிறவள் அன்னை. 'ஜன்ம மிருத்யு ஜராதப்த ஜன விச்ராந்தி தாயினீ' (லலிதா. 851) என்ற திருநாமம் இதனைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

ஆகவே, அம்பிகையின் திருவடியில் சரணம் புகும் அடியார்கள் இப்போது உலகத்தில் பிறந்து வாழ்ந்தாலும் இனிமேல் இந்த உலக சம்பந்தமே அவர்களுக்கு உண்டா காது. உலகத்தில் பிறப்பதும் பின்பு இறப்பதுமாகிய இந்த ஓயாத சுழற்சியில் சிக்கித் தடுமாறும் பிற உயிர்களைப் போலத் துன்புறாமல் முத்தியின்பத்தை அடைவார்கள்.

நாயகி தன் அடியார்
மரணம் பிறவிஇரண்டும் எய்தார் இந்த வையகத்தே

உயிர்கள் பெறும் பேறுகளுக்குள் உயர்ந்தது முத்தி. அதைத் தருபவர் மிக உயர்ந்தவர். எல்லாருக்கும் மேலான பராம்பிகையே அந்த வாழ்வைத் தர முடியும். இறப்பும் பிறப்பும் நீங்கி நிற்கும் வாழ்வே முத்தியாதலின், அடியார்கள் அவ்விரண்டையும் இவ்வுலகத்தில் அடைய மாட்டார்கள் என்று கூறினும், அவர்கள் என்றும் பொன் றாத முத்தியை அடைவார்கள் என்பதே கருத்து.

அரணம் பொருள்என்று அருள்ஒன்று
இலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்தபெம்
மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற
நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும்எய்
தார்இந்த வையகத்தே.

[திரிபுரமதில்களே உண்மையான செல்வம் என்று எண்ணி இரக்கம் சிறிதும் இல்லாத வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்ற மூன்று அசுரர்களுடைய வலிமையும் அன்று ஒரு நாள் அழிந்து போகும்படி கோபித்தவனாகிய சிவபெருமானும் திருமாலுமே நின் திருவடியே எமக்குப் புகல் என்று கூற, அவர்களுக்கு அருள் புரிந்து கொண்டு நிலையாக எழுந்தருளியிருக்கும் தலைவியாகிய அபிராமியின் அடியார்கள் இறப்பு, பிறப்பு என்னும் இரண்டையும் இவ்வுலகத்தில் அடையார்கள்.

அரணம்-மதில். அருள்-இரக்கம். ஒன்று-சிறிதும்; ஒன்றும் என்ற உம்மை தொக்கது. முரண்-வலிமை. அன்று: பண்டறி சுட்டு. முதல் சரணம் திருவடியையும் அடுத்தது அடைக்கலத்தையும் குறித்தன. அடைக்கலம், அடைக்கலம் என்று அடுக்காகக் கொள்வதும் பொருந்தும்.]

அம்பிகையைத் திருமாலும் சிவபிரானும் வழிபடும் செய்தியை அபிராமிபட்டர் பல பாடல்களில் சொல்வார் (14, 25, 56, 60, 74, 92, 97). அன்னையின் திருவருளால் பிறப்பும் இறப்பும் நீங்கும் என்னும் கருத்தைப் பவாரண்ய குடாரிகா (114), பவநாசினி (175), பவரோகக்நி (842), ம்ருத்யுமதனி (181),ம்ருத்யுதாரு குடாரிகா(749) என்னும் திருநாமங்கள் புலப்படுத்தும்.

இந்தப் பாடல் அபிராமி அந்தாதியில் 51-ஆம் பாட்டு.

# தவம் புரிந்தவர்களின் அடையாளங்கள்

உலகத்தில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகளாகவே இருக்கிறார்கள். செல்வர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். அப்படியே நல்லவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். பொல்லாதவர்களே மலிந்துள்ளனர். நல்ல நெறியில் வாழ்வதற்கு முயற்சி செய்கிறவர்கள் லட்சத்தில் ஒருவர் இருப்பார்களோ, இல்லையோ தெரியாது. ஏன் இப்படி இருக்கிறார்கள்? செல்வர்களுக்கும் நல்லவர்களுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? உண்டு என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

இப்போது செல்வர்களாக வாழ்கிறவர்களில் சிலர் தம்முடைய சொந்த முயற்சியினால் அந்தச் செல்வத்தை அடைந்தவர்களென்று தோன்றும். பல செல்வர்கள் திடீரென்று செல்வத்தை அடைகிறார்கள். செல்வர்களுடைய பிள்ளையாகப் பிறப்பதனால் செல்வராக விளங்குகிறவர்கள் சிலர். முயற்சி செய்து சொந்த உழைப்பினால் சிலருக்குப் பொருள் சேர்ந்தது என்று சொல்கிறோம். உழைக்கிறவர்கள் எல்லோருக்குமே பொருள் சேர்கிறதா? இல்லையே! ஒரே சமயத்தில் இரண்டு பேர் அடுத்தடுத்துக் கடை வைத்திருக்கிறார்கள். ஒருவருக்கு நல்ல வியாபாரம் நடந்து செல்வம் சேர்கிறது. மற்றவருக்கு நஷ்டமே உண்டாகிறது. இப்படி அமைவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? அதைத் தான் திருவள்ளுவர் சொல்கிறார்.

இப்போது நாம் படும் இன்பதுன்பங்கள் சென்ற பிறவியில் நாம் செய்த புண்ணிய பாவங்களின் விளைவு. இந்தக்

கர்ம பலனே எதிர்பாராத வகையில் இன்பத்தையும் தரு கிறது; துன்பத்தையும் தருகிறது. ஒரே நாளில் ஒருவன் லட்சாதிபதியாகி விடுகிருன். கண்முன்னே அதைப் பார்க்கிறேம். இதற்கு முன்னேப் பிறவியில் அவன் செய்த செயல்களே காரணம். நல்ல செயல்களைச் செய்பவர்கள் குறைவாக இருப்பதனுல், அவற்றின் பயனுக வரும் வள வாழ்வைப் பெறுகிறவர்களும் குறைவாகவே இருக் கிருர்கள். நல்ல விதை குறைவாகப் போட்டுப் பயிரை வளர்த்தால் குறைந்த பயிரே விளையும்; களைகள் மண்டும். அவ்வாறே புண்ணியச் செயல்கள் செய்தவர்கள் குறைந்த அளவில் இருப்பதனுல் செல்வத்தை அடைபவர்களும் குறைவாகவே இருக்கிருர்கள். திருவள்ளுவர் கூறுவதைக் கேட்கலாம்.

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

என்பது திருக்குறள். "வசதியான வாழ்வு இல்லாத வறிய வர்கள் உலகத்தில் பலராக இருப்பதற்குரிய காரணம் தவம் செய்பவர்கள் சிலர்; தவம் செய்யாதவர்களே பலர்" என்பது இதன் பொருள். முன்னேப் பிறவியில் செய்த தவத்தால் இப்பிறவியில் நன்மை உண்டாகிறது. நன்மை பெறுகிறவர்கள் குறைவு என்ருல் அதற்குக் காரணமான புண்ணியத்தைச் செய்தவர்களும் குறைவு என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

நோற்பார் என்பது தவம் செய்பவரைக் குறிக்கும். தவம் என்பது காட்டுக்குப் போய்த் தனியே இருந்து யோகம் செய்வது மட்டும் அன்று. தன் நலத்தை மறந்து விட்டுப் பிறர் நலத்தையே பெரிதாக எண்ணி ஒருவன் தியாக வாழ்க்கை வாழ்ந்தால், அவனேத் தவமுனிவன் என்றே சொல்ல வேண்டும். இறைவனிடம் பக்தி பண்ணி நன்னெறியில் நிற்பதும் ஒருவகைத் தவமே. இவ்வாறு தவம் பல்வகைகளில் மேற் கொள்வதற்குரியது.

முற்பிறப்பில் புண்ணியச் செயலைச் செய்தவர்கள், தவம் செய்தவர்கள், தெய்வத்தை வழிபட்டவர்கள், இப் பிறப்பில் நன்மை பெறுகிறார்கள்; இன்ப வாழ்க்கை வாழ் கிறார்கள்; செல்வம் படைத்து இன்புறுகிறார்கள்; மனைவி மக்களோடு குறையின்றி இருக்கிறார்கள். பொதுவாக நோற்பார் என்று திருவள்ளுவர் சொன்னதையே இன்னபடி தவம் புரிபவர் என்று விளக்குபவரைப் போல அபிராமி பட்டர் பாடுகிறார்.

அம்பிகையை வழிபட்டு மூன்று கரணங்களாலும் அன்பு செய்வதும் தவத்தைச் சார்ந்ததே. உலகத்துப் பொருள்கள் நிலையாதன என்பதை உணர்ந்து, என்றும் நிலையாக இருப்பது இறைவியின் திருவருளே என்பதையும் தெரிந்துகொண்டு, உலகப்பற்றை விட்டு அம்பிகையின் சரணாரவிந்தங்களைப் பற்றிக் கொண்டவர்கள் சிறந்த தவம் புரிகிறவர்களே,

> ''மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
> பாத மேமனம் பாவித்தேன்''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார். அவர் வேறு பற்று இல்லாமல் இறைவனுடைய திருவடியே பற்றுகப் பற்றிக் கொண்டவர். அவ்வண்ணமே உலகியல் இன்பங் களை நாடாமல் அம்பிகையின் திருவடித் தாமரையையே பற்றுகப் பற்றி வாழ்ந்தவர் அபிராமிபட்டர். அவ்வாறு பற்றிய பற்றே தவம். அதனை உடையவர்கள், அடுத்த பிறவியில் செல்வர்களாவார்கள்; பெருஞ் செல்வர்களாக விளங்குவார்கள்; அரசச்செல்வம் படைப்பார்கள்; அரச ராகவே வாழ்வார்கள்; அங்கங்கள் எல்லாம் நிரம்பிய மன்னர் மன்னராக விளங்குவார்கள். இந்தக் கருத்தை இப்போது சொல்ல வருகிறார் ஆசிரியர்.

சென்ற பாட்டில் இறைவியின் அடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தாமல் மறுமையில் பேரின்ப வாழ்வை

அடைவார்கள் என்று சொன்னார். ஒருகால் முத்தி கிடைக்கா விட்டாலும் அவர்கள் மறுபடியும் பிறந்தால் சக்கரவர்த்திகளாகப் பிறப்பார்கள் என்கிறார் இந்தப் பாட்டில்.

இறைவியைத் துதித்து வணங்கிப் புகல் புகுந்தவர்கள் தீவிரமான பக்குவம் உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு இப்பிறவி தீர்ந்த பிறகு இனிப் பிறவி இல்லாத முத்திநிலை கிடைக்கும். பக்குவத்தில் ஏதேனும் சிறிது குறை இருந்தால் மறுபடியும் பிறக்க வேண்டி நேரும். அப்படிப் பிறவி நேர்ந்தாலும் அந்தப் பிறவி இன்ப வாழ்வை அநுபவிக்கும் பிறவியாகவே அமையுமாம்.

எம்பெருமாட்டி பரமேசுவரனுடைய பத்தினியாக விளங்குகிறாள். காமேசுவரனுடன் ஒன்றிய காமேசுவரியாக நிற்கிறாள். பிறை முடித்த ஐயனாகிய பரமசிவனுடைய மனை மங்கலமாக, அவனுடைய ஏற்றத்துக்கும் தோற்றத்துக்கும் காரணமாக விளங்குகிறாள்.

பிறை முடித்த
ஐயன் திருமனையாள்.

அவளுடைய பாரதாரவிந்தங்களில் அன்பு செய்கிற அடியார்கள், பணிவும் அகந்தையற்ற அடக்கமும் உடையவர்களாதலால் தாம் அம்பிகையை வணங்குவதாகச் சொல்லாமல் அம்பிகையின் அடியை வணங்குவதாகச் சொல்வார்கள். நான் என்னாமல் அடியேன் என்பார்கள். இறைவியின் திருவடியையே சிந்தித்து வந்திப்பவர்கள் அவர்கள். அவர்கள் பிறவி பிறகு எடுத்தால் மன்னர் மன்னராகப் பிறப்பார்கள். முன்னைப் பிறவியில் அவ்வாறு அன்புசெய்து அதுவே தவமாக ஒழுகினவர்கள் இப் பிறவியில் மன்னராக இயங்குகிறார்கள்.

பிறை முடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு
அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்

என்பதை எப்படி அறியலாம்? சில அடையாளங்களால் தெரிந்துகொள்ளலாம். அவர்களுக்குச் சில சின்னங்கள் உண்டு. அந்த அடையாளங்கள் இன்னவை என்றுசொல்கிறார், அபிராமிபட்டர். அவர்கள் அரசர்களாக வாழ்வார்கள். ஆதலால் அரசர்களுக்குரிய சின்னங்களை, அத்தகைய தவமுடையோர்களின் அடையாளங்கள் என்று சொல்கிறார்.

அவர்கள் ஏழைகளைப் போலத் தாம் போக வேண்டிய இடங்களுக்கு நடந்து போகமாட்டார்கள்; தேரில் போவார்கள்; குதிரையில் போவார்கள்; ஆனையில் போவார்கள். அவர்கள் தலையில் முடி விளங்கும். முடியுடை மன்னர்களாக இருப்பார்கள்; சிவிகையில் ஊர்வலம் வருவார்கள்.

அவர்களுடைய உதவியை நாடிப் பலர் அவர்களிடம் வருவார்கள். பல மன்னர்கள் கையுறைகளோடு வருவார்கள். திறையாகப் பொன்னைக் கொணர்ந்து பெய்வார்கள்.

அவர்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது அவர்களுடைய மார்பில் பொன்னாரம் மின்னும்; முத்துமாலை ஒளிவிடும்.

ரத கஜ துரக பதாதிகள் என்னும் சதுரங்க சேனையும் அவர்களுடைய ஏவலைச் செய்யும். படைப்பலத்தோடு வாழ்வார்கள். அதனால் மற்ற மன்னர்கள் அவர்களைக் கண்டு அஞ்சி வலியவந்து சரணடைந்து கனகத்தைத் திறையாகப் பெய்வார்கள்.

இது அரசர்களுக்குரிய நிலை அல்லவா? மகாராஜ்ஞியாக இருக்கும் எம்பெருமாட்டியின் அருள் கிடைத்தால் இந்த நிலை வருவது ஒரு பெரிதா?

அம்பிகையின் அடி பணியும் தவத்தை முற்பிறவியிற் செய்தவர்களுக்கு இப்பிறவியில் உண்டாகும் சின்னங்களை அடுக்கி அபிராமிபட்டர் சொல்கிருர்.

வையம் துகரம் மதகரி
மாமகு டம்சிவிககை
பெய்யும் கனகம் பெருவிலை
ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித்
தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள
வாகிய சின்னங்களே.

[தேர், குதிரை, மதம் மிக்க களிறு, பெரிய முடி, பல்லக்கு, பிற மன்னர்கள் கப்பம் கட்டும் பொன், மிக்க விலையுடைய பொன்னுரம், முத்துமாலை என்பன, பிறையைத் திருமுடிக்கண் சூடிய சிவபெருமானுடைய அழகு மிக்க பத்தினியாகிய அபிராமியின் திருவடித் தாமரைக்கு முற்பிறவிகளில் அன்பு செய்த தவமுடைய அடியார்களுக்கு உண்டாகிய அடையாளங்களாம்.

வையம்—தேர். துரகம்-குதிரை. காலாளையும் கூட்டிக் கொள்க. சதுரங்க சேனையையும் உடையவர்களாவார்கள் என்றபடி. சிவிகை பல்லக்கு. பெய்யும் கனகம்-தம்மிடம் வந்தவர்களுக்குக் கொடையாக வழங்கும் பொன் என்றும் சொல்லலாம். ஆரம்-மாலை. முன்பு - முற்பிறவிகளில். சின்னங்கள் - அடையாளங்கள்.]

இந்த அடையாளங்களை உடையவர்கள் மன்னர்கள். ஆகவே மன்னர்களாகப் பிறப்பார்கள் என்பது கருத்து. மறுமையில் வீடு பெறுவதோடன்றி இம்மையில் வள வாழ்வு பெறும் நிலையும் அம்பிகையின் அடியார்களுக்குக் கிடைக்கும்.

லலிதாம்பிகையின் திருநாமங்களில் ஒன்று 'ஸாம்ராஜ்ய தாயினி' (692) என்பது. ராஜசூய யாகம் செய்தவனுக்கும், மன்னர் மன்னனாகிய சக்கரவர்த்திக்கும் ஸாம்ராட் என்று பெயர். ஸாம்ராட்டின் பதவியே ஸாம்ராஜ்யம். அதை அம்பிகை பக்தர்களுக்கு அருளுகிறவளாதலின் அத் திருநாமத்தைப் பெற்றாள். அந்தத் திருப்பெயருக்குரிய விளக்கம்போல அமைந்திருக்கிறது இந்தப் பாடல்.

அபிராமி அந்தாதியில் இது 52-ஆவது பாட்டு.

# பெரிய தவம்

அம்பிகையின் திருவடிக்கு அன்பு செய்பவர்கள் இன்ன அடையாளங்களுடன் இருப்பார்கள் என்று சொன்ன அபிராமிபட்டர், உடனே தேவியைத் தியானிக்கப் புகுகிறார். அன்பர்கள் தம்முடைய வழிபடு கடவுளரைப் பாடும்போது இடையிடையே உலகத்தாருக்கு உபதேசம் செய்வார்கள்; உலகினர் போக்கை எண்ணி இரங்குவார்கள்; தம்மையே இழித்துப் பேசிக் கொள்வார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே வரும்போது இறைவனுடைய திருவுருவ வருணனை வரும். அப்போது, அவர்களுடைய உள்ளம் இறைவனைத் தியானித்து அவனுடைய திருவுருவத்தைப் பதித்துக் கொள்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

'எதை எதையோ பேசுகிறோமே! அன்னையின் திருவுருவத்தைத் தியானித்தாலும் இன்பம் உண்டு' என்று எண்ணி இடையிடையே அம்பிகையின் திருவுருவ வருணனையில் ஈடுபடுவார் அபிராமிபட்டர். அத்தகைய பாடல்களை நாம் பாடும்போது நாமும் அந்த உருவத்தை மனக் கண்ணிலே நிறுத்திப் பழகவேண்டும்.

அருளாளர்களின் திருவாக்கில் நம்முடைய மனம் நன்கு பதியும் பாங்கு இருக்கும். ஆகவே தனியே நாமாக இறைவியைத் தியானம் பண்ணுவதைவிட இத்தகைய பாடல்களில் மனத்தை ஈடுபடுத்தி இவற்றில் வரும் திருவுருவ வருணனையைப் பாவனை மூலமாக உள்ளத்திலே எழுதிப் பழகுவது நலம். ஒரு மந்திரத்தை ஜபிக்கும்முன் அந்த மந்திர தேவதையின் தியான சுலோகத்தைச் சொல்லுவது வழக்கம். அந்தச் சுலோகத்தில் மூர்த்தியின்

வருணனை இருக்கும். அந்த வருணனையில் வரும் திருவுருவத்தைத் தியானித்துக்கொண்டு அந்த மந்திரத்தை ஜபிக்கவேண்டும். அதுதான் அந்தத் தியான சுலோகத்துக்குப் பயன். அம்பிகையின் திருக்கோல வருணனை வரும் செய்யுட்கள் தியான சுலோகங்களைப்போல உள்ளத்தில் அன்னையின் வடிவத்தைப் பதித்துக்கொள்ளத் துணையாக இருக்கும்.

இப்போது பார்க்கப் போகும் பாட்டு அன்னையின் உருவ வருணனையைக் கூறுவது; எப்பெருமாட்டியின் இடையையும், மார்பையும், குழலையும், கண்களையும் பற்றிச் சொல்கிறது.

பெண்களுக்கு இடை சிறுத்திருப்பது அழகு. கொடியைப் போன்ற வடிவுடைய அம்பிகையின் இடை மிகச் சிறியது. உரோமக் கொடி தெரிவதைக் கொண்டுதான் அன்னைக்கு இடை உள்ளது என்று ஊகிக்க முடிகிறதாம். இப்படி லலிதா சகசிரநாமம் கூறுகிறது. 'லக்ஷ்ய ரோம லதாதார தாஸமுன்னேய மத்யமா' என்பது அதில் வரும் திருநாமம். அந்த இடையில் செக்கச்செவேலென்ற பட்டுடையை அணிந்திருக்கிருள். அம்பிகையே செந்நிறமுடையவள். அவள் திருமேனி வண்ணத்தோடு ஒட்டியதாக இடையைச் சூழ்ந்து அணி செய்கிறது அந்தப் பட்டுடை. 'அருணுருண கௌஸும்ப வஸ்த்ர பாஸ்வத் கடிதடீ' என்ற திருநாமம் அந்தச் செம்பட்டுடையைக் குறிக்கிறது. அபிராமிபட்டர் அம்பிகையின் மெல்லிய திருவிடையையும் அணிந்த உடையையும் நினைக்கிருர்.

> சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய
> செய்ய பட்டும்.

அம்பிகை இடையில் செம்பட்டு உடுத்திருப்பதை, "விடஅரவின் பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்" (39), "ஒல்கு செம்பட்டுடையாளை (84) என்று

வேறு பாடல்களிலும் கூறியிருக்கிறார். திருப்புகழில், "த்ரிபுரை செம்பட்டுக் கட்டு நுசுப்பின் திரு" என்று வருகிறது.

இடையை எண்ணியவர் அப்பால் கண்ணை மேலே உயர்த்தி அன்னையின் திருமார்பைப் பார்க்கிறார். சின்னஞ் சிறியது இடையானாலும் அன்னையின் நகில்கள் மிகப் பெரியனவாக இருக்கின்றன. எல்லா உயிர்களுக்கும் தாயாக இருக்கும் மகாமாதாவாதலால் அவை பெரியன வாக இருக்கின்றன. அவற்றின்மேல் முத்துமாலையை அணிந்திருக்கிறாள்.

பென்னம் பெரிய முலையும் முத்தாரமும்.

அபிராமிபட்டர் பல இடங்களில் இந்த முத்தாரத் தைச் சொல்லுவார். "திருத்தனப் பாரமும் ஆரமும்" (9), "மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை" (37) "முத்து வடங்கொண்ட கொங்கை"(42) என்பவற்றைப் பார்க்க.

அம்பிகையின் திருக்கோலத்தைக் கண்டு தியானிப்ப வர் இப்போது இன்னும் மேலே பார்க்கிறார். அன்னையின் கூந்தலைப் பார்க்கிறார். அது கன்னங்கரிய குழல். அவள் இளமை மாறாதவள் என்பதை அவளுடைய பென்னம் பெரிய நகிலும் கன்னங்கரிய குழலும் காட்டுகின்றன. குழலில் அம்பிகை பிச்சி மலரை அணிந்திருக்கிறாள். கரிய சூழ்நிலையில் அம்மலர் எடுப்பாகத் தெரிகிறது.

பிச்சி மொய்த்த கன்னங் கரிய குழலும்

கூந்தலில் மலரை அணிவது கற்புடை மங்கையருக்கு அழகு. அவர்களுடைய மங்கல வாழ்வுக்கு அறிகுறியாக விளங்குவது அது. நித்திய சுமங்கலியாக அன்னை தன் குழலில் மலரை அணிந்திருக்கிறாள். "பிச்சி மலர்க் கொந்தளபாரை" என்பது திருப்புகழ்.

இவ்வளவையும் தியானித்தவர் கடைசியில் அபிராமியின் திருக்கண்களை எண்ணுகிறார். அம்பிகைக்கும் மூன்று கண்கள் உண்டு. த்ரிநயனா, த்ரிலோசனா, த்ரயம்பகா என்று அப்பெருமாட்டிக்கு உள்ள திருநாமங்கள் இதனைப் புலப்படுத்தும்.

கண் மூன்றும்.

இவ்வாசிரியரே, "ஒன்றோ டிரண்டு நயனங்களே" (73), "முக்கண்ணியை" (101) என்று பின்னே கூறுவர். சூரிய சந்திர அக்கினிகளையே மூன்று கண்களாகக் கொண்டிருக்கிறாள் அன்னை. அவள் கண்ணைத் திறந்தால்தான் நாம் கண்ணினால் பார்க்க முடியும். சூரியனோ சந்திரனோ அக்கினிச் சுடரோ இல்லாவிடின் கண் இருந்தும் பொருள்களைக் காண முடியாது. இருட்டில் கண் உள்ளவனும் குருடனும் ஒரே நிலையில் இருப்பார்கள். ஆகவே நாம் கண்ணைத் திறந்து பார்த்தால் போதாது. அம்பிகை கண்ணைத் திறந்தால்தான் நம்முடைய கண்கள் திறப்பதனால் பயன் அடையலாம்.

அம்பிகையின் திருவுருவத்தைக் கோயில்களிலும் படங்களிலும் காண்கிறோம். அவற்றைக் கண்ணாலே தரிசித்து அந்த அளவிலே நின்றுவிடக் கூடாது. அவள் வடிவத்தை உள்ளத்திலே வைத்துத் தியானிக்க வேண்டும். புறத்தே காண்பதை உள்ளத்தே காண்பதற்காகத்தான் மூர்த்திகளை அலங்கரித்து வைக்கிறார்கள். அப்படி உள்ளே காணும்போதுதான் விக்கிரக ஆராதனைக்குப் பலன் உண்டாகும்.

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"

என்பார் திருமூலர். அப்படி ஆராதிக்கப்படுபவள் அம்பிகை என்பதை, "அந்தர்முக சமாராத்யா"—என்ற திருநாமம் சொல்கிறது.

"உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி"

என்று திருநாவுக்கரசர் சொல்கிருர். உள்ளம் என்னும் கிழியிலே தியானிக்கும் மூர்த்தியை எழுத வேண்டுமாம். மூச்சுக்கூட விடாமல் இருந்து உற்று நோக்கி அதை எழுத வேண்டுமாம்.

அம்பிகையின் வழிபாட்டைப் பலருடன் சேர்ந்து நடத்தலாம். அபிஷேக ஆராதனைகளையும் பலரும் கூடித் தரிசிக்கலாம். அவள் புகழைப் பலரும் ஒருங்கு கூடிப் பாடலாம். அர்ச்சனைகூடப் பலர் சேர்ந்து பண்ணலாம், ஒரே சமயத்தில் பலர் சேர்ந்து அர்ச்சனை செய்யும் முறையை லட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை என்ற அர்ச்சனை வகை நிகழும்போது பார்க்கிறோம். வெளி முகத்தில் நடப்பவை இவை. உள் முகத்தில் செய்யும் தியானம் இத்தகையது அன்று. அவனவன் தனித்தனியே அமர்ந்து கண்மூடித் தியானிக்க வேண்டும்.

உணவுப் பொருளைப் பயிர் செய்யும்போது பலர் கூடி உழைக்கிருர்கள். உழுவது முதல் அறுவடை வரையில் பலர் சேர்ந்து சேர்ந்து செயலாற்றுகிருர்கள். அறுவடையான தானியம் அரிசியாகுமட்டும் அப்படியே பலர் வெவ்வேறு வேலைகளில் ஒன்ருக ஈடுபடுவார்கள். அரிசியை உணவாகச் சமைக்கும்போதும் பலர் கூடிச் சமைக்கிருர்கள். பெருங்கூட்டத்துக்குப் பரிமாறும் போதும் பலர் அந்த வேலையைச் செய்கிருர்கள். பலரும் ஒன்ருக உட்கார்ந்து சாப்பிடுகிருர்கள், ஆனால் பலரும் சேர்ந்து ஒருவருக்காகச் சாப்பிட முடியாது. அவனவன் தனித் தனியே உணவை உண்ண வேண்டும். நாற்பதுபேருக்குரிய உணவுக்காக ஒரு பானையிலே அரிசியைப் போட்டு வடிப்பதுபோல நாற்பது பேருக்குரிய சாப்பாட்டை ஒரு வயிற்றுக்குள்ளே போட முடியாது. அவன் அவன் தனித் தனியே தன் வாயில் உணவையிட்டு விழுங்க வேண்டும்.

அவரவர்களுடைய பசி தனி; பசியாறுவதுந் தனிதான்; அநுபவமும் அத்தகையதே.

தியானமும் ஒவ்வொருவரும் தனியே இருந்து தம் கவனத்தை உள்முகமாகத் திருப்பிச் செய்யவேண்டியது. எத்தனைக்கெத்தனை தனிமை இருக்கிறதோ, அத்தனைக் கத்தனை தியானம் எளிதில் கை கூடும்.

"கனியேனும் வறியசெங் காயேனும்
உதிர்சருகு கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்
புசித்துநான் கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன்"

என்று தாயுமானவர் பாடுவார்.

இந்தத் தியான முறையை அபிராமி பட்டர் சொல்கிறார். 'உன்னுடைய இடையையும் மார்பையும் குழலையும் முக்கண்ணையும் உள்ளத்தே தியானித்துத் தனியே அமர்ந்து இன்புறுபவர்கள் செய்யும் செயலே பெரிய தவம்; அதற்கு ஒப்பான தவம் வேறு இல்லை, என்கிறார்.

கருத்தில் வைத்துத்
தன்னந் தனி இருப்பார்க்கு இது
போலும் தவம் இல்லையே!

தனியாக இருப்பது என்றால் பல மக்கள் கூடும் இடத்தில் ஒதுங்கித் தனியே இருத்தல் என்று ஆகும். யாருடைய கண்ணிலும் படாமல் யாரையும் கண்ணால் பார்க்காமல் தனியான இடத்தில் இருந்து தியானம் செய்வார் என்பதை, "தன்னந்தனி இருப்பார்" என்றார்.

அன்னையின் வடிவத்தை உள்ளத்தில் வைத்துத் தியானம் புரிபவர்கள் மெல்ல மெல்லக் கருவி கரணங்கள் கழல, மனமற்ற நிலையில் இன்புறுவார்கள். தியானம் நன்கு நிறைவேறினால் சமாதி நிலை கைகூடும். தவத்தினுடைய பயனே அதுதான். ஆகவே இந்தத் தியானமே பெரிய தவமாகும். இதை வற்புறுத்துகிறார் ஆசிரியர்.

சின்னஞ் சிறிய மருங்கினில்
சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத்
தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண்
மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்கிது
போலும் தவம்இல்லையே.

[தேவியானவள் மிகச் சிறிய தன் திரு இடையிலே சாத்திய சிவந்த பட்டாடையையும், மிகப் பெரிய நகிலையும், அங்கே அணிந்த முத்துமாலையையும், பிச்சி மலர் நெருங்கிய மிகக் கரிய கூந்தலையும், மூன்று கண்களையும் தம் உள்ளத்திலே தியானித்துத் தனித்திருந்து யோகம் செய்வாருக்கு இவ்வாறு தியானிக்கும் செயலை யன்றி வேறு பயனுடைய தவம் ஒன்றும் இல்லை.

மருங்கு—இடை. ஆரம்-மாலை. சின்னஞ் சிறிய என்பது மிகச் சிறிய என்ற பொருளுடைய வழக்குத் தொடர். பென்னம் பெரிய, கன்னங் கரிய, தன்னந்தனி என்பனவும் அத்தகையனவே.

"சின்னஞ் சிறியோர் சிதைவே செயினும்
பென்னம் பெரியோர் பிழைசெய் குவரோ
கன்னங் கரியோன் மருகா கழியத்
தன்னந் தனியேன் றனையாண் டவனே"

என்ற பழம் பாட்டில் இந்த நான்கு தொடர்களும் வந்துள்ளன.]

அம்பிகையின் திருவுருவத்தை உள்ளத்தே பதித்துத் தியானம் செய்தால், பெரிய தவம் செய்வதனால் உண்டாகும் பயனை அடையலாம் என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியில் 53-ஆவது பாட்டு.

# வறுமையைப் போக்கும் வழி

''இந்த உலகத்தில் நன்றாக வாழவேண்டும்; இதை மறந்துவிட்டுச் செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என்று சொல்வதில் என்ன பயன்?'' என்று கேட்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். இம்மை வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்ற ஆசை இல்லாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் இறைவனிடமும் இறைவியிடமும் பக்தி பூண்டவர்கள் இம்மையில் துன்பம் உறுகிறவர்கள் என்ற பைத்தியக்கார எண்ணம் ஒன்று பலரிடம் நிலவி வருகிறது. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' என்று திருஞானசம்பந்தர் சொல்கிறார். ''இம்மையே தரும் சோறும் கூறையும்'' என்பது சுந்தரர் வாக்கு.

பக்தியுடையவர்கள் சோம்பேறிகளாக, முயற்சியில்லாதவர்களாக, இருப்பார்கள் என்று யார் சொன்னார்கள்? மெய்ஞ்ஞானியாகிய ஜனகர் ஒரு நாட்டுக்கு அரசராக இருந்து வாழ்ந்து வந்தார். நாயன்மார்களில் சிலர் அரசர்களாகவே இருந்திருக்கின்றனர். இறைவன் திருவருளால் அவர்கள் வளவாழ்வு பெற்று வாழ்ந்தார்கள்.

பலர், ''எல்லாவற்றுக்கும் விதி காரணம்; ஆகையால் நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை'' என்று போலி வேதாந்தம் பேசுகிறார்கள். விதி என்பது முன் பிறவிகளில் செய்த செயல்களின் விளைவாக அமைவது. செயல் வேறு; அதனால் விளையும் இன்பதுன்பமாகிய அநுபவம் வேறு. சென்ற பிறவிகளில் செய்த செய்கைகளுக்குரிய விளைவாகிய இன்ப துன்பங்களை இப்போது அநுபவிக்கிறோம். சில

செயல்களுக்கு இங்கேயே பயன் கிடைத்துவிடுகிறது. திருடியவனுக்கும் கொலை செய்தவனுக்கும் அரசதண்டனை கிடைக்கிறது. இவ்வாறு செய்த செயலுக்கு உரிய தண்டனையையோ நன்மையையோ பெறுத வகை பல உண்டு. அவற்றிற்குரிய பலன் அடுத்த பிறவிகளில் கிடைக்கும். "அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழி இந்தக் கருத்தையே சொல்கிறது.

இப்போது நல்ல செயல்களைச் செய்யும் பல நல்லவர்கள் துன்பம் அடைவதைப் பார்க்கிறோம். அதைக் கண்டு, "நல்லவர்களுக்குக் காலம் இல்லை" என்று அலுத்துக் கொள்கிறோம். தீய செயல்களைப் புரிபவர்கள் சுகமாக வாழ்வதைக் கண்டாலும் நமக்கு மனம் புழுங்குகிறது. நல்லோர் படும் துன்பத்தையும் தீயோர் பெறும் இன்பத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து வருந்துகிறோம். உண்மை என்ன?

நல்லவர்கள் இப்போது அநுபவிக்கும் துன்பம் முன் பிறவிகளில் அவர்கள் செய்த செயல்களால் உண்டானது. அந்தப் பிறவிகளில் இட்ட வித்து இன்று மரமாகி விளைகிறது. எல்லா நல்லவர்களுமா துன்புறுகிறார்கள்? நல்லவர்களில் இன்பம் அடைகிறவர்களும் இருக்கிறார்கள். பொல்லாதவர்களில் இன்னல் அடைகிறவர்களும் இருக்கிறார்கள். எல்லாம் அவரவர்கள் முன் பிறவிகளில் செய்த கருமத்தின் பயனே. நாம் பெறும் அநுபவங்கள் முன் செய்த வினைகளின் பயன் என்பது நினைவில் இருந்தால் மேலே சொன்னது முரண்பாடு அன்று என்று தெளிவாகும்.

திருவள்ளுவர் தவத்தின் பெருமையைப் பற்றிச் சொல்லும்போது இந்தக் கருத்தை எடுத்துக் கூறுகிறார். 'உலகில் வறியவர்களே, தம் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள் இல்லாதவர்களே, மிகுதியாக இருக்கிறார்கள். பணக்காரர்களோ மிகவும் குறைவாக இருக்கிறார்களே;

இது ஏன்?' என்று கேட்டால் அவர் சொல்கிறார். 'உலகத்தில் தவம் செய்கிறவர்கள் குறை, தவம் செய்யாதவர்களே மிகுதி. அதனால் பணமுடையவர்கள் குறைவாகவும் ஏழைகள் பலராகவும் இருக்கிறார்கள்' என்கிறார்.

> ''இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
> சிலர்; பலர் நோலா தவர்''

என்பது குறள். நோற்றல் என்பது தவம் செய்தலைக் குறிக்கும். புண்ணியச் செயல்களைச் செய்வதும் தவமே ஆகும். ஆகவே முற்பிறப்பில் புண்ணியம் செய்த சிலர் செல்வராகவும், அது செய்யாத பலர் ஏழைகளாகவும் இருக்கிறார்கள். இப்போது செய்யும் புண்ணியச் செயல்களையும், அநுபவிக்கும் துன்பங்களையும் இணைத்துப் பார்க்கக் கூடாது. அம்பிகையிடம் பக்திகொண்டு வழிபடுகிறவர்களுடைய நிலை இந்தப் பிறவியில் எப்படி இருந்தாலும் அடுத்த பிறவியில் அவர்கள் நன்மையே பெறுவார்கள்.

இந்தக் கருத்தை மனத்தில் கொண்டு அபிராமிபட்டர் பாடுகிறார்.

வறுமையிலும் செம்மையாக இருக்கிறவர் சிலர் உண்டு; அப்போது வறுமையினால் பழி உண்டாகாது. ஆனால் பலர் பிறரிடம் சென்று இரக்கின்றார்கள். வறுமையைவிட இரப்பது தாழ்ந்தது. வறுமை நம் முயற்சியினால் வருவது அன்று; ஆதலின் வறியவர்களைப் பழிப்பது பாவம். வறியவர்களாயினும் முயற்சி உடையவர்கள் ஓரளவு வறுமைத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் நிலையைப் பெறுவார்கள்; உழைப்பினால் ஊதியம் பெறுவார்கள். அப்படியின்றி வறுமையையே யாசகம் செய்வதற்குரிய அநுமதிச் சீட்டாக வைத்துக் கொண்டு இரக்கப் புகுகிறவர்கள் பிறருடைய அவமதிப்புக்கு ஆளாகிறார்கள். எந்தக்காலத்திலும் இரப்பது இழிவு.

> ''நல்லா றெனினும் கொளல்தீது''

என்பது குறள்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று"
என்பது புறநானூறு.

ஒரு வள்ளல் குறிப்பறிந்து ஏழைகளுக்குப் பொருள் வழங்கும்போது அதைப் பெறுவதுகூட இழிவாகாமல் இருக்கலாம். ஆனால் தாமே ஒருவர் முன் சென்று, "நான் இல்லாதவன்" என்று கைநீட்டி இரப்பது மிகவும் இழிந்த செயல்.

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில்
கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து
நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த
ஞான்றும்"

என்று குசேலோபாக்கியானத்தில் வருகிறது.

வறுமையே துன்பத்திற்குக் காரணம்; பிறர் தருவதை வாங்கிக் கொள்வது பின்னும் துன்பத்துக்குக் காரணமாகிறது; நாமே வலியச் சென்று ஒருவரிடம் நம் இயலாமையைச் சொல்லி இரப்பது அளவற்ற துன்பத்துக்கும் பழிக்கும் காரணமாகும். இத்தகைய இழிநிலை வராமல் இருக்க வேண்டுமானால் எம்பெருமாட்டியைச் சரணாகதி அடையுங்கள் என்றார் அபிராமிபட்டர்.

பிறருக்கு உபதேசம் செய்ய வருகிறவர், தாம் அந்த நெறியில் நின்று காட்டினால் அந்த உபதேசத்துக்கு மதிப்பு உண்டு. இப்படிச் செய்தால் நலம் உண்டாகும் என்று பிறருக்கு வழிகாட்டுகிறவர்கள், "நான் அவ்வாறு செய்தேன்; அதனால் எனக்கு நன்மை உண்டாயிற்று பாருங்கள்" என்று சொல்லும் நிலையில் இருந்தால், அவர்கள் காட்டும் வழியை மற்றவர்கள் நம்புவார்கள். அபிராமி அந்தாதியின் ஆசிரியர் அவ்வாறே சொல்கிறார். "நான் அபிராமியம்மையை வழிபட்டு அடிமையானேன்; அதனால் கிருபணர்களிடம் செல்லாமல் வாழ்கிறேன். நீங்களும் அவ்வாறு செய்தால் இரக்கவேண்டிய இழிநிலை உங்க-

ளுக்கு வராது,' என்று சொல்கிருர். இனி அவர் கூறும் பாட்டைப் பார்க்கலாம்,

'நான் இல்லாதவன்' என்று சொல்லி ஒருவரிடம் சென்று நிற்பதே இழிவு. அப்போது உடம்பெல்லாம் கூனிக் குறுகிப்போகிறது. நெடியோன் என்றும் நெடுமால் என்றும் பெயர் பெற்ற நீண்ட வடிவினனுகிய திருமாலே, மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்ணை யாசிக்கச் சென்றபோது கூனிக்குறுகி வாமனனுகச் சென்று நின்ருன். எவ்வளவு பெரியவனுனுலும் ஒருவனிடம் ஒன்றை யாசிக்க வேண்டுமானுல் கூனிக் குறுக வேண்டியிருக்கும் என்ற உண்மையை அது காட்டுகிறது. அவ்வாறு இழிவுபட்டு, நில்லாமல் இருப்பதை மனமார விரும்புபவர்களைப் பார்த்துச் சொல்கிருர் அபிராமிபட்டர்,

> இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால் சென்று
> இழிவுபட்டு
> நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்

இவ்வாறு தொடங்குகிருர். இரப்பது இழிவு என்று அதை மனமார வெறுக்கும் மக்களுக்குத்தான் இந்த உபதேசம். நெஞ்சினுல் துன்புற்று, நான் ஏழை என்று வாயினுல் சொல்லி, உடம்பு குறுகி நின்று இரப்பதனுல் மூன்று கரணங்களும் இழிவான நிலையை அடைகின்றன. ஆகவே அதை 'இழிவுபட்டு நிற்கும்' செயலாகச் சொல்கிருர்.

'நான் கண்ட வழி இது' என்று மேலே சொல்ல வருகிருர். அவர் சில பேரிடம் சென்று பழகுவார்; வழி ட்டுவார். சில பேர் இருக்கும் திக்கு நோக்கியே செல்ல மாட்டார். தவம் செய்பவர்களிடம் அடிக்கடி போவார். தவம் செய்யாதவர்களிடம் போகமாட்டார். தவம் செய்யாதவர்களில் இரண்டு வகையினர் உண்டு. சூழ்நிலை துணை செய்யாமையாலும் வழிகாட்டுவார் இன்மையாலும்

சோம்பலாலும் இறைவியை வழிபடுவதாகிய தவத்தைச் செய்யாமல் இருப்பவர்கள் ஒரு வகையினர். அவர்கள் இந்த உடம்பு பெற்றும் பெற வேண்டிய பேற்றை இழந்தவர்கள். இன்னும் ஒரு வகையினர் இருக்கிருர்கள். அவர்கள் தவம் செய்யாமல் இருப்பது வியப்பன்று. தவம் செய்வாரைக் கண்டால் அவர்களை அணுகாமல் இருப்பார்கள். நல்ல செயல்கள் செய்யும் வாய்ப்புக் கிடைத்தாலும் அந்த வாய்ப்பை வேண்டுமென்றே தட்டிக் கழித்து விடுவார்கள். தவமே செய்யக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் இவர்கள். இவர்களோடு சேர்ந்தால் தவும் செய்ய வேண்டும், கோயிலுக்குப் போகவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களும் மாறி விடுவார்கள். இத்தகையவர்கள் தவம் செய்யப் பயிலாமல் இருக்கிருர்கள் என்று சொல்லக்கூடாது. தவத்தைப் பயிலக்கூடாது என்ற கொள்கையையே கல்வியாகக் கற்றுப் பிறரையும் தம் வழியே இழுக்கிறவர்கள் இவர்கள். இத்தகையவர்களுடைய தொடர்பினுல் மக்களுக்குச் சிறிதளவு இருக்கும் நல்லுணர்ச்சிகூட இல்லாமல் போய்விடும். இவ்வாறுள்ள கயவர்களிடம், இழிந்த இயல்புடையவர்களிடம், ஆசிரியர் ஒரு காலத்திலும் போகமாட்டார்; போய் யாசகம் செய்ய மாட்டார். அத்தகைய நிலையில் அம்பிகை அவரை வைத்திருக்கிருளாம்.

> நித்தம் நீடு தவம்
> கல்லாமை கற்ற கயவர்தம்பால்
> ஒரு காலத்திலும்
> செல்லாமை வைத்த திரிபுரை
> பாதங்கள் சேர்மின்களே.

திரிபுராம்பிகையின் திருவருளே இத்தகைய கயவர்களிடம் சென்று ஒன்றை யாசிக்கும் நிலையைப் பெருமல் வைத்ததாம். ஆதலின் அவள் திருவடியை அடைந்தால் இரந்து நிற்கும் இழி தகைமை வராது.

திரிபுரை பாதங்கள் சேர்மின்களே

என்று வழிகாட்டுகிறுர் ஆசிரியர்.

பாதங்களைப் புகலாக அடைந்து அவற்றையே இடைவிடாது தியானம் செய்தால் முன்னே சொன்ன இழிநிலை வராதாம். சேர்தல்—இடைவிடாது நினைத்தல்; "மலர் மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்" (குறள்) என்பதற்கும் பரிமேலழகர் வகுத்த உரையில், சேர்தல் என்பதற்கு இவ்வாறே பொருள் உரைத்தார்.

இல்லாமை சொல்லி ஒருவர்தம்
பாற்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி
ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்
பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே.

[மக்களே, ஒரு செல்வரிடத்தில் போய் உங்களுடைய வறுமை நிலையைச் சொல்லி அவரால் அவமானப்பட்டு நில்லாத நிலை வேண்டுமென்று நெஞ்சில் கருதுவீர்களானுல், தினந்தோறும் உயர்ந்த தவத்தைப் பயிலாமையைக் கற்ற இழிகுணத்தவரிடம் ஒரு பொழுதும் செல்லாத நிலையை என்பால் வைத்தருளிய திரிபுரசுந்தரியின் திருவடிகளைப் புகலாக அடைவீர்களாக.

இல்லாமை—பொருள் இல்லாத வறுமை: இன்மை என்று வறுமையைக் கூறுவது மரபு; "இன்மை எனஒரு பாவி" (திருக்குறள்). நித்தம் கற்ற என்று கூட்டியும் பொருள் செய்யலாம்.]

அம்பிகையைத் தியானித்தால் வறுமை தீரும் என்பது கருத்து.

இதற்கு எதிராக, அம்பிகையை வழிபடாதவர்கள் அடுத்த பிறவியில் இரந்து துன்புறும் வறுமையை அடைவார்கள் என்ற கருத்தும் பெறப்படும்.

"கரவோடு நின்ருர் கடிமனையில் கைஏற்று
இரவோடு நிற்பித்தது எம்மை-அரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்பணிய
மாட்டாமை பூண்ட மனம்"

என்ற பழம் பாடல் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது.

மேலே சொன்னது அபிராமி அந்தாதியில்54-ஆம் பாடல்.

# யாருக்குப் பயன்?

அம்பிகையின் பாதத்தைத் தியானித்தால் இந்த உலகத்தில் வள வாழ்வு கிடைக்கும் என்று சொன்னவர், அவளைத் தியானிக்கும் வழியைச் சொல்ல வருகிறார். அவளுடைய திருமேனியைப்பற்றிச் சொல்லுகிறார். அம்பிகையின் திருவுரு, சோதிமயமானது. அதற்கு உவமையாக எதைச் சொல்வது? கண்ணைப் பறிக்கும் தேசுடைய அப் பெருமாட்டியை, நிலையாகவே ஒரு மின்னல்கொடி தோன்றினால் எப்படி இருக்கும், அப்படி இருப்பாள் என்று சொல்லலாமா? 'மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி' என்று முதல் பாட்டில் சொன்னார். லலிதா சகசிரநாமத்தில் வரும் 'தடில்லதா ஸமருசி' (107) என்ற திருநாமமும் அவள் மின்னற்கொடி போன்றவள் என்றே சொல்கிறது. இவ்வாசிரியருக்கு அவ்வாறு சொல்வதில் திருப்தி உண்டாகவில்லை. மின்னலைப்போன்று கண்ணைப் பறிக்கும் சோதி அன்னையின் திருமேனிச் சோதி என்பது ஓரளவு தான் பொருந்தும். ஆசிரியர் யோசித்தார்; மின்னுக் கொடி போன்றவள் என்று சொல்வது ஒரு வகையிற் பொருத்தமென்று தோன்றுகிறது. ஒரு வகையில் போதாதென்று தோன்றுகிறது. ஆகவே பல மின்னற்கொடிகளைப் போன்றவள் என்று சொல்லலாம் என்று எண்ணினார்.

> மின் ஆயிரம் ஒரு மெய் வடிவாகி
> விளங்குகின்ற
> அன்னாள்.

[ஆயிரம் மின்னல்கள் ஒரு திருமேனியின் உருவெடுத்து விளங்குவதுபோன்ற கோலத்தை உடையவள்.]

ஒரு மின்னலையே நம்மால் பார்க்க முடிவதில்லை. மின்னல் அடிக்கும்போது அதைக் கண்டு கண் அவிந்தவர்களும் இருக்கிறார்கள். அப்படியிருக்க ஆயிரம் மின்னுக்கொடிகள் ஒன்றாகத் திரண்டு வந்தால் எப்படி நம்மால் காண முடியும்?

எம்பெருமாட்டி யாவரும் தம் ஊனக்கண்களால் காணும்வண்ணம் இருப்பவள் அல்ல. உண்முகத்தே தியானம் செய்யும் அன்பர்களுடைய அகக்கண்ணுக்குத் தோற்றுகிறவள். 'அந்தர்முக ஸமாராத்யா, பஹிர்முக ஸுதுர்லபா' (870, 871) என்று புகழப் பெறுபவள். அப் பெருமாட்டியைத் தம்முடைய இதயத் தாமரையிலே வைத்துத் தியானிக்கும் பெரியவர்களுக்கு அவள் தன் திருவுருவைக் காட்டியருளுவாள். அன்பர்களின் இதயத்தில் எழுந்தருளியிருப்பதால் அம்பிகைக்கு. ஹ்ருத்யா (303), ஹ்ருதயஸ்த்தா (595) என்ற திருநாமங்கள் அமைந்தன.

உண்முகத்தே தரிசிப்பவர்களுக்கு ஆயிரம் மின்னல்களைப்போலத் தோற்றினால் அகக்கண்ணுக்குக் கூசாது. அந்தர்முகத்தில் சோதியைத் தரிசித்து அதில் தம்மைக் கரைத்துக் கொள்பவர்கள் மகா யோகிகள். மின்னுக்கொடி போலத் தோன்றி அதுவே வளர்ந்து, சோதிப்பெரு வெள்ளமாக வளர்ந்து, காண்பான், காட்சி, காணப்படும் பொருள் என்னும் திரிபுடிக்கும் மேற்பட்ட அநுபவத்தை உண்டாக்கும். அந்த ஆனந்தம் எல்லையில்லாதது. மின்னுக்கொடியாகத் தோன்றிய அன்னை பக்தர்களின் பக்குவம் முதிர முதிர ஆனந்தமயமான கொடியாகிவிடுவாள். இவ்வாறு பக்தர்கள் உள்ளத்துள்ளே இணையற்ற இன்பக்கொடியாகப் படரும் பிராட்டி அபிராமி.

### அகம் மகிழ் ஆனந்த வல்லி

[தன்னைத் தியானிக்கும் அன்பர்கள் உள்ளத்தே மகிழ்வதற்குக் காரணமான ஆனந்தக்கொடி.]

அம்பிகை ஆனந்தமயமானவள்; "தன் ஆனந்தக்கொடி மகிழ்ச்சி பெருக" என்பது திருவிளையாடற் புராணம். 'பரமானந்தா' (252) என்பது அம்பிகையின் திருநாமங்களில் ஒன்று. "பழவடியார் உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பெருகு பரமானந்த வெள்ளப் பெருக்கே" (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்தப் பருவம்) என்பர் குமரகுருபரர்.

எம்பெருமாட்டியை விக்கிரக வடிவில் கண்டு, அவள் தேசுடைய திருமேனியுடையவள் என்று மனத்தே பாவித்துத் தியானம் செய்தால் அப்போது மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்கும் திருவுருவத்தை உள்ளே தரிசிக்கலாம். அப்பால் ஒரே சோதி வெள்ளமாக எங்கும் பரந்து நிற்க, ஆனந்தமே தன்வடிவாக நிற்பாள் அம்பிகை. இந்த ஆனந்தம் இன்னவாறு இருப்பது என்று சொல்லால் உணர்த்துவதற்கரியது; "சொல்லொணா திந்த ஆனந்தமே" (கந்தர் அலங்காரம்). ஆனாலும் உண்முகத்தே அநுபவித்தற்குரியது. அம்பிகையின் திருவருள் மிகுதி ஆக ஆக, மெல்ல மெல்ல இத்தகைய இன்ப நுகர்ச்சி கைகூடும். இந்த அநுபவத்தில் திளைத்தவர் அபிராமிபட்டர். ஆகவே,

> மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி
> விளங்குகின்ற
> அன்னாள்; அகம் மகிழ் ஆனந்தவல்லி

என்று பாடுகிறார்.

இப்படி உள்ள அம்பிகை அநாதியானவள். அவளுடைய தத்துவத்தை நமக்கெல்லாம் அறிவிப்பது வேதம். வேதத்தைத் தந்தவளும் அவள். வேத உருவாய் விளங்குகிறவளும் அவள். வேதத்தின் முதலில் உள்ள பிரணவமே அவள் வடிவம். வேதத்தின் இடையில் எங்கும் பரவியிருக்கும் சாகைகளும் அவளே. வேதத்தின் இறுதியாகிய உபநிஷதமாக இருப்பவளும் அப்பிராட்டியே. இந்த உண்மையை அபிராமி அந்தாதியின் இரண்டாவது

பாட்டில் பார்த்தோம். "சுருதிகளின் பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்" என்று அங்கே சொன்னார். அதையே வேறு வகையில் இங்கே சொல்கிறார்.

அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய் முடிவாய
முதல்வி தன்னை.

[அறிவதற்கரிதாக நுட்பமாக இருக்கும் வேதத்துக்கு முதலான பிரணவமாய், நடுவிலே எங்குமாகப் பரவியிருக்கும் சாகைகளாய், முடிவாக உள்ள உபநிடதங்களாய் இருக்கும் முதற்பொருளாகிய அபிராமியை.]

முதலில் பக்தர்களின் அநுபவப் பொருளாக இருக்கும் தன்மையைச் சொல்லிப் பிறகு அவள் அநாதியான வேத வடிவாக இருப்பவள் என்று கூறினார். முதலில் உள்ள நிலை அநுபூதிமான்கள் அநுபவிக்கும் வியஷ்டி நிலை, பின்னது வேதவிற்பன்னர்கள் அறிந்து பாராட்டும் சமஷ்டி நிலை. முன்னது நுட்பமானது; பின்னது சற்றே திட்பமானது முன்னது ஒளி வடிவு; பின்னது ஒலிவடிவு. எல்லா ஒளிகளுக்கும் மேலான ஒளிவடிவு அம்பிகையின் வடிவம்; எல்லா ஒலிகளுக்கும் மேலான வேதவடிவம் அம்பிகையின் வடிவமே.

இத்தகைய பெருமாட்டியை நாம் தியானம் செய்ய வேண்டும். "தியானம் செய்யாவிட்டால் என்ன?" என்று யாரோ கேட்கிறார்கள். "தியானம் பண்ணாவிட்டால் அவளுக்கு ஒரு நஷ்டமும் இல்லை" என்று சொல்ல வருகிறார் ஆசிரியர்.

உலகில் தம்முடைய குறைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் காம்யார்த்த பூஜை செய்கிறவர்களில் சிலர், "நான் இவ்வளவு செய்தும் கடவுள் எனக்கு நன்மைசெய்யவில்லையே!" என்று அங்கலாய்ப்பார்கள். லஞ்சம் கொடுத்

துக் காரியசித்தி ஆகாதவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறது போல அவர்கள் பேச்சு இருக்கிறது. அவர்கள் செய்கின்ற பூஜையாலும் வைக்கும் நிவேதனங்களாலும் செய்யும் அலங்காரங்களாலும் கடவுளுக்குப் புதியதாக ஒரு சிறப்பும் வரப்போவதில்லை. தெய்வத்தை ஆராதனை செய்யாவிட்டால் அத்தெய்வத்திற்கு வரும் இழுக்கு ஏதும் இல்லை.

கங்கையில் நீராடுவதால் கங்கைக்கு என்ன லாபம்? நீராடுகிறவர்களுக்கே தூய்மை உண்டாகிறது; அழுக்குப் போகிறது. ஒருவரும் நீராடாமல் இருந்துவிட்டால் கங்கை வற்றிவிடுமா? அம்பிகை நம்முடைய வாழ்த்தையும் வழிபாட்டையும் பெற்று மகிழ்கிருள். 'நம் குழந்தைகள் நல்லவர்கள்' என்று திருவுள்ளம் பூரிக்கிருள். ஆனுல் இந்த வழிபாட்டினுல் அவளுக்குப் புதிய சிறப்பு ஒன்றும் வரப் போவதில்லை. வழிபடாவிட்டால், இருக்கும் சிறப்புப் போவதில்லை.

உலகத்தில் உள்ள அரசர்களுக்குக் குடிமக்கள் வரி செலுத்தாவிட்டால் அவர்களுடைய கருவூலம் வறிதாகிவிடும்; அவர்கள் செலவுக்குப் பணம் கிடைக்காது; அதனுல் அல்லற்படுவார்கள். குடிமக்கள் ஒழுங்காக வரிசெலுத்தினுல் அரசர் வாழ்வு நன்ருக அமையும். ஆகவே, குடிமக்களிடம் அன்பாகப் பழகி அவர்கள் குறைவின்றி வரியைச் செலுத்தும்படி செய்யவேண்டியது அரசர்களுக்கு இன்றியமையாதது.

அம்பிகையின் நிலை அத்தகையது அன்று. அவள் இயல்பாகவே கருணையுடையாள். அவளுடைய செல்வமாகிய அருளுக்கு லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை. "சென்று அடையாத திருவுடையானை" என்று சிவபெருமானை ஞானசம்பந்தர் பாடுவார். இறைவனுடைய செல்வம் போவது, வருவது ஆகிய இரண்டும் இல்லாதது; வரவு செலவு, லாப நஷ்டம், குறைவு பெருக்கம் இல்லாதது. அம்பிகையின் அருட் செல்வமும் அத்தகையதே.

ஆகையால் மக்கள் அவளைத் தியானிப்பதனுல் அவர்களுக்குத்தான் நன்மை; அன்னைக்குப் புதிய லாபம் ஏதும் இல்லை. அப்படியே, பிறவிப் பிணியில் சிக்கி உழல்பவர்கள் அவளை வழிபட்டுத் தியானிக்கவில்லையென்றுல் அவர்களுக்குத்தான் நஷ்டம்; வழிபடவும் தியானிக்கவும் வாழ்த்தவும் மனம் மொழி மெய்களைக் கொடுத்து யாவரும் பணியும் வண்ணம் திருவுருக்கொண்டு கோயில்களில் எழுந்தருளியிருந்தும், அப்பெருமாட்டியை வணங்காமல், தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்தால் இழப்பு அவர்களுக்குத்தான்; அம்பிகைக்கு அதனுல் கடுகளவும் குறைவு இல்லை. ஆறுகள் வந்து சங்கமிப்பதால் கடல் பெருகுவதில்லை; மேகங்கள் நீரை எடுத்துச் செல்வதனுல் அது குறைவதில்லை. கருணைக் கடலாகிய எம்பெருமாட்டியும் அத்தகையவளே. இதை அபிராமிபட்டர் சொல்கிருர்.

முதல்விதன்னை
உன்னுது ஒழியினும் உன்னினும்
வேண்டுவது ஒன்று இலேயே.

[முதல்வியாகிய அபிராமியை மக்கள் நினையாமல் போனுலும் தியானித்தாலும் அவளுக்கு ஆக வேண்டியது ஒன்றும் இல்லை. வேண்டுவது - அவர்களால் கிடைக்க வேண்டுவது; அவர்களால் அவளுக்கு ஆக வேண்டுவது.]

அவளால் உயிர்களுக்கு நன்மை உண்டே ஒழிய உயிர்களால் அவளுக்கு எள்ளளவு பயனும் இல்லை.

"பொன்ஞற்ப்ர யோசனம் பொன்படைத்
தாற்குண்டு; பொன்படைத்தான்
தன்ஞற்ப்ர யோசனம் பொன்னுக்கங்
கேதுண்டத் தன்மையைப்போல்
உன்ஞற்ப்ர யோசனம் வேணதெல்
லாமுண்டிங் குன்றனக்கே
என்ஞற்ப்ர யோசனம் ஏதுண்டு
காண்கச்சி ஏகம்பனே"

என்ற பட்டினத்தார் பாடலும் இக்கருத்தையே வெளி யிடுகிறது.

மின்ஆ யிரம்ஒரு மெய்வடிவு
ஆகி விளங்குகின்ற
அன்னாள், அகம்மகிழ் ஆனந்த
வல்லி, அருமறைக்கு
முன்னாய் நடுஎங்கு மாய்முடி
வாய முதல்வி தன்னை
உன்னா தொழியினும் உன்னினும்
வேண்டுவது ஒன்றுஇல்லையே.

அம்பிகையை நாம் வழிபட்டுத் தியானித்து அவள் கருணையைப் பெறவேண்டும்; அதுவே நமக்குப் பெரும் பயன் என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியில் 55-ஆம் பாட்டு.

# அன்னையின் எளிமை

பரப்பிரம்மமாகிய பொருள் ஒன்றுதான் உண்மையானது. அந்தப் பொருளே பரதேவதையாகிய அம்பிகை. அவளையன்றி வேறு ஒரு பொருளும் இல்லை. ஆதியில் இருப்பவள் அவளே. தன்னந்தனியான ஏகம் அவள். ஆதலின் ஏகாகிநீ (665) என்றும், அவளையன்றி இரண்டாவது பொருள் இல்லையாதலின் த்வைத வர்ஜிதா (668) என்றும் அப்பெருமாட்டிக்குத் திருநாமங்கள் அமைந்தன.

பராசக்தியாய் ஒரே பொருளாய் இலங்கும் எம்பெருமாட்டி அளவிடற்கரிய செயல்களைச் செய்து வருகிறாள். வெவ்வேறு நிலையில் வெவ்வேறு பெயரும் வடிவமும் கொண்டு பல திருவிளையாடல்களை ஆற்றுகிறாள். ஒரு சக்திக் கிருகத்தில் உண்டாகும் மின்சார சக்தி பல பல கிளைக் கம்பிகளின் வழியே சென்று வெவ்வேறு வகையில் விளக்காகவும் விசிறியாகவும் பலவகை யந்திரங்களாகவும் உள்ளவற்றினூடே நின்று இயங்குகிறது. அதுபோல அன்னை பலவேறு வடிவங்களை எடுத்துப் பல பல செயல்களைச் செய்கிறாள். அதனால் பஹுரூபா (824) என்ற திருநாமம் உண்டாயிற்று. சக்தி பேதங்கள் பல. மூர்த்தி பேதங்களும் பல. ஆனாலும் எல்லாமாக இருக்கிறவள் பராசக்திதான். இந்த உண்மையை அபிராமிபட்டர் 30- ஆம் பாட்டில், "ஒன்றே பல உருவே" என்று கூறி அம்பிகையைப் பாராட்டினார். மீட்டும் இப்போது அதை நினைக்கிறார்.

பராசக்தியை, "யாவையுமாம் ஏகம்" (திருக்கோவையார், 74) என்று மாணிக்கவாசகர் கூறுவர். முருகனையும்

கச்சியப்ப சிவசாரியார், "அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்" என்று கூறுவர். இவ்வாறு பலவடிவிலும் வகையிலும் விரிந்து விளங்கும் எம்பெருமாட்டி, உலகமே தன்னுடைய உருவாக எங்கும் வியாபித்திருக்கிருள். அதனால் அவளுக்கு விச்வரூபா (256) என்றும், வ்யாபிநீ (400) என்றும் திரு நாமங்கள் எழுந்தன. உலகமே அம்பிகையின் வடிவமா தலின் 'ஸர்வம் சக்திமயம் ஜகத்' என்று கூறுவர். உலக மெங்கும் அந்தர்யாமியாய் நிற்பதால் ஸ்ர்வாந்தர்யாமினி (819) என்ற பெயரையும் அவள் தாங்குகிருள். இப்படி உலகெங்கும் பரந்திருந்தாலும் அன்னை இவற்றுக்கெல் லாம் அதீதப் பொருளாய் விளங்குகிருள். அதனால் விச்வாதிகா (334), லோகாதீதா (960), ஸர்வாதீதா (962) என்ற திருப்பெயர்கள் அமைந்தன.

கடவுள் என்ற தெய்வத்தைக் குறிக்கும் சொல் இந்த இரண்டு இயல்பையும் புலப்படுத்துகிறது. எல்லாவற்றை யும் கடந்து நிற்பது, எல்லாப் பொருள்களின் உள்ளும் இருப்பது ஆதலின், கடஉள் என்ற இரண்டும் இணைந்து கடவுள் ஆயின. ஸர்வாந்தர்யாமியாய் உள்ளும், ஸர்வ வியாபகனாய் வெளியும் இருப்பவன் என்பதைக் கடவுள் என்ற பெயர் குறிக்கிறது.

"இயன்ற எல்லாம் பயின்று அகத்தடக்கிய
வேத முதல்வன்"

என்று சங்க நூலாகிய நற்றிணையில் இந்தக் கருத்து அமைந்து கிடக்கிறது. இந்த இரண்டு தன்மையையும் ஒருங்கே உடையவள் அபிராமியம்பிகை என்று அடுத்தே சொல்கிருர் அபிராமிபட்டர்.

இவ்வுலகு எங்குமாய்
நின்ருள்; அனைத்தையும் நீங்கி நிற்பாள்.

அவளுடைய ஏகத்வத்தையும், கருணையால் பஹுரூபை யாக இருத்தலையும், வியாபகத்தையும், அந்தர்யாமித்வத் தையும் சொன்னது ஏன்? அன்னையின் பெருமையை

எடுத்துக் காட்டுவதற்காக. அவளுடைய கருணையை, தமக்கு அருளும் எளிமையை, ஸௌலப்யத்தைச் சொல்ல வருகிறவர் அன்னையின் சிறப்பையெல்லாம் முன்னே சொன்னார். "எனக்கு எளிவந்து அருள்கிறவள்" என்று மட்டும் சொன்னால் அந்த ஸௌலப்யத்தின் பெருமை புலப்படாது.

பெரிய காரில் போகிற செல்வச் சீமான் ஒருவன் நெடுஞ்சாலையில் போவது வழக்கம். அவனுடைய இளம் பிராயத்து நண்பன் ஒருவன் ஏழையாக ஏதோ ஒரு சிறு சந்தில் ஒருகுடிசையில் குடியிருக்கிறான். செல்வனே பிறந்த ஊரை விட்டுப் பெரிய நகரத்தில் வாழ்கிறான். ஒரு நாள் பிறந்த ஊருக்கு வந்தபோது தன்னுடைய பழைய நண்பனைப் பார்க்கப் போகிறான். அந்த ஏழை வாழும் சந்துக்குள் அவனுடைய கார் செல்லாது. ஆகவே சாலையில் காரை நிறுத்திவிட்டுச் சந்திலே நடந்து சென்று நண்பனுடைய குடிசைக்குள் குனிந்து புகுந்து பார்க்கிறான். வேறு ஓர் ஏழை நண்பன் அந்தச் சந்திலே வந்து அவனைப் பார்ப்பது பெரிய காரியம் அன்று. நகரத்தில் வாழ்கிறவன், பெரிய காரில் அகலமான சாலையில் போகிறவன், சிறிய ஊரில் சிறிய சந்தில் நடந்து சென்று சிறிய குடிசையில் நுழைந்து பழைய நண்பனிடம் தன் அன்பைக் காட்டினான் என்றால், அதுதான் வியக்கத்தக்க செயல். அதுதான் பெருங்கருணையைக் காட்டும் செய்கை. அம்பிகை அதைவிடப் பெரிய கருணை உடையவள். உலகம் எங்குமாய் விரிந்த விரிவாக உள்ள அன்னை பக்தர்களின் சித்தத்துக்குள் விருப்பத்தோடு எழுந்தருளி நிலையாக நிற்கிறாள். பக்தர்களின் சித்தமாகிய மயில்களைக் களிக்கச் செய்யும் மேகம் என்றும், பக்தர்கள் உள்ளப் பூம்பொய்கையில் உலவும் அன்னமென்றும், லலிதா சகசிரநாமம் அன்னையை வருணிக்கிறது. பக்த சித்த கேகி கநாகநா (74) என்றும், பக்த மானஸ ஹம்ஸிகா (372) என்றும் வரும் திருநாமங்களை நினைத்துப் பார்த்தால் இந்த இயல்பு தெரியவரும்.

அன்பர்களுடைய உள்ளத்தில் சில காலம் இருந்து விட்டுப் போகிறவள் அல்ல அவள். என்றும் அங்கே உறைகிருள். வெயிலில் அலேந்தவர்கள் நிழலேக் கண்டால் விட்டுப் போகாதவாறு போல என்றும் நீங்காமல் அந்த உள்ளத்தில் நிற்கிருள். இதைத் தம்முடைய அநுபவத்தால் உணர்ந்தவர் இவ்வாசிரியர். அன்னே ஒன்ருய் அரும்பிப் பலவாக விரிந்து உலகெங்குமாய் நிற்பதும், அனைத்தையும் நீங்கி நிற்பதும் அவர் கற்றும் கேட்டும் அறிந்தவை. ஆனல் பக்தர் நெஞ்சினுள் நிற்பதைத் தம்முடைய அநுபவத்திலே நுகர்ந்தவர். ஆகையால் தாமே சான்ருக நின்று பகர்கிருர்.

என்றன் நெஞ்சினுள்ளே
பொன்ருது நின்று புரிகின்றவா!

என்கிருர். 'இத்தகைய பரதேவதை ஒன்றுக்கும் பற்ருதகடையேனுகிய அடியேனுடைய நெஞ்சிலே ஒரு கணமும் நீங்காமல் நிலே நின்று, அப்படியே நிற்றலே விரும்புவது என்ன ஆச்சரியம்!' என்று வியப்படைகிருர். புரிகின்றவா என்பது புரிகின்றவாறு என்ன வியப்பு என்ற பொருளுடையது. புரிதல்-விரும்புதல்.

புரிதல் என்பதற்குச் செய்தல் என்றும் பொருள் உண்டு. 'என் உள்ளத்திலே மறையாமல் நின்று அவள் திருவிளேயாடல் பல புரிகின்றவாறு என்ன வியப்பு!' என்றும் பொருள் கொள்ளலாம். அம்பிகை உள்ளத்தடத்திலே நின்று தன் அருளொளியை வீசப் புகுந்து விட்டால் அப்போது அந்தப் பக்தனிடத்தில் நிகழும் அற்புதங்களுக்கு அளவே இல்லே. எல்லா வகையான சித்திகளும் அவனுக்குக் கிடைக்கும். பிறர் அறியாத ஆனந்தப் பெருங்கடலில் அவன் மூழ்கி இன்புறுவான். இவை யாவும் இறைவியின் கருணேத் திருவிளேயாடல்கள்.

"இப்படியும் இருக்குமா?" என்று நாம் ஐயப்படுகிருேம். ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தா ஒருவர் ஒரு வீட்டில் வாழ்கிருர். அவருக்கு அடுத்த

வீட்டில் அதே சம்பளம் வாங்கும் மற்ருெருவர் இருக்கிருர். இருவருடைய குடும்பமும் கலந்து பழகின. அந்த இருவருக்குள் ஒருவருக்குப் பத்து ரூபாய் சம்பளம் அதிகமாகிவிட்டது. அவர் அடுத்த வீட்டாரோடு முன்போலப் பழகமாட்டார். அதுகூட வியப்பன்று. அவருடைய மனைவி அடுத்த வீட்டுக்காரர் மனைவியோடு பழையபடி பேச மாட்டாள்; சிறிது தலையெடுப்பாகவே இருப்பாள். இது உலக இயல்பு.

''முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனு எண்ணி விடும்''

என்று நாலடியார் கூறுகிறது. இத்தகைய உலகியலிலே பழகுகிற நமக்கு, ஸர்வேசுவரியாக விளங்கும் அன்னை ஒரு மனிதனுடைய உள்ளத்தில் வந்து நடம் புரிகிருள். எப்போதும் மகிழ்ச்சியோடு இருக்கிருள் என்ருல் எளிதிலே நம்பிக்கை உண்டாகாது. பக்தருடைய உள்ளத்தை விண்டு பார்க்க முடியுமா? அல்லது அவர்தாம் தம் நெஞ்சைப் பிளந்து காட்ட முடியுமா? முடியவே முடியாது.

பின்னே, அபிராமிபட்டர் கூறுகிருரே; அது உண்மையா, பொய்யா? அவருக்கு அவர் மனம் சாட்சி. நமக்கு யார் சாட்சி? அவர் இரண்டு பெரியவர்களைச் சாட்சிக்கு அழைக்கிருர். ஆனல் அந்தச் சாட்சிகளை நாம் காணவும் முடியாது; கேட்கவும் முடியாது. ''உங்களால் முடிந்தால் அந்தப் பெரியவர்களிடம் போய்க் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்குத்தான் இந்த இரகசியம் தெரியும்; அவர்கள் சொல்வார்கள்!'' என்று கூறுவாரைப் போல இந்த அநுபூதிமான் சொல்கிருர். ''எனக்கு அம்பிகை அருள் செய்வது என்ன வியப்பு! என் உள்ளத்திலே நின்று திருவிளையாடல் புரிவது என்ன ஆச்சிரியம்! அத்த ஆச்சரியமான இரகசியத்தை இரண்டு பேர்களே அறிவார்கள். அந்தப் பரதேவதையை உபாசித்துத் தம்முடைய உள்ளத்தை அவளுக்குச் சிங்காதனமாகக் கொடுத்தவர்கள் அந்த இருவர்களும். அவர்களுக்குத்தான் என்

நிலையும் தெரியும்'' என்று சொல்லாமல் சொல்கிருர். அவர்கள் யார்? திருமாலும் சிவபெருமானுமே இந்த இரகசியத்தை, இவ்வுண்மையை, உணர்வார்களாம். உலகமெல்லாம் நீரில் முழுகிய பிரளயத்தில் ஆலிலையில் யோகத்துயில் புரியும் பெம்மாளுகிய திருமால் அந்த யோக நிலையில் தம் உள்ளத்திலே பரதேவதையை நிறுத்தித் தியானம் புரிகிருர். அதனுல் அவர் உள்ளத்தே நிற்கிருள் அன்னை. அவர் அறிவார் இந்த உண்மையை.

சிவபெருமானே தட்சிணுமூர்த்தியாக யோகத்தில் இருந்தபோது அம்பிகையைத் தியானித்துத் தம் உள்ளத்தில் அவளைப் பிணித்துக்கொண்டவர். "சிந்தையுள்ளே பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்'' (15) என்று முன்பு கூறியிருக்கிருர் இவ்வாசிரியர்.

> ''எறிதரங்கம், உடுக்கும் புவனம் கடந்துநின்ற
> ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப்
> பார்த்திருக்கும் உயிர் ஓவியமே''

என்று குமரகுருபர முனிவர் பாடுவார்.

ஆகவே, யோகத்துயில்கூரும் திருமாலும், பரமயோகியாய் வீற்றிருக்கும் சிவபெருமானும் தங்கள் உள்ளத்தில் அம்பிகை பொன்ருது நின்று புரிகிற அற்புதங்களை அநுபவிக்கிறவர்கள். அவர்கள் அபிராமிபட்டர் கூறும் உண்மையை அறிவார்கள்.

> இப் பொருள் அறிவார்
> அன்று ஆல் இலையில் துயின்ற பெம்மானும்
> என் ஐயனுமே!

இதில் மற்ருெரு கருத்தும் குறிப்பாகப் புலப்படுகிறது. ஒரு பெண்மணியின் நுட்பமான இயல்பை அவள் பிறந்த வீட்டாரும் கணவருமே அறிவார்கள். திருமால் அன்னையின் சகோதரர்; சிவபெருமான் அபிராமியின் கணவர். அவவிருவருக்கும் அன்னையின் எளிய இயல்பு நன்ருகத் தெரியும். இவ்வாறும் ஒரு பொருள் இதில் புலனுகிறது.

ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றாள்; அனைத்தையும் நீங்கிநிற்
பாள்; என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற
வா!இப் பொருள் அறிவார்
அன்றால் இலையில் துயின்றபெம்
மானும்என் ஐயனுமே.

[ஒரு பொருளாகிய பராசக்தியாய் நுட்பமான பொருளாக மணம் முதலியன பரவாமல் அடக்கிக் கொண்டிருக்கும் அரும்புபோல இருந்து, பிறகு உலகத்தைப் படைத்தல் முதலிய பல வேறு திருவிளையாடல்களை இயற்றும் பொருட்டுப் பல்வேறு சக்திகளாக விரிந்து, இந்த உலகம் எங்கும் அந்தர்யாமியாய் நின்றாள்; ஆயினும் எல்லாவற்றையும் கடந்தும் நிற்பாள்; அத்தகைய அம்பிகை, ஒன்றுக்கும் பற்றாத எளியேனுடைய புல்லிய நெஞ்சுக்குள்ளே, ஒரு கணமும் மறையாமல் நிலைத்து நின்று விரும்பிப், பல திருவிளையாடல்களைப் புரிகின்றவாறு என்ன ஆச்சரியம்! இந்த உண்மையை அறிபவர்கள், பிரளயகாலமாகிய அன்று ஆல் இலையில் யோகத்துயில் கொண்ட பெருமானாகிய திருமாலும் என் தந்தையாகிய சிவபெருமானுமே ஆவர்.

அரும்பி என்பதற்குப் புதிதாகத் தோன்றி என்று பொருள் கொள்ளாமல், தன்சக்திகளையெல்லாம் அடக்கிக் கொண்டு அரும்புபோலத் தோற்றம் தந்து என்று கொள்ள வேண்டும். பொன்றாது-மறையாமல். புரிகின்ற வா—புரிகின்றவாறு என்ன வியப்பு! புரிதல்—விரும்புதல்; செய்தல். பொருள்—உண்மை; கருத்தென்றும் கூறலாம். அன்று: பண்டறி சுட்டு; பிரளய காலத்தைச் சுட்டியது. அம்பிகையை அன்னையாக வழிபடுகிறவராதலின் சிவபெருமானைத் தந்தையாகச் சொன்னார். ஐயன்—தந்தை.]

அம்பிகை பக்தர்களுக்கு மிகவும் எளிமையுடையவள் என்பது இந்தப் பாட்டின் கருத்து.

இது அபிராமி அந்தாதியின் ஐம்பத்தாறாவது பாட்டு.

# அறப்பெருஞ் செல்வி

ஒரு வீட்டில் உள்ள குடும்பத்தில் தாய், தந்தை, மக்கள், பிற உறவினர்கள் வாழ்கிருர்கள். இல்லற வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்கு வீட்டில் உள்ளவர்களிடமும் அயலார்களிடமும் அன்பு இருக்க வேண்டும். அந்த அன்பு இருந்தால் அறம் செய்யும் இயல்பு உண்டாகும். அன்பு இல்லாவிட்டால் எதையும் எவருக்கும் கொடுக்க மனம் வராது. அதனுல் இல்வாழ்க்கையின் பண்பு அன்பு என்றும், அதனுல் விளையும் அறம் பயனென்றும் வள்ளுவர் கூறுகிருர்.

> ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது''

என்று கூறுவார்.

இவ்வாறு அமையும் இல்லத்திற்குத் தலைவி வீட்டின் அரசியாகிய மனைவியே. மனைவி என்னும் பெயரே மனைக்கு உரிமை உடையவள் என்ற பொருளை உடையது. அதற்கு ஆண்பால் பெயர் இல்லை. கணவனை மனைவன் என்று சொல்லும் வழக்கம் இல்லை. அப்படியே இல்லத்தின் தலைவியாகிய பெண்ணுக்கு இல்லாள் என்ற பெயர் வழங்குகிறது. கணவனுக்கு இல்லான் என்ற பெயர் இல்லை. அந்தச் சொல்லுக்கு வறியவன் என்றுதான் பொருள். ஆகவே, இல்லத்தின் தலைவி அந்த வீட்டில் உள்ள பெண் என்பது தெரியவரும்.

ஆண்மகன் பல முயற்சிகளை நாட்டிற் செய்துபொருள் ஈட்டுகிறவன்; பலரோடு சேர்ந்து தலைவனுக நின்று பல செயல்களைச் செய்பவன். கணவன் என்பது கணத்துக்குத் தலைவன் என்ற பொருளை உடையது. நாட்டிலுள்ள

சிலருக்கேனும் தலைவனாக இருக்கும் ஆற்றல் ஆடவனுக்கு வேண்டும். எப்போதுமே தலைவனாக இல்லாவிட்டாலும் சில சமயங்களில் சில துறைகளில் அவன் பலரை நடத்திச் செல்லும் தலைவனாக, கணபதியாக, கணவனாக இருக்க வேண்டும். அவன் தலைமை, வீட்டுக்கு வெளியே நாட்டில் அமைவது.

வீட்டில் தலைமை தாங்குபவள் இல்லத்தரசியாகிய மனைவியே. ஆகையால்தான் இல் என்றாலே மனைவிக்குப் பெயராயிற்று. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கிலும் முதலில் உள்ள அறத்தின் வகைகளில் தலைமையாக உள்ளவை விருந்தோம்பலும் ஈகையும். அவை வீட்டிலே நடைபெறுவன. இன்பமும் இல்லத்திற்குள் பெறுவதற்குரியது. இல்லத்தரசிகள் விருந்தோம்புதலையும் ஈகையையும் நடத்தி வந்தார்கள் என்பதைக் கம்பனும் சொல்கிறான்.

''பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?''

'பெருந்தடங்கண் பிறைநுதலார்' என்பதால் அவர்களுடைய பருவத்தையும் எழிலையும் காட்டி, அவர்களால் இன்பமும் கணவனுக்கு உண்டாகும் என்பது குறிப்பாகப் புலப்படும்படி வைக்கிறான் கம்பன்.

ஆடவனுக்குத் தன் முயற்சியால் பொருளை ஈட்டிக் கொண்டு வந்து தரும் உரிமையும் கடமையும் உண்டு. அந்தப் பொருளுக்கு ஏற்றபடி அறஞ்செய்து இன்பவாழ்க்கையை நடத்தும் உரிமையும் கடமையும் இல்லத்தரசிக்கே உண்டு. வாசலில் வந்து பிச்சை கேட்கும் பிச்சைக்காரன் கூட, ''அம்மா! பிச்சை'' என்று கேட்கிறானேயன்றி, ''ஐயா! பிச்சை'' என்று கேட்பதில்லை. தானம் செய்யும்

இல்வாழ்வான் எந்தப் பொருளை வழங்கினாலும், செக்கில் கையெழுத்துப் போடும் பிரபுவைப் போல, ஓர் உத்தரணி நீர் வீட்டுக்குடையவள் விட்டாலன்றி, அந்தத் தானம் செல்லாது. ஆகவே அறம் செய்வதற்குரியவள் இல்லத்தரசி என்பது தெளிவாகும்.

அவள் தன் கணவன் கொண்டு வந்து தரும் பொருளுக்குத் தக்கபடி வாழ்க்கையில் அறமும் இன்பமும் உண்டாகும்படி செய்ய வேண்டும். கணவன் குறைந்த அளவில் ஈட்டிக் கொண்டு வந்தால் அவள் நிறைந்த அளவில் நீட்டக்கூடாது. அதனால் வாழ்க்கை அல்லற்படும். ஈட்டுவதற்கு ஏற்றபடி நீட்டுவது மனைவியின் கடமை. இதையும் வள்ளுவர் சொல்கிறார்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

'இல்வாழ்வுக்கு ஏற்ற பண்புகளை உடையவளாகித் தன்னை மனைவியாக ஏற்றுக்கொண்ட கணவனுடைய பொருள் வருவாய்க்குத் தக்கபடி நடப்பவளே வாழ்க்கைக்கு ஏற்ற துணைவியாவாள்' என்பது இதன் பொருள். தற்கொண்டான் வளம் என்பது கணவனுடைய வருவாயைக் குறிப்பது. அதற்கு ஏற்ப விருந்தோம்பல் முதலிய அறங்களை அவள் செய்ய வேண்டும். அப்போதுதான் இல்லற வாழ்வென்னும் பெருஞ்செயலை மேற்கொண்டவனுக்கு உற்ற துணையாக அவள் இருக்க முடியும்.

மற்றொன்று; இல்வாழ்வின் முக்கியமான பயனே அறம் செய்வதுதான்;இன்பம் பெறுதல் பரம்பரை அறாமல் இருப்பதற்காக அமைவது. முதுமை வந்த பிறகு இன்பம் நுகர்தல் முடியாத காரியம். ஆனால் எப்போதுமே அறம் செய்யலாம். அதனால்தான் தர்ம பத்தினி என்று மனைவியைக்குறிக்கும் வழக்கு வந்தது; காம பத்தினி என்று சொல்வதில்லை. தமிழிலும் இல்லக்கிழத்திதான் மனைவி,

காமக் கிழத்தி என்பவள் அறவழிக்கு அப்பாற்பட்டவள்; இழித்தற்குரியவள்,

இதுவரையும் சொன்னவற்ருல் வீட்டுக்குத் தலைவி பெண் என்றும், இல்லத்துக்கு உயிராக இருப்பவள் அவள் என்றும், அவள் தன் கணவனுடைய செல்வ நிலைக்கு ஏற்றபடி தர்மத்தைச் செய்ய வேண்டும் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

மனிதன் இப்படி வாழவேண்டும் என்று ஆண்டவனே நமக்குக் காட்டுகிருன். மனைவி மக்களோடு அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையில் வாழவேண்டுமென்று அவனும் குடும்பத்தை உடையவனைப்போல நடந்து காட்டுகிருன். அம்பிகையும் ஒரு குடும்பத்துக்குத் தலைவி எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடந்து சதாசிவ குடும்பினியாக விளங்குகிருள். அந்தக் குடும்பத்தின் தலைவி அம்பிகை; அவளுடைய வீடு சர்வப்பிரபஞ்சமும். ஆகவே பிரபஞ்சமாகிய வீட்டுத் தலைவி எல்லா உயிர் களுக்கும் தாயாகிய அம்பிகையே. சிற்றறிவும் சிறிய ஆற்றலும் உடைய மனிதப் பெண்ணின் ஆட்சி எல்லை, வீட்டளவில் நிற்கிறது. அகிலலோக ஜனனியாகிய நித்திய சுமங்கலை அம்பிகை. அவள் ஆட்சி எல்லாப் பிரபஞ்சங் களையும் தன்னுள் அடக்கிக்கொண்டது. எல்லாமே அவள் வீடுதான், ஆகவே அவளே ஜகதம்பிகை; உலகத் தலைவி; அகிலாண்டநாயகி.

அப்பெருமாட்டி, இல்லத்தரசி இப்படி நடக்க வேண்டும் என்று நடந்து காட்டினுள். காஞ்சிபுரத்தில் ஒரு சிறப்பு உண்டு. மற்ற ஊர்களில் எல்லாத் திருக் கோயில்களிலும் அம்பிகையின் சந்நிதியில் அவள் நின்ற திருக்கோலத்தில் தோன்றுவாள். ஒவ்வொரு கோயி லிலும் சிவபிரான் சந்நிதியும் அம்பிகையின் சந்நிதியும் இருக்கும். காஞ்சிபுரத்தில் பல சிவாலயங்கள் உண்டு. ஒரு கோயிலிலும் அம்பிகை சந்நிதி இல்லை. காமாட்சி ஆலயம் ஒன்றுதான் அம்பிகை திருக்கோயில், அங்கே

இறைவன் சந்நிதி இல்லை. காமாட்சி வீற்றிருந்த திருக்கோலத்தில் விளங்குகிருள். அவளே அரசி ஆதலின் அமர்ந்திருக்கிருள். மற்ற எல்லா மூர்த்திகளும் அப்பெருமாட்டிக்கு அடங்கினவர்களே. இல்லத்தரசியைப் போல அகிலாண்டத்துக்கும் அரசியாக அவள் தன் தலைமை தோன்ற எழுந்தருளியிருக்கிருள். பார்வதியாகச் சிவபிரான் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் நிலை வேறு; ராஜராஜேசுவரியாகத் தனியே வீற்றிருக்கும் நிலை வேறு. அந்த நிலை, அவளே பரதேவதை என்பதைக் காட்டுகிறது.

காஞ்சிப் புராணத்தில் ஒரு வரலாறு வருகிறது. சிவபெருமான் இரண்டு நாழி நெல்லைக் கொடுத்து, "வேண்டிய அறங்களைச் செய்" என்று சொன்ஞராம். அம்பிகை, "இது எப்படி எல்லா அறங்களையும் செய்யப் போதும்?" என்று கேட்கவில்லை. அந்த இரண்டு படி நெல்லைக் கொண்டே முப்பத்திரண்டு அறங்களையும் செய்தாளாம்.

"தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை இருநாழி நெற்கொண்டோர்-மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர் காஞ்சி யிடை."

[பழைய வேதம் ஆராய்ந்து காண முயலும் சிவபெருமாளுகிய தன்னுடைய கணவனிடம் ஓராண்டாகிய கால எல்லையில் இரண்டு படி நெல்லைக்கொண்டு ஒரு மெல்லியலாகிய பெண், உயர்ந்த உலகத்தில் வாழும் எல்லா உயிர்களையும், ஒலிக்கின்ற நீரையுடைய காஞ்சிபுரத்தில் இருந்துகொண்டு, உண்ணுவித்துக் காப்பாற்றிஞள்.]

இது ஒரு பழம் பாடல்.

ஒரு வருஷத்துக்கு வேண்டியதைக் கணவன் வாங்கிப் போட அதை வைத்துக்கொண்டே வீட்டுத் தலைவி எல்லாவற்றையும் நடத்துவதுபோலக் காமாட்சியம்மை நடத்திஞளாம்.

இதை அருணகிரி நாதரும் திருப்புகழில் பாடுகிருர்.

"அபிராமி
எக்குலங்குடி லோடுல கியாவையும்
இற்பதிந்திரு நாழிநெ லால்அறம்
எப்பொதும் பகிர்வாள்"

"இருநாழி படி கொடறங்காத்த மாபரைச்சி"
(திருப்புகழ்)

பரைச்சி என்பது பரதேவதை என்ற பொருளுடையது. பரா, பராம்பிகா, பராசக்தி என்று கூறும் பெயர்களைப் போன்றது அது.

இவ்வாறு உலகுயிர்களாகிய குடும்பத்தில் தாயாகி அவ்வுயிர்கள் உய்ய எல்லா அறங்களையும் செய்யும் அம்பிகையைத் தர்மவர்த்தனி (959) என்று லலிதாசகசிர நாமம் கூறுகிறது. திருவையாற்றில் தர்மசம்வர்த்தனி என்றும், அறம் வளர்த்த நாயகி என்றும் திருநாமம் கொண்டு அம்பிகை எழுந்தருளியிருக்கிருள். அறப்பெருஞ் செல்வி என்று புலவர்கள் பாடுவார்கள்.

இத்தகைய பெருமாட்டியின் அருளால் கிடைக்காத பொருள் ஒன்றும் இல்லை. அம்பிகையைப் போற்றினல் பிறகு வேறு யாரையும் போய்ப் போற்றி வேண்டுவதற்குரிய பொருள் ஏதும் இல்லை. இதனை அறிந்தும், புலவர்கள் செல்வர்களைத் தேடிச் சென்று, அவர்களிடம் இருக்கும் பண்பு சிறிதளவாயினும் அதற்கு மேல் பல பண்புகளைக் கூட்டிப் பொய்யும் மெய்யும் கலந்து பாடுகிருர்கள். இந்த நிலையை அருளாளர்கள் கண்டித்திருக்கிருர்கள்.

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்பி னுந்தொண்டர்த் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!

இம்மை யேதரும் சோறும் கூறையும்;
ஏத்த லாம்இடர் கெடலுமாம்;
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார். இப்படியே ஆழ்வார்களும் அருணகிரிநாதரும் பாடியிருக்கிறார்கள்.

அபிராமிபட்டரும் இந்தக் கருத்தைச் சொல்கிறார். ஆனால் அவர் பிறருக்கு உபதேசம் செய்யும் வகையில் அதைச் சொல்லாமல், தாமே அப்படிச் செய்வதாக அந்தக் குற்றத்தைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு சொல்கிறார். இது பெரியோர்களுக்கு இயல்பு. தாம் செய்யாத குற்றங்களையும் தாம் செய்ததாகக் கூறி இரங்குவார்கள். இதை நைச்சியானுசந்தானம் என்பர். அபிராமிபட்டர் அத்தகைய பணிவு நிலையிலிருந்து, ''எல்லா அறங்களையும் செய்த உன்னையும் போற்றி வேறு யார் யாரிடமோ போய்த் தமிழ்ப் பாட்டுப் பாடிப் பொய்யும் மெய்யும் புகலும்படி வைத்தாயே! இது நின் அருளுக்கு அழகாகுமா?'' என்று கேட்கிறார். இனி அவர் பாட்டைப் பார்க்கலாம்.

முதலில், இரண்டுபடி நெல்கொண்டு உலகமெல்லாம் உய்ய அறம் செய்தாள் அம்பிகை என்பதைச் சொல்கிறார்.

ஐயன் அளந்தபடி இரு நாழி கொண்டு
அண்டம் எல்லாம்
உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி.

[பரமேசுவரனாகிய என் தந்தை அளந்து தந்த வண்ணம் இரண்டு படி நெல்லைக்கொண்டு உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் வாழும்படி அறத்தைச் செய்யும் உன்னையும் பாக்களால் புகழ்ந்து.

''எம் ஐயனுமே'' என்று மூன் பாட்டில் சிவபிரானைக் குறித்தார். ஐயன்—தந்தை. அளந்தபடி-அளந்துகொடுத்த

வண்ணம். இரு நாழி என்பது இரண்டு படிகள் என்ற பொருளுடையதாலும் ஆகுபெயரால் இருநாழி நெல்லைக் குறித்தது. உன்னையும் என்ற உம்மை உயர்வு சிறப்பும்மை; அம்பிகையின் உயர்வைக் குறித்தது. போற்றி என்றது பாடல்களால் ஏத்தி என்று பொருள் கொள்வதற்குறியது.]

''உன்னைப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் வேறு யாரிடமோ போனேனே!'' என்று சொல்லவில்லை; ''நீ அறம் செய்து எல்லா உயிர்களையும் காப்பாற்றினவள் என்று தெரிந்தும் நான் பிறரிடம் போகிறேன்'' என்று சொல்ல வருகிறார்.

ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்
கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய்; இதுவோ
உன்றன் மெய் அருளே?

[வேறு ஒருவரிடத்தில் செம்மையான பசிய தமிழ்ப் பாமாலையைப் பாடி அதையும் கொண்டுபோய் அவரைப் பற்றிய பண்புகளைப் பொய்யும் மெய்யுமாகக் கலந்து பாட வைத்தாயே! இதுவோ அடியேனுக்கு உன்னால் கிடைக்கும் மெய்யான அருள்?

ஒருவர் என்றது எந்தத் தகுதியும் இல்லாத யாரோ ஒருவர் என்று சொன்னபடி. நான் உடம்பு கூனிக் குறுகிப் போவது போதாமல் உனக்கு நிவேதனமாக்கும் உயர்ந்த பொருளையும் கொண்டு போனேன் என்று தம்மையே இழித்துக்கொள்கிறார். செய்ய தமிழ், பசுந்தமிழ் என்று கூட்டவேண்டும். செம்மை என்பது இலக்கணங்களால் நிறைந்ததைக் காட்டியது. பசுமை புதுமையைக் காட்டியது. புதிய பாடல்களைப் பாடிச் சென்றேன் என்கிறார். பாவர்கிய மாலை. மாலையை உனக்குச் சூட்டிப் பாராமல்

யாருக்கோ சூட்டினேன் என்று அழுங்குகிறார். சென்று- அம்பிகை இருக்கவும் இப்படிப் போகிறோமே என்று எண்ணி அவமானமுறாமல் துணிந்து சென்று. பொய் என்றது, இல்லாத பல பண்புகளை. மெய் என்றது இருக்கும் ஓரிரு குணங்களை. இரண்டையும் சேர்த்துப் பாடி அதைக் கொண்டு சென்று அவரிடம் நாணமின்றி வாயாரப் பாடும்படி வைத்தாயே என்கிறார்.]

'இப்படி அடியேன் செய்தேன்' என்று சொல்லவில்லை. 'இப்படி இயம்பும்படி நீதானே செய்தாய்?' என்கிறார். "நன்றே வரினும் தீதே புரிகினும் நானறிவ, தொன்றே யும் இல்லை" என்ற உணர்வுடையராதலின் இப்படிச் சொன்னார். "நீதானே என்னை ஆட்டுவிக்கிறாய்? நீ என்னை இவ்வாறு பிறரிடம் செல்லும்படி விடலாமா? உன் அருளை நிரம்பக் கொடுத்திருந்தால் பலரிடம் நான் போவேனா? அப்படிப் போவதற்கு நீ எனக்குச் செய்த அருள் போதிய அளவு இல்லாமையே கராணம்" என்று உரிமையோடு சொல்கிறார். தாய் கொடுத்த சிற்றுண்டி போதாமல் வேறு ஏதோ கடையில் போய்க் கண்டதை வாங்கிச் சாப்பிட்ட குழந்தை, "நீ எனக்கு வேண்டிய அளவு கொடுக்கவில்லை. அதனால் அங்கே போகும்படி ஆயிற்று அதற்கு நீதானே காரணம்?" என்று கேட்பதுபோல இருக்கிறது இது.

பொய்யும் மெய்யும் இயம்ப வைத்தாய்;
இதுவோ உன்றன் மெய் அருளே?

பொருள் சேர்ப்பார்க்கும் பேராசை உண்டு. அருளுக்கு ஏங்குவார்க்கும் பேராசை உண்டு. ஆனால் பொருளுக்காக ஏங்குவதற்குத்தான் ஆசை என்று பெயர். அருளுக்கு ஏங்குவதற்கு ஆர்வம், அன்பு, முமுக்ஷுத்வம் என்று பல வகையிற் பெயர் அமையும்.

அம்பிகை பேரருள் உடையவள் என்றும், அவளு டைய அருளுக்குப் பாத்திரமாகிவிட்டால் எல்லாம்

கிடைக்கும் என்றும், பிறரிடம் போய் இரக்கவேண்டிய நிலை வாராது என்றும் இதனால் ஆசிரியர் பெற வைக்கிருர்.

ஐயன் அளந்த படிஇரு
  நாழிகொண்டு அண்டம்எல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும்
  போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை
  யும்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்; இது
  வோஉன்றன் மெய்அருளே?

[ஐயன்-என் தந்தையாகிய சிவபெருமான். அளந்த படி-அளந்து தந்து அறம் செய்க என்று பணித்த வண்ணம். நாழி-படி. செய்ய தமிழ்-செந்தமிழ்.]

இது அபிராமி அந்தாதியில் 57-ஆம் பாடல்.

# மேலான புகலிடம்

இந்தியச் சிற்பக் கலையை நன்கு ஆராய்ந்து பல நூல்களை எழுதியவர் ஆனந்த குமாரசுவாமி என்ற பேரறிஞர். அவர் ஒரு முறை பல கலைஞர்கள் கூடியிருந்த கூட்டத்தில் ஒரு கேள்வி கேட்டாராம். "இந்தியப் பண்பாட்டில் எந்தப் பொருள் இல்லாவிட்டால் சுவை இராது? எந்தப் பொருள் எல்லாக் கலைகளிலும் சிறந்த இடத்தை வகிக்கிறது?" என்றார். கலைஞர்கள் ஆளுக்கு ஒரு பொருளைச் சொன்னார்கள். ஒன்றையும் அவர் ஏற்கவில்லை. கடைசியில் அவரே சொன்னார்: "தாமரைதான் அப்பொருள். அது இல்லாவிட்டால் இந்திய ஓவியம் இல்லை; சிற்பம் இல்லை; இந்திய நாட்டுக் கடவுளுக்குப் பீடம் இல்லை; கை இல்லை; கால் இல்லை; காப்பியங்களில் வருணனை இல்லை" என்று சொன்னாராம்.

எத்தனை உண்மையான கருத்து அது! கோயிலுக்குள் போனால் தூணில் தாமரை; பீடத்தில் தாமரை; கீழ்த் தளத்தில் தாமரை; மேல் தளத்தில் தாமரை. பிரமாவின் இருப்பிடம் தாமரை; திருமகளின் ஆசனம் செந்தாமரை; கலைமகள் வெண்டாமரையில் இருக்கிறாள், காவியங்களைப் புரட்டினால் எங்கேயும் தாமரைதான். பெண்களின் வருணனையைப் பார்த்தாலே திருமுகம் கமலம், திருவிழி பதுமம், திருக்கை பங்கயம், திருவடி தாமரை என்று புலவர்கள் சொல்லிக்கொண்டே போவார்கள். நாராயண மூர்த்தியை வருணித்தால் அங்கே எத்தனை கமலங்கள் வருகின்றன! சிவபிரானை, "தாமரைக்காடு அனைய மேனித் தனிச் சுடரே!" என்று மாணிக்க வாசகர் பாடுகிறார்.

செக்கச் சிவந்த திருமேனியை உடைய பராம்பிகையைப் பாடுகின்ற அபிராமிபட்டர் அன்னையின் திருமேனியிலுள்ள கமலங்களை, தாமரை போன்ற அங்கங்களை, இப்போது தியானம் செய்கிறார். ஒரே அம்புயமயமாகப் பாட்டைப் பாடுகிறார். ஆறு அம்புயங்களை வைத்துக் கோத்த மாலையைப் போல இந்தப் பாட்டை மணக்கச் செய்கிறார்.

முதல் அம்புயம் அம்பிகை எழுந்தருளியிருக்கும் ஆசனம், 'அருணம்புயத்து அமர்ந்திருக்கும் தையல் நல்லாள்' என்று சொல்கிறார். அருணம்-சிவப்பு. அம்பிகை செந்தாமரையில் வீற்றிருக்கிறாள். செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளே எம்பெருமாட்டியின் ஒரு கூறு தான்.

அன்றியும், நம் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலும் வெவ்வேறு இதழ்க் கணக்குகளை உடைய தாமரைகள் இருக்கின்றன. அவ்விடங்களில் வெவ்வேறு கோலத்தோடு அம்பிகை வீற்றிருக்கிறாள். 'மூலாதாராம்புஜாரூடா' (514) என்ற லலிதா சகசிரநாமம் அன்னை மூலாதாரத் தாமரையில் எழுந்தருளியிருப்பதைக் குறிக்கிறது. இப்படியே, 'ஸ்வாதிஷ்டாநாம்புஜகதா' (504) என்றும், 'மணிபூராப்ஜ நிலயா' (495) என்றும், 'அநாஹதாப்ஜநிலயா' (485) என்றும், 'விசுத்தி சக்ர நிலயா' (475) என்றும், 'ஆக்ஞா சக்ராப்ஜ நிலயா' (521) என்றும் பிற ஆதாரங்களில் உள்ள தாமரை மலர்களில் எழுந்தருளியிருப்பதைக் குறிக்கிறது.

இவற்றையன்றி ப்ரம்ஹரந்திரத்தில் உள்ள ஸஹஸ்ரார கமலத்தில் எழுந்தருளியிருக்கிறாள் அம்பிகை. அந்த ஆயிர இதழ்த் தாமரையில் வீற்றிருப்பதை, 'மஹாபத்மாடவீ ஸம்ஸ்த்தா' (59) என்றும், 'ஸஹஸ்ராராம்புஜாரூடா, (505) என்றும், 'ஸஹஸ்ரதள பத்மஸ்தா' (528) என்றும் சகசிரநாமம் விளக்குகிறது.

எம்பெருமாட்டிக்கு, 'பத்மாஸனா' (278) என்பதே ஒரு திருநாமம். அவள் திருமேனி முழுவதும் தாமரை மய

மாகத் தோற்றுவதால். 'நளிநீ' (460) என்ற திருநாமமும் அமைந்தது.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்த அபிராமிபட்டர் முன்பு ஒரு பாட்டில், 'அம்புயமேல் திருந்திய சுந்தரி' (5) என்று பாடினர். இப்போதும் அதை நினைக்கிருர்.

செக்கச் சிவந்த தாமரையில் வீற்றிருக்கும் அன்னை, பக்தராகிய தம்முடைய உள்ளக் கமலத்திலும் எழுந்தருளி யிருக்கிருள் என்று சேர்த்துச் சொல்கிருர்.

> அருணம்புயத்தும் என் சித்தாம்புயத்தும்
> அமர்ந்திருக்கும்....தையல் நல்லாள்.

சித்தமாகிய அம்புயம்; இதயத் தாமரை. அம்பிகையை எப்போதும் தியானம் செய்கிறவராதலின் இவ்வாறு சொன்னர். அம்பிகை தன்னை நினைத்து அன்பு செய்யும் பக்தர்களின் உள்ளமாகிய தாமரையில் எழுந்தருளியிருக்கிருள்.

> "மலர்மிசை ஏகினன்"

என்ற குறளுக்கு, 'தன்னை நினைப்பாரது உள்ளக்கமலத்தின் கண் விரைந்து செல்லுபவன்' என்று பரிமேலழகர் உரை எழுதுகிருர். அவ்வாறே எம்பெருமாட்டியும் பக்தர்களுடைய மனமென்னும் தாமரையில் விருப்பத்தோடு சென்று எழுந்தருளியிருப்பாள். 'பக்த மானஸ ஹம்ஸிகா' (372) என்பது அன்னையின் திருநாமங்களில் ஒன்று. பக்தர்களின் மனத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னம் போன்றவள் என்பது இதன் பொருள். அன்னம் தாமரை மலரில் தங்கியிருக்கும். ஆகவே இந்த ஏகதேச உருவகத்தால் பக்தர்களுடைய மனம் தாமரை போன்றது என்பது குறிப்பினல் உணரத்தக்கது. 'ஹ்ருத்யா' (303). 'ஹ்ருதயஸ்தா'' (595) என்று அன்னைக்குரிய நாமங்களாக அமைந்த இரண்டும் அன்பரகத்தாமரையின் மீதிருக்கிருள் அம்பிகை என்பதையே குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

தாமரை விரிவானது; தண்மையானது; மென்மையானது; மணம் உடையது; தேன் ஊறுவது; பல இதழ்களை உடையது. அன்பர்களின் உள்ளமும் விரிவுடையது; குறுகிய பான்மையை விட்டு அகண்டாகார விருத்தியில் ஈடுபடுவது; அன்பு என்னும் குளிர்ச்சியை உடையது; அன்புக்கே ஈரம் என்று ஒரு பெயர் உண்டு. "இன்சொலால் ஈரம்அளைஇ" என்பது குறள். மலரில் ஈரம் இருப்பதுபோல அன்பர்களின் மனத்தில் அன்பு என்னும் ஈரம் இருக்கிறது. உணர்ச்சி மிக்கதாதலின் மென்மையாக இருக்கிறது. எந்த நிகழ்ச்சியாலும் அன்னையை நினைந்து உணர்ச்சி வசப்படுவது அன்பர்களின் உள்ளம். இதுவே அதன் மென்மை. சத்துவ குணமே மணமாக உடையது. அருள் என்னும் தேன் ஊறுவது. அம்பிகையின் திருவுருவத் தியானத்தைப் பல பல கூறுகளாகச் செய்யும் பகுதிகளை இதழ்களாக உடையது. ஆகவே பக்தர்களுடைய திருவுள்ளம் அம்பிகை எழுந்தருளுவதற்கு ஏற்ற அழகிய தாமரைபோல இருக்கிறது. அதனால், 'என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்' என்றார்.

'ஆயிர இதழ்த் தாமரை முதலிய இடங்களில் வீற்றிருக்கும் அம்பிகை எளியேனுடைய சித்தமென்னும் தாமரையிலும் எழுந்தருளியிருக்கிறாள்' என்றதனால் அப் பெருமாட்டியின் கருணையையும் செளலப்யத்தையும் நினைக்கிறார்.

அந்தப் பெருமாட்டியை,

> தருணம்புய முலைத் தையல் நல்லாள்

என்கிறார். தருணம்-இளமை. தருணம்புயமென்பது தாமரை மொட்டைக் குறித்தது. அம்பிகையின் நகில்கள் தாமரை மொட்டைப்போல இருக்கின்றனவாம். எல்லா உலகத்தையும் ஈன்றும் எம்பெருமாட்டி கன்னிகையாகவே இருக்கிறாள் என்பதை இவ்வருணனை காட்டுகிறது. தாமரை யரும்பு போன்ற நகில்களையும் இளமையையும்

உடைய பெண்மணியாகக் கோலம் கொண்டு விளங்கு கிருள் அன்னை.

தையல் என்பது பாலாம்பிகை என்று சொன்னபடி, 'பாலா' என்பதே இறைவியின் நாமங்களில் ஒன்று. புள்ளிருக்கு வேளூர் என்ற தலத்தில் எழுந்தருளிருக்கும் அம்பிகைக்குத் தையல்நாயகி என்று தமிழிலும், பாலாம்பிகை என்று வடமொழியிலும் திருநாமம் அமைந்திருக்கிறது. அதனால் தையல் என்பது இளமையையுடையவள் என்ற பொருளையுடையது என்பது தெளிவாகும். பாலாம்பிகையாகிய நல்லாள் என்றார். தையல் என்பதற்கு அலங்காரத்தையுடையவள் என்றும் பொருள் கொள்ளலாம். 'தைஇ' என்ற சொல்லுக்கு அணி செய்துகொண்டு என்று பொருள் உரைப்பதனால்; தையல் என்பதற்கு அலங்காரம் செய்து கொண்டவள் என்று பொருள் கொள்வதும் பொருந்தும்.

தமக்கு நன்மையே செய்யும் பெருமாட்டியாதலின் 'நல்லாள்' என்றார். இவ்வாறு இரண்டு அம்புயங்களில் எழுந்தருளி, இரண்டு தருணம்புயங்களைத் திருமார்பில் கொண்ட அம்பிகையின் அங்கங்களாகிய வேறு அம்புயங்களை இனித் தியானிக்கிறார்.

அபிராமிபட்டர் மேலிருந்து கீழே அன்னையின் திருவுருவத்தைத் தியானம் செய்கிறார். அன்னையின் திருவிழிகள் அம்புயம் போல இருக்கின்றன. தேன் வழியும் தாமரையைப் போல அந்த விழிகளில் கருணை வழிகின்றது; அழகு பொங்குகிறது. பிறர் தரிசிக்கும்போது அழகு பொழியும் அம்புயங்கள் அவை. தகை என்பது அழகு என்னும் பொருள் உடையது. அன்னையின் திருவிழிகள் தகைசேர் நயனம்; கருணம்புயம்; அழகும் கருணையும் ஒருங்கே உடையவை. 'பத்மநயனா' (247) என்பது அம்பிகையின் திருநாமங்களில் ஒன்று.

தகை சேர் நயனக் கருணம்புயமும்.

அடுத்தபடி அம்பிகையின் திருமுக மண்டலத்தைத் தியானிக்கிறார். அதுவும் ஓர் அழகிய தாமரைதான். இரு கண்களாகிய தாமரைகளைக் கொண்ட பெரிய தாமரை அது; மலர்ச்சியுற்ற அழகுத் தாமரை; 'தாஸ்மேரமுகாம்புஜா' (924) என்று போற்றுகிறது சகசிரநாமம்.

வதனாம்புயமும்

பிறகு இந்த ஆசிரியரின் தியானத்துக்கு வருகின்றன அம்பிகையின் திருக்கரங்கள். அவையும் தாமரைகளே கராம்புயங்கள். அப்பால் திருவடித் தாமரைகளில் வந்து நிற்கிறார். சரணாம்புயந்தான் பக்தர்களின் மனம் அமைதி காணும் இடம்.

கராம்புயமும் சரணாம்புயமும்

என்று திருக்கரங்களையும் திருவடிகளையும் நினைக்கிறார். தையல் நல்லாளுடைய நயனக் கருணாம்புயத்தையும், வதனாம்புயத்தையும், கராம்புயத்தையும், சரணாம்புயத்தையும் எதற்காக நினைக்கிறார்?

உலகத்தில் எந்த எந்தப் பொருளையோ பற்றுக்கோடாகக் கொண்டு, அந்தப் பொருள் நிலையில்லாமல் அழிந்து போவதைக் கண்டு தவிக்கிறோம். உறுதியான இரும்பென்று ஒன்றைப் பற்றினால் அது துருப்பிடித்துவிடுகிறது; ஒடிந்து போகிறது; அதிக வெப்பத்தால் உருகி விடுகிறது. மலையைப் பற்றினால் அது கல்லாக இருக்கிறது. அந்தக் கடுமை, பற்றிக்கொள்ளும் கைக்குத் துன்பத்தைக் கொடுக்கிறது. மனிதர்களைப் பற்றிக் கொண்டாலோ எல்லோரும் சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கே ஓர் அடைக்கலஸ்தானம் வேண்டியிருக்கிறது. அப்படியானால் நமக்குப் புகலிடம் ஒன்றும் இல்லையா? தஞ்சமே கிடையாதா?

என்றும் அழியாததும் நம்மிடம் கருணை உடையதும் அடைக்கலம் புகுவதற்கு எளியதாக இருப்பதும், நம்மைப்

புறக்கணிக்காமல் ஏற்றுக்கொள்ளும் மென்மையை உடையதுமாக ஒரு பொருள் இருந்தால் அதைப் பற்றிக்கொள்ளலாம். ஆம், அந்தப் பரம்பொருளே அம்பிகை. அவளைத் தவிர நாம் தஞ்சம் என்று அடைவதற்கு வேறு புகலிடம் இல்லை.

குழந்தையைத் தந்தை அடித்தால் 'அம்மா!' என்று அலறி ஓடும். அயலார் அடித்தாலும், அண்ணன், அக்காள் அடித்தாலும் 'அம்மா' என்றே அழுது புகும். அம்மாவே அடித்தால் வேறு ஒருவரைக் கூவி அழாமல், 'அம்மா!' என்றே அழைதது அழும். தாயை வெறுத்துச் சென்ற துரோகியானாலும் தடுக்கி விழுந்தால், 'அம்மா' என்றுதான் சொல்லுவான். இவற்றால், அன்னையே புகலிடம் என்று தெளிவாகும். உடம்பைத் தந்த அன்னைக்கே இவ்வளவு சிறப்பு இருக்குமானால் ஜகஜ்ஜனனியாகிய பராம்பிகைக்கு எவ்வளவு சிறப்பு இருக்கவேண்டும்! அவளே யாவருக்கும் மேலான புகலிடம். ஆதலால், 'அப்பெருமாட்டியை அல்லாமல் வேறு புகலிடம் இல்லை; என்னுடைய அநுபவத்தில் நான் வேறு கண்டதில்லை' என்கிறார் அபிராமிபட்டர். அம்பிகையை நேரே சொல்லாமல் 'எம்பெருமாட்டியின் நயனம்புயமும் வதனம்புயமும் கராம்புயமும் சரணம்புயமும் அல்லாமல் வேறு தஞ்சத்தை நான் கண்டதில்லை' என்கிறார்.

> தகைசேர் நயனக்
> கருணம்புயமும் வதனம்புயமும் கராம்புயமும்
> சரணம்புயமும் அல்லால் கண்டிலேன்
> ஒரு தஞ்சமுமே.

இப்படி நயனத் தாமரையிலிருந்து திருவடித் தாமரை வரையில் சொன்னதற்குக் காரணம் என்ன?

அழகிய நயனத்தைக் கண்டார்; அது கருணை வழிந்து தோற்றியது. 'இங்கே நம் தாபம் தீரும்' என்ற நம்பிக்கை

உண்டாயிற்று. திருமுகத்தைக் கண்டார். அந்தக் கருணையே மலர்ந்தாற் போல முகம் மலர்ந்திருந்தது. அம்பிகையின் அக மலர்ச்சியை அந்த முகம் காட்டியது. இப்போது தமக்கு நலம் விளையும் என்ற உறுதிபெற்றார். பிறகு கராம்புயங்களைக் கண்டார். ஒரு கை அஞ்சாதே என்று அபயம் காட்டியது. மற்றொரு கை இங்கே பார் என்று வரத முத்திரையுடன் திருவடியைச் சுட்டிக் காட்டியது. இதுவே நாம் புகல் புகுந்து தங்கி முத்தி யின்பத்தை அடையும் இடம் என்று அந்தச் சரணம்புயத் தைக் கண்டு கொண்டார்.

நயனம் கருணைக் குறிப்பையும், வதனம் கருணை மலர்ச்சியையும், திருக்கரங்கள் அபயத்தையும் வரதத்தை யும், திருவடி அமைதியையும் முறையே காட்டின. ஒவ் வொரு தாமரையாகக் கண்ட இந்த அன்பரின் மனமாகிய வண்டு இறுதியில் அன்னையின் சரணம்புயத்தில் படிந்து இன்பத்தேனை உண்ணத் தொடங்கிவிட்டது. சரணமே மோட்சமாக இருப்பது.

> ''பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட
> ரீகத்தினும்
> செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்''

என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் இறைவ னுடைய திருவடிகளையே மோட்சமாகச் சொன்னார்.

> ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவன் அடிசேரா தார்''

என்று குறளும் இறைவன் அடியே பிறவியினின்றும் விடுதலையை அருளும் வீடு என்று குறிப்பிடுகிறது.

ஆகவே, இறுதியில் சரணம்புயத்தை வைத்து, 'இந்த அம்புயங்களையன்றி வேறு தஞ்சத்தை நான் கண்டேன் இல்லை' என்றார். வன்மையான பல பொருள் இருக்கவும்

அவை பற்றுக்கோடு ஆவதில்லை. எம்பெருமாட்டி கோமளாங்கி; அவள் அங்கங்கள் மெல்லிய தாமரைகள். அவை மென்மையாக இருந்தாலும் தஞ்சம் புகுந்த அடியாரைக் காக்கும் வன்மையுடையவை என்கிறார்.

அருணாம் புயத்தும், என் சித்தாம்
 புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல்
 லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம்
 புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லால்கண்டி
 லேன் ஒரு தஞ்சமுமே.

[செந்தாமரை மலரிலும் அடியேனுடைய உள்ளத் தாமரையிலும் எழுந்தருளியிருக்கும், தாமரை அரும்பு போன்ற தனங்களையுடைய பாலாம்பிகையாகிய நல்ல அன்னையின் அழகு சேர்ந்த கருணை பிறக்கும் விழியாகிய தாமரையும், திருமுகத் தாமரையும், திருக்கரங்களாகிய தாமரைகளும், திருவடிகளாகிய தாமரைகளும் அல்லாமல் வேறு ஒரு புகலிடத்தையும் அடியேன் கண்டதில்லை.

அருணம் - சிவப்பு சித்தம் - உள்ளம். தருணம்—இளமை; தருணாம்புயமென்றது தாமரை அரும்பைக் குறித்தது. தகை-அழகு. தஞ்சம்-பற்றுக்கோடு; புகலிடம்.] எம்பெருமாட்டியே உண்மையான புகலிடம் என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியில் வரும் 58-ஆவது பாடல்

# அன்னையின் இயல்பு

பெரியவர்கள் எப்போதும் தங்களைக் குறைத்துக் கொண்டு பேசுவார்கள். சிறியவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வார்கள்.

''பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து''

என்று திருவள்ளுவர் சொல்கிறார். தம்மைக் குறைவாகச் சொல்லிக் கொள்ளும் பெரியவர்களை, அவர்கள் வாய் மொழிப்படி சிறியவர்களென்று மற்றவர்கள் கருதுவதில்லை. எல்லோரும் அவர்களைச் சிறப்பித்துப் பேசுவார்கள். அவர்கள் மட்டும் தங்களை இழித்துக் கொள்வார்கள். அது பணிவின் அடையாளம். அதனால் அவர்களுடைய பெருமை மிகுதியாகிறது. இழிந்த மனமுடையவர்களோ, தம்மைப் பிறர் புகழ வகை இல்லை என்று எண்ணிக் கொண்டவர்களைப் போலத் தம் புகழைத் தாமே பறையடிப்பார்கள். இந்த இயல்பை எல்லாக் காலத்திலும் பார்க்கலாம்.

அருளாளர்களாகிய நால்வரும் ஆழ்வார்களும் தங்களைத் தாங்களே இழித்துச் சொல்லிக் கொள்வார்கள்; புல்லியேன், நாயினேன், கடையனேன் என்று கூறிக் கொள்வார்கள். அப்படி அவர்கள் சொல்வதால் உலகம் ஏமாந்து போவதில்லை; அவர்களை இழிந்தவர்களாக எண்ணுவதில்லை. அவ்வாறே, இழிந்தவர்கள் என்னதான் தம்பட்டம் அடித்துக்கொண்டாலும் அவர்களை உலகம் மதிப்பதில்லை.

அபிராமிபட்டர் அன்னையின் அருள் பெற்றவர். அவரும் தம்மைப் பல சமயங்களில் இழித்துப் பேசிக் கொள்கிறார். அன்னையின் அருளைப் பெறுவதற்குரிய தகுதி தமக்கு இல்லை என்று சொல்கிறார். இதற்கு

முன்னும் பல பாடல்களில் இந்தக் கருத்தைப் பார்த்தோம். பல பாடல்களில் அம்பிகைக்கும் தமக்கும் உள்ள உறவை எண்ணி உரிமை கொண்டாடுவார். தம்முடைய அன்னையிடம் அந்த உரிமை கொண்டாட அவருக்குத் தகுதியிருக்கிறது. 'இவளே யாவும் நமக்குத் தருபவள்: இவளுடைய அருள்தான் நம்மை உய்விக்கும். இவளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு அநாதியானது' என்ற உண்மையை உணர்ந்து அன்னையிடம் பக்தி பூண்டவர் அவர். கனவிலும் நனவிலும் வேறு ஒருவரை அடைக்கலம் புகுதாமல் அன்னையின் சரணாரவிந்தங்களையே பற்றிக் கொண்டவர். ஆகவே அவர் அன்னையிடம் உரிமை கொண்டாடலாம். நாம் அப்படிக் கொண்டாட வகை உண்டா? நம்முடைய மனம் எத்தனையோ பேரைத் துணையாக நம்புகிறது. ஒவ்வொரு பயனை எண்ணி ஒவ்வொருவரிடம் அடைக்கலம் புக முடிவு செய்கிறது. நம் கண்ணுக்கு முன் வாழும் தாயை, நம்மைப் பெற்ற தாயை, ஒரே பற்றுக அன்பு செய்து உறவாடும் இயல்பே நம்மிடம் இருப்பதில்லை. ஒன்றும் அறியாத குழந்தையாக இருக்கும்பொழுது அன்னையை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறோம். வளர வளர, அறிவு முதிர முதிர, நம் அன்னையிடமிருந்து விலகிக் கொண்டு போகிறோம்.

கண்ணிலே கண்ட அன்னைக்கும் நமக்கும் உள்ள உறவே இத்தகையது என்றால், கண்ணில் காணாத ஸ்ரீ மாதாவாகிய அன்னையிடம் எங்கே பக்தி உண்டாகப் போகிறது? அவள் ஒருத்தி இருக்கிறாள் என்ற எண்ணத்தையே பல சமயங்களில் மறந்து விடுகிறோம். அப்படி இருக்கும்போது அவளிடம் உரிமை கொண்டாடுவது எப்படி முறையாகும்?

அபிராமிபட்டரோ உரிமை கொண்டாட முழுத் தகுதி உடையவர். எல்லாவற்றையும் அன்னைக்கு அர்ப்பணம் செய்தவர். அவள் அருளே தம்மை இயக்குகிறது என்று முழுமையாக நம்பினவர்.

தம்மை இழித்துக்கொள்ளும்பொழுது, அன்னைக்கும் தமக்கும் உள்ள உறவைச் சுட்டிக்காட்டி, தம் இழிவை எண்ணுமல் அருள் செய்யவேண்டும் என்று இப்போது சொல்ல வருகிருர்.

அம்பிகையின் திருவுருவத்தை நினைக்கிருர். அம்பிகை கோமளமான திருமேனியை உடையவள். அவள் திருக் கரத்தில் படைக்கலன்களாகக் கொண்டவை கூட இனிய பொருளாகவும் மெல்லிய பொருளாகவும் இருக்கின்றன. வில்லும் அம்பும் வலிய இரும்பாலானவை யாகவும் கண்டாலே அச்சத்தை உண்டாக்குவனவாகவும் இருப் பது இயல்பு. ஆனல் அன்னை திருக்கரத்தில் கொண்ட வில்லோ இனிய கரும்பு; அம்புகளோ மென்மையும் மண மும் உள்ள மலர்கள். தன் கையில் உள்ள படைக்கலன் களையே இனியவைகளாகக் கொண்டவள் தாய் என்ருல் அவளுடைய உள்ளம் எவ்வளவு இனிமையாக, மென்மை யாக இருக்கும்! இதை எண்ணிப் பார்க்கிருர் அபிராமி பட்டர். 'நான் உன்னுடைய அருளைப் பெறும் வழியில் நிற்க அறியாதவனுனலும் நீ என் தாய் அல்லவா? மிக மென்மையும் இனிமையும் உடையவள் அல்லவா? என்னை ஒறுக்காமல் ஆண்டருள வேண்டும்' என்று விண்ணப் பித்துக் கொள்ள வருகிறவர், அப்பெருமாட்டியைக் கரும்பும் மலரும் ஏந்திய கோலத்தில் தியானிக்கிருர். 'நீண்ட தனிவில்லும் ஐந்து அம்புகளும் முறையே கரும்பும் மலர்களுமாக இருக்க, அவற்றை ஏந்திக்கொண்டு என்றும் மாருமல் நிலைத்து நின்ற என் தாயே!' என்று விளிக்கிருர்,

ஒற்றை நீள் சிலையும் அஞ்சு அம்பும்
இக்கு அலராக நின்ருய்!

அம்பிகை கரும்பை வில்லாகவும், ஐந்து மலர்களை அம்பாகவும் கொண்டவள் என்பதைப் பல இடங்களில் இந்த ஆசிரியர் குறித்துள்ளார். அம்பிகையின் இடத் திருக்கரங்களில் மேலே உள்ள கரத்தில் கரும்பு வில் இருக்

கிறது. மனமே கரும்பு வடிவத்தில் அவள் திருக்கரத்தில் அமைந்திருக்கிறதாம். "மனோரூபேக்ஷு கோதண்டா" (10)என்பது லலிதா சகசிரநாமம். மனம் நம் வயத்தில் இல்லாமல் அம்பிகையின் வயத்தில் இருந்தால் இனிய பொருளாகிவிடுகிறது. அவள் வளைத்த வளைவுக்கு உட்படுகிறது. அந்த வில்லினால் அவள் அசுரப் படையை அழிக்கிறாள். அவள் வயப்பட்ட உள்ளம் அசுர சம்பத்துக்களை அழிக்க உதவுகிறது. சத்துவகுண மனம் நன்னெறியில் நம்மைச் செலுத்தும். அம்பிகையின் வயப்பட்ட மனம் நல்ல வழியிலே செல்லும். இந்தக் குறிப்பையே அவளுடைய கரும்பு வில் காட்டுகிறது. இந்தக் கரும்பு வில்லுக்கு அதிஷ்டான தேவதை மந்த்ரிணீ என்று சாஸ்திரம் கூறும்.

அம்பிகை ஏந்தும் ஐந்து மலர்கள் தாமரை, மாம்பூ, அசோக மலர், முல்லை, நீலோற்பலம் என்பவை. அன்னை வலப்பக்கத்தில் மேலே உள்ள திருக்கரத்தில் அவற்றை ஏந்தியிருக்கிறாள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் பஞ்ச தன்மாத்திரைகளே இந்த மலரம்புகளாக இருக்கின்றன. 'பஞ்சதன்மாத்ர ஸாயகா" (11) என்பதும் அன்னையின் ஆயிர நாமங்களில் ஒன்று.

ஐந்து இந்திரியங்களாலும் பெறும் நுகர்ச்சியே சுவை முதலிய ஐந்தும். இவை அம்பிகையின் வயப்பட்டால் நறுமணமுடையனவாக, மென்மையும் தண்மையுமுடையனவாக ஆகிவிடும். அன்னையின் அருள் பெற்றவர்கள் தம் மனத்தையும் அம்பிகையின் ஆணையின் வழியே நிறுத்துவார்கள். அதனால் அவர்களுக்குத் துன்பம் நேராமல், இன்பமே உண்டாகும்.

அம்பிகையின் படைத் தலைவியாகிய வராகியே இந்த ஐந்தம்புகளின் அதிஷ்டான தேவதை என்று சொல்வார்கள். அம்புகளும் வில்லுமாகிய இவை கிரியாசக்தி என்பதும் சாஸ்திரக் கருத்து.

தம்முடைய நெஞ்சம் நல்வழிப்படவில்லையே என்று சொல்ல வருகிறவர், மனத்தை இனிய கரும்பு வில்லாக்கி துய்க்கும் தன்மாத்திரைகளை மலராக்கி ஏந்தும் பெருமாட்டியை நினைக்கிறார். தம் மனமும் புலனும் அப்படி ஆக வேண்டும் என்ற குறிப்பு இதில் அடங்கியிருக்கிறது.

மனமென்னும் கரும்பு வில்லையும் புலன் என்னும் மலரம்புகளையும் உடைய தேவியை நோக்கி அவர் என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்கலாம்.

'தாயே, உன் அருளைப் பெறும் வழி ஒன்று உண்டு. இந்த வாழ்நாளைப் பெற்ற பயன் அந்த வழியில் சென்று நன்மை அடைவதே. உன்னை எண்ணி அன்பு செய்து வாழ்வதுவே தவம்; அதுவே சன்மார்க்கம். தவநெறி அது. உன்னை அடைய அந்த நெறிதான் ஏற்றது; நான் புகலடைய வேண்டியது. வேறு வழியே இல்லை. இந்த அறிவு எனக்கு இல்லை. என்னுடைய நெஞ்சத்தை இந்த வழிப்படுத்த நான் முயலவில்லை. நின் அருளை அடையும் வழியிலே என் மனம் பயிலவேண்டும். சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை. நின் தவநெறி, நின்னை அடைவதற்குரிய தவத்தை ஆற்றும் வழி; இதுவே தக்க சாதனம்; நான் கடைப்பிடிக்க வேண்டிய உபாயம். நான் இந்த வழியில் என் நெஞ்சத்தைப் பழக்கவில்லையே!' என்கிறார்.

> 'தஞ்சம் பிறிது இல்லை ஈது அல்லது' என்று
> உன் தவநெறிக்கே
> நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்!

[தஞ்சம்-சார்பு, பற்றுக்கோடு. உன் தவநெறியாகிய ஈது அல்லது பிறிது தஞ்சம் இல்லை.]

நெறி என்பது வழி. வழியில் மூன்று பகுதிகள் உண்டு; புறப்படும் இடம், சென்றுகொண்டிருக்கும் இடம், சென்று சேரும் இடம். இவற்றை முதல், இடை, முடிவு என்று சொல்லலாம். புறப்படும் இடம் பிரபஞ்சம். நாம் எங்கே இருக்கிறோமோ, அங்கிருந்துதானே புறப்பட வேண்டும்?

சென்று சேரும் இடம் லட்சியம் அல்லது சாத்தியம். புறப் படும் இடத்துக்கும் சென்று அடையும் இடத்துக்கும் இடையே உள்ளது வழி. அந்த வழியின் பெயர் தான் தவநெறி. அபிராமிபட்டர் கூறும் இந்த நெறி எங்கிருந்து தொடங்குகிறது? நாம் இருக்கும் இடத்திலிருந்து தான். இந்த வழி கண்ணுக்குப் புலப்படும் இடத்தின் வகை அன்று, வாழ்வின் பகுதி அல்லது வாழ்க்கை முறையே இந்த நெறி அல்லது வழி.

நாமும் அபிராமிபட்டரும் இருக்கும் இடம் ஒன்று தான்; அதுதான் இந்தப் பிரபஞ்சம். அவர் இதிலிருந்து புறப்பட்டுவிட்டார். அதாவது நாம் வாழும் வாழ்க்கை முறையினின்றும் உயர்ந்து, வேறு முறையிலே சென்றார். சென்றாலும், செல்லவில்லையே என்று இரங்குகின்றார். அந்த நெறி தவநெறி, சாதனம். அது சென்று சேரும் இடம் அம்பிகை. அதனால் அதை 'உன் தவ நெறி' என்றார். திருச்சியிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் சாலை ஒன்று இருக்கிறது. திருச்சி ரோடுகள் நன்றாக இருக் கின்றன என்னும்போது, அந்த ரோடும் அவற்றில் சேரும். கோயம்புத்தூர் ரோடு என்றும் அதற்குப் பெயர்; சென்று சேரும் இடம் பற்றிய பேர் அது. திருச்சியிலிருந்து புறப் படுகிறது; கோயம்புத்தூரை அடைகிறது. சாலை முழுவ தும் ஆலமரம் இருந்தால் ஆலமரச் சாலை என்றும் பெயர் பெறுகிறது.

அதுபோல மக்களுக்குப் பயன்படுவதற்காக அமைந்த இந்த நெறி தவம் செய்யும் நெறி; ஆலமரச்சாலை என்று அடையாளம் காட்டுவதுபோல இதைத் தவநெறி என்றார். தவநெறியாவது பிறப்பறுப்பதற்குச் சாதனமான வழி; அம்பிகையின் அருட்செல்வத்தை அடையத் துணையாக உள்ள மார்க்கம்; பொறிகளின் வழியே மனம் செல்லாமல் அன்னையையே நினைத்து ஒருமையுடன் வாழும் வகை. இது தன்னுடைய லட்சியமாக அன்னையைக் கொண்டதா தலின் இதுவே அன்னை நெறி என்றும் பெயர் பெறுகிறது.

சாக்தம் என்பது சக்தியை அடையும் சமயநெறி. அதுவே இங்கே அபிராமிபட்டர் கூறும் நெறி. அம்பிகையையே விளித்துச் சொல்வதால் அதை, 'உன் நெறி' என்றார். தவ நெறி என்பது தவம் செய்யும் வாழ்க்கை முறையைக் குறிப்பது. நெறியின் இயல்பு தவம்; லட்சியம் அன்னையோடு ஒன்றுவது.

இறைவியை அடைவதற்குரிய தவத்தைச் செய்யும் நெறியைக் கடைப்பிடித்தாலன்றி ஆத்மா உய்வுபெற முடியாது. தஞ்சம் என்பது பற்றுக்கோடு. தளர்ச்சி உடையவனுக்குப் பற்றுக்கோடு வேண்டும். சேற்றிலே நிலை தளர்பவனுக்கு உறுதியான பற்றுக்கோடு வேண்டும். மென்மையான கொடியைப்பற்றிப் பயன் இல்லை. முறிந்து போகும் கொம்பைப் பற்றினாலும் பயன் இல்லை. உறுதியான கோல் வேண்டும். பிரபஞ்சச் சேற்றில் அகப்பட்டு நிலை தடுமாறும் உயிருக்கு உறுதியான பற்றுக்கோடு வேண்டும்.

ஏதேதோ தஞ்சம் என்று ஏமாந்துபோன பலரைப் பார்த்து, அவர்கள் பற்றியவை தஞ்சம் அல்ல என்று தெரிந்து கொள்ளவேண்டும். பல பெரியோர்கள் உறுதியான பற்றுக்கோட்டைக் கைப்பற்றி நலம் பெற்றிருக்கிறார்கள். அந்த வரலாறுகளை உணர்ந்து பயனுள்ளது இன்னது என்று தெளியவேண்டும். 'பிறப்பு இறப்புத் துன்பங்களினின்றும் விடுபடுவதற்கு உரிய பற்றுக் கோடாக உள்ள வழி, உன்னை நினைந்து உன் அருளைப் பெறும் பொருட்டுச் செய்யும் தவநெறி என்பதை உணர்ந்து, அந்த நெறியில் என் மனம் பழகும்படி அடியேன் நினைக்கவில்லை!' என்கிறார் இவ்வாசிரியர்.

> 'தஞ்சம் பிறிது இல்லை, ஈது அல்லது' என்று
> உன் தவநெறிக்கே
> நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்!

இவ்வாறு, செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்தால் நன்மை கிடைக்குமோ? கிடைப்பது அரிது. இருப்

பினும் அபிராமிபட்டர் ஓர் உரிமையை எடுத்துச் சொல்கிருர். 'நான் உன் தவநெறியில் என் நெஞ்சத்தைப் பயிலும்படி செய்யவில்லை. அதனுல் நீ சினந்து என்னைத் தண்டிக்கலாம்; புறக்கணிக்கலாம். என்றுலும் நான் ஒரு நியாயம் சொல்கிறேன்' என்று அவர் கூறவில்லை. இந்தப் பீடிகை இல்லாமலே அவர் பொதுவாக உலக நீதியைச் சொல்வது போலச் சொல்கிருர்.

ஓர் இரவலன் ஒரு செல்வரிடம் சென்று யாசிக்கிருன். அவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வரச்சொல்கிருர். இரவலன் அன்று அந்த நேரத்தில் செல்லாமல் தாமதமாகப் போகிருன். தாமதமாகப் போன குற்றம் தன்னிடம் இருப்பதால், ஒருகால் அவரைக் காணமுடியாதோ என்றும், கண்டாலும் அவர் கோபம் கொள்வாரோ என்றும் அஞ்சுகிருன். நேரம் கழித்துப் போனபோது, நல்ல வேளை, செல்வர் இருக்கிருர். அவரைக் கண்டவுடனே, 'இரவலர்கள் தாமதமாக வந்தாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுப்பது வள்ளல்களின் இயல்பு என்று கேட்டிருக்கிறேன்' என்கிருன். அப்படி அவன் சொல்வதன் கருத்து என்ன? 'நான் தாமதமாக வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் நீ கொடுக்கவேண்டும்' என்பதையே பொதுப்படையாக வைத்துச் சொல்கிருன். அபிராமிபட்டரும் அந்த உத்தியை ஆளுகிருர்.

'உலகத்தில் குழந்தைகள் அறியாதவர்களாக இருப்பார்கள்: செய்யவேண்டியதைச் செய்யாதவர்களாக இருப்பார்கள். இருந்தாலும் அவர்களைப் பெற்ற தாய்மார்கள் மென்மை உடையவர்களாதலின் அவர்கள் அடிக்கமாட்டார்கள்' என்று சொல்கிருர்.

அறியார் எனினும் பஞ்சு அஞ்சும் மெல் அடியார்
அடியார் பெற்ற பாலரையே.

முரட்டுத் தாய்மார்கள் ஒருகால் அடித்தாலும் மென்மையை உடைய தாய்மார்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள். மென்மையை உடையவர்கள் என்பதை. 'பஞ்சை அஞ்சும் மெல் அடியார்' என்று குறிப்பிடுகிறார் "பஞ்சை மிதிப்பதாக இருந்தாலும் அஞ்சுகின்ற மெல்லிய அடியையுடைய பெண்கள்' என்பது பொருள். அடியின் மென்மையைச் சொன்னாலும், பிறஅங்கங்களின் மென்மையையும் உள்ளத்தின் மென்மையையும் அதிலிருந்து ஊகித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வளவு மென்மையை உடையவர்கள் தம் குழந்தைகள் தவறு செய்தாலும் பொறுத்தருள்வார்களேயன்றி அடிக்கமாட்டார்கள் என்று சொன்னார். அம்பிகையும் மிக மிக மென்மையை உடையவள். யாவருக்கும் தாய். அடியார்களின் அன்பு மிக்க தாய். அடியார்கள் அறியாமையால் தவறு செய்தால் அதற்காக அன்னை தண்டிக்கலாமா? உலகத்துத்தாய்மார்களே தாம் பெற்ற பாலரை அடியார் என்றால், அவர்களினும் எத்தனையோ வகையிற் சிறந்த தெய்வத் தாயாகிய அபிராமியம்மை, பேரருளே வடிவாக இருப்பவள், ஒறுப்பது முறையாகுமா? இவ்வாறெல்லாம் தோற்றும்படி நல்ல பிள்ளையாகிய அபிராமிபட்டர் தம்மைப் பொல்லாத பிள்ளையாகச் சொல்லிக்கொண்டு, உரிமை கொண்டாடுகிறார்.

பஞ்சு அஞ்சும் மெல்லடி என்பதற்கு, செம்பஞ்சுக் குழம்பு பூச வந்தாலும் அதை அஞ்சும் மென்மையையுடைய அடி என்றும் சொல்லலாம். செம்பஞ்சுக் குழம்பு என்பது மகளிர் அடியில் அணியும் ஓர் அலங்காரப் பூச்சு. "பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவி' என்பது கம்பன் வாக்கு.

> தஞ்சம் பிறிதுஇல்லை ஈதுஅல்லது
> என்றுஉன் தவநெறிக்கே
> நெஞ்சம் பயில நினைக்கின்றி
> லேன்; ஒற்றை நீள்சிலையும்

அஞ்சு அம்பும் இக்குஅலர் ஆகநின்
றாய், அறி யார்எனினும்
பஞ்சு அஞ்சும் மெல் அடியார் அடி
யார், பெற்ற பாலரையே.

[நீண்ட தனி வில்லும் ஐந்து அம்புகளும் முறையே கரும்பாகவும் மலராகவும் கைக்கொண்டு நின்ற தேவி, இது அல்லாமல் வேறு பற்றுக்கோடு இல்லையென்று உணர்ந்து, நின்னை வழிபட்டுத் தியானிக்கும் தவவழியில் என் மனத்தைப் பழகும்படி செய்ய அடியேன் எண்ண வில்லை; பஞ்சை மிதிப்பதற்கும் அஞ்சுகின்ற மென்மை யான பாதங்களை உடைய தாய்மார்கள், தாம் பெற்ற பிள்ளைகள் அறியாமையை உடையவர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கமாட்டார்கள்.

தஞ்சம்-பற்றுக்கோடு. துணை, உபாயம் பயில்—பலகாலும் பழக. சிலை-வில், இக்கு-கரும்பு, அலர்-மலர்.]

நான் செய்யவேண்டியதைச் செய்யாவிட்டாலும் என் பிழையைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியில் 59-ஆம் பாடல்.

# திருவடி வைக்கும் இடங்கள்

சில சமயங்களில் அம்பிகையின் அருளைப் பூரணமாகப் பெறவில்லையே என்ற ஏக்கம் அபிராமிபட்டருக்கு உண்டாவது உண்டு. அத்தகைய சமயத்தில் தம்முடைய குறைகளைப் போக்கி அம்பிகை இன்னும் முற்றும் அருள் செய்யவில்லையே என்று சொல்வார். ஆனால் வேறு சில சமயங்களில் அம்பிகை மிக்க கருணையினால் தம்மையும் ஆட்கொண்ட அதிசயத்தைப் பெருமையுடன் சொல்லிக் கொள்வார். முன் பாட்டில் தம்முடைய குறைகளை நினைந்த பட்டர் இப்போது தாம் பெற்ற பேற்றைச் சொல்ல வருகிறார். எம்பெருமாட்டி தம்முடைய தலையின் மேல் திருவடியைப் பதித்தாள் என்று சொல்கிறார்.

அவருடைய தலை நாயின் தலைபோல இழிந்ததாக இருப்பினும் பழைய பெரிய இடங்களில் பழகிய அன்னையின் திருவடி அந்தத் தலையின்மேல் இருக்கிறதாம். இந்த ஆச்சரியம் நினைக்க நினைக்க இன்பம் தருகிறது. 'மற்ற இடங்களைக் காட்டிலும் அடியேனுடைய நாய்த்தலை சிறந்ததோ?' என்று அம்பிகையைக் கேட்கிறார்.

எம்பெருமாட்டி தன்னுடைய திருவடியை எங்கெங்கே வைக்கிறாள் என்பதை இந்தப் பாட்டில் முதலில் சொல்கிறார்.

அம்பிகையின் வாக்கு மிக இனிமையானது. பேசும் போதே வீணாகானம்போல ஒலிக்கும். அந்தச் சொல்லைக் கேட்டால் நம்முடைய தாபத்திரயங்கள் எல்லாம் போய் விடும். அம்பிகையை மகாமாதாவாக உணர்ந்து குழந்தைகளைப் போலப் பழகுகின்ற பக்தர்களுக்கு அந்தப் பெருமாட்டியின் சொல் பாலைவிட இனியதாக இருக்கும்.

குழந்தைகளுக்குப் பால் இன்பம் தருவது. அம்பிகையின் இனிய மொழிகளோ பாலைவிட இனியவை. பால் வயிற்றுக்கு மாத்திரம் இன்பம் தருவது; வயிற்றுப் பசியைப் போக்குவது. எம்பெருமாட்டியின் திருவாய் மொழியோ கருத்துக்கும், உயிருக்கும் இனிமை தந்து அஞ்ஞானத்தை மாற்றித் தெளிவை உண்டாக்குவது. இனிமையினும், பயனிலும் பாலைவிட அம்பிகையின் வாய்மொழி சிறந்தது. ஆகவே, அம்பிகையை அழைத்துத் தாம் பெற்ற பேற்றைச் சொல்ல வருகிறவர்,

பாலினும் சொல் இனியாய்!

என்று தொடங்குகிறார்.

ஊடல் உண்டானபோது சிவபெருமான் அன்னையை வணங்குவது வழக்கம். இதைப் பலவிடங்களில் பக்தர்கள் குறித்திருக்கிறார்கள். அபிராமி அந்தாதியிலும் பலவிடங்களில் இந்தக் கருத்தைக் காணலாம்.

''மறைநான்கினுக்கும்
தானந்த மான சரணார விந் தம்தவள நிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி
ரான்முடிக் கண்ணியதே''

என்றும்,

''திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி''

என்றும் முன்பு பாடினர். சிவபெருமான் பலராலும் வணங்குவதற்குரியவர். அவருடைய திருவடியைப் பார்த்தால் அதன்கீழ் முப்பத்து மூக்கோடி தேவர்களும் திருமாலும் தம்முடைய முடிகளை வைத்து வணங்குவதைக் காணலாம். அத்தகைய பெருமான் தம்முடைய தலையின் மேல் அம்பிகையின் பாதத்தை வைத்திருக்கிறாராம். மிகவும் குளிர்ந்த மலர் போன்றது அன்னையின் திருவடி. அந்தத் திருவடி எம்பெருமானுடைய திருமுடியின்மேல்

நிற்கிறதாம். அந்தத் திருமுடி பிராட்டியின் திருவடிகளுக்கு மெத்தென்று இருக்கிறது. கொன்றை மலரும் சடையும் நிரம்பிய திருமுடி அது. ஆதலின் திருவடியை உறுத்தாமல் மெத்தென்றிருக்கிறது.

> பனிமா மலர்ப் பாதம் வைக்க
> மாலினும் தேவர் வணங்க நின்றோன்
> கொன்றை வார் சடையின் மேலினும்.

அன்னையின் பாதம் மலர் போன்றது. அது வைக்கும் இடத்திலும் மலர் இருக்கிறது. எம்பெருமானே பணிந்து தலைக்கு அணியாகச் சூடிக்கொள்ளும் திருவுடைய பாதம் அது.

அடுத்த படியாக எம்பெருமாட்டி திருவடியை வைக்கும் மற்றோர் இடத்தைச் சொல்கிறார்.

வேதங்கள் அந்தத் திருவடியைப் பாடுகின்றன. வேதங்களின்மேலே பெருமாட்டியின் திருவடிகள் நடனமிடுகின்றன. அம்பிகை எழுந்தருளியிருக்கும் சிந்தாமணிக் கிருகத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு வாயிற்படிகளாக நான்கு வேதங்கள் இருக்கின்றன. லலிதா ஸ்தவ ரத்தினம் என்ற நூலில் இந்தச் செய்தி வருகிறது. எம்பெருமாட்டியை அடைவதற்கு நான்கு வேதங்களும் படியாக உதவுகின்றன என்ற கருத்து இதனால் பெறப்படும். அன்றியும் அம்பிகை தன்னுடைய திருக்கோயிலிலிருந்து வெளிவரும்போது நான்கு வேதங்களாகிய படிகளையும் மிதித்துக்கொண்டு வருவாள். அப்போது அந்தத் திருவடியை ஏந்துகின்ற பீடங்களாக அந்த நான்கு வேதங்களும் இருக்கும்.

> கீழ்நின்று வேதங்கள் பாடும்
> மெய்ப் பீடம் ஒரு நாலினும்.

பராம்பிகை எல்லாவற்றிலும் உயர்ந்த பொருள். அவளை அணுகுவதற்கு முடியாமல் வேதங்கள் ஏங்கியிருக்கின்றன. ஆகையால் அவை கீழே நிற்கின்றன என்று சொல்கிறார். வேதங்களின் ஒலியை வேதகானம் என்று சொல்வது வழக்கம். அவைகள் பாடுகின்றனவாம். 'நம்மைத் தெரிந்து கொள்ளாமல் இத்தனை காலம் பாடுகின்றனவே!' என்ற கருணையினால் அன்னை அந்த வேதங்களையே படியாகக் கொண்டு அவற்றின்மேல் திருவடியை வைத்து இறங்கி வருகிறாள்.

மற்றொரு வகையாகவும் சொல்லலாம். எம்பெருமாட்டி நான்கு வகையான பிரணவ பீடங்களில் எழுந்தருளுகிறாள். அவை ஸ்தூலப் பிரணவ பீடம், சூட்சுமப் பிரணவ பீடம், காரணப் பிரணவ பீடம், மகா காரணப் பிரணவ பீடம் என்பன. வேதங்களாலே பாடப்படுகின்ற சிறந்த பீடங்களாகிய இந்த நான்கிலும் அம்பிகை திருவடியை வைத்து நிற்கிறாள்.

கொன்றை மலர் நிறைந்த தூய சிவபெருமானுடைய சடையின்மேல் நிற்கும் திருவடிகள், மிகச் சிறந்த வேத பீடத்தில் எழுந்தருளும் திருவடிகள். இப்போது அடியேனுடைய தலையில் எழுந்தருளியிருக்கின்றன என்கிறார்.

அந்தத் தலை எத்தகையது? அது முடை நாற்றம் உடையது, நாய்த்தலை போன்றது, தூய்மை இல்லாமல் கண்ட கண்ட பொருளை ஏற்றுக் கொண்டு நிற்பது என்ற எண்ணத்துடன்,

முடை நாய்த் தலையே

என்கிறார். 'கொன்றை வார்சடையைப் பீடமாகக் கொண்டு நின்ற பின்பு, வேதங்களைப் பீடமாக் கொண்டு நின்ற திருவடி. பின்னும் தூயதாகிய பீடத்தில் இருக்க வேண்டும். அப்படியின்றிக் கீழ் இறங்கி வந்து நாய்த்தலை

போன்ற என்னுடைய தலையில் எழுந்தருளியிருக்கிறதே! அடியேனுடைய தலை முன்பு சொன்ன இரண்டு வகையான இடங்களிலும் சிறந்ததோ?' என்று பாடுகிறார்.

பீடம் ஒரு நாலினும் சால நன்றோ அடியேன்
முடை நாய்த் தலையே?

எம்பெருமாட்டியின் திருவடியைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கொண்டு அதனால் உண்டான பேரானந்தத்தில் திளைத்து நின்று பாடுவது இது. 'சால நன்றோ?' என்று கேட்டது, தம்முடைய தலையில் பெருமாட்டியின் திருவடி பதிந்ததற்கு அவளுடைய கருணையே காரணம் என்ற குறிப்பை உடையது. தங்குவதற்கு வேறு இடங்கள் இல்லாமல் தேடித் திரிந்து கடைசியில் வந்து தங்குவதுபோல எம்பெருமாட்டியின் திருவடிகள் வந்து தங்கவில்லை.

'எத்தனையோ அருமையான இடங்கள் இருந்தாலும் தன்னுடைய குழந்தை இருக்குமிடம் என்று கருதி அழுக்குப் படிந்த இடமானாலும் அங்கு வந்து தாய் நிற்றலைப் போல என்னுடைய அன்னை அடியேனுடைய தலையில் திருவடி வைத்தாள்' என்ற குறிப்பை இப்பாட்டுச் சொல்லுகிறது.

எப்போதும் அந்தத் திருவடியையே நினைந்து, அதைப் பற்றியே பேசி, அதற்குத் தொண்டு செய்வதையே தம்முடைய வாழ்நாளின் பயன் என்று கருதி வழிபட்டவர் ஆதலின், அந்த அடி அவர் தலையில் வந்து நின்றது. இது 'அடியேன்' என்று சொன்ன சொல்லாலே விளங்குகிறது. அம்பிகையின் திருவடியை யன்றி வேறு ஒரு பற்றும் இல்லாமல் இருப்பதால்தான் அந்தத் தலை நாய்த்தலையே யானாலும் அதன்மீது திருவடியை வைத்தாள். இதனால் அம்பிகை பக்தர்களிடத்தில் பெருங்கருணை உடையவள் என்றும், மிக்க எளியவள் என்றும் தெரியவருகிறது.

பாலினும் சொல்இனிய யாய்,பனி
மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்
றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள்
பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி
யேன்முடை நாய்த்தலையே!

[பாலைக் காட்டிலும் இனிய சொல்லை உடையாய், குளிர்ச்சியையுடைய அழகிய தாமரை மலர் போன்ற நின் திருவடிகளை வைத்தருளத் திருமாலும் மற்றும் உள்ள தேவர்களும் வணங்கும்படி நின்ற சிவபிரானது கொன்றைக் கண்ணியை அணிந்த நீண்ட சடையின் மேலிடத்தைக் காட்டிலும், கீழே நின்றுகொண்டு வேதங்கள் பாடுகின்ற உண்மையான பிரணவ பீடங்கள் நான்கைக் காட்டிலும் அடியேனுடைய நாற்றமுடைய நாய்த் தலையைப் போன்ற தலையானது மிகவும் நன்றோ?

மால், இன்னும் தேவர் வணங்க நின்றோன்; சிவபெருமான். வார்சடை-நீண்ட சடை. நன்று-நன்மை உடையது. முடை-புலால் நாற்றம்.]

இது அபிராமி அந்தாதியின் 60-ஆவது பாட்டு.

# பெற்ற பேறு

அம்பிகை தம் தலையில் திருவடியைப் பதித்த பெருங் கருணையை எண்ணிய அபிராமிபட்டர் பின்னும் அவ ளால் பெற்ற பேற்றை எண்ணி உருகுகிறார். 'எம்பெரு மாட்டியின் பெருமையை உணர்ந்து பல வகையான பக்குவங்களை வளர்த்துக் கொண்டு சென்று அவளை வணங்கி அவளருளைப் பெறவேண்டியது முறையாக இருக்க, அப்படிச் செய்யாமல் தகுதியின்றி இருந்த எனக்கு எம்பெருமாட்டியே வலியவந்து அருள் தந்தாள்' என்பதைச் சொல்ல வருகிறார். 'என்னையும் ஒரு பொரு ளாக எண்ணி வந்து ஆண்டு கொண்டாய்' என்று தொடங்குகிறார்.

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக
  நயந்து வந்து
நீயே நினைவு இன்றி ஆண்டுகொண்டாய்!

தம்மை 'நாயேனை' என்று சொல்லிக் கொள்கிறார். 'நாய் போன்ற என்னை' என்பது பொருள். நாய் இந்த நாட்டில் இழிவுக்கு அடையாளம். இக்காலத்தில் நாய் உயர்ந்து விட்டது. பல செல்வர்களும், அதிகாரிகளும் நாயைப் போற்றி வளர்க்கிறார்கள். எங்கே போனாலும் நாயுடன் போகிறார்கள். மனைவியை அழைத்துப் போக மறந்தாலும் நாயை அழைத்துச் செல்ல மறவாத செல் வர்கள் இருக்கிறார்கள்.

ஓர் அமைச்சர் பல வகையான நாய்களைப் பாதுகாத்து வளர்க்கிறார். நாய் சம்பந்தமான நூல்களைப் படித்து அவற்றைப் போற்றி வருகிறார். அவற்றிற்கென்று தனி

யாக உணவு சமைக்கச் செய்து அளிக்கிறார். எங்கே போனாலும் நாயை அழைத்துச் செல்கிறார். அவருக்கு ஓர் ஊரில் வரவேற்புக் கொடுக்கிறார்கள். அப்போது, "சிங்கமே!" என்றால் அவர் மகிழ்ச்சி அடைவார். "களிறே!" என்றால் பெருமைப்படுவார். "நாயே!" என்றால் ஏற்றுக்கொள்ளமாட்டார். நாய் என்ற சொல் உயரவில்லை. காரணம், நாய் என்பது இழிவைக் குறிக்க வந்தது.

நாயை ஏன் இழிவாகக் கருதுகிறோம்? அது மலம் உண்பதனால் என்று சிலர் கூறுவர். மலம் உண்ணும் மற்றொரு விலங்கு பன்றி. பன்றி என்று வைவதில்லை. பன்றி என்ற சொல்லைக் கேட்டால் வைணவர்கள் வராகாவதாரத்தையும், சைவர்கள் மதுரை மாநகரில் எம்பெருமான் பன்றியாக எழுந்தருளியதையும் எண்ணி உருகுவார்கள். ஆகவே மலம் உண்பதனால் நாய்க்கு இழிவு வந்தது என்று சொல்வது பொருத்தம் அன்று.

அப்படியானால் நாய் ஏன் இழிந்தது? பிற விலங்குகளிடத்தில் இல்லாத இழிந்த பழக்கம் ஒன்று நாயினிடம் உண்டு. தான் உண்டதைக் கக்கினால் மீண்டும் அதனையே உண்ணும் இயல்புடையது நாய். மிக இழிந்த செயல் அது. பிற விலங்குகளிடம் அதைக் காண ஒண்ணாது. நாம் நாயைப் போன்றவர்கள். "பட்டறி, கெட்டறி, பத்தெட்டு இறுத்தறி" என்று சொல்வார்கள் அநுபவத்தினால் இன்ன செயல் துன்பத்தைத் தருவது என்று தெரிந்து கொண்டாலும் மறுபடியும் அந்தத் தீய செயலையே செய்யப் புகுகிறோம் நாம். அந்த வகையில் கக்கியதை உண்ணும் நாய்க்கு ஒப்பாக இருக்கிறோம். இதை எண்ணியே,

நாயேனையும்

என்று சொன்னார்.

'இத்தகைய பக்குவம் அற்ற எளியேனை இங்கிருந்த படியே நலம் பெறும்படி செய்தாய்' என்பதைக் குறிக்க 'இங்கு' என்ருர். 'இந்திராதி தேவர்களையும் பொருளாக மதிக்காமல், மகா ஞானிகளாகிய அடியார்களை உடைய எம்பெருமாட்டி என்னையும் ஒரு பொருளாகத் தன்னுடைய அருளுக்குத் தகுதி உடையவனுக எண்ணினுள்; எனக்கு அருள் செய்ய வேண்டும் என்று வலிய வந்தாள். இக் கருத்துத் தோன்ற,

ஒரு பொருளாக நயந்து வந்து

என்கிருர்.

'இறைவியினுடைய திருவருளைப் பெறவேண்டுமென்ற நயப்பு அல்லது விருப்பம் எனக்கு இல்லாதிருந்தும், தன்னுடைய அருளை அடியேனுக்குத் தர வேண்டுமென்ற விருப்பம் எம்பெருமாட்டிக்கு எழுந்தது' என்கிருர்.

உண்மையில் உலகத்திலுள்ள உயிர்க் கூட்டங்கள் இறைவனை நோக்கிச் செய்கின்ற பக்தியைக் காட்டிலும் இறைவனுக்கு அவர்கள்பால் உள்ள அருள் மிகச் சிறந்தது.

“தீர்ந்தஅன் பாய அன்பர்க்
கவரினும் அன்ப போற்றி”

என்று கூறுவர் மாணிக்கவாசகர். இறைவன் தன்னுடைய அருளைச் சுமையாகத் தாங்கிக் கொண்டிருக்கிருன். சுமையைத் தாங்கிக் கொண்டு செல்லும் ஒருவன் சுமை தாங்கி எங்கே இருக்கிறது என்று ஏங்குவதைப்போல, யாரேனும் நம்முடைய அருளைப் பெற வரமாட்டாரு என்று ஆண்டவன் ஏங்கியிருக்கிருன். குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாதபோது பால் கட்டிக்கொண்டு துன்புறுகிற தாய்போல, எம்பெருமாட்டி தன்னுடைய அருளைப் பெற யார் இருக்கிருர்கள் என்று ஏங்கிக் கிடக்கிருள். ஆகவே அவளாகவே வலியப் பக்தன் இருக்கும் இடத்திற்கு வருகிருளாம்.

பக்தனை ஆட்கொள்ள வேண்டுமென்று எண்ணுகிற தாய், வேறு யாரையும் ஏவி அவனை அழைத்து வா என்று சொல்லவில்லையாம். அவளே நேரில் எழுந்தருளினாளாம். செல்வர்கள் செல்வம் மிகுதியாக ஆக எந்தக் காரியத்தையும் தாமே நேர்முகமாகச் செய்வதில்லை; ஆட்களைக் கொண்டு செய்வதுதான் வழக்கம். உடை உடுத்து அலங்காரம் பண்ணிக் கொள்வது, உடம்பைத் தேய்த்துக் குளிப்பது போன்ற காரியங்களுக்குக்கூட ஏவலாளர்களை ஏவிப் பணி கொள்ளும் செல்வர்கள் இருக்கிறார்கள். எல்லா ஐசுவரியங்களுக்கும் தனித்தலைவியாகிய அம்பிகை இந்தப் பக்தரை ஆட்கொள்ள வேண்டுமென்று விரும்பிய போது, 'அவனை அழைத்து வா' என்று யாரையும் ஏவி வேலைகொள்ளாமல் தானே வலிய நேரில் வந்து ஆண்டு கொண்டாள்.

நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்

என்று சொல்கிறார்.

ஆண்டுகொண்ட முறை எப்படி? எம்பெருமாட்டியின் திருவருளைப் பெறவேண்டுமானால் அதற்கு இன்ன இன்ன பக்குவம் வேண்டுமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. அந்த வகையில் தவம் செய்தும், யோகம் செய்தும், தானம் செய்தும், உபாசனை பண்ணியும் அவளது அருளுக்குப் பாத்திரமானவர்கள் எத்தனையோ பேர்கள். பொறிகளுக்கும், மனத்துக்கும் அப்பாற்பட்டவளாய் நிற்கும் பெருமாட்டி தியானப் பொருளாக வந்து அடியார்களுக்கு அருள்புரிகிறாள். இப்போது இந்த அன்பரை ஆட்கொள்ள வந்த காலத்தில் அவள் இத்தகைய செய்திகளை நினைவில் கொள்ளவில்லையாம். தன்னாலே ஆட்கொள்ளப்பட்டவர்களுடைய பக்குவத்தை எண்ணிப் பார்க்கவில்லை, எதிலும் நினைவு செலுத்தாமல் இவரிடம் வந்து ஆண்டு கொண்டாளாம்.

நினைவு இன்றி ஆண்டுகொண்டாய்

'முன்பு ஆட்கொள்ளப்பட்டவர்களுடைய பக்குவத்தையும், என்னுடைய அபக்குவத்தையும் எண்ணியிருந்தால் எனக்கு அருள் கிடைத்திருக்காது. அவற்றை எண்ணுமல் தந்ததனுல் நான் ஆட்கொள்ளப் பெற்றேன்' என்று எண்ணுகிருர்.

மாணிக்கவாசகரும் இப்படி ஒரு கருத்தைச் சொல்கிருர். 'என்னை இப்போது மிகப் பெரியவன் என்று சொல்கிருர்கள். ஞானம் உடையவன் என்று பேசுகிருர்கள். இந்த நிலையை அடைவதற்கு எனக்கு ஏது தகுதி? எம்பெருமான் என்னை ஆட்கொண்டான். அதனுல் இந்த நிலை அடைந்தேன். அவனுலே ஆட்கொள்ளப் பெறுவதற்குரிய தகுதி என்னிடம் இல்லை. ஆனுலும் அவன் ஆட்கொண்டான். நான் அறிவில் சிறந்து நின்று அவனை அணுகி அவன் திருவடியைப் பற்றிக்கொண்டு அது காரணமாக அவன் அருளைப் பெறவில்லை. அவன் மதி மயங்கி என்னை ஆட்கொண்டான். அருளும் அறிவும் உடைய எம்பெருமான் என்னை ஆட்கொண்டபோது இது தக்கது, இது தகாதது என்று பார்க்கும் அறிவை ஒதுக்கி விட்டு, அருள் மாத்திரம் முதிர்ந்து பொங்கி நிற்க, மதி மயங்கி என்னை ஆட்கொண்டான். அதனுல் நான் உய்ந்தேன்.'

"யானுர்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை
யாரறிவார்
வானேர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி."

மாணிக்கவாசகரைப் போலவே அபிராமிபட்டரும் அதே நிலையில் பேசுகின்ருர். எம்பெருமாட்டி, தகுதி முதலியவற்றைச் சிறிதேனும் அளந்தறிந்து கொள்ளாமல் பெரும் கருணையினுல் எல்லாவற்றையும் மறந்து, நினைவு இல்லாமல் ஆட்கொண்டாளாம்.

நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்.

பக்குவம் இல்லாதவன் ஆகையால் ஏதோ பிழைத்துப் போகட்டும் என்று சிறிதளவு அருள் தந்தாள் என்று

சொல்லலாமா? அப்படி இல்லை, பக்குவிகள் எல்லாம் எத்தகைய அருளைப் பெற்றார்களோ அதே அருளை இவரும் பெற்றாராம்.

அன்னை தன்னுடைய சொரூபத்தின் லேசத்தை மட்டும்காட்டி, 'இது இவனுக்குப் போதும்' என்று இருக்க வில்லை. தன்னுடைய பரிபூரணமான சொரூபத்தை நன்றாகத் தரிசிக்கும்படி காட்டி அருள் செய்தாள்.

> நின்னை உள்ளவண்ணம் பேயேன்
> அறியும் அறிவு தந்தாய்.

தம்மைப் பேயேன் என்று சொல்லிக் கொள்கிறார்.

> ''உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும்''

என்பது குறள் 'ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் கடவுள் உண்டு, பிறப்பு இறப்பு உண்டு, புண்ணிய பாவங்கள் உண்டு, சொர்க்க நரகம் உண்டு என்று பல காலமாகச் சொல்லிய உண்மைகளை இல்லை என்று சொல்பவன் யாரோ அவனே உலகத்தில் கண்கண்ட பேய்' என்பது இதன் பொருள். 'பெரியவர்கள் சொல்வனவற்றை அறிந்து கொள்ளாமல் அவற்றைப் பிழை என்று சொல்கிற நிலையில் இருந்த எளியேனை நீ ஆண்டு கொண்டாய்' என்கிற குறிப்பை வைத்து, 'பேயேன்' என்று சொன்னார்.

> பேயேன் அறியும் அறிவு தந்தாய்.

அறியும் அறிவு என்பது அநுபவத்தோடு அறியும் அறிவைச் சுட்டியபடி. 'எந்த விதமான தகுதியும் இல்லாமல் என்னால் பெறுவதற்கரிய முழு இன்பத்தைப் பெற்றேனே! இத்தகைய பேறு யார் பெற்றார்? நான் பெற்ற பேறு எத்தகையது!' என்று வியக்கிறார்.

> என்ன பேறு பெற்றேன்!

தாயே, மலைமகளே, செங்கண்மால் திருத்தங்கைச்சியே!

தகுதியில்லாமல் இவ்வாறு ஆட்கொள்ளப்பெற்ற தகைமைக்குக் காரணம் என்ன? அதை நினைந்து பார்க்கிருர். ஒரு காரணம் புலனுகிறது. எம்பெருமாட்டி எல்லா உயிர்களுக்கும் மாதாவாக இருக்கிருள். லலிதா சகசிர நாமம் பராசக்தியின் தாய்த் தன்மையைப் பலபடியாகப் பேசுகின்றது. எடுத்தவுடன், 'ஸ்ரீமாதா' என்று தொடங்குகிறது. அதன் பின்பு 'அம்பிகா', 'ஆப்பிரம்ம கீட ஜனனீ', 'அம்பா' என்று வெவ்வேறு வகையில் தாயாகப் போற்றுகிறது. எறும்பு முதல் யானை வரைக்கும் உள்ள உயிர்களுக்கும் மனிதன் முதல் இந்திரன் வரை உள்ள உயிர்களுக்கும் அவள் தாயாக விளங்குகிருள். அந்த வகையில் அவளே இவருக்கும் தாய். இவர், தாம் அவளுக்கு மகன் என்ற உணர்வு பெருவிட்டாலும் தாய்க்கு இவன் மகன் என்கின்ற உணர்வு மறக்கவில்லை. 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்' என்ருற்போல இவர் அவளை நினைக்காவிட்டாலும் அவள் இவரை நினைந்து அருள் செய்ய வந்தாளாம். 'மக்களில் பொல்லாத மக்கள் உண்டு; ஆனுல் தாய்மார்களில் பொல்லாத தாய் இல்லை' என்று வடமொழியில் ஒரு வாசகம் உண்டு. அதன்படி, 'நான் என்னுடைய அன்னை இன்னுள் என்று தெரிந்து கொள்ளாமல் தீய செயல்களைப் புரிந்து நின்ருலும், அருள் உள்ளம் படைத்த என் அன்னை எனக்குத் தாயாகும் உரிமையை எண்ணி மகனுகிய என்னை ஆட்கொள்ளத் தானே வலிய வந்தாள். இதனுல் அவளுடைய தாய்த் தன்மை தெளிவாகிறது' என்பதை எண்ணித் 'தாயே' என்று சொல்கிருர்.

'என் தாய் என்றதால், பல வகையாலும் தீமைகளையுடைய என்னைக் கொண்டு என் தாய்க்கு இழுக்கு யாரேனும் எண்ணி விடுவார்களோ' என்ற அச்சம் உண்டாகிறது அபிராமிபட்டருக்கு. ஏழை ஒருவன் தன் தந்தையின் சொல்லைக் கேளாமல் அலைந்து திரிந்து பிச்சை வாங்கித் தவிக்கிருன். யாரோ இரக்கம் உள்ள ஒருவன்

அவனுக்கு உபகாரம் செய்து அவன் வரலாற்றை விசாரிக்கிறன். அப்போது நான் இன்னுருடைய மகன் என்று சொல்கிறன் ஏழை. அப்படிச் சொன்னவுடன், 'என்னைக் கொண்டு என் தந்தையை மதிப்பிடக்கூடாது' என்று அஞ்சி, 'என் தகப்பனரின் தமையனர் கலெக்டராக இருக்கிறர்' என்று சொல்கிறன். அதுபோல, தாயே என்று எம்பெருமாட்டியைச் சொன்னவர், தம்முடைய தகுதியின்மையைக் கண்டு தாயை அளவிடப் புகும் மக்களும் இருக்கலாம் என்பதை எண்ணித் தாய்க்குரிய ஏனைய உறவுகளைச் சொல்ல வருகிறர்.

"தாயே, நீ எனக்குத் தாயாக இருப்பதால் உனக்குப் பெருமை இல்லை; பிறர் சிறுமையாக நினைக்கக்கூடும். ஆனல் உன் பெருமை எனக்குத் தெரியாதா? நீ இமாசலனின் புத்திரி ஆயிற்றே! பார்வதி அல்லவா?"

மலைமகளே!

'உலகத்தைப் பாதுகாக்கிற தெய்வம் புண்டரீகாட்சன் ஆகிய மகாவிஷ்ணு. அவன் எவ்வளவு பெரியவன்! அவனுக்கு நீ தங்கைச்சி.'

செங்கண்மால் திருத்தங்கைச்சியே!

'அவதாரத்தினுலும் பிற உறவுகளினுலும் உயர்ந்த நிலையில் இருக்கிற நீ எனக்குத் தாயாக இருக்கிறய். இவ்வளவு சிறந்த நிலையில் நீ இருந்தாலும் நான் உனக்கு மகன் என்பதைச் சிறிதும் மறவாமல், என் தகுதியின்மையைப் பொருளாகக் கொள்ளாமல், என்னையும் பாதுகாக்க வேண்டுமென்ற பெருங் கருணையினுல் என்னை ஆட்கொண்டாயே! எத்தகைய பேறு நான் பெற்றேன்!' என்று வியக்கிறர்.

நாயே னையும்இங் கொருபொரு
  ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
  டாய்; நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்
  தாய்; என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமக ளே, செங்கண்
  மால்திருத் தங்கைச்சியே!

[அடியேனுடைய தாயே, மலையரசனாகிய இமவான் புத்திரி ஆகிய பார்வதியே, சிவந்த கண்ணையுடைய திருமாலின் அழகிய தங்கையே, நாய் போன்ற என்னையும், நின் அருளுக்குரிய பொருளாகத் திருவுள்ளங் கொண்டு விரும்பி நீயே இங்கே வலிய வந்து, இவனை ஆட்கொள்ளலாமா கூடாதா என்ற நினைவும், ஆட்கொள்வதற்குரிய தகுதி இன்னது என்ற நினைவும், நாம் இன்ன உயர் நிலையில் இருக்கிறோம் என்ற நினைவும் இல்லாமல் அடியேனை அடிமை கொண்டாய். நீ இருந்த இயல்பைப் பேய் போன்ற அடியேன் அறியும் அநுபவத்தை அருளினாய். அடியேன் எத்தகைய பாக்கியத்தை அடைந்தேன்!

இங்கு-நான் இருக்கும் இடத்தில். பொருள்-ஏற்றுக் கொள்ளும் பொருள். நயத்தல்-அருள் செய்வதற்கு விரும்புதல். நீயே என்றது, வேறு யாரையும் ஏவாமல் என்ற குறிப்பையுடையது. நினைவின்றி: நினைந்து பார்ப்பதாயின் யான் அருளைப் பெறமாட்டேன் என்ற குறிப்பையுடையது. உள்ள வண்ணம் என்றது எம்பெருமாட்டியின் பரத்துவத்தை. செங்கண்மால் திருத்தங்கைச்சி: பத்மநாப சகோதரி (ல. ச. 280); "மால் தங்கச்சி கனிகை உமை" (திருப்புகழ்)]

இது அபிராமி அந்தாதியின் 61—ஆவது பாட்டு.

# குறியிட்ட நாயகி

தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களில் சிவபெருமானுடைய கர்ப்பக்கிருகத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பான். அம்பிகைக்குரிய திருக்கோயிலில் தனித் திருநாமத்தோடு நின்ற திருக்கோலத்தில் அவள் எழுந்தருளியிருப்பாள். இது பொதுவாக எல்லாத் தலங்களுக்கும் இயல்பாகும். ஆனால் காஞ்சிபுரத்தில் இந்த இயல்பைக் காண முடியாது. அங்கே உள்ள சிவபெருமானுக்குரிய ஆலயங்களில் அம்பிகையின் சந்நிதி இராது. காஞ்சிபுரத்தில் உள்ள பெரிய சிவாலயமாகிய ஏகாம்பரேசுவரர் கோயிலில் கூட ஏகாம்பரேசுவரர் மாத்திரமே இருக்கிறார். வேறு சிவாலயங்களிலும் அப்படியே. வெவ்வேறு திருநாமத்துடன் சிவபெருமான் மட்டும் அந்தக் கோயில்களில் எழுந்தருளியிருக்கிறான்.

ஆனால் அங்கே, எல்லாக் கோயில்களுக்கும் நடுநாயகமாக அன்னை காமாட்சி தனித் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறாள். காமாட்சி கோயிலில் சிவபெருமானுடைய சந்நிதி இல்லை. காமாட்சி அம்பிகை வீற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறாள். காஞ்சிபுரம் என்ற நகரத்தில் அந்தப் பெருமாட்டியே தலைவியாகவும், அரசியாகவும் எழுந்தருளியிருக்கிறாள். அந்த ஊரில் எந்தத் திருக்கோயிலில் விழா எடுத்தாலும் காமாட்சி அம்பிகையின் திருக்கோயிலை வலமாகச் சூழ்ந்து செல்வதே வழக்கம். அம்பிகை அங்கே ராஜராஜேசுவரியாக, திரிபுரசுந்தரியாக எழுந்தருளியிருக்கிறாள். சிங்காதனத்தில் வீற்றிருக்கும் ராணி அவள். லலிதா

சகசிரநாமம் 'மகாராஜ்ஞி' என்றும் 'ஸ்ரீமத் சிம்மாச னேச்வரி' என்றும் சொல்லும் திருநாமங்களுக்கு ஏற்ற வகையில் காஞ்சிபுரத்தில் அம்பிகையைக் காணலாம்.

காஞ்சிபுரத்திற்குத் தனியே ஒரு புராணம் உண்டு. அங்கே எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதர் மணல் லிங்கம். அதனால் அந்தத் தலத்தைப் பிருதுவித்தலம் என்று பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகச் சொல்வர். காமாட்சி அம்பிகை மணலால் லிங்க உருவம் அமைத்துப் பூஜை பண்ணினாள் என்றும், அப்போது கம்பா நதி பெருக் கெடுத்து ஓடி வர அச்சத்தினால் சிவலிங்கப் பெருமானை அணைத்தாள் என்றும், அவ்வாறு அணைத்தபோது எம்பெரு மாட்டியின் தனத்தின் வடுவும் வளைத்தழும்பும் இறைவன் மேல் அமைந்தன என்றும் புராணம் கூறும். இதனால் 'முலைத் தழும்பர்; வளைத்தழும்பர்' என்று காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குப் பேர்கள் வந்தன. அன்பினால் சிவபெருமானைத் தழுவிக் குழையச் செய்த பிராட்டி காமாட்சி. லிங்க உருவத்தில் எழுந்தருளியிருந்த அப்பெருமானைத் தழுவும்போது அவனுடைய திருமேனி முழுவதும் அம்பிகையின் நகில் பட்டது. இந்த அற்புத மான வரலாற்றை எண்ணி அபிராமிபட்டர் ஒரு பாடலைப் பாடுகிறார்.

தம்முடைய தாயாகச் சொல்லிய பாட்டுக்குப் பிறகு அந்தத் தாயின் பெருமையை எண்ணிப் பார்க்கிறார். 'பெருத்த வீரன் ஒருவனைக் குழைத்து அவனுடைய உடம் பெல்லாம், தனக்கு வசப்பட்டவன் என்பதற்கு அறிகுறி யாக முத்திரையிட்டாள் அம்பிகை' என்று நயம்படச் சொல்ல வருகிறார். சிவபெருமானது பெரு வீரத்தை முதலில் எடுத்துச் சொல்கிறார். அவன் மூன்று புரங்களை எரித்தவன். அப்போது தங்கமலையாகிய மேருவையே வில்லாக எடுத்துச் சென்றான். தாரகன், கமலாட்சன், வித் யுந்மாலி ஆகிய மூன்று அசுரர்களும், இரும்பு, வெள்ளி, தங்கமாகிய மூன்று மதில்களுள்ள மூன்று புரங்களைத் தமக்

குரிய நகரங்களாகக் கொண்டிருந்தனர். அந்த மூன்று கோட்டைகளும் வானத்தில் திரிந்துகொண்டு இருந்தன. நினைத்தபோது அந்தப் புரங்களைப் பூமியில் படியச் செய்து அவற்றின்கீழ் அகப்பட்டவர்களை அழித்து, அவ்வாறு செய்வதையே தம்முடைய உல்லாசப் பொழுதுபோக்காக அந்த அசுரர்கள் கொண்டிருந்தனர். இதனால் மக்களுக்கும் முனிவர்களுக்கும் துன்பம் உண்டாயிற்று.

இதனைக் கண்ட சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்யப் புறப்பட்டான். மேருவை வில்லாகவும், ஆதி சேடனை நாணாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு சென்று, பிறகு தன்னுடைய புன்முறுவலால் அந்தத் திரி புரத்தை எரித்தான். திரிபுராதிகள் பொல்லாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பலமாக இருந்தவை அந்த மூன்று புரங்களே. ஆகவே அவற்றை அழித்து மூன்று அசுரர்களையும் ஆட்கொண்டான். அவர்களில் ஒருவன் சிவபெருமானுக்கு முழவு வாசிக்கும் தொண்டு செய்து வருகிறான். ஏனைய இருவர்களும் அவனுடைய வாயில் காவலர்களாக இருக்கிறார்கள்.

குழந்தைக்கு நோய் தீர்ந்த பிறகு அதை அணைத்துக் கொள்ளும் தாய்போல, அந்த மூன்று அசுரர்களுக்கும் அகங்காரத்தை உண்டாக்கக் காரணமாக இருந்த மூன்று புரங்களையும் அழித்துவிட்டு, அவர்கள் தாங்கள் பலவீனர் கள் என்பதை உணர்ந்தபோது, அவர்களைத் தன் திருத் தொண்டில் ஈடுபடுத்தினான் ஆண்டவன். இது அவனுடைய பேரருளைக் குறிக்கிறது. சிவபெருமானின் வீரத்தையும் திரிபுரம் எரித்த செயல் நன்றாகக் காட்டுகிறது.

சிவபெருமான் ஆற்றிய எட்டு வகையான வீரச்செயல் கள் பெரும்புகழ் பெற்றவை. அந்த வீரச்செயல்களை நினை வூட்டும் தலங்கள் எட்டு, தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றை 'அட்ட வீரட்டம்' என்று சொல்வார்கள்.

திரிபுர சங்காரத்தை நினைவூட்டும் தலம் திருவதிகை; திருவதிகை வீரட்டம் என்று அது வழங்கும்.

திரிபுரம் எரித்த வீரத்தை முதலில் சொன்ன அபிராமி பட்டர் அதன் பிறகு சிவபெருமான் கஜாசுரனை வென்ற வீரச் செயலைச் சொல்கிறார்.

> தங்கச் சிலைகொண்டு தானவர்
> முப்புரம் சாய்த்து மத
> வெங்கண் கரி உரி போர்த்த செஞ்
> சேவகன்.

யானை வடிவில் கஜாசுரன் இருந்தான். அவன் எல்லோருக்கும் துன்பத்தைச் செய்தான். அவனுடைய துன்பத்தைத் தாங்காமல் தேவர்களும், முனிவர்களும் இறைவனிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அதனால் எம்பெருமான் அந்த யானையை அட்டு, அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டான். அதனால் கிருத்திவாசன் என்ற பெயர் எம்பெருமானுக்கு அமைந்தது. இதுவும் மேலே சொன்ன எட்டு வீரச்செயல்களில் ஒன்று. இதனை நினைப்பூட்டும் இடம் தாருகாவனம் என்னும் வழுவூர். அதனை வழுவூர் வீரட்டம் என்றே சொல்வார்கள்.

## வெங்கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன்.

எல்லோரும் அறியப் பகைவர்களோடு எதிர்நின்று போர் செய்வதைச் 'செஞ்சேவகம்' என்று சொல்வார்கள். சிவபெருமான் பொல்லாதவர்களுக்குத் தன்னுடைய வீரத்தைக் காட்டி, அவர்களும் தன்னைச் சரணாகதி அடைந்தால் அவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து அருள் செய்யலாம் என்று இருப்பவன். பகைவர்களாக வருகிறவர்கள் அகந்தையால் தம்முடைய குற்றத்தை உணராமல் மேலும் மேலும் செருக்குற்றுப் போரிட்டார்களானால் அவர்களை

இறுதியில் அழிப்பான். அவனுடைய வீரத்தில் கருணை யாகிய ஈரமும் உண்டு.

ஆணின் தன்மை ஆண்மை. ஆண்மை என்ற சொல்லுக்கு வீரம் என்று பொருள். ஆடவன் ஆண்மை உடையவனாக இருந்தால் அவனை அழகுடைய பெண்டிர் விரும்புவர். வீரனிடம் காதல் கொள்வது மங்கையர் இயல்பு. வீரமும் காதலும் இணைந்து இன்ப வாழ்வை உண்டாக்கும். வீரத்தை உடையவன் ஆடவன். காதலைச் செய்பவள் பெண். "மாதர் காதல்" என்பது தொல்காப்பியச் சூத்திரம். மாதர் என்பதற்கே காதல் என்று பொருள். பெண்மை என்பதற்கு விருப்பம், காதல் என்ற பொருள்கள் உண்டு. நல்ல வீரமுள்ள ஆடவர்களை அழகிய மகளிர் விரும்பிக் காதல் செய்து மணப்பார்கள். இந்த இரண்டையும் எண்ணிய நக்கீரர் திருமுருகாற்றுப்படையில், "மங்கையர் கணவ, மைந்தர் ஏறே" என்று முருகனைப் புகழ்கிறார்.

வெவ்வேறு மூர்த்திகள் வீரச்செயல்களைச் செய்திருந்தாலும் அவர்களுடைய வீரத்தைப் புலப்படுத்தும் தலங்கள் தனியாக இல்லை. சிவபெருமானுக்குத்தான் அட்ட வீரட்டம் இருக்கின்றன. அவன் எல்லோரிலும் பெரிய வீரன். பல நாட்கள் போர் செய்யாமல் சில கணங்களில் பகைவர்களை அழிக்கும் பேராற்றல் உடையவன். அத்தகைய வீரனைத் தன்னுடைய காதலுக்கு ஆட்படுத்தியவள் எம்பெருமாட்டி என்று சொல்ல வருகிறார்.

பெருவீரனைத் தனக்குரிய காதலனாக ஏற்றுக்கொண்ட பிராட்டி, அதற்கு அடையாளமாக அவனுடைய உடம்பெல்லாம் முத்திரையிட்டாளாம். அரும்பொருள் ஏதேனும் ஒருவருக்குக் கிடைத்தால் அதில் தம்முடைய முத்திரையிடுவது உலக இயல்பு. களத்தில் அறுவடை செய்த நெல்லைப் பொலியாகக் குவிக்கும்போது அதன்

மேல் முத்திரையிடுவது வழக்கம். அதுபோல எம்பெருமாட்டி சிவபெருமானைத் தனக்குரியவனுகப்பெற்று அவன் திருமேனி முழுவதும் குறி இட்டாளாம்.

எத்தகைய குறி? தன்னுடைய இளநீர் போன்ற தனங்களாகிய குறியை இட்டுத் தனக்குரியவனுக ஆக்கிக் கொண்ட நாயகி அவள்.

செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறி இட்ட நாயகி

மற்றச் சமயங்களில் சிவபெருமானைத் தழுவினுல் மார்பில் மாத்திரம் அடையாளம் இருக்கும். ஆனுல் சிவலிங்க வடிவில் இருந்த பிரானை ஆர்வத்தோடு அணைத்துக் கொண்டபடியினுல் அவன் திருமேனி முழுவதும் அவளுடைய அடையாளக்குறி அமைந்தது. இது காஞ்சிபுரத்தில் நடந்த நிகழ்ச்சியை எண்ணிப் பாடியது.

இவ்வாறு பெருவீரனுடைய காதல் மனைவியாகிய தாயின் திருக்கரங்களை இப்போது நினைக்கிருர். அவள் திருக்கரங்களில் கரும்பும், பஞ்சபாணங்களாகிய மலர்களும் இருக்கின்றன. 'அவை எப்போதும் என் சிந்தையில் உள்ளன' என்று பாடுகிருர்.

மன்மதன் கையில் இருப்பவை கரும்பு வில்லும், பஞ்சபாணங்களும், அவை எம்பெருமாட்டியால் கொடுக்கப்பட்டவை. அன்னையின் திருவுருவத்தை எண்ணுபவர்களுக்கு, காமத்தைத் தரும் கரும்பு வில்லும் மலர் அம்புகளும் எந்தவிதமான மயக்கத்தையும் உண்டாக்குவதில்லை. ஆதலால் அவற்றைச் சிந்தித்துத் தியானம் பண்ணுபவர்கள் காமஜயத்தைப் பெறலாம். பெரு வீரனுகிய சிவபெருமானைத் தன்னுடைய காதலுக்குள் அகப்படுத்திய எம்பெருமாட்டி தன்னை விரும்பித் தியானம் பண்ணுகிற பக்தர்களுக்குக் காமம் என்னும் நோய் அணுகாமல்

இருக்கச் செய்யும் பேராற்றலை உதவுவாள் என்பதை அவள் கையில் ஏந்திய கரும்பும் மலரும் காட்டுகின்றன. ஒரு குழந்தை தன்னுடைய தாயையும், தந்தையையும் ஒருங்கே பார்த்து மனத்தில் சிறிதும் தயக்கமின்றித் தியானம் செய்வது போன்ற எண்ணத்துடன் இந்தப் பாடலைத் தொடங்குகின்றார்.

அம்பிகையின் திருக்கையிலுள்ள கரும்பின் தன்மையையும், மலரின் தன்மையையும் முன்பே பலமுறை நாம் பார்த்தோம்.

கோகனகச்

செங்கைக்கரும்பும்மலரும்எப்போதும்என் சிந்தையதே.

அம்பிகையின் திருக்கரங்களே தாமரை மலர்போல் இருக்கின்றன. அத்தகைய கரங்களில் கரும்பும், மலர்களும் இருக்கின்றன. அந்த இரண்டும் இனிமையை உடையன. கரும்பு வாய்க்குச் சுவை தருவது. மலர் நாசிக்கு மணம் தருவது. அந்த இரண்டையும் எண்ணுபவர்கள் உள்ளம் இனிமை பெற்று என்றும் அவற்றை எண்ணிக் கொண்டிருக்க வாய்ப்பு உண்டு.

தங்கச் சிலைகொண்டு தானவர்
முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரிஉரி போர்த்தசெஞ்
சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட
நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும்எப்
போதும்என் சிந்தையதே.

[மேரு மலையாகிய பொன் வில்லைக் கையில் ஏற்றுக் கொண்டு, அசுரர்களுக்குரிய மூன்று புரங்களையும் அழித்து

மதம் பொருந்திய கொடுமையையுடைய யானையின் தோலைப் போர்த்த செவ்விய வீரனாகிய சிவபெருமான் திருமேனி முழுவதிலும் தன்னுடைய நகிலாகிய குரும்பை அடையாளத்தை வைத்த பிராணேசுவரியினுடைய தாமரை மலரைப் போன்ற சிவந்த கையிலுள்ள கரும்பு வில்லும், மலர் அம்புகளும் எக்காலத்திலும் என் மனத்திற்குள்ளே இருப்பனவாகும்.

செஞ்சேவகம்-வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் வீரம். கரும்பும் மலரும் சிந்தையது; தொகுதி ஒருமை. தனித்தனியே கூட்டினும் அமையும், ''சிந்தையவே'' என்று இதனைத் திருத்த முடியாது. அடுத்த பாட்டில், 'தே' என்று தொடங்கி அந்தாதியாக அமைத்திருக்கிறார்.]

இது அபிராமி அந்தாதியில் 62-ஆவது பாட்டு.

# பாறையில் அடித்த முளை

பாரத நாட்டில் உள்ள பெரியவர்கள் வேதத்தையே தம்முடைய ஆதார நூலாகக் கொண்டு வாழ்ந்தனர். "இறைவன் ஒருவனே. ஆயினும் அவன் அவ்வப்பொழுது வெவ்வேறு வடிவத்தில் தோன்றிப் பக்தர்களுக்கு அருள் புரிவான்" என்பதே அவர்களுடைய நம்பிக்கை. இந்தக் கருத்தை வெவ்வேறு மூர்த்திகளை வழிபடும் அன்பர்கள் வெவ்வேறு வகையில் சொல்வார்கள். 'வானத்திலிருந்து விழும் மழை நீர் கடைசியில் கடலைச் சேருவதுபோல எல்லாத் தெய்வங்களின் வழிபாடுகளும் இறுதியில் கேசவனையே அடைகின்றன' என்பர் வைணவர்கள். "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாக னார்தாம் வருகுவர்" என்பர் சைவர்.

> "பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
> புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கிக்
> கங்குகரை காணாத கடலே"

என்று பாடுவார் இராமலிங்க சுவாமிகள்.

இப்போது முறையாக உள்ள சமயங்களிலுள்ள கருத்துக்களை ஆராயும் பொறுமை இன்மையாலும், ஒரு சமயத்தை நிறுவினேம் என்ற சிறப்பை அவாவியும் புதிய சமயத்தைச் சிலர் நிறுவலாம். அப்படி நிறுவினாலும் அதையும் இறைவன் ஏற்றுக் கொள்வானாம். இவ்வாறு திருநாவுக்கரசர் பாடுகிறார்.

"விரிவிலா அறிவி னோர்கள்
வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்"

என்பது அவர்வாக்கு. வேறு சமயம் செய்வதற்கு இரண்டு காரணங்களை அவர் கூறுகிறார். இப்போதுள்ள சமய தத்துவங்களை ஆராய்ந்து அறியும் விரிவான அறிவு இல்லாதவர்கள், "நான் கூறும் அருமையான கருத்தை எந்தச் சமயமும் சொல்லவில்லை" என்று கூறிப் புதுச் சமயத்தைத் தொடங்குவார்கள். பிறருக்கு உள்ள பெருமையை அறிந்து பொறாமை கொண்டு, "இவன் என்ன சமய ஆசிரியன்? நானே ஒரு சமயத்தைத் தொடங்குகிறேன்" என்று புதுச்சமயத்தைத் தொடங்குவார்கள். இப்படி அவர்கள் செய்யும் புது முயற்சி வேறு துறைகளில் அமையாமல் சமயத்தில் அமைந்ததே என்று இறைவன் அதையும் ஏற்றுக் கொள்வானும். சமய சமரச உணர்வை இந்தப் பாடல் நன்கு தெரிவிக்கின்றது.

உண்மையில் இனிமேல் புதிய சமயம் தோன்ற வேண்டிய அவசியமே இல்லை. இப்போதுள்ள சமயங்களே அளவுக்கு மிஞ்சி வந்து விட்டன. வெவ்வேறு மூர்த்திகளைத் தலைமையாகக் கொண்டு வழிபடும் நெறிகள் பலவாக இருந்தாலும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை ஆறு. அவற்றையே ஷண்மதம் என்பர். அறுவகைச் சமயம் என்பதும் அவையே. அந்த ஆறு மதங்களும் வைதிக சமயங்கள்; வேதத்தைப் பிரமாணமாக ஏற்றுக் கொண்டவை. சூரியனை முழு முதற்கடவுளாகக் கொண்ட சௌரம், கணபதியைத் தனித்தலைமைக் கடவுளாகக் கொண்ட காணபத்தியம், முருகனை முன் நிறுத்துவதாகிய கௌமாரம், சக்தியைப் பரதேவதையாக வழிபடும் சாக்தம், விஷ்ணுவைத் தலைவனாகக் கொண்டு வழிபடும் வைஷ்ணவம்; சிவபெருமானைப் பரம்பொருளாக வைத்து வழிபடும் சைவம் என்பன அவை.

இந்த ஆறு சமயத்தையும் ஆதிசங்கரர் வரையறைப் படுத்தி அமைத்தார். இவை வழிபடும் வகையில் வெவ்வேறு மூர்த்திகளுக்குத் தலைமையைத் தந்தாலும் தமக்குப் பிரமாணமாக வேதத்தையே மேற்கோள் காட்டும் இயல்பை உடையன. ஆதலின் இவை வைதிக சமயங்கள். இவற்றை, "ஊழ் கொண்ட சமயம்" (முறையாக அமைந்த சமயங்கள்) என்று கம்பன் பாடுவான்.

அம்பிகையை முழுமுதற் கடவுளாக வழிபடுவார்கள் சாக்தர்கள். ஸ்ரீவித்யா உபாசகர்கள் என்பவர்களும் அவர்களே. மேலே சொன்ன ஆறு சமயத்துக்கும் அவளே தலைவியென்றும், அவ்வச்சமயத்தில் தலைமை கொள்ளும் மூர்த்தியாக இருப்பவள் அவளே என்றும் அவர்கள் கூறுவார்கள். ஒவ்வொரு சமயத்துக் கடவுளுக்கும் அன்னைக்கும் தொடர்பு உண்டு.

சூரியனைத் தலைவனாகக் கொள்வது சௌரம். கதிரவன் நடுவில் இருந்து அவனுக்கு ஒளிதரும் பெருமாட்டி அன்னையே என்பர் சாக்தர். 'பானுமண்டல மத்யஸ்தா' என்பது லலிதா சகசிரநாமம். காணபத்தியத்தின் தலைவனாகிய கணபதியும் கௌமாரக் கடவுளாகிய குமாரனும் அம்பிகையின் புதல்வர்கள். வைஷ்ணவர்களின் தனித் தெய்வமாகிய திருமால் அம்பிகையின் சகோதரன்; அம்பிகையின் அம்சமே திருமால் என்பது சாக்தர் கருத்து; 'கோவிந்த ரூபிணி' முதலாகிய அம்மையின் திருநாமங்கள் இந்தக் கருத்துக்குச் சான்றாகும். சைவத்தின் பரம்பொருளாகிய சிவபிரானுடைய அருளே வடிவமானவள் சக்தி. சிவபிரானுக்கு மனைவியாகவும் தாயாகவும் மகளாகவும் வெவ்வேறு நிலையில் விளங்குகிறவள் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. சாக்தத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

ஆகவே ஆறு சமயத்தோடும் தொடர்புடையவள் அம்பிகை. அந்தச் சமய சம்பந்தமான நூல்களையும் புரா

ணங்களையும் படித்தால் அம்பிகையின் தொடர்பு புலனு கும். சாக்தர்களோ, அவ்வாறு பல்வேறு தொடர்புடைய வளாக இருப்பதோடு ஆறு சமயங்களுக்கும் தனித் தலைவி யாக இருப்பவள் அம்பிகையே என்றும், அவளுக்கு ஆறு சமயங்களும் உடம்பாடு என்றும் கூறுவர். "நாரணி அறத்தின் நாரி ஆறு சமயத்தி" என்பது திருப்புகழ்.

இவ்வாறு இருக்கும்போது, புதியதாக ஒரு சமயத்தை அமைத்து, அதுதான் உய்யும் வழியைக் காட்டுவது என்று கொண்டாடுகிறவர்களைப் பற்றி அபிராமி பட்டர் சொல்ல வருகிறார். அம்பிகை சிவபெருமான் திருமேனியை அணைத் துக் குறியிட்ட செய்தியைச் சொன்னவர், 'அவள் சிவனைத் தனக்குரியவனாகக் கொண்டவள் மட்டுமல்ல எல்லாச் சமயத்தையுமே தனக்கு உரியனவாகக் கொண்டவள்' என்பதை நினைக்கிறார். எந்தச் சமயத்தை மேற்கொண்டு அன்பு செய்தாலும் அன்னையின் திருவருள் கிடைக்கும் இந்த ஆறு சமயங்களும் இருக்க, வேறு புதிய சமயம் எதற்கு? எல்லா விதமான சமயக்கொள்கைகளும் இந்த ஆறுவகைச் சமயக் கொள்கைகளில் அடங்கிவிடுமே! இது தெரியாமல் பொழுதையும் அறிவையும் ஆற்றலையும் வீணுக்கிப் பிறரையும் வீணுக்கச் செய்து புதிது புதிதாகச் சிலர் நிறுவுகிறார்களே!-இத்தகைய இரக்கம் அபிராமி பட்டருக்கு உண்டாகிறது.

அத்தகைய வீணர்களைத் திருத்தலாமா? அவர்கள் திருந்த மாட்டார்கள். 'நாம்சொல்வதுதான் யாவற்றிலும் உயர்ந்தது' என்ற அகந்தையும், தாம் கண்டதே காட்சி என்ற விடாப்பிடியும் உள்ளவர்களாகிய அவர்களை எந்த வகையிலும் திருத்த இயலாது. மற்றவர்களுக்குச் சமய தத்துவங்களை விளக்கும்போது சில ஏதுக்களைக் காட்டி விளக்குவார்கள்; எடுத்துக்காட்டிக் கூறுவார்கள். அவற்றால் அவர்களுக்குத் தெளிவு உண்டாகும். 'புகை இருப்பதனால் நெருப்பு இருக்கும், சமையலறையைப் போலே' என்று

சொல்லும்போது, 'புகை இருப்பதனால்,' என்பது ஏது 'சமயலறையைப் போலே' என்பது எடுத்துக் காட்டு. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச், சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்று பாடு வார் ஞான சம்பந்தர்.

மூன்று வகையில் ஒன்றைத் தெளிவது வழக்கம். சுருதி அல்லது ஆகமம் என்னும் நூல்களைக் கொண்டு தெளிவது; யுக்தியால் அறிவது; தம்முடைய அநுபவத் தால் உணர்வது. மேலே சொன்ன வீணர்களுக்கு இவற் றில் ஏதும் பயன்படாது. அவர்கள் தாம்பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவர்கள். நன்னெறியை அறிந் தவர்கள் மூலம் தெளிந்து கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆவல் உடையவர்களுக்கு ஒன்றைச் சொன்னால் அதனால் பயன் உண்டாகும். அவர்களுக்கு உண்டாகும் ஐயங்களைப் பல ஏதுக்களைக் காட்டிப் போக்கலாம். செல் லும் கதிக்கு உறுதி இது என்று கூறி அவர்களைத் தெளிய வைக்கலாம். அப்படியின்றி, தாம் கூறுவதையே பிறர் கேட்க வேண்டும் என்ற அகந்தையும், மற்றவர்கள் யாவ ரும் முட்டாள்கள் என்ற செருக்கும் உடையவர்களிடம் கரடியாகக் கத்தினாலும் அவர்கள் கேட்கப் போவதில்லை. அவர்களைத் திருத்துவதைவிட அந்த நேரத்தில் பயனுள்ள செயல் எதையாவது செய்யலாம்; அம்பிகையின் திரு நாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

மண் உள்ள இடத்தில் முளை அடிக்கலாம். அந்த முளை மண்ணை நெகிழச்செய்து உள்ளே இறங்கும். பாறையிலே அது இறங்குமோ? "வன்மனப் பாறைகட் கேறுமோ?" என்பார் அப்பர். மரத்தினால் ஆன ஆப்புக்களைக் கொண்டு போய், "இவற்றை மலைப்பாறைக்குள் இறக்கி மலையையே பிளக்கப் போகிறேன்" என்று ஒருவன் சொன்னால் அவனைப் பார்த்துப் பலரும் நகைப்பார்கள். முன்சொன்ன வீணர்களிடம் ஏதுக்களைக் காட்டி, செல்லும் கதிக்கு இதுவே உறுதிப் பொருள் என்று சொல்வதும் அந்தப்

பைத்தியக்காரன் செயலாகவே முடியும் என்று அபிராமி பட்டர் கூறுகிறார்.

யார் ஆசைப்படுகிறார்களோ, யார் அருட்பசி உடையவர்களோ, 'நாம் வீணாகப்போய் விடுவோமே! ஏதாவது செய்ய வேண்டாமோ?' என்று யார் அஞ்சி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் நல்லவர்கள் அறிவுரை கூறுவார்கள். மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார்கள். குரங்குகளுக்கு அறிவுரை கூறிய தூக்கணாங்குருவி பட்ட பாட்டைப் பஞ்ச தந்திரம் சொல்கிறது.

தம்மிடம் வரும் மாணவர்களின் தகுதியை அறிந்து அதற்கு ஏற்றபடி உறுதி பகர்வதே நல்லாசிரியர்களுடைய இயல்பு. தம்மிடம் உள்ள அற்புத உண்மைகளை வீணே வாரி இறைக்கமாட்டார்கள். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

அபிராமிபட்டர் கூறுவதைப் பார்க்கலாம்.

தேறும் படிசில ஏதுவும்
காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றிற் கொட்டும்
தறி;குறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய்
இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண்டு என்றுகொண்
டாடிய வீணருக்கே.

[பெரியோர்கள் இவை வைதிக சமயங்கள் என்று குறிப்பிடும் சமயங்கள் ஆறுக்கும் அதிதேவதை அபிராமியாகிய இவளாக இருப்பதை அறிந்திருந்தாலும், வேறு சமயமும் உண்டு என்று அதனைப் பாராட்டிய வீணர்களுக்கு, அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளும்படி

சில ஏதுக்களைக் காட்டி, இனிச் சொல்லுகிற நற்கதிக்கு உபாயம் இது என்று அறிவுறுத்தும் உறுதிப்பொருள், குன்றின்மேல் அடிக்கும் மரத்தாலான ஆப்புக்களைப் போன்றவை; அவை வீணாகிப் போகுமேயன்றி உள்ளே சிறிதும் இறங்காதது போல இந்த அறிவுரைகள் பயனின்றி ஒழியுமேயன்றி அவர்களுடைய அறிவிலே சிறிதும் புகா.

ஏது-பிரமாணங்கள், மேற்கோள்கள் முதலியன. காட்டி - எடுத்துக்காட்டி. முன்செல் கதி-இனிமேல் செல் லும் நல்ல கதி. கொட்டுதல் - அடித்து இறக்குதல். தறி- நடு தறி; ஆப்பு. சமயம் ஆறும் - ஆறு சமயங்களிலும். தலைவி இவளாய்ச் சமயம் ஆறும் இருப்பதை என்றும் கூட்டிப் பொருள் சொல்லலாம். வேறும் சமயம்: வேறு சமயமும் என்று உம்மையை மாறிக் கூட்டுக. கொண் டாடுதல்-சிறப்பாகப் பாராட்டுதல். வீணருக்குக் கூறும் பொருள், குன்றிற் கொட்டும் தறி என்று கூட்டுக.]

நெகிழ்ச்சியுள்ள மண்ணில் இறங்கும் முளை வன்மை யுள்ள பாறையில் இறங்காதது போல, பக்குவமுள்ளவர் களுக்குத் தெளிவை உண்டாக்கும் அறிவுரை வீணர்களி டம் பயன்படாது என்று உவமையை விரித்துக்கொள்க. முளையும் கொட்டுபவனுடைய முயற்சியும் வீணாதலைப் போலக் கூறும் பொருளும் கூறுபவன் முயற்சியும் வீணாகும்.

இந்த உவமையை நாலடியாரிலிருந்து எடுத்திருக் கிறார் அபிராமிபட்டர். 'நன்று அறியா மாந்தர்க்கு அற நெறியை உரைத்தால் அது குன்றின்மேல் கொட்டும் தறிபோல் ஆகும்' என்று நாலடியார் சொல்கிறது.

> ''பன்றிக்கூழ்ப் பத்தரில்
> தேமா வடித்தற்றால்
> நன்றறியா மாந்தர்க்கு
> அறத்தாறு உரைக்குங்கால்;

குன்றின்மேல் கொட்டும்
　　தறிபோல் தலைதகர்ந்து
சென்றுஇசையா வாகும்
　　செவிக்கு.'' (257)

பக்குவம் உடையவர்களுக்கே உண்மை விளங்கும் என்பது இந்தப் பாடலின் கருத்து.

இது அபிராமி அந்தாதியில் 63—ஆவது பாட்டு.

# எங்கும் அன்னை

இறைவனை வடிவத்தில் நிறுவி வழிபடும் சகுண உபாசனை இந்த நாட்டில் சிறப்பாக இருக்கிறது. கோயில்களும் அந்தக் கோயில்களில் வெவ்வேறு வகையான மூர்த்திகளும் இருக்கின்றன. அவரவர்கள் மனஇயல்புக்கு ஏற்றபடி எந்த மூர்த்தியினிடமேனும் முறுகிய அன்பு கொண்டு இறைவனை அடைய வேண்டும்.

இவ்வாறு அமைந்த மூர்த்திகளின் வழிபாட்டு முறை வெவ்வேருக இருக்கும். அதைக் கொண்டு அந்த மூர்த்திகளை ஸாத்விக ராஜஸ தாமஸ மூர்த்திகள் என்று பிரித்துச் சொல்வதுண்டு. மக்கள் இந்த மூன்று குணங்களின் வசப்பட்டவர்கள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குணம் மிகுதியாக இருக்கும். அந்த அந்தக் குணம் உடையவர்கள் தம் தம் மன இயல்புக்கு ஏற்ற மூர்த்திகளை வழிபட்டுக் கொண்டாடுவார்கள்.

எல்லோருமே ஞானத்தை விரும்பி வழிபடுவதில்லை. பெரும்பாலும் காம்ய உபாசனை செய்கிறவர்களே உலகத்தில் மிகுதி. அவர்கள் தம்முடைய வாழ்க்கையின் நிலைக்கு ஏற்றபடி வழிபாடுகளை நடத்துவார்கள். உடம்பு, உரை, உள்ளம் இந்த மூன்றிலும் தூய்மை உடையவர்களும் தூய்மையை அடைய விரும்புகிறவர்களும் சில மூர்த்திகளை வழிபடுவார்கள். இத்தகைய வழிபாட்டில் சத்துவ குணமே மேல் ஓங்கி நிற்கும். உணவு முதலியவற்றில் வரையறை இல்லாதவர்கள் தாம் உண்ணும் புலாலை நிவேதனமாக ஏற்கும் தாமஸ தேவதைகளை வழி

படுவார்கள். அவர்களுக்கு ஞானத்தில் நோக்கம் இல்லை. தாம் மேற்கொண்ட செயல்களில் வெற்றிபெறவேண்டும்; அவ்வளவுதான். தெய்வத்தை வழிபடுவது எதற்காக, நாம் பிறவி எடுத்தது எதற்காக என்பவை போன்ற கேள்விகளே அவர்கள் உள்ளத்தில் எழுவதில்லை. அதிகாரி ஒருவரைத் திருப்திப்படுத்தத் தம்மிடமுள்ள பொருள்களைக் கொடுத்து வழிபட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்பவர்களைப்போலவே அவர்கள் இருப்பார்கள்; தாம் வழிபடும் தெய்வங்களுக்குப் பலி கொடுப்பார்கள்; கள்ளும் வைத்து வழிபடுவார்கள்.

இலங்கைக் கோயில்களில் பலியிடக்கூடாது என்ற சட்டம் வருவதற்குமுன் சிற்றூர்களில் உள்ள கிராம தேவதைகளுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு வந்தார்கள். அங்கே வழிபடுகிறவர்கள் தாமஸ குணமுடையவர்கள். தெய்வத்தின் திருவருளால் ஞானம் பெற்றுப் பேரின்ப வாழ்வு பெறலாம் என்ற நினைவே அவர்களுக்கு இருப்பதில்லை.

சத்துவகுணம் மிக்க நந்தனார், சேரியில் பிறந்தவரானாலும் அவருடைய இயல்பு அங்குள்ள மற்றவர்களுடையதைப் போல இல்லை. அவர்கள் மாடனையும் காட்டேறியையும் வழிபட்டார்கள்; புலால் உண்டு மகிழ்ந்தார்கள்; கள்ளைக் குடித்துக் கூத்தாடினார்கள்; தாங்கள் உண்பவற்றைத் தங்கள் தெய்வங்களுக்குப் படைத்துப் பூசை போட்டார்கள். அவர்களுடைய பழக்கவழக்கங்களில் அருவருப்புற்ற நந்தனார் நடராசப்பெருமானிடம் பக்தி கொண்டார். "நாளைக்குச் சிதம்பரம் போவேன்" என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் முறுகியது. அதனால் அவருக்கு, 'நாளைப் போவார்' என்ற பெயர் நிலைத்தது.

உலகில் பிறந்ததன் பயன் இனிப் பிறவாமல்இருப்பது என்ற எண்ணம் உள்ளவர்கள், அதற்கு உறுதுணையாக

இருப்பது இறைவன் திருவருள் என்பதை அறிவார்கள். அதைப் பெறுவதற்குச் சத்துவ சாதனங்களைச் செய்வார்கள்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று படிப்படியாக அமைந்த சாதனங்களை ஒன்றன்பின் ஒன்றாக மேற்கொள்வார்கள். அவர்கள் சிவபெருமான், கணபதி, முருகன், அம்பிகை, நாராயணன், கிருஷ்ணன், இராமன் முதலிய மூர்த்திகளை வழிபடுவார்கள்.

அம்பிகையை வழிபடுவதில் வாமாசாரம் என்பது ஒரு வகை. அது தாமத குணவழிபாடு. மந்திர யந்திர தந்திரங்கள் அந்த முறையிலும் உண்டு; எனினும் காம்ய உபாஸனை அது. ஞானத்தில் ஆசையுடையவர்கள் அதை விரும்பமாட்டார்கள். தட்சிணாசாரம் அல்லது ஸ்ரீவித்தியா உபாஸனை சத்துவகுண வழிபாடு. இந்த நாட்டில் அந்த முறைமையே பெரியோர்கள் மேற்கொண்டு நன்மை பெற்றார்கள். அத்வைத சித்தாந்தத்தையே தம்முடைய லட்சியமாகக் கொண்டவர்கள் அவர்கள். உபாஸனா பலத்தால் அன்னையின் திருவருளையும் அதனால் பேரானந்தப் பெருவாழ்வையும் அடையாலம் என்ற உறுதி பூண்டவர்கள் அவர்கள்.

வாம மார்க்கத்தில் அம்பிகையை வழிபடுகிறவர்கள் வங்காளத்தில் மிகுதி. தமிழ்நாட்டில் ஸ்ரீவித்தியா உபாஸகர்களே அதிகம். இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை அறியாமலே சக்தியை வழிபடும் சாக்தர்கள்யாவரும் ஒரே வகையான வழிபாடுடையவர்கள் என்று நினைப்பது தவறு. வாமாசாரத்தில் பஞ்ச மகாரங்கள் என்று ஒரு சம்பிரதாயம் உண்டு. மது மாம்ஸ மத்ஸ்ய மைதுன முத்ரை என்பார்கள். இந்த நாட்டிலும் சிலர் தமக்கு அளவற்ற சக்தி கிடைக்க வேண்டுமென்று கருதி வாமாசாரத்தை மேற்கொண்டு உபாஸனை செய்பவர்கள் இருக்கிறார்கள். அது வெறும் காம்யஉபாஸனை. அதனால் உபாஸகருக்கும் நல்ல பயன் விளையாது; மற்றவர்களுக்கும் கிடைக்காது.

உபாஸனை என்பது மோட்சத்தை அடைவதற்காக அமைய வேண்டும். மற்றவை இயந்திரத்தை முடுக்கி விடுவது போலவும் தீய சக்திகளை எழுப்புவது போலவும் முடியும்.

இத்தகைய தாமஸ உபாஸனைகள் உலகம் முழுவதும் இருக்கின்றன. காட்டுமிராண்டிகள் என்று சொல்கிறவர் கள் கூட்டத்தில் இத்தகைய வழிபாட்டு முறைகளைப் பார்க்கலாம். நரமாமிச பட்சணிகளும் தமக்கு ஏற்றபடி தெய்வங்களை வழிபடுவதுண்டு. இவை ஞானம் அடைய மார்க்கம் அல்ல என்பது பெரிதன்று; உலக வாழ்வில் யாவரும் அமைதியாக வாழ்வதற்கே இடையூறாக இருக்கும்.

அபிராமிபட்டரிடம் மதிப்புக் கொள்ளாத பேதை யர்கள் அவரை க்ஷுத்ர தேவதையை உபாஸிக்கிறவர் என்றும் வாமாசாரத்தில் ஈடுபட்டவர் என்றும் பேசிப் பழித்தார்கள். அவர் பரம சாத்துவிகர். ஆகையால் அவர் களை மறுத்துப் பேசித் தம் நிலையை நிறுவுவதற்கு முயல வில்லை. 'உலகம் பழித்தால் நமக்கு என்ன?' என்று ஒதுங்கி வாழ்ந்தார். ஆனாலும் உலகத்தாருடைய பேதைமையை அவர் உணர்ந்தார்.

'அபிராமி சமயம் நன்றே' என்ற உறுதியோடு உபா ஸனை செய்த அவருக்கு இந்த நினைவு இப்போது வந்தது. "பலிகவரும் துர்த்தேவதைகளை வழிபடுவதாக இந்த உலகம் நினைக்கிறதே! மென்மையே வடிவான லலிதாம்பி கையை வழிபடும் பேறு பெற்ற எனக்கு அத்தகைய தெய் வங்களிடத்தில் மனம் மேவுமா? என்ன பேதை உலகம்!' என்று நினைத்தார். அந்த எண்ணத்திலிருந்து எழுந்தது ஒரு பாட்டு.

அம்பிகையை வழிபடுகிறவர்களுக்கு மற்ற மூர்த்தி களிடம் மனம் மேவுவதில்லை. பிற மூர்த்திகளிடம் பகை யுணர்ச்சி இருப்பதில்லை. எல்லாம் அவளாகவே தோன்

றும். இதுதான் உண்மையான உபாஸகனுடைய நிலை. எந்த மூர்த்தியைக் கண்டாலும் அவனுக்குத் தான் வழி படும் மூர்த்தியாகவே தோன்றும்; அந்த மூர்த்தியின் நாமமே வாயில் வரும்,

அம்பிகையை நோக்கி அபிராமிபட்டர் சொல்கிறார்: 'என் தாயே, எல்லாரிலும் கருணை மிகுந்தவள் தாய். தாயி னிடம் ஒட்டிக்கொண்டு பாலருந்தும் குழந்தை அப்பா அழைத்தாலும் உடனே போகாது. நான் உன்னுடைய திருவடிக்கே அன்பு பூண்டு ஒட்டிக் கொண்டேன். அப்படி யிருக்கத் தாமஸ குணமுள்ள மூர்த்திகளைப் போய் வழி படுவேனா? அவர்களிடம் அன்பு வைப்பேனா?' என்கிறார்; 'அப்படிச் செய்யமாட்டேன்' என்று உறுதியாகச் சொல் கிறார்.

நம்முடைய வாழ்வு அருமையாகக் கிடைத்தது. இதைப் பயனுள்ள வழியில் போக்க வேண்டும். மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்களாலும் செயல் செய்து வாழும் இந்த வாழ்வில் அந்த மூன்றையும் உயர்ந்த பயனை அடையவே பயன் படுத்த வேண்டும். அது தான் அறிவுக்கழகு. அம்பிகையைத் தியானித்து அவளு டைய புகழைப் பேசி அவளை வணங்கி மூன்று கரணங்களை யும் ஈடுபடுத்தியவர்களுக்கு வேறு துறையில் மனம் செல் லாது. அமிர்தத்தை நுகர்ந்தவன் புளியங்காடியை நுகர முயல்வானா?

'வாழ்க்கை வீணாகும்படி, உயிர்ப் பலியைக்கொள்ளும் சிறு தெய்வங்களிடம் நான் சிறிதளவும் அன்பு வைக்க மாட்டேன். என்னுடைய மிகுதியான அன்பு உன்பால் இருக்கிறது. அப்படி இருக்க வேறு திசையில் நான் செல்வது எதற்கு?' என்கிறார் இந்த பக்தர்.

வீணே பலி கவர் தெய்வங்கள்பால் சென்று
மிக்க அன்பு பூணேன்.

நம் மனத்தில் தோன்றுவது அன்பு. அது அம்பிகையினிடம் வைக்கப்படுமாயின் நம் மனம் அவளையே நினைக்கும். அதன் பயனாக வாய் அவள் புகழையே பேசும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்களுக்குத் தான் மனத்தில் ஒருவரைப் பாராட்டுவதும் வாக்கினால் வேறு ஒருவரைப் புகழ்வதும் ஆகிய இயல்பு இருக்கும். உண்மையான பக்தர்களுக்கு உள்ளம், உரை, செயல் மூன்றும் ஒரே சுருதியில் இயங்கும். ஆகவே எம்பெருமாட்டியினிடம் அன்பு பூண்ட அபிராமிபட்டர் யாரைப் புகழ்வார்? அன்னையையே புகழ்வார்; வேறு ஒருவருடைய புகழ்ச்சியில் ஈடுபட மாட்டார். வேறு யாரேனும் உலகத்து மனிதர்களையோ சிறு தெய்வங்களையோ புகழத் தொடங்கினால் அதைக் கேட்பதில்கூட அவருக்கு ஆர்வம் இராது; அதை மதிக்க மாட்டார்.

உனக்கு அன்பு பூண்டுகொண்டேன்;
நின் புகழ்ச்சி அன்றிப் பேணேன் ஒருபொழுதும்.

எப்போது பேசினாலும் அம்பிகையின் புகழையே பேசுவது சிறந்த பக்தர்களின் இயல்பு. புதிதாகத் திருமணம் செய்துகொண்ட பெண்மணி தன் தோழிகளிடம் தன் கணவனைப் பற்றியே பேசுவாள் எப்போதும். வேறுபேச்சு எழுந்தாலும் எப்படியாவது அந்தப்பேச்சைக் கொண்டு வந்து விடுவாள். இது அன்பின் தகைமை. குழந்தையிடம் அளவற்ற வாத்ஸல்யம் வைத்திருப்பவர்களிடமும் இந்த இயல்பைக் காணலாம். அன்னையிடம் பேரன்பு பூண்ட அபிராமிபட்டர் வேறு எந்தப் புகழையும் வாய்விட்டுப் பேசுவதும் இல்லை; காது கொடுத்துக் கேட்பதும் இல்லை. பேணுதல் என்பது ஆதரித்தல் என்ற பொருளுடையது. தாம் வம்பு பேசாவிட்டாலும் பிறர் பேசுவதை ஆர்வத்துடன் கேட்கும் இயல்புடையோர் பலர். ஒரு பொருளின் சிறப்பைத் தம்மால் எடுத்துக் கூற முடியாவிட்டாலும் பிறர் கூறும்போது ஆதரவுடன்

கேட்பது சிலர் இயல்பு. தாமே கூறுவதிலும் அந்த ஆதரம் இருக்கும்; பிறர் கூறக் கேட்பதிலும் அது இருக்கும் இந்தப் பக்தருக்கு வெற்றுப் புகழ்ச்சியாகிய மற்றவர் புகழ்ச்சியைப் பேசுவதற்கும் விருப்பம் இருப்பதில்லை; பிறர் புகழக் கேட்பதற்கும் விருப்பம் இல்லை.

இவ்வாறு முறுகிய அன்புடையவர்களிடம் வேறு ஓர் அதிசயமான அநுபவம் உண்டாகும். எதைப் பார்த்தாலும் அன்புக்குரிய பொருளாகவே தோன்றும். காதலுணர்ச்சி முறுகினால் இப்படி ஒரு மெய்ப்பாடுதோன்றும். "நோக்குவ எல்லாம் அவையே போறல்" என்று அதைச் சொல்வார்கள். அதன் பின்பு அன்புடையவர்களின் உரு வெளித்தோற்றம் ஏற்படுமாம். இராவணன் சீதையினிடம் மனத்தைப் பறிகொடுத்ததனால் அவனுக்குச் சீதையின் வடிவம் தோற்றியதாம். இனம் கண்டு கொள்வதற்காகச் சூர்ப்பணகையை அழைத்து வரச்சொல்லி, "இவள்தானா நீசொன்ன சீதை?"என்று கேட்டானாம். அவளோ இராமபிரானிடம் காமம் கொண்டவள். அவள் பார்த்தாள், அவளுக்கு இராமபிரானுடைய தோற்றமே தெரிந்தது. "வந்தான் இவனாகும் அவ் வல்வில் இராமன்" என்றாளாம். அவர்கள் மனத்திலுள்ள காமத்துக்கு ஏற்றபடி உருவெளித் தோற்றத்தைக் கண்டார்கள்.

தவறான காமம் உடையவர்களுக்கே இப்படித் தோற்றுமானால், உண்மையான காதல் உடையவர்களுக்குத் தோற்றாதா? பிரிந்து சென்ற காதலர் தம் காதலியரிடம் மீண்டும் வரும்போது வழியில் காதலியரின் உருவெளித் தோற்றத்தைக் காண்பதாகத் தமிழ் அகப்பொருள் இலக்கியங்களில் வரும்.

உண்மையான பக்தர்களுக்கு, அவர்களுடைய பக்தி முறுகிய ஒரு நிலையில், தாம்நோக்கும் இடமெல்லாம் தாம் வழிபடும் தெய்வத்தின் தோற்றம் உண்டாகும். இதை அநுபூதிமான்கள் சொல்லியிருக்கிறார்கள்.

''செங்கேழ் அடுத்த சினவடி
வேலும் திருமுகமும்
பங்கே நிறைந்தநற் பன்னிரு
தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங்
கோடைக் குமரனென
எங்கே நினைக்கினும் அங்கேவந்
தென்முன் எதிர்நிற்பனே''

(கந்தர் அலங்காரம்)

என்று சிறந்த அநுபூதிமானாகிய அருணகிரி நாதர் பாடுகிறார். அபிராமி பட்டரே வேறோரிடத்தில்,

''பார்க்கும் திசைதொறும் பாசாங்
குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமலர் ஐந்தும்
கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு
மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை
மேல்முத்து மாலையுமே'' (85)

என்று பாடுகிறார்.

இங்கே வேறு ஒரு வகையில் அதைச் சொல்கிறார். எங்கே பார்த்தாலும் அம்பிகையின் தேசுடைய திருமேனியே தோன்றுகிறதாம். திசைகளைப் பார்த்தாலும் வானத்தைப் பார்த்தாலும் நிலத்தைப் பார்த்தாலும் திருமேனிப் பிரகாசமே காண்கிறது. கண்ணிலும் கருத்திலும் அன்னையின் வடிவத்தைப் பதித்திருப்பவருக்கு அதுவே எங்கும் தோன்றுகிறது.

திருமேனி ப்ரகாசம் அன்றிக்
காணேன், இருநிலமும், திசை நான்கும்,
ககனமுமே.

கீழே பார்த்தாலும் சுற்றிப் பார்த்தாலும் மேலே பார்த்தாலும் எல்லாம் அம்பிகை மயமாகத் தோன்று கின்றன, ''இறைவி ஒளிவெளி எங்குமே'' என்று தக்க யாகப் பரணியில் வருகிறது,

உள்ளத்தில் அம்பிகையின் தியானமும் உரையில் அம்பிகையைப் புகழும் பேச்சும் பார்வையில் எங்கும் அவளைப் பார்த்து வணங்கும் காட்சியும் உடைய உயர்ந்த நிலை, மூன்று கரணங்களும் அவள் மயமாகிய நிலை. ''ஸர்வம் ப்ரம்ம மயம்'' என்று காண்பதைப் போன்றதே இது. முறுகிய பக்தியினால் அந்தப் பக்தியே ஞானமாக மலர்ந்தவர்களுக் கன்றி இத்தகைய அநுபவம் கைவரப் பெறுது.

பல பெரியோர்கள் இறைவனின் திவ்ய தரிசனத்தைக் கண்டார்கள் என்று அவர்களுடைய வரலாறுகளில் காணுகிறோம். ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனுடைய தோற்றத்தைப் பஞ்ச பூதங்கள் மறைத்து நிற்கின்றன. மெய்ஞ்ஞானமுடையவர்களுக்கு அந்தப் பஞ்ச பூதக் காட்சி தோன்றாது; அவற்றினூடே ஒளிரும் இறைவனுடைய காட்சி தோன்றும். மரத்தால் பண்ணிய யானையைப் பார்க்கும் குழந்தை அதை யானையாகப் பார்க்கிறது. மரத்தை ஆராயும் தச்சனுக்கு அது மரமாகத் தோன்றுகிறது. இந்த உவமையைத் திருமூலர் சொல்கிறார்:

''மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்துள் மறைந்தது மாமத யானை.
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்;
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்.''

(திருமந்திரம்)

யானையை மறந்து அதன் மூலப் பொருளாகிய மரத்தைப் பார்ப்பவன் தச்சன்; பஞ்ச பூதங்களை மறந்து உண்மைப் பொருளைக் காண்பவன் ஞானி. அபிராமி

பட்டர் அப்படிப் பார்க்கும். மெய்யறிவுடையவர்; கூரிய கண்ணையுடையவர். அவர் எங்கும் அம்பிகையின் திருமேனிப் பிரகாசத்தையே காண்கிருர்.

*வீணே பலிகவர் தெய்வங்கள்*
*பாற்சென்று மிக்க அன்பு*
*பூணேன்; உனக்கன்பு பூண்டுகொண்*
*டேன்; நின் புகழ்ச்சிஅன்றிப்*
*பேணேன் ஒருபொழு தும்;திரு*
*மேனிப்ர காசம்அன்றிக்*
*காணேன், இருநில மும்திசை*
*நான்கும் ககனமுமே.*

[தாயே, வீணாக, உயிர்ப்பலியை ஏற்றுக் கொள்ளும் புன்சிறு தெய்வங்களிடம் போய் மிக்க பக்தியைக்கொள்ள மாட்டேன்; நினக்கே அன்பை மேற் கொண்டேன்; ஆதலின் ஒரு காலத்திலும் நின் புகழையல்லாமல் வேறு ஒருவர் புகழிலும் விருப்பம் கொள்ளேன்; அடியிலுள்ள பெரிய பூமியிலும் சுற்றும் உள்ள நான்கு திசைகளிலும் மேலே உள்ள வானத்திலும் எங்கும் நின் திருமேனியின் ஒளியையன்றி வேறு ஒன்றையும் காணேன்.

வீண பூணேன், உனக்குப் பூண்டுகொண்டேன்; பேணேன், நிலமும் திசை நான்கும் ககனமும் ப்ரகாச மன்றிக் காணேன் என்று கூட்டுக. அன்பு பூணுதல் உள்ளத்தின் செயல்; புகழ்ச்சி பேணுதல் வாக்கின் செயல்; ப்ரகாசம் காணுதல் உடம்பின் செயல்.

இதனல் மூன்று கரணங்களாலும் அம்பிகையின் வழிபாடே செய்வது புலனுகிறது. முன் இரண்டும் முறுகி விளைந்தால் மூன்ருவது நிலை உண்டாகும்.

இது அபிராமி அந்தாதியில் 64-ஆவது பாட்டு.

# அம்பிகையின் வல்லபம்

சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக யோகத்தில் இருந்தார். அப்பொழுது பிரபஞ்சத்தில் உள்ள உயிர்க் கூட்டங்கள் யாவும் இன்பத்தில் விருப்பம் இல்லாமல் இருந்தன. தேவர்கள் செயல் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தார்கள். சூரபத்மன் தேவர்கள் பலரைச் சிறையில் வைத்துத் துன்புறுத்தினன். இந்திரன் தன் அரசை இழந்து திண்டாடினன். சிவபெருமானுடைய திருவருள் இல்லாமல் தமக்கு வந்த துன்பங்களைத் தீர்க்க முடியாது என்று உணர்ந்தனர் தேவர். அப்பெருமானை அணுகி விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அவரோ யோகத்தில் ஆழ்ந்திருக்கிருர். என்ன செய்வது?

அம்பிகை தாட்சாயணியாக இருந்த தன் உருவத்தை மாற்றிக்கொண்டு, இமய அரசன்மகளாகத் திருவவதாரம் செய்திருக்கிருள். அவளை மணந்து கொண்டு ஒரு புத்திரனைப் பரமேசுவரர் அவதரிக்கச் செய்தால், அந்தக் குமாரன் மூலமாகச் சூரபத்மனைச் சங்காரம் செய்ய வழி ஏற்படும். அதற்கும் சிவபிரான் யோகத்தினின்றும் எழ வேண்டுமே!

தேவர்கள் கூடி யோசித்தாகள். கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். மன்மதனைக் கொண்டு தங்கள் காரியத்தைச் சாதிக்கலாம் என்று முடிவு கட்டினர்கள். தட்சிணாமூர்த்தியின்மேல் மலரம்புகளை மன்மதன் எய்ய வேண்டுமென்றும், அதனல் அவர் யோகம்கலந்து எழுந்து பார்வதியை மணந்துகொள்வார் என்றும் எண்ணினர்கள்.

தங்கள் கருத்தை மன்மதனிடம் சொல்லவே, அவன் முதலில் அஞ்சி மறுத்தான். தேவர்கள் பலபடியாகச் சொல்லி வற்புறுத்தவே, அவன் அவ்வாறு செய்வதாக ஏற்றுக் கொண்டான்.

அவன் சிவபிரான்மேல் மலரம்புகளை விட்டான். அந்தப் பெருமான் தம் நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தார். காமன் எரிந்து பொடியானுன். பிறகு அவனுடைய மனைவி வந்து வேண்டப் பார்வதியின் திருமணத்தில் அருள் புரிவதாகக் கூறினுர். பார்வதி திருமணம் நிகழ்ந்தது. பரமசிவனுர் மன்மதனை எழுப்பி ரதியின் கண்களுக்கு மட்டும் அவன் தெரிவான் என்றும், மற்றவர்களுக்குத் தெரியாத அருபியாக இருப்பானென்றும் அருளினுர். அது முதல் காமனுக்கு அநங்கன் என்ற பெயர் உண்டாயிற்று.

பார்வதி திருமணத்திற்குப் பிறகு முருகன் திருவவதாரம் செய்தான். பரமயோகியாகிய சிவபெருமான் மணம் செய்து கொண்டு குமார நாயகனைத் தோன்றச் செய்தார். இது கந்த புராணத்தில் வரும் வரலாறு.

இந்த வரலாற்றை வைத்துக்கொண்டு சமத்காரமாக அம்பிகையின் வல்மையை உயர்வாக எடுத்துச் சொல்கிருர் அபிராமிபட்டர்.

சிவபெருமான் தவக்கோலம் உடையவர்.

''தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே''

என்று புறநானூறு அவரை அருந்தவத்தோன் என்று சொல்லும். ''பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி'' என்பது திருவிளையாடற் புராணம். உலகத்தில் யோகியாக இருப்பவர்கள் புலனை அடக்கி வெற்றி பெறுவார்கள்; காமத்தை வென்று விடுவார்கள். சிவபிரானுகிய பரம யோகியோ காமத்துக்குப் பிறப்பிடமாகிய காமனையே

அழித்தவர். அவர் எவ்வளவு பெரிய யோகியாக இருக்க வேண்டும்! அந்தத் தவப் பெருமானைப் பற்றி முதலில் சொல்லுகிறார்.

அவர் காமனைத் தகனம் செய்தது இரகசியமாக நடந்த தன்று; எல்லா உலகங்களும் அறிந்த செய்தி அது. "இவர் காமாரி" என்று சொல்லும் வகையில் மன்மத சங்காரம் புரிந்தவர் அவர். இது மிகப் பழங்காலத்தில் நடந்த நிகழ்ச்சி.

> ககனமும் வானும் புவனமும்
> காண வில் காமன் அங்கம்
> தகனம் முன் செய்த தவப்பெருமான்.

காமன் வில்லும் கையுமாக வந்து நின்றான். அந்த வில்லையும் அவன் உடம்பையும் சேர்ந்து எரித்து விட்டார்

அத்தகையவருக்குப் பிள்ளை பிறந்தது! இது வியப்பு அல்லவா? வெறும் தவசியாக இருப்பவரே பெண்ணின் தொடர்பு இல்லாமல் இருக்கவேண்டும். இவரோ காமனையே அழித்தவர். அப்படியிருந்தும் ஒரு பிள்ளையைப் பெறும் நிலைக்கு வந்துவிட்டார். ஏன்?

இங்கேதான் அம்பிகையின் பேராற்றல் தெரிய வருகிறது. அந்தத் தவப்பெருமானை வசப்படுத்தித் தன் விருப்பத்துக்கு இசையச் செய்து அதன் விளைவாக ஒரு பிள்ளையையும் உண்டாகும்படி செய்துவிட்டாள். அந்தக் குழந்தை சாமான்யமான குழந்தையா? எல்லோருக்கும் பிறப்பது ஒரு முகமுள்ள குழந்தை. சிவபெருமானாகிய தவசிக்குப் பிறந்தது ஆறுமுகக் குழந்தை! ஆம்; பன்னிரண்டு கைகளும் ஆறு முகங்களும் உள்ள முருகன் அல்லவா இந்தச் சங்கமத்தால் அவதாரம் செய்தான்?

'அம்பிகையைத் திருமணம் செய்துகொண்டார்; அது பெயரளவில் கல்யாணமன்றி வேறு அன்று' என்று யாரேனும் சொல்லவந்தால், அவருக்கு விடை கூறு வாரைப்போல, 'ஆம் ஐயா! எனக்குத் தெரியும். கல்யா ணம் மட்டுமா நடந்தது? அற்புதமான குழந்தையே பிறந்து விட்டதாக்கும்!' என்று சொல்கிருர்.

> தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்முகனும்
> முந்நான்கு இரு மூன்று எனத்
> தோன்றிய மூதறிவின்
> மகனும் உண்டாயது அன்றே?

முருகனை வருணிக்கிருர். சிவபெருமானுக்கு ஐந்து முகம்; அம்பிகைக்கு ஒரு முகம். இருவர் முகங்களும் சேர்ந்து பிறப்பதுபோல அந்தக் குழந்தைக்கு முகங்கள் இரு மூன்று. அப்படியே சிவபெருமானுக்குப் பத்துத் திருக்கரங்கள்; அம்பிகைக்கு இரண்டு. அவையும் ஒன்று பட்டு அமைந்ததுபோலக் குமார நாயகனுக்குப் பன் னிரண்டு கைகள். இப்படி அதிகமான முகங்களும் அதிக மான கைகளும் உடையவனுகப் பிறந்த குழந்தை, வெறும் உடலாற்றல் மட்டும் உள்ளவனு? அவன் அறிவிலும் சிறந் தவன். நன்ருக முதிர்ந்த ஞான முடையவன். ஞானஸ்கந் தன் என்றும், ஞானபண்டித சாமி என்றும் கூறும் திரு நாமங்களை உடையவன் அல்லவா? அவனுடைய மூதறிவை உலகத்துக்கு எடுத்துக்காட்டத்தானே தகப்பனுரே மாணுக்கராக இருந்து உபதேசம் பெற்ருர்?

அப்படி ஒரு பிள்ளை இந்த மகாயோகிக்குப் பிறந்தது ஆச்சரியம் அல்லவா?

ஆச்சரியந்தான். ஆனல் இந்த ஆச்சரியத்தை விளை வித்தவள் அம்பிகை. யோகியாக இருந்த பெருமானைப் போகியாக்கி விட்டது அன்னையின் வல்லமை. அவர் மலை போல நின்று தவம் செய்தவர்; காமனையே வென்றவர். அம்பிகையோ மென்மையான கொடி போன்றவள்.

ஆனாலும் அந்தக் கொடி அந்த மலையை வென்றுவிட்டது; தன் வசமாக்கி அதற்கு அடையாளமாக ஒரு குழந்தை யையும் உண்டாகச் செய்துவிட்டது!

தாயே, நீ செய்த வல்லபம் எவ்வளவு ஆச்சரிய மானது!' என்று வியந்து பாராட்டுகிறார் அபிராமிபட்டர்.

## நீசெய்த வல்லபமே!

காமன் அம்பு எய்ததனால் சிவபெருமானுக்கு அம்பி கையோடு ஒன்றுபட வேண்டுமென்ற எண்ணம் தோன்றவில்லை. அப்படியானால் காமனுக்கு வாழ்வை யல்லவா தரவேண்டும்? காமன்தான் எரிந்து போனானே! பார்வதி கல்யாணத்தின்போது காமனே இல்லை. அம்பிகைக்குக் காமன் துணை வேண்டுமா? அந்தப் பெரு மாட்டியின் அழகிலே மயங்கி விட்டார் சிவபெருமான். அம்பிகை அவரைத் தன் வசப்படுத்தி அடங்கும்படி வைத்துவிட்டாள். ஒரு முகத்தையுடைய மாரனை அழித்த தற்கு வட்டியும் முதலுமாக அபராதம் வாங்குவாரைப் போலே ஆறுமுகமுடைய குமாரனை உண்டாகச் செய்து விட்டாள். மாரனை அழித்த வலிமை அம்பிகையிடம் செல்லவில்லை. மாரனை வென்ற மகாதேவரைக் கொடி போல உள்ள அம்பிகை வென்று விட்டாள். அவள் வல்ல மையை அளவிட்டுக் கூற முடியுமா?

ககனமும் வானும் புவனமும்
காணவிற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத்
தோன்றிய மூதறிவின்
மகனும்உண் டாயதன் றோவல்லி
நீசெய்த வல்லபமே?

[அபிராம வல்லியே, முன் ஒரு காலத்தில் ஆகாசத்தில் உள்ள உலகங்களும் தேவலோகமும் இந்தப் பூவுலகமும் பிரத்தியட்சமாகக் காணும்படியாக, வில்லோடு பொர வந்த மன்மதனுடைய உடம்பை எரித்த தவ முனிவராகிய சிவபெருமானுக்கு, விசாலமான கைகள் பன்னிரண்டு, செம்மையான முகங்கள் மூன்று என்று தோற்றம் அளித்த முதிர்ந்த ஞானத்தையுடைய முருகனாகிய பிள்ளையும் உண்டானது அல்லவா, நீ செய்தவல்லமை?

ககனம்—ஆகாசம்; இங்கே மேல் உலகங்களில் தேவலோகத்தை யொழிந்த மற்றவற்றைக் குறித்தது. வான்—தேவலோகம். புவனம்—பூலோகம். அங்கம்—உடல். தடக்கை முந்நான்கும், முகன் இருமூன்றும் என்று நிரல் நிரையாக வைத்து, உம்மையைப் பிரித்துக் கூட்டிப் பொருள் செய்க. தோன்றிய மகன், மூதறிவின் மகன் எனக் கூட்டுக. மகனும் உண்டாயது என்ற உம்மை, மணந்து கொண்டதன்றி ஒரு பிள்ளையும் உண்டாகச் செய்தது என விரிந்து, இறந்தது தழீஇள எச்சவும்மையாயிற்று. வல்லி—கொடி போன்றவளே; விளி. உண்டாயது நீ செய்த வல்லபம் அன்றோ? வல்லபம்-ஆற்றலுள்ளசெயல்.]

அம்பிகையின் செயல் இல்லையேல் சிவபெருமான் எதையும் செய்ய வல்லவர் அல்லர். அப்பெருமாட்டியோடு இணையாவிட்டால் உலகம் அவர் அருளைப் பெற இயலாது. ஆதலின் இவ்வாறு சொன்னார்.

அம்பிகையின் வல்லபத்தால் முருகன் தோன்றினான். ஆதலின் அம்பிகைக்கு, குஹஜன்மபூ, குஹாம்பா என்ற திருநாமங்கள் உண்டாயின.

இது அபிராமி அந்தாதியில் 65-ஆம் பாட்டு.

# இலையும் மலரும்

அன்பர்களுக்குத் தாம் வழிபடும் தெய்வங்களைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் திருப்தி உண்டாவதில்லை. இறைவனுடைய புகழுக்கு எல்லை இல்லை. ஆதலால் புகழ்ந்து முழுமையும் சொல்லிவிட்டேன் என்று யாரா லும் சொல்ல முடியாது. நெடுந் தூரமான ஓரிடத்துக்குப் போகிறவன் நடந்து நடந்து அலுத்துப் போகும் சமயம் வரும். ஆனால் வழிநெடுக உள்ள காட்சிகளும் சோலைகளும் இன்பத்தை அளிப்பனவாக இருந்தால் வழி நடையின் சிரமம் தெரியாது. இந்த வழி எப்போது முடியப்போகிறது என்ற எண்ணமே தோன்றாது. அவ்வாறே இறைவனைப் புகழ்வதனால் வேறொரு பயன் உண்டு என்று எண்ணுபவர் களுக்குத்தான் புகழுவதன் அளவைப் பார்க்கத் தோன் றும். புகழ்வதிலேயே இன்பம் காணுகிறவர்களுக்குப் புகழ் எவ்வளவு நீண்டாலும் சலிப்புத் தட்டாது; புகழுக்கு எல்லை இல்லையே என்று புகழை நிறுத்தமாட்டார்கள்; புகழ்ந்து கொண்டே இருப்பார்கள். அது எல்லை இல்லாமல் நீள நீள அவர்களுடைய இன்பமும் நீண்டுகொண்டே போகும்.

அபிராமிபட்டர் அன்னையின் புகழைப் பாடுவதில் இன்பம் காணுபவர். தாம் புகழ்வதால் அந்தப் பெரு மாட்டிக்குத் தனிச் சிறப்பு உண்டாகும் என்ற எண்ணம் சிறிதளவும் அவருக்கு இல்லை. அதற்கு நேர் மாறாகத் தாம் பாடும் பாடல்களில் உள்ள சொற்கள் யாவுமே பயன் இல்லாதன, பொருள் அற்றன என்று நினைக்கும் அடக்கம் உடையவர். ஆனாலும் அவர் பாடுவதை நிறுத்தவில்லை. பயன் இல்லாத ஒரு காரியத்தைச் செய்யலாமா? தம்

முடைய சொற்கள் பயனற்றவை என்பதை உணர்ந்து அவர் ஏன் பாடுகிறார்? அவரே இந்தப் பாட்டில் காரணம் சொல்ல வருகிறார்.

அம்பிகையைப் புகழவேண்டும், பாடவேண்டும் என்றால் அது எளிய காரியம் அன்று. அவளை நன்றாகத் தெரிந்து கொள்ளும் ஞானம் வேண்டும். அவளுடைய எழிலையும் பராக்கிரமத்தையும் அருட்செயல்களையும் கற்றும் கேட்டும் அறிந்திருக்க வேண்டும். அவற்றைத் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல் வேண்டும்; நல்ல வகையில் பொருளும் அழகும் பொருந்த எடுத்துச் சொல்லும் சொல்லாற்றல் வேண்டும்; இனிய கவிகளாகப் பாடும் நாவன்மை வேண்டும். அபிராமிபட்டர் இந்த இயல்புகளை உடையவர். ஆனால் அவர் தம்மை அப்படிக் கருதவில்லை. தமக்கு எந்த விதமான ஆற்றலும் இல்லை யென்றே சொல்கிறார். பெரியவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அதுவே பெருமைக்கு அடையாளம். அரைகுறையானவர்களே தம்மைத் தாமே வியந்து கொள்வார்கள்.

> ''பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
> அணியுமாம் தன்னை வியந்து''

என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

அபிராமிபட்டர் தம்முடைய தகுதியின்மையைச் சொல்லுகிறார். 'தாயே! உன்னைப் பாடுவதற்கு எவ்வளவோ வகையான ஆற்றல்கள் வேண்டும்; அவற்றில் ஒன்றையும் நான் பெறவில்லை, என்கிறார்.

> வல்லபம் ஒன்று அறியேன்.

ஆற்றல் ஏதும் இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்யத் துணியலாமா? அவர் துணிந்ததற்கு ஏதேனும் ஒரு காரணம் இல்லாமல் போகுமா? ஆற்றல் காரணமாக

இல்லாவிட்டாலும் ஆசை காரணமாக இருக்கலாமே! குழந்தை தாயின்காலைப் பற்றிக்கொண்டு அவள் தோளில் தாவி ஏறலாம் என்று பார்க்கிறது. அதற்குரிய ஆற்றல் அதற்கு இல்லை. ஆனாலும் தாயினிடம் அதற்கு உள்ள ஆர்வம் அதன் உள்ளத்தில் நின்று, தான் செய்ய முடியாத தையும் செய்யத் தூண்டுகிறது. அவ்வாறு அபிராமி பட்டருக்கு ஓர் ஆர்வம் உண்டாகிறது. அதனால் அவர் ஒரு பற்றுக்கோட்டைப் பெறுகிறார். 'நான் சிற்றறிவுடையவன்; சிறிய ஆற்றலுடையவன்; சிறிய கருவிகளை உடையவன். எனக்கு நின்னுடைய திருவடி பற்றுக்கோடாகக் கிடைத்தது. அதைப் பற்றிக் கொண்டேன்' என்கிறார்.

'அன்னையின் திருவடியைப் பற்றிக்கொள்வதற்கு, அது அத்தனை எளிதானதா? உமக்கு அது இருக்கும் இடம் தெரியுமா?' என்று கேட்கிறோம்.

என் அன்னையின் திருவடி எங்கும் இருக்கிறது. அது பரவாத இடம் ஒன்று இல்லை. எல்லா இடங்களிலும் எல்லா உயிர்களிடத்திலும் அது பயின்று விளங்குகிறது. அதை நான் தேடிப் போக வேண்டியதில்லை. அது எங்கும் மலர்ந்த அடி. ஆதலால் பற்றிக்கொண்டேன்' என்கிறார்.

'நீர் பற்றிக்கொள்ளும் அளவுக்கு அது சிறிதாக இருக்குமா? எளிதாக இருக்குமா?'

'அது எங்கும் மலர்ந்து பரவியிருந்தாலும் அன்பினாலே பற்றிக் கொள்ளும் அன்பர்களுக்குத் தளிரைப்போல எளிதாக மென்மையாக விளங்குகிறது.'

அந்த மலர்ந்த அடியாகிய பல்லவத்தை (தளிரை) அவர் பற்றிக்கொண்டார்; இறுகப் பற்றிக்கொண்டார். கையில் இரண்டு மூன்றுபொருள்களைச் சேர்த்துப் பிடித்துக்

கொண்டால் நம் பிடி இறுக்கமாக இராது. எந்தச் சமயத்திலும் ஏதேனும் ஒன்று நழுவி விழுந்து விடும். எதையேனும் ஒன்றை மட்டும் இறுகப் பற்றிக்கொண்டால் நழுவாது.

நாம் இறைவியினிடம் அன்பு கொள்கிறோம். மற்றப் பொருள்களிலும் அன்பு வைக்கிறோம். அதனால் நம்முடைய அன்பு எதிலும் முழுமையாக இல்லை. எதையும் நன்றாக இறுகப் பற்றிக் கொள்வதில்லை. இந்தப் பக்தரோ வேறு எதையும் பற்றாமல் அம்பிகையின் திருவடி மலர் ஒன்றையே இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார். வேறு எந்தப் பற்றும் இவருக்கு இல்லை.

நின் மலர் அடிச் செம்பல்லவம்
அல்லது பற்று ஒன்று இலேன்.

எம்பெருமாட்டியின் திருவடிப்பல்லவம் கையினால் பற்றிக்கொள்வது அன்று; மனத்தினால் பற்றிக்கொள்வது.

“மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாத மேமனம் பாவித்தேன்”

என்பது சுந்தரர் தேவாரம். மனத்தால் பற்றுவதே பற்று. மனம் பற்பல பொருள்களைப் பற்றிக்கொள்ளும் சக்தி உடையது. அந்தப் பற்றை விட்டால்தான் இன்பம் உண்டாகும். “அற்றது பற்றெனில் உற்றது வீடு.”

அம்பிகையின் திருவடியைத் தளிர் என்றார். அது இளமை மாறாதது; பசுமையுடையது; ஈரம் உடையது; குழைந்து விளங்குவது. அன்பர்கள் தம் மனத்தில் அதை வைத்துத் தியானம் செய்தால் மனத்திலுள்ள மாசு நீங்கும்; இன்பம் பெருகும். அலங்காரம் செய்வதற்குத் தளிர்களைப் பயன்படுத்துவார்கள். கண்ட கண்ட குப்பை

களையெல்லாம் நிரப்பிக்கொண்டு அழுக்கு மயமாக இருக்கும் மனத்தை அழகாக வைத்திருக்க வேண்டுமானால் அன்னையின் திருவடித் தளிர்களை அங்கே வைக்கவேண்டும். திருவடிப் பல்லவத்தைப் பற்றுவதாவது, இடைவிடாமல் அதை நினைத்துக் கொண்டிருத்தல்.

'ஆற்றல் சிறிதும் இல்லாத சிறியேன் என் உள்ளத்தில் உன் திருவடியையே பற்றுகக்கொண்டேன்: அதனால் பாடலானேன்' என்கிறார் அபிராமிபட்டர்.

அம்பிகை மென்மையானவள். அவள் திருவடியைத் தளிர் என்றால், அவள் தளிரையுடைய கொடி என்று தானே சொல்லவேண்டும்? அம்பிகை பச்சைப் பசுங் கொடி போன்ற மென்மையை உடையவள். அத்தகைய மெல்லியல் மிகவும் வன்மையுடைய ஒருவரோடு இணைந்து வீற்றிருக்கிறாள். அவருடைய தோள் வலிக்குப் பல உதாரணங்களையா எடுத்துச் சொல்ல வேண்டும்? ஒன்று சொன்னால் போதாதா? மலையையே வில்லாக வளைத்த பெருமான் அவர். திரிபுர சங்காரம் செய்யும் பொருட்டுப் புறப்பட்டபோது பொன்மலையாகிய மேருவையே வளைத்து வில்லாக ஏந்திக்கொண்டார். அவ்வளவு வலிமையை யுடைய சிவபெருமானோடு எப்போதும் வீற்றிருப்பவள் எம் அன்னை:

பசும் பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்!

அவர் கையோ மலையை வளைத்த திண்மையை உடையது: அம்பிகை காலோ மெல்லிய தளிர் போன்றது. மலையின்மேலே கொடி படர்வதில்லையா? அப்படித்தான் சிவபெருமானும் அம்பிகையும் இருக்கிறார்கள்.

"சுடரும் கலைமதி துன்றும்
சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடி"

என்று அபிராமிபட்டரே முன்பு சொல்லியிருக்கிறார்.

அன்னையின் திருவடிப்பல்லவத்தைப் பற்றிக்கொண்டு அன்பினால் அவர் பாடினார். தம் சொற்கள் அவமானவை, பயனற்றவை என்று அவர் உணர்கிறார். பின் ஏன் பாடுகிறார்?

அம்பிகையின் புகழைப் பாட வந்த அன்பர் அவளுடைய திருநாமத்தை இடையிடையே வைத்துப் பாடியிருக்கிறார். அந்தத் திருநாமங்கள் இவராக உண்டாக்கினவை அல்லவே? மற்றச் சொற்கள் பயன் இல்லாமல் இருந்தாலும் அந்தத் திருநாமங்கள் பொருளும் பயனும் உடையன அல்லவா?

'நான் அன்னையைப் புகழ்ந்து துதிப்பதாக எண்ணிப் பாடினேன். நான் கற்பனையால் பாடினவையும் வருணனையாக அமைத்தவையும் பயன் இல்லாத வீண் வார்த்தைகளே. ஆனாலும் நடுநடுவே அம்பிகையின் நாமங்களை வைத்திருப்பதனால் அவற்றையாவது தோத்திரம் என்று சொல்லத்தானே வேண்டும்? இந்தச் சிறிய ஆறுதல் எனக்கு இருக்கிறது' என்கிறார் இவ்வாசிரியர்.

> வினையேன் தொடுத்த
> சொல் அவமாயினும் நின் திருநாமங்கள்
> தோத்திரமே.

'நான் தீவினையை உடையவன். ஆதலால் என்னிடத்தில் நல்லது தோன்றாது. ஏதோ ஆசையால் மாலை தொடுப்பதைப் போலச் சொற்களைத் தொடுத்தேன். பயன் இல்லாத இலைகளைத் தொடுத்ததுபோலத் தொடுத்து விட்டேன்; அவற்றில் மணமும் இல்லை; வண்ணமும் இல்லை; பசுமையும் இல்லை. ஆனால் இடையிடையே உன்னுடைய திருநாமங்களாகிய மலர்களை வைத்துத் தொடுத்திருக்கிறேன். ஆகையால் இது ஒரு வகையில் மாலை என்று சொல்ல வழியுண்டு. இந்த மலர்களுக்குள்ள கௌரவம்

போகாதே! மலரோடு மலர் இருந்தால்தான் மலராக இருக்கும் என்ற வறையரையுண்டா? மலர் இலையோடு சேர்ந்தால் இலையாக மாறிவிடும் என்று சொல்லலாமா? இலையோடு சேர்ந்தாலும் மலர் மலர்தான். ஆதலால் நான் பாடியது துதியாகாவிட்டாலும் உன் நாமங்களாவது தோத்திரமாக விளங்கும் அல்லவா?' என்று கேட்கிறார்.

இறைவியின் திருவடிப்பற்று உள்ளத்திலும் அவள் திருநாமங்கள் நாவிலும் இருப்பதனால் இந்தப் பாடல்கள் சிறந்த பக்தி மணமுடைய மாலை ஆயின. இவர் தம்மை இழித்துக்கொண்டு பேசும் பேச்சிலிருந்தே இந்தத் தகுதி இவருக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

வல்லபம் ஒன் றறி யேன்சிறி
யேன்; நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றென்று
இலேன்; பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்
பாய், வினை யேன்தொடுத்த
சொல்அவம் ஆயினும் நின்திரு
நாமங்கள் தோத்திரமே.

[பசும்பொன் மலையாகிய மேருவை வில்லாகப் பிடித்த சிவபெருமானுடன் கவலையின்றி எழுந்தருளியிருக்கும் தேவி, எந்த வகையான ஆற்றலையும் அடியேன் அறிய மாட்டேன். சிற்றறிவும் சிறிய ஆற்றலும் உடையயான் எங்கும் பரந்துநிற்கும் நின் திருவடியாகிய செம்மையாகிய தளிரை யல்லாமல் வேறு ஒரு பற்றும் இல்லாதவன். தீவினையையுடைய யான் அந்தாதியாகத் தொடுத்த சொற்கள் பொருள் இல்லாத வீண் சொற்களாயினும், இடையிடையே வைத்த நின் திருநாமங்கள் தோத்திரமே ஆகும். (ஆதலின் இதனாலும் பயன் உண்டு.)

வல்லபம்-ஆற்றல். ஒன்றும் அறியேன் என்ற உம்மை தொக்கது. மலர் அடி-மலர்ந்த அடி; வினைத்தொகை. பின்னே பல்லவம் என்று கூறலின் இங்கே மலர் போன்ற அடி என்று கொள்ளுதல் சிறப்பன்று. பசும்பொன்-கலப் பில்லாத பொன். பொருப்பு-மலை. வீற்றிருத்தல்-கவலை யின்றி இருத்தல்; தனிச் சிறப்புடன் அமர்ந்திருத்தல் என்றும் கூறலாம்.

வல்லபம் அறியேன், சிறியேன், வினையேன் என்று மூன்று வகையில் தம்மை இழித்துக்கொள்கிறார். தொடுத்த சொல் என்பதனால் பாடலாக அமைத்த சொற்கள் என்று கொள்ளவேண்டும். தொடுத்தலால் பாடலுக்குத் தொடை என்ற பெயர் வந்தது.]

இறைவியின் திருநாமங்களை எந்த வகையில் சொன்னாலும் பயன் உண்டு என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியின் 66—ஆம் பாடல்.

# வித்தும் விளைவும்

மனிதன் வாழும்பொழுது பல இன்ப துன்பங்களை அநுபவிக்கிறன். அவன் செய்யும் செயல்கள் பல. அவற்றில் நல்ல காரியங்களும் இருக்கின்றன; தீய காரியங்களும் இருக்கின்றன. 'எல்லாம் விதியின் படியே நடக்கும்' என்று பல சமயங்களில் சொல்லுகிறேம். எல்லாவற்றுக்கும் மூல காரணம் விதி என்றல், நாம் செய்யும் செயல்களில் நமக்கு என்ன உரிமை இருக்கிறது? நாம் செய்ய வேண்டிய கடமை என்று எதைச்சொல்வது? எல்லாம் விதியின் படி நடக்கின்றன என்றல் நாம் வெறும் யந்திரங்களைப்போல இருப்பவர்களாகிறேம். யந்திரத்துக்குப் புண்ணிய பாவம் ஏது? ஏதும் இல்லை. அதுபோலவே நமக்கும் அவை இல்லாமல் தானே இருக்கவேண்டும்?

விதியைப்பற்றி நினைக்கும்போது இப்படிக் குழப்பம் அடைகிறவர்களும், விதி விதி என்று சொல்லிச் சும்மா இருப்பவர்களும் பலர் இருக்கிறர்கள். அப்படியானல் உண்மைதான் என்ன? விதி என்றும், ஊழ் என்றும் சொல்வது நம்மைக் கட்டுப்படுத்துவது இல்லையா?

இதைப்பற்றிச் சற்று இங்கே ஆராயலாம்.

நம் வாழ்க்கையில் இன்ப துன்பங்களை அநுபவிக்கிறேம்; நன்மை தீமைகளைச் செய்கிறேம். அநுபவம் வேறு, செய்கை வேறு. அநுபவிக்கும்போது போக்தா ஆக இருக்கிறேம்; செய்யும்போது கர்த்தா ஆக இருக்கிறேம். நாம் அநுபவிக்கும் அநுபவத்துக்குக் காரணம் முன்வினை

அல்லது ஊழ். நாம் இப்போது செய்வன, இனி வரும் அநுபவத்துக்கு வித்தாக இருப்பவை. ஒரு மரத்துக்குக் காரணமாக உள்ளது விதை; அந்த விதையிலிருந்து மரம் வளர்கிறது பிறகு அந்த மரத்திலும் விதைகள் உண்டா கின்றன. மரம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த விதை வேறு; அந்த விதையின் விளைவாக வளர்ந்த மரத் தில் உண்டான விதை வேறு. அவ்வாறே இந்தப் பிறவியில் நாம் அநுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாக உள்ளது ஊழ் அல்லது விதி; அதன் விளைவை இப்போது அநுபவிக்கிறோம். அப்படி அநுபவித்துக் கொண்டே புதிய செயல்களைச் செய்கிறோம். அப்படிச் செய்கின்ற செயல்களின் விளைவு பிறகு உண்டாகும்.

இப்போது செய்கின்ற செயல்களுக்குரிய பலன்கள் மூன்று விதம்: அப்பொழுதே உண்டாகும் பயன்; பிறகு இந்த வாழ்நாளுக்குள் உண்டாகும் பயன்; இந்த வாழ்க் கையின் பிறகு அடுத்த பிறவியில் ஏற்படும் பயன். ஒரு முரடனோடு சண்டை செய்கிறோம்; அவனை அடிக்கிறோம்; உடனே நமக்கும் அடிவிழுகிறது. நாயை அடிக்கிறோம்; அது உடனே நம்மைக் கடிக்கிறது. இவை உடனே பயன் கொடுக்கும் செயல்கள். ஒருவன் திருடுகிறான். அதை அப்போது யாரும் கண்டு பிடிக்கவில்லை; போலீஸ்காரர் கள் துப்பறிந்து பிறகு கண்டு பிடிக்கிறார்கள்; சில காலம் கழித்துத் திருடனுக்குத் தண்டனை கிடைக்கிறது. இது சில காலம் கழித்து, இந்தப் பிறவியிலேயே பயனைத் தந்து விடுகிறது. யாரும் அறியாமல் ஒரு பொருளைத் திருடு கிறான் ஒருவன். அந்தத் திருட்டை யாரும் கண்டு பிடிக்க வில்லை. திருடினவன் தண்டனை இல்லாமல் தப்புகிறான். ஆனால் அந்தச் செயலுக்குரிய தண்டனை வரும் பிறவியில் அவனுக்குக் கிடைக்கும்; அதற்குரிய துன்பத்தை அநுப விப்பான்.

ஆகவே, போன பிறவிகளில் செய்த புண்ணிய பாவங் களின் பயன்களை இந்தப் பிறவியில் இன்ப துன்பங்களாக

அநுபவிக்கிறோம். இந்த அநுபவத்துக்குக் காரணமாக நிற்பது விதி. இந்த விதியின்படியே இன்ப துன்பங்கள் அமைகின்றன. விதியின்படி விளைவை உண்டாக்கும் அதிகாரியாக இருக்கிறவன் கடவுள்.

> ''வகுத்தான் வகுத்த வகையல்லால், கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''

என்ற குறள், விதியையும் அதன் விளைவை ஆத்மாக்களுக்கு ஊட்டும் கடவுளையும் பற்றிச் சொல்கிறது.

ஒருவன் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்கிறான்; இறைவனிடம் மிக்க பக்தியுடன் இருக்கிறான். அவனுக்குத் துன்பத்துக்குமேல் துன்பங்களாக வருகின்றன. அவன் நிலையைக் கண்டு நாம் வருந்துகிறோம். 'இவ்வளவு நல்லவனுக்கு இப்படியெல்லாம் வரக்கூடாது. கடவுளுக்குக் கண் இல்லையோ?' என்று இரங்குகிறோம்.

வேறு ஒருவன் மிகவும் கொடியவன்; தீய வழிகளில் பணம் சேர்க்கிறான்; பலருக்குக் கொடுமை புரிகிறான். அவன் வளவாழ்வு பெற்று வாழ்கிறான். பங்களா என்ன, கார் என்ன, இப்படி எல்லாச் சௌகரியங்களும் உடையவனாக விளங்குகிறான். அவனைப் பார்க்கும்போது நமக்கு வயிறு எரிகிறது. 'இந்த அக்கிரமக்காரன் இப்படி வாழ்கிறானே! நல்லதுக்குக் காலம் இல்லை. கடவுளுக்குக் கண் இல்லை' என்று அப்போதும் சொல்கிறோம்.

அவர்கள் ஏன் இப்படி முரண்பாடான நிலையில் இருக்கிறார்கள்? இப்போது அவர்கள் செய்யும் செயல்களை எடை போட்டுப் பார்க்கிறோம். அந்தச் செயல்களுக்கு இப்போதே விளைவு உண்டாகவில்லையே என்று அங்கலாய்க்கிறோம். இப்போது அவர்கள் படும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் அவர்கள் முன் பிறவியில் செய்த நன்மை தீமைகளே. அவை இப்போது நமக்குத் தெரிவதில்லை. இப்போது

அவர்கள் செய்யும் நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் பயன் அடுத்த பிறவிகளில் கிடைக்கும். இப்படி வேறு பிரித்துப் பார்த்தால் அவரவர்கள் அநுபவிக்கிற இன்ப துன்பங் களுக்கு நாம் அறியாத காரணம் ஒன்று இருக்கிறது. தெரியவரும்; அதுதான் விதி.

முன்பிறவிகளில் நல்ல காரியங்கள் செய்தவர்கள் இந்தப் பிறவியில் நன்ருக வாழ்கிருர்கள்; அல்லாதவர்கள் துன்புறுகிருர்கள். "உலகத்தில் ஏழைகளாக இருப்பவர் களே அதிகம்; பணக்காரர் குறைவுதானே? ஏன் இப்படி?" என்று ஒரு கேள்வி எழுகிறது. அதற்குத் திருவள்ளுவர் விடை கூறுகிருர்; "உலகத்தில் நல்ல காரியங்களாகிய தவத்தைச் செய்தவர்கள் குறைவு; செய்யாதவர்களே பலர். அதனுல் இப்படி இருக்கிறது" என்கிருர்.

"இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர், பலர் நோலா தவர்."

[உலகத்தில் பொருளும் வசதியும் இல்லாத மக்கள் பலராக இருக்கிருர்கள்; அப்படி இருப்பதற்குரிய காரணம் முன்பிறவியில் தவம் செய்தவர்கள் சிலரே; தவம் செய்யா தவர்களே பலர்.]

இந்த உண்மையை இப்போதுகூடப் பார்க்கலாம். இப்போதும் உலகத்தில் தீமை செய்கிறவர்கள் பலராகத் தானே இருக்கிருர்கள்? அவர்கள் அடுத்த பிறவியில் தம் செயலுக்கு ஏற்ற துன்பத்தை அநுபவிக்கத்தானே வேண்டும்?

ஆகவே, இப்போது நாம் எத்தகைய துன்பத்தை அநுபவித்தாலும், நன்மையைச் செய்தால் அடுத்த பிறவி யில் நிச்சயமாக நமக்கு இன்ப வாழ்வு உண்டாகும்.

நல்ல செயல்களைச் செய்வது எப்படி? நம்முடைய மனம் தூயதாக இருந்தால் செயல்களும் நல்லவைகளாக

அமையும். மனத்தில் தூய்மை இல்லாவிட்டால் நம் சொல்லிலும் செயலிலும் தீயவையே விளையும். மனம் தூய்மையாக வேண்டுமானால் நல்ல எண்ணங்களையே எண்ணவேண்டும்; உண்மையான பொருளையே சிந்திக்க வேண்டும்,

"அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்பது திருக்குறள். உள்ளத்தூய்மையைச் சத்தியம் காட்டும்; வாய்மை காட்டும். உண்மையைப் பேசுபவன் உண்மையை உணரவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான உண்மை இறைவன். அவன்தான் மெய்யான பொருள், அவனிடம் ஈடுபாடு உண்டானால் பொய்யான பொருளில் மோகமும். அதனால் உண்டாகும் தன்னலமும், அதனால் விளையும் தீய செயல்களும் குறையும். இறைவனிடம் உண்மையான அன்புடையவன் எப்போதும் சத்தியத்தையே விரும்புபவனாக இருப்பான்; எல்லா உயிர்களிடத்திலும் அன்பு கொள்வான்; நல்லகுணங்களுக்கு உறைவிடமாக இருப்பான்.

"இராவணன் சிவபக்தன் அல்லவா? அவன் பொல்லாதவனாக இருந்தானே!" என்ற கேள்வி எழலாம்.

இராவணன் உண்மையான பக்தன் அல்ல. பிறரை அடக்கி ஆள்வதற்கு அந்தப் பக்தியைப் பயன்படுத்திக் கொண்டான். அவன் பெற்ற படைகள் அந்தப் பக்தியால் கிடைத்தன. அவற்றைக் கொண்டு பிறருக்குத் தீங்கு செய்தான். அவன் செய்த தவம், கொலையாளி கையில் கத்திபோல் உதவியது.

உண்மையாக இறைவனிடம் அன்புடையவன், அந்த அன்பு ஏற ஏற மெல்ல மெல்லப் பக்குவம் அடைந்து கனிந்து விடுவான். பக்திக்கு அடையாளம் கனிவு. உள்ளத்தில் கனிவுடையவன் யாருக்கும் தீங்கு நினைக்கமாட்டான்.

மாமரத்தில் காய் இருக்கிறது. அது பச்சையாக இருக்கிறது. கடினமாகவும் இருக்கிறது. கடித்தால் புளிப்பாக இருக்கிறது. அதைப் பறித்தால் பிறந்த இடைத்தை விட்டு வரும்போது துயரக்கண்ணீர் வடிப்பதுபோலப் பால் வடிகிறது.

அந்த மாங்காய் பழுத்து விடுகிறது. அப்போது அதிசயமான மாற்றங்கள் நிகழ்கின்றன. அதன் பச்சை நிறம் மாறிப் பொன் நிறம் உண்டாகி விடுகிறது. அதன் கடினமான தன்மை மாறி நெகிழ்ச்சி ஏற்படுகிறது. அதன் புளிப்புச் சுவை மாறி இனிப்பு உண்டாகிறது. இவை மட்டுமா? முதிர்ந்தவுடன் பற்றற்றவரைப்போல இது காறும் இருந்த மரத்தை விட்டு உதிர்ந்துவிடுகிறது. அதற்குக் கனிவு என்ற பக்குவம் வந்ததனால் உண்டான மாற்றங்கள் இவை.

இவ்வண்ணமே ஒருவனிடம் பக்தி உணர்ச்சியும் அதனால் கனிவும் உண்டாகிவிட்டால் அவனுடைய எண்ணங்களிலே தூய்மை, பேச்சிலே இனிமை, செயல்களிலே பிறர் நலம் காணும் தகைமை இவை உண்டாகிவிடும். அவன் செய்வன எல்லாம் நல்லவகையாக அமையும். அவனால் பலருக்கு நன்மை உண்டாகும். அவனைக் கண்டு பலர் திருந்துவார்கள்.

அவன் இவ்வாறு செய்யும் நல்ல செயல்கள் அவனுக்கு அடுத்த பிறவியில் நல்ல பயனைத் தரும். அவன் வாழ்வு, நிரம்பிய வாழ்வாக அமையும்.

இப்போது நன்றாக வாழ்கிறவர்கள் அவ்வாறு இறைவனை ஏத்தி வழிபட்டவர்கள். அல்லாதவர்கள் முன் பிறவிகளில் பக்தி பண்ணாதவர்கள். இந்தக் கருத்தை அபிராமி பட்டர் சொல்லுகிறார்.

இதோ ஒரு மனிதர். இவருடைய தந்தையார் நல்ல பணக்காரர்; அறம்பல புரிந்தவர். பலர் அவரால் வாழ்வு

பெற்றவர்கள். அவருக்குப்பின் அவருடைய பிள்ளையாகிய இவர் அந்தச் சொத்துக்கு உரியவரானார். ஏதோ வியாபாரம் செய்தார். எதிர் பாராத நஷ்டம் வந்துவிட்டது. ஏழையாகி விட்டார். இவரால் என்ன தானம் செய்ய முடியும்?' அந்தக் குடும்பத்தில் வளர்ந்து வந்த கொடைத் தன்மை, வண்மை குன்றிவிட்டது ஏன்?

இன்னும் ஒருவர் நல்ல குலத்திலே பிறந்தவர். ஆனால் எப்படியோ பொல்லாதவர்களுடன் கூடி ஒழுக்கம் கெட்டுப் போனார். அவர் குலத்தில் குறைவுடையவரானார் ஏன்?

பிறப்பிலே ஏழைகளாகப் பலர் இருக்கிறார்கள். ஒழுக்கம் இல்லாத சூழ்நிலையில் பிறக்கிறார்கள் பலர். நல்ல குலம் கோத்திரத்தில் பிறக்கும் வாய்ப்புப் பலருக்கு இருப்பதில்லை.

ஒருவனுடைய சகோதரன் படித்துப் பெரிய பரீட்சைகளில் எல்லாம் தேர்ச்சி பெற்றுப் புகழ் பெறுகிறான். ஆனால் இவனுக்குப் படிப்பே வருகிறதில்லை. அவன் கலெக்டர் வேலைக்குப் போனால், இவனுக்குப் பில் கலெக்டர் வேலைகூடக் கிடைப்பதில்லை. ஏன்? இப்படியே குணம் குன்றி அலைகிறார்கள் பல பேர். ஏன்? எல்லாவற்றிற்கும் உரிய காரணம் ஒன்று தான். முன்பிறவியில் இவர்கள் புண்ணியம் செய்யவில்லை. எல்லாப் புண்ணியச் செயல்களுக்கும் மேலான புண்ணியச் செயலாகிய பக்தி புரியவில்லை; அன்னையிடம் அன்பு வைத்துப் பக்தராக வாழவில்லை.

அப்படி வாழ்வதற்குச் சிறப்பாக ஏதாவது வேண்டுமா? மலைமேல் ஏறவேண்டுமானால் உடம்பில் பலம் வேண்டும். விலை உயர்ந்த பொருளை வாங்க வேண்டுமானால் பணம் வேண்டும். சாஸ்திரங்களைப் படித்து அறிய வேண்டுமானால் கல்வி வேண்டும். அம்பிகையை வணங்குவதற்கு என்ன வேண்டும்? பலம் இல்லாதவனும் பணம் இல்லாதவனும் கல்வி இல்லாதவனுங்கூடப் பக்தி பண்ணலாம். பணம்

இல்லாத ஏழைக் குசேலர் பக்தி பண்ணினார். பலம் இல்லாத அபலை காரைக்காலம்மையார் பக்தி பண்ணினார். கல்வியில்லாத கண்ணப்பர் பக்தி பண்ணினார்.

அம்பிகையை வழிபடுவதற்காகப் புதிதாக ஒன்றைச் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. சமைத்துச் சாப்பிட அரிசி, பருப்பு, விறகு, அடுப்பு, பாத்திரங்களைத் தந்திருப்பதுபோல, தன்னை வழிபட்டு உய்வதற்கு வேண்டிய கருவிகளை எம்பிராட்டி நமக்குக் கருணையினால் வழங்கியிருக்கிறாள். நமக்கு மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்களையும் வழங்கிப் பக்தியுடன் தன்னை வழிபடும்படி செய்திருக்கிறாள். ஒருகால் அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று நமக்குத் தெரியாதோ என்று எண்ணி, பல பெரியவர்களை உலகில் வாழவைத்து, அவர்களைப் பார்த்தாவது வழிக்கு வரட்டும் என்று அருள் புரிந்திருக்கிறாள்.

நமக்குக் கிடைத்துள்ள மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும் சிறந்தது வாக்கு. மனிதனுக்கு மாத்திரம் கிடைத்திருப்பது அது. உண்ணுவதற்கு நம்மைவிடப் பெரிய வாய்களை யானையும் காண்டாமிருகமும் பெற்றிருந்தாலும் அவற்றை யாரும் வாயுள்ள பிராணி என்று சொல்வதில்லை. அவற்றிற்குப் பேசத் தெரியாது; வாக்கு என்னும் வளம் இல்லாதவை அவை. மனிதனே வாயுள்ள பிராணி; வாக்கினால் சிறப்புப் பெற்றவன். அந்த வாக்கினால் அம்பிகையைத் துதிக்க வேண்டும். பல பெரியோர்கள் தோத்திரங்களை இயற்றித் தந்திருக்கிறார்கள். அவற்றை வாயாரச் சொல்லித் துதிக்கலாம்.

"வார்கழல்வாய் வாழ்த்தவைத்து"

என்று மாணிக்கவாசகரும்,

"வாழ்த்த வாயும்..........தந்த தலைவனை"

என்று திருநாவுக்கரசரும் பாடுகிறார்கள். ஆகவே, வேறு எந்தப் பிராணியும் பெறாத வாக்கினால் நாம் அம்பிகை

யைத் துதி செய்ய வேண்டும்; அவளுடைய தோத்திரங்களைச் சொல்ல வேண்டும்.

இந்த உடம்பு நல்ல காரியங்களைச் செய்வதற்குக் கருவியாக இருக்க வேண்டும். கையால் அம்பிகையைத் தொழுது, காலால் அவள் கோயிலை வலம்வந்து, உடம்பால் அவள்முன் வணங்கி வாழவேண்டும். உடம்பில் உள்ள கருவிகளில் செயல் புரிவதற்கு முன் நிற்பது கை. மனிதனுக்குத்தான் கைகள் அமைந்திருக்கின்றன. குரங்குக்குக் கை இருந்தாலும் அது பாதி கையாகவும் பாதி காலாகவும் பயன்படுவது. மனிதன் கைதான் வேறு அங்கங்களைப் போல் இல்லாமல் தனிச் சிறப்போடு இருக்கிறது. அந்தக் கைகளால் அம்பிகையைத் தொழ வேண்டும். இது காயத்தால் செய்யும் வழிபாடு.

''கைகாள் கூப்பித் தொழீர்''

என்று அப்பர் பாடுவார்.

''தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி''

என்பது திருவாசகம்.

இந்த இரண்டுக்கும் மேற்பட்ட செயல் ஒன்று இருக்கிறது; அது மனத்தால் செய்வது. புறத்திலே செய்கிற வழிபாடுகள் யாவும் உள்முகமாகச் செய்வதற்கு உரிய பயிற்சிகளே. அம்பிகையின் திருவுருவத்தைக் கண்ணாரக் காண்கிறோம். அதோடு நின்றால் போதாது. அந்த வடிவத்தை உள்ளத்திலே அமைத்துத் தியானிக்க வேண்டும். புறக்கண்ணினால் கண்ட அளவிலே நின்றுவிட்டால் பயன் இல்லை.

இனிப்புப் பண்டங்கள் விற்கும் கடைக்கு ஓர் ஏழை போகிறான். அங்கே பல்வேறு வண்ணமும் வடிவும் கொண்ட தின்பண்டங்களை அழகாக அடுக்கி வைத்திருக்

கிறார்கள். அவன் அவற்றை நின்று பார்க்கிறான். அவன் வாயில் நீர் ஊறுகிறது. அவனிடம் கையில் காசு இல்லை. பாவம்! அரை மணி பார்த்தபடியே நின்று விட்டுப் போகிறான். அந்த இனிப்புப் பண்டங்களை வரிசையாக அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்தால் அழகாக இருக்கிறது. அந்த அழகைப் பார்த்துவிட்டுப் போனால் போதுமா? பணம் கொடுத்து வாங்கி உட்கொள்வதற்குத் தானே அவற்றை வைத்திருக்கிறார்கள்?

அம்பிகையின் சந்நிதிக்குச் சென்று அவளுடைய அழகிய உருவத்தைக் கண்டு மகிழ்கிறோம். அதோடு நின்றுவிட்டால் பட்சணக்கடைக்கு வந்த ஏழையைப் போல ஆவோம். அம்பிகையை நாம் உட்கொள்ள வேண்டும்; அப்பெருமாட்டின் திவ்ய ரூபத்தை உள்முகமாகக் கண்டு மகிழ வேண்டும்.

"அந்தர்முக ஸமாராத்யா பஹிர்முகஸுதுர்லபா" என்று லலிதா சகசிர நாமத்தில் வருகிறது. உள்முகமாகப் பார்க்கிறவர்கள் அம்பிகையின் திருவருளைப் பெறுகிறார்கள்.

உடம்பால் வழிபட்டு, வாக்கினால் தோத்திரம் செய்து, விக்கிரங்களை வைத்துப் பூஜை செய்து உபாசனை பண்ணுகிற செயல்கள் யாவும் உள்முகமாக அன்னையைத் தரிசிப்பதற்கு வழியாக உதவுபவை. திருக்கோயிலுக்குச் சென்று அம்பிகையை வலம் வந்து, தரிசித்து, வணங்கி வாழ்த்துவது சரியை என்னும் வழிபாட்டு முறையைச் சார்ந்தது. நாமே பூஜைசெய்வது கிரியை. இந்த இரண்டும் முதல் இரண்டு வகுப்புகளைப் போன்றவை. அவற்றிற்கு மேல் மூன்றாவது வகுப்பாக இருப்பது யோகம்; மனத்தால் தியானித்து ஒன்றுபடுவது. அந்த வகுப்புக்குப் பிறகு ஞானம் என்ற பெரிய வகுப்பு இருக்கிறது. கீழுள்ள மூன்று வகுப்புக்களிலும் முறையாகத் தேர்ச்சி பெற்றவர்கள்

நான்காவது வகுப்புக்கு வரலாம். அப்போது தெளிவு பிறக்கும். அம்பிகையின் முழுக்கருணைக்கும் ஆளாகலாம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இந்த நான்கையும் நான்கு பாதங்கள் என்றும், நான்கு படிகள் என்றும் சொல்வார்கள். இவை அரும்பு, மலர், காய் கனியைப் போல்வன.

> ''விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
> அரும்புமலர் காய்கனிபோல் அன்ருே பராபரமே''

என்று தாயுமானவர் பாடுகிருர்.

ஆகவே, மூன்ருவது கரணமாகிய மனத்தினுல் அம்பிகையின் அற்புத வடிவத்தைத் தியானம் செய்து பழக வேண்டும். அப்படித் தியானம் செய்வதற்காகவே அழகிய வடிவத்துடன் எழுந்தருளியிருக்கிருள் தேவி. அவள் வடிவம் ஜோதிமயமானது; மின்னலைப்போல் ஒளி வீசுவது. அதை ஒரு கணத்தில் எல்லாவற்றையும் மறந்து தியானித்தாலே மற்ற எதனுலும் கிடைக்காத இன்பம் கிடைக்கும். அதற்கும் பலன் உண்டு.

இவ்வாறு வாயினுல் துதித்து, கையினுல் தொழுது, மின்னல்போன்ற ஒளியையுடைய அப்பெருமாட்டியின் திருவடிவத்தை ஒரு கணமாவது மனத்தில் வைத்துத் தியானித்தாலும் இன்பம் உண்டாகும்; அதன் பயனுக அடுத்த பிறவியில் நல்ல வளவாழ்வு கிடைக்கும்.

இப்பிறவியிலே வண்மை, குலம், கோத்திரம், குணம் குன்றி வறுமையை அடைந்து உழல்கிறவர்கள், போன பிறவியில் அம்பிகையை வழிபடாதவர்கள். அதனுல்தான் இப்படி அலைகிருர்கள். அவர்களின் வறிய நிலையே, சென்ற பிறவியை எத்துக்காட்டும் கண்ணுடி என்றுகூடச் சொல்லலாம்.

இந்தக் கருத்தை அபிராமி அந்தாதியில் சொல்கிருர் அருளாளராகிய அபிராமிபட்டர்.

தோத்திரம் செய்து தொழுது, மின்
போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை
யாதவர், வண் மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன் றி
நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழ
லா நிற்பர் பார்எங்குமே.

[தேவி, நின்னே வாயால் துதி செய்து, கையால் தொழுது, மின்னலைப் போலச் சுடர்விடும் நின் திருமேனித் தோற்றத்தை ஒரு கணப் போதாவது மனத்தில் இருத்தித் தியானம் செய்யாதவர், கொடைத் தன்மை, குடிப் பிறப்பு, கோத்திரம், கல்வி, நல்ல குணம் முதலியவற்றில் குறைபாடு உடையவராகி, உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திக்கொண்டு குடிசை தோறும் பிச்சைக்காகத் திரிவார்கள்.

ஒரு மாத்திரைப்போது—இமையை இமைக்கும்நேரம். வண்மை-கொடுக்கும் இயல்பு. குலம்-ஒழுக்கமுடைய குடிப்பிறப்பு. கோத்திரம்-பெரியவர்கள் வழிவருதல். குடில்கள்-குடிசைகள். பலிக்கு-பிச்சைக்கு.]

தொழுது என்று கையிஞல் தொழுவதைச் சொன்ஞலும் உபலட்சணத்தால் தலையிஞல் வணங்குவது, காலால் வலம் செய்வது, உடம்பிஞல் நிலத்தில் பணிந்து வணங்குவது முதலிய உடம்போடு தொடர்புடைய எல்லாவற்றையும் கொள்ளவேண்டும்.

அம்பிகை மின் போலும் தோற்றமுடையவள் என்பதை, ''மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி'' (1).

"மின்னுயிரம் ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற அன்னுள்" (55) என்று முன்னே உள்ள பாடல்களிலும் சொன்னுர். ஒரு மாத்திரைப் போது தியானித்தாலும் பயனுண்டு என்பதை, "பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில், இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ, குடரும் கொழுவும் குருதியும் தோயும் 'குரம்பையிலே" (48)என்பதிலும் சொல்லியிருக் கிருர்.

பிறந்தபோது பிறந்த குடியின் சிறப்பினுல் வண்மை முதலியவை இருந்தாலும், நாளடைவில் அவை குன்றி விடும் என்று பொருள் பண்ணும்படி அமைந்திருக்கிறது 'குன்றி' என்னும் சொல்.

இரப்பவர்களிலும் பல வகை உண்டு. சிலர் எப்போ தாவது இரக்கப் போவார்கள். அப்போது அவர்களுக்குக் கிடைக்கும் பொருளே வைத்துக்கொண்டு பல நாளேக்கு வாழ்வார்கள். அப்படி இன்றி அன்றன்று கிடைப்பது அன்றன்றைக்கு மட்டும் போதும் போதாததுமாக இருந் தால் அவர் நிலே மிகவும் இரங்குவதற்குரியது.

சிலர் பணக்காரர்கள் வீட்டுக்கு நன்ருக உடுத்துக் கொண்டு போவார்கள். யாரோ நண்பர்களென்று எண்ணிக் காவல்காரன் உள்ளே விட்டுவிடுவான். உள்ளே போனவர்கள் செல்வரிடம் ஏதாவதுபெற்று வருவார்கள். ஆனுல் கந்தல் துணி தரித்துப் பார்ப்பதற்கே அலங்கோல மாக இருப்பவர்களேப் பணக்காரர்கள் வீட்டுக்குள் விட மாட்டார்கள். ஏழைகள் வாழும் குடிசைக்குப் போய்த் தான் அவர்கள் பிச்சை வாங்க வேண்டும். இது மிகவும் பரிதாபமான நிலே.

தேகதிடம் உள்ளவன் பிச்சை வாங்கும்போது கை நீட்டி வாங்குவான். நோயுள்ளவர்கள், வகையிலுள்ள விரல்கள் குறைந்துபோனவர்கள், கொடுப்பதைக் கையால்

வாங்கமுடியாது; ஏதாவது பாத்திரத்தை ஏந்திக்கொண்டு செல்வார்கள். அவர்கள் நிலையும் இரங்குவதற்குரியது.

சிலர் ஒரே ஊரில் வாழ்ந்து ஏதோ சில இடத்தில் பிச்சையெடுப்பார்கள். ஏதாவது கிடைக்கும். அதோடு நிற்கலாம். சிலருக்குப் போன இடத்தில் சரியானபடி கிடைக்காது. ஊர் ஊராகப் போவார்கள்; நாடு நாடாகத் திரிவார்கள். இது பெரிய அவல நிலை.

அம்பிகையை வணங்காதவர்கள் அடுத்த பிறவியில் இந்த நான்கு விதமான பரிதாப நிலைகளிலும் இருப்பார்களாம். அன்றன்று பிச்சை வாங்கி வயிறுவளர்க்கவேண்டி வரும். அழுக்குடையும் மெலிந்த உடம்பும் இருப்பதனால் குடிசைகளுக்குப் போய்த்தான் பிச்சை வாங்கவேண்டும். நோயாளியாக இருப்பதனால் கையால் வாங்க முடியாமல் பாத்திரத்தில் வாங்க வேண்டியிருக்கும். போன இடத்தில் வேண்டிய அளவு கிடைக்காமல் ஊர் ஊராகச் சுற்றுவார்கள். இந்தக் குறிப்பையெல்லாம்,

நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர்
பார் எங்குமே

என்ற சொற்கள் புலப்படுத்துகின்றன.

இறைவனை வணங்காதவர்கள் வறுமையால் உழல்வதைப் பின்வரும் பழம்பாட்டும் சொல்கிறது.

"கரவோடு நின்றார் கடிமனையில் கையேற்று
இரவோடு நிற்பித்தது எம்மை-அரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்."

இரந்து வாழும் நிலையில் உள்ள ஒருவன் தனக்கு இந்த நிலை உண்டாகியதற்குக் காரணம், போன பிறவியில்

சிவபெருமானிடம் பக்தி பண்ணுத மனம் என்று சொல்வதாக அமைந்தது இந்தப் பாட்டு.

அம்பிகையை முன்பிறவியில் வழிபடாதவர் இப்படி இருப்பார் என்று சொன்னதனுலே, வழிபட்டவர் எப்படி இருப்பார் என்பதையும் உய்த்துணரும்படி வைத்திருக்கிருர் அபிராமிபட்டர். 'முன்பு அம்பிகையை மூன்று கரணங்களாலும் வழிபட்டுப் பக்தி பண்ணினவர்கள் இப்போது வண்மை யுடையவர்களாகி, குலம் கோத்திரச் சிறப்புப் பெற்றவர்களாகி, கல்வியிற் சிறந்தவர்களாக நின்று, நற்குணங்கள் உடையவர்களாகிச் செல்வம் நிரம்பிய வாழ்வைப் பெறுவார்கள்' என்ற கருத்தும் இதனுல் பெறப்படும்.

இது அபிராமி அந்தாதியில் 67-ஆவது பாடல்.

# அடியார் பெறும் செல்வம்

அம்பிகையை வணங்காதவர்கள் அடுத்த பிறப்பில் வறுமையினால் நலிவர் என்று சொன்ன அபிராமிபட்டர், அதன் மறுதலையான கருத்தை அடுத்த பாட்டில் சொல்ல வருகிறார்; அன்னையின் திருவடியை வழிபடும் அடியார்கள் எல்லா வகைச் செல்வத்தையும் அடைவார்கள் என்கிறார்.

அம்பிகை எத்தகையவள் என்பதை முதலில் சொல்கிறார், அம்பிகையின் பெருமையை வெவ்வேறு வகையில் சொல்லிச் சொல்லி இன்புறும் பேரன்பர் ஆதலால் இப்போது ஒரு புதிய கருத்தைச் சொல்கிறார். அம்பிகையின் அருள் இல்லாவிட்டால் உலகத்தில் ஏதும் நடை பெறாது. உலகம் என்ன? எந்த இடத்திலும் இயக்கமே இராது. தேவர்கள் தம் தொழிலைச் செய்ய இயலாது. பிரம்மாதி மும்மூர்த்திகளும் படைப்பு முதலிய தொழில்களைச் செய்ய முடியாது. அவரவர்கள் தம் தம் தொழிலைச் செய்வதற்குரிய சக்தியாக, ஆற்றலாக உள்நின்று அவர்களை இயங்கச் செய்கிறவள் எம்பிராட்டி. சிவபெருமானே அவள் இணையாவிட்டால் ஒன்றும் செய்யமாட்டாமல் கிடப்பவரல்லவா? ''சிவமெனும்பொருளும் ஆதிசக்தியோடு சேரின் எத்தொழிலும் வல்லதாம். அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதாம்'' என்று சௌந்தர்யலஹரி எடுத்த எடுப்பில் இந்த உண்மையைச் சொல்லிக் கொண்டுதானே அம்பிகையிடம் புகுகிறது?

தேவர்கள் இருக்கட்டும். ஜடமயமாக இருக்கும் பிரபஞ்சம் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலானது. இந்தப்

பிரபஞ்சம் சுழலுவதே அம்பிகையின் மாபெரும் சக்தியினால்தான். பஞ்ச பூதங்களுக்கும் உள்ள குணங்களைத் தன்மாத்திரைகள் என்று சொல்வார்கள். தன்மாத்திரைகளைப் புலன்கள் என்று தமிழிற் சொல்வார்கள். பஞ்ச பூதங்களிலும் தன்மாத்திரைகள் பொருந்தியிருக்கின்றன.

ஆகாயத்தில் ஒலியாகிய தன்மாத்திரை இருக்கிறது. காற்றில் ஒலியும் ஊறுகிய பரிசமும் இணைந்திருக்கின்றன. கனலாகிய தேயுவில் ஒலியும் பரிசமும் ஒளியும் உள்ளன. புனலாகிய அப்புவில் ஒலியும் பரிசமும் ஒளியும் சுவையும் ஆகிய நான்கு தன்மாத்திரைகளும் பொருந்தியிருக்கின்றன. பிருதுவியில் அந்த நான்கோடு கந்தமாகிய தன்மாத்திரையும் சேர்ந்துள்ளது. இந்தக் கருத்தை மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலில் சொல்கிறார்.

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

ஒரு செல்வர் பெரிய மாளிகை கட்டினார். விசிறிகளும் விளக்குகளும் வெந்நீர் உண்டாக்கும் சாதனங்களும் குளிர் பதனக் கருவிகளும் வாங்கிவைத்தார். எல்லாக் கருவிகளும் மிகவும் உயர்ந்த ரகமானவை. மாளிகை கட்டி முடிந்து எல்லாக் கருவிகளையும் பொருத்திவிட்டார். ஆனால் மின்சார இணைப்புக் கிடைக்கவில்லை. விசிறி ஓடாமல் இருக்கிறது; விளக்கு எரியாமல் இருக்கிறது; வெந்நீர் உண்டாக்கும் கருவி இயங்கவில்லை; நீரை ஏற்றும் குழாய் வேலை செய்யவில்லை; குளிர்பதனக் கருவியில் குளிர்ச்சி உண்டாகவில்லை. ஒளியைத் தரக் குண்டு விளக்கும் தண்டு விளக்குமாக நிறைய இருந்தன. காற்றைப் பரப்பும் விசிறிகள் அழகழகாகத் தொங்கின. ஒவ்வொரு கருவியும் வெவ்வேறு

வடிவத்தை உடையது. ஒவ்வொன்றும் வெவ்வேறு அமைப்புகளை உடையது. என்றாலும் இவை யாவும் இயங்க வேண்டுமானால் மின்சாரசக்தி இவற்றில் புகுந்து இயக்க வேண்டும். பார்ப்பதற்கு விசிறி குறையற்ற வடிவை உடையதாக இருந்தாலும் அந்த விசிறியை விசிறி யாக இயங்கச் செய்வது மின்சார சக்திதான். விளக்கை விளக்காக ஒளிவிடச் செய்வதும் அதுவே. மின்சார சக்தி ஒவ்வொரு கருவியிலும் புகுந்துகொண்டு அந்த அந்த அமைப்புக்கு ஏற்ற விளைவை உண்டாக்குகிறது.

இந்த உலகம் முழுவதும் பஞ்சபூதங்களின் கலப்பு. அந்த அந்தப் பூதத்துக்குரிய குணம் உண்டு. அந்தக் குணம் இல்லாவிட்டால் பூதமே இல்லை. உடம்பில் உயிர் இல்லா விட்டால் உடம்புக்கு மதிப்பு ஏது? மின்சக்தி வெவ்வேறு கருவிகளுக்குள் புகுந்து வெவ்வேறு விளைவை உண்டாக்கு கிறது போல அன்னையாகிய சக்தி மிகவும் நுட்பமான வடிவில் பஞ்சபூதங்களுக்குள் புகுந்து அவற்றை இயங்கச் செய்கிறாள். மணம் இல்லாவிட்டால் நிலம் இல்லை. அதற் கென்று அமைந்த தன்மாத்திரை அது. அந்தத் தன்மாத் திரை அதனிடம் பொருந்த வேண்டுமானால் அம்பிகையா கிய சக்தி அதனுள் இணைய வேண்டும். இப்படி ஒவ்வொரு பூதத்திலும் சேர்ந்து சேர்ந்து தன்மாத்திரைகளை இணையும் படி செய்து பூதங்கள் தங்கள் வேலைகளை முறையாக நடத்தும்படி செய்கிறாள். அவள் தொடர்பு இல்லாவிட் டால் பூதங்கள் செயற்படுவதில்லை; தன்மாத்திரைகள் அவற்றோடு இணைவதில்லை.

இந்தக் கருத்தை அபிராமி பட்டர் சொல்கிறார்.

பாரும் புனலும் கனலும் வெங் காலும்
 படர் விசும்பும்
ஊறும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
 சேரும் தலைவி.

[பிருதிவியும் அப்புவும் தேயுவும் வேகமாக வீசுகின்ற வாயுவும் எங்கும் பரந்திருக்கும் ஆகாசமும் தம்மிடத்தில் பரவி இருக்கும் மணம், சுவை, ஒளி, பரிசம், ஒலி என்னும் ஐந்து தன்மாத்திரைகளோடு ஒன்றுபடும்படியாக அவற்றோடு சேர்ந்திருக்கும் பரமேசுவரி.

வெங்கால்—வேகமாகிய காற்று; இங்கே வெம்மை வேகத்தைக் குறித்தது; சண்டமாருதம் என்பது போல. படர் விசும்பு—எங்கும் பரவியிருக்கிற ஆகாசம். ஆகாசம் என்னும் பூதம் எல்லாப் பூதங்களையும் தனக்குள் அடக்கிக் கொண்டு வியாபகமாய் இருப்பதனால் 'படர் விசும்பு' என்றார். ஊரும்—பரந்திருக்கிற. முருகு—மணம். ஊறு—பரிசம். ஒன்றுபட—பூதங்களில் இந்தத் தன்மாத்திரைகள் இணையும்படி. தலைவி—எல்லாவற்றிற்கும் மூலகாரணமான முதல்வி.]

இப்படிப் பூதங்களுக்குரிய தன்மாத்திரைகளைச் சேர வைத்து அங்கங்கே பொருந்தியிருக்கும் நிலை மிகவும் நுட்பமானது. அதை யாவரும் அறிந்து கொள்ள இயலாது.

உயிர்க் கூட்டங்கள் சர்வ சூட்சுமமாக உள்ள தன்னை அறிந்து கொள்ள வேண்டுமென்ற கருணையால் அம்பிகை அழகான வடிவங்களை எடுத்துக்கொண்டு அடியார்களுக்குக் காட்சி தருகிறாள். தலந்தோறும் வெவ்வேறு வடிவமும் திருநாமமும் கொண்டு எழுந்தருளியிருக்கிறாள். எல்லாத் தலங்களிலும் சிறந்ததாகிய தில்லையில் சிவகாம சுந்தரி என்ற திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கிறாள். 'தில்லை யூரர்தம் பாகத்து உமை' என்று காப்புச் செய்யுளில் அந்த அம்பிகையைச் சுட்டினார் ஆசிரியர். இப்போது அந்தச் சிவகாமசுந்தரியைக் குறிக்கிறார்.

பூதங்களோடு தன்மாத்திரைகள் இணையும்படி செய்யும் மூல சக்தியாகிய அன்னை யாவரும் தரிசித்து உய்யும்படி

சிவகாமசுந்தரியாக எழுந்தருளியிருக்கிருள் என்று தோன்றும்படி, 'ஒன்றுபடச் சேரும் தலைவி சிவகாமசுந்தரி' என்று இணைத்துச் சொல்கிருர்.

சிவபெருமானிடத்தில் அன்புள்ள அழகி என்றும், சிவபெருமானுடைய காதலுக்கு இடமான அழகி என்றும் அந்தத் திருநாமத்துக்குப் பொருள் கூறலாம். அம்பிகை அழகிய வடிவம் கொண்டு அடியார்கள் உள்ளத்திலே தியானம் செய்வதற்குரிய நிலையில் எழுந்தருளியிருக்கிருள்.

நுட்பமான நிலையில் எல்லாவற்றையும் இயக்கும் மூலசக்தியாகவும், திட்பமான நிலையில் சிவகாம சுந்தரியாகவும் எழுந்தருளியிருக்கும் அம்மை, பக்தர்கள் அடைக்கலம் புகும் திருவடிகளை உடையவள். அந்த அடிகள் சிறியவை; சீறடிகள். அந்த அடியைச் சார்வது அடியார்கள் இயல்பு. அடியைச் சார்வதனுல்தான் அடியார்கள் என்ற பெயரைப் பெற்ருர்கள். அடியைச் சார்வது என்பது அந்தத் திருவடியைக் கண்ணுல் தரிசித்து, கையால் தொழுது, உடம்பால் வணங்கி, வாயால் புகழ்ந்து, மனத்தால் தியானிப்பது. மனத்தால் தியானிப்பதே தலைமையானது. "மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்" என்பதன் உரையில், 'சேர்தலாவது இடைவிடாது தியானித்தல்' என்று பரிமேலழகர் எழுதுகிருர். ஆகவே எம்பெருமாட்டியின் திருவடிகளைத் தரிசிப்பதோடு நில்லாமல் அவற்றை உள்ளே வைத்துத் தியானிக்க வேண்டும். அவ்வாறு உள்முகமாகத் தியானம் செய்வதுதான் தவம். அந்தத் தவம் உடையவர்கள் எல்லா விதமான பேறுகளையும் பெறுவார்கள்.

சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத
தனம் இல்லையே.

[சிவகாம சுந்தரியின் சிறிய திருவடிகளைச் சாரும் தவம் உடைய பக்தர்கள் தமக்கு உரிமையாகப் பெருத செல்வம் ஏதும் இல்லை.

சீறடி=சிறுஅடி. சிறிய அடியைச் சார்வதுவே தவம். அந்தத் தவத்தால் வாராதது ஏதும் இல்லை.]

''வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

என்பது திருக்குறள். தவத்தினல் நாம் விரும்பும் எல்லா வற்றையும் பெறலாம். அந்தத் தவம் எது? அன்னையின் திருவடியைச் சார்ந்து அடியாராகும் செயல்தான்.

இதற்கு வேறு ஒரு வகையிலும் பொருள் சொல்லலாம்; ''சீறடியைச் சாருவதற்கு ஏற்ற தவமுடையவர்கள்'' என்றும் பொருள் கொள்ளலாம். முன்பு தவம் செய்திருந்தால்தான் அம்பிகையின் அடியைச் சாரும் நிலை உண்டாகும். ''யானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்'' என்று மாணிக்கவாசகர் கூறுவது காண்க. ''கன்னியைக் காணும்அன்பு, பூணுதற் கெண்ணிய எண்ணமன்றே முன்செய் புண்ணியமே'' (40) என்றும், ''புண்ணியம் செய்தனமே........சென்னியின்மேற் பத்ம பாதம் பதித்திடவே''(41)என்றும் இவ்வாசிரியரே முன்பு பாடியிருக்கிருர். நல்லதவம் செய்தால்தான் அம்பிகைக்கு அடியாராக முடியும். அத்தகைய அடியார்கள் படையாத தனம் இல்லை.

எல்லாச் செல்வத்துக்கும் மேலான செல்வம் மன நிறைவு. ''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'' என்பார் குமர குருபரர். மனத்திலே சாந்தி பெற்ருல் அதைவிடச் செல்வம் வேறில்லை. பக்தர்கள் பெறும் செல்வத்துக்குக் கேடு வருவதில்லை.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்"

என்று சேக்கிழார் கூறுவர். அவர்களைவிடச் செல்வர்கள் யாரும் இல்லை.

'எல்லாவற்றையும் இயக்கும் மூல சக்தியாகிய அன்னை நம் கண் காணச் சிவகாம சுந்தரியாக எழுந்தருளியிருக்கிருள். அவள் திருவடியை வழிபடுகிறவர்களுக்கு எல்லாச் செல்வங்களும் உண்டாகும்' என்பதை இந்தப் பாடலால் தெளியவைக்கிருர் ஆசிரியர்.

பாரும் புனலும் கனலும்வெங்
காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி
ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம்உடை யார்படை
யாத தனம்இல்லையே.

இது அபிராமி அந்தாதியில் 68-ஆவது பாட்டு.

# எல்லாம் தரும்

அன்னையின் திருவடித் தொண்டர்களுக்குக் கிடைக்காத செல்வம் யாதும் இல்லை என்று சொன்ன அபிராமி பட்டர், அவர்கள் பெறும் பேறுகளை விரிவாகச் சொல்ல வருகிறார். எம்பெருமாட்டியின் கடைக்கண் பார்வையைப் பெற்றவர்கள் என்ன என்ன பயனைப் பெறுவார்கள் என்பதை அடுத்த பாட்டில் விரிவாகச் சொல்கிறார்.

அபிராமி அன்னையின் கண்கள் கருணைக் கடலாக விளங்குகின்றன; அருள் தரும் ஊற்றாக அடியார்களுக்கு உதவுபவை அவை. அந்தப் பெருமாட்டியின் கடைக்கண் பார்வை ஒருவர்மீது விழுந்தால் அவரிடத்தில் எல்லாவகையான செல்வங்களும் நிரம்பும். பெருமாட்டியின் கடைக்கண் பார்வையைப் பெறுகிறவர்கள் அவளுடைய அன்பர்களே. மற்றவர்களை அவள் பொதுநோக்கினால் பார்த்து அவரவர்களுக்கேற்ப வினைப் பயன்களைத் தருவாள். உலகம் எல்லாவற்றையும் பரிபாலிக்கின்ற பெருங் கடமையை உடையவள் ஆதலின் அவரவர்களின் வினைக்கு ஏற்றபடி பயனை நல்கிப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றவள் அன்னை. ஒரு வீட்டிலுள்ள தாய் தன்னுடைய குழந்தைகள் எல்லோருக்கும் வேண்டியவற்றைக்கொடுத்துப் பாதுகாப்பாள். ஆனாலும் அவர்களுக்குள்ளே யாராவது செல்லக் குழந்தையாயிருந்தால் அடிக்கடி அந்தக் குழந்தையின்மேல் தன்னுடைய கடைக்கண் பார்வையை மேவ விடுவாள். மற்றக் குழந்தைகளுக்குச் செய்யும் உபசாரங்களைவிட அதிகமான உபசாரத்தை அந்தக் குழந்தைக்குச் செய்வாள். அதுபோல், எம்பெருமாட்டி பொதுவாக எல்லா உயிர்க் கூட்டங்களுக்கும் வேண்டிய போகங்களைத்

தந்தாலும், தன்னுடைய அன்பர்களுக்குச் சிறப்பான நலன்களை வாரி வாரி வழங்குவாள்.

இது பட்சபாதம் ஆகாதோ என்ருல், அவரவர்களது பக்குவத்திற்கு ஏற்றபடி அருள் செய்தல் அம்பிகையின் இயல்பு. எல்லோருக்கும் ஒரு நிகரான பலனைத் தந்தாலும் அவர்கள் அவற்றை அநுபவிக்க இயலாது. தவம் இருந்தால்தான் நல்ல பயனைப்பெற்று அநுபவிக்க முடியும். எம் பெருமாட்டியின் திருவருளைப் பெறுவதற்கு அன்பு செய்வதே பெரிய தவம். ஒரு பையன் நன்ருகப் படித்து நன்ருக விடை எழுதுகிருன். அந்தப் பள்ளி ஆசிரியர் அவனுக்கு அதிக மார்க் தருகிருர். அவர் பட்சபாதம் உடையவர் என்று சொல்வது முறை அன்று

அம்பிகை சகல செளபாக்கியங்களையும் வாரி வாரி வழங்குவதற்குக் காத்திருக்கிருள். ஆனல் அவற்றைப் பெறுவதற்கு உரிய பக்குவம் இல்லாமல் நாம் திண்டாடுகிருேம். எல்லாப் பேறுகளையும் பெறவேண்டுமென்ற ஆசைமட்டும் இருந்தால் போதாது. அதற்கேற்ற உழைப்பு வேண்டும். சாதனம் இன்றி ஒன்றைச்சாதிப்பார் உலகில் இல்லை. முயற்சிக்கு ஏற்ற பயன்தான் கிடைக்கும் செல்வம், கல்வி முதலியவற்றைப் பெற வேண்டுமானல் செல்வர்களையும், கல்விமான்களையும் அடைதல் மட்டும் போதாது. செல்வர்கள் செல்வம் தந்தாலும் அதனைப் பெற்று அநுபவிப்பதற்கு அன்னையின் திருவருள் வேண்டும். கல்வி உடையார் கல்வி தந்தாலும் அதனை வாங்கிக் கொள்வதற்குரிய அறிவு நமக்கு வேண்டும். உலகம் முழுவதும் பல வகையான போக போக்கியங்கள் நிரம்பியிருக்கின்றன. ஆனல் எல்லாவற்றையும் எல்லோரும் பெறுவதில்லை. மிகவும் பக்கத்தில் இருக்கிற பொருள்கூடப் பலருக்குப் பயன்படுவதில்லை. நெடுந்தூரத்திலிருந்து வந்தவர்களுக்கு அவை பயன்படுகின்றன. இத்தகைய விசித்திரம் அவரவர்கள் செய்த வினையின் பயனுக உண்டாகிறது. எம்பெருமாட்டியின் அன்புக்குப் பாத்திரமாகி

அவளுடைய அருட்பார்வைக்கு ஆளான அன்பர்கள் முன்பே தவம் செய்திருக்க வேண்டும். அந்தத் தவத்தின் பயனாக அன்னையின் கடைக்கண் பார்வையைப் பெறுகிறார்கள். அந்தப் பார்வையின் விளைவே இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் பெறும் பேறுகள். என்ன என்ன பேறுகள் பெறுவார்கள் என்பதை ஒருவாறு விரித்துச் சொல்கிறார் அபிராமி பட்டர்.

இந்த உலகத்தில் வாழ வேண்டுமானால் பொருள் இன்றியமையாதது.

"பொருளிலார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு"

என்பார் வள்ளுவர். அபிராமியின் கடைக்கண் பார்வை பெற்ற அன்பர்கள் இந்த உலகத்தில் நிரம்பிய செல்வத்தைப் பெறுவார்கள்.

'இம்மையே தரும் சோறும் கூறையும்"

என்று சுந்தரமூர்த்திநாயனார் சொல்வார்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்"

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

'பக்தி பண்ணினால் மேலுலகத்தில்தான் இன்பம் உண்டாகும். இங்கே எல்லாம் ஒழிந்து நிற்க வேண்டும்' என்று சிலர் பேசுவார்கள். அது தவறான எண்ணம். இறைவனிடம் உண்டாகும் பக்தியினால் மனம் பண்பட்டதாகி விடும். அதனால் எல்லோரும் அவர்களிடத்தில் அன்பாக இருப்பார்கள். அதன் விளைவாகப் பல வகை நன்மைகள் கிடைக்கும். ஆகவே, பக்தி உடையவர்கள் இம்மை வாழ்விலும் நல்ல இன்பங்களைப் பெறுவார்கள்.

அபிராமியின் கடைக்கண் இன்ன இன்ன பேறுகளைத் தரும் என்று சொல்ல வந்த அபிராமிபட்டர் முதல் முதலாக,

தனம் தரும்

என்கிறார். இந்த உலக வாழ்வுக்கு இன்றியமையாத செல்வத்தை எம்பெருமாட்டியின் கடைக்கண் பார்வையினால் பெறலாம். முனிவர்களுக்கும் இந்த உலகத்தில் செய்ய வேண்டிய கடமைகளுக்கும் செல்வம் இன்றியமையாததாக இருக்கிறது. ''முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்'' என்று திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் பாடுகிறார். ஆதலால் இவ்வுலக வாழ்வுக்கு அடிநிலைபோல இருப்பது செல்வம். அதை அபிராமி அன்னையின் அன்பர்கள் முதலில் பெறுவார்கள்.

செல்வம் மாத்திரம் இருந்தால் போதாது. அதனை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டுமானால் அறிவு வேண்டும். ஆகவே அபிராமியின் கடைக்கண்கள் செல்வம் தருவதோடுகூடக் கல்வியையும் தரும். வறுமை உடையவனுக்குக் கல்வியில் ஊற்றம் இராது.

''கல்வியை, நிச்ச நிரப்புக்கொன் றுங்கு''

என்று வள்ளுவர் சொல்வார். ஆதலால் முதலில் செல்வத்தைத் தந்து, வறுமையினால் துன்பம் இல்லாத நிலையைப் பெற்றவர் பின்பு கல்வியினாலே சிறக்கும் திறத்தை அடைவதற்கும் வழி வகுக்கும், அன்னையின் கடைக்கண்கள்.

கல்வி தரும்.

செல்வத்தைப் பெற்று, கல்வியையும் பெற்றவர்கள் மனத்தில் நிறைவு பெறுவார்கள். செல்வம் இல்லாவிட்டால் அது வேண்டும், இது வேண்டும் என்ற ஆசை உண்டாகும். கல்வி இல்லாவிட்டாலோ எந்தத் துன்பம் வந்தாலும் தளர்ச்சி உண்டாகும். செல்வமும், கல்வியும் ஒருங்கே பெற்றவர்கள் தளர்வு இல்லாதவர்களாவார்கள். அம்பிகையே சிறிதும் தளர்வு இல்லாத மனப்பாங்கைத் தந்து அருள்வாள்.

## ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்

மனிதனுக்கு இன்பம் வருவது பல பொருள்களாலே என்று இருந்தாலும் அந்த இன்ப உணர்வை அநுபவிப்பது மனம். மனம் செயல்படவில்லை யென்ருல் இன்பத்திற்குரிய பொருள்கள் எத்தனை இருந்தாலும் பயன் உண்டாகாது. தளர்கின்ற மனம் உடையவனுக்குச் சுற்றத்தார் இருந்தாலும் செல்வம் இருந்தாலும் கல்வி இருந்தாலும் எல்லாம் சமயத்தில் பயன்படாமல் ஒழியும். திண்ணிய நெஞ்சம் உடையவர்கள் எதற்கும் அஞ்சாமல் உலக வாழ்க்கையில் இன்பத்தை அடைவார்கள். வருகிற துன்பத்திற்கு அஞ்சி மனம் தளர்ந்தவர்களுக்கு வாழ்க்கைக்குரிய வசதிகள் இருந்தாலும் இன்பம் உண்டாகாது. இடும்பை வந்தால் துன்புறுவார்கள். திண்ணிய நெஞ்சம் உடையவனுக்கு மேலும் மேலும் இடும்பை வரும்போது அந்த இடும்பையே இடும்பைப்படும் அல்லாமல் அவன் இடும்பைப்படமாட்டான்.

> ''இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் இடும்பைக்கு
> இடும்பைப் படாஅ தவர்''

என்பது திருக்குறள். அன்னையின் திருவருளால் மனத்திண்மை உண்டாகிவிட்டால் உலகத்தில் என்றும் மாருத இன்ப வாழ்வு கிடைக்கும். நினைத்தவற்றை அடைகின்ற உயர்ந்த நிலை வரும்.

> ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்''

என்று வள்ளுவர் கூறுவர். திண்ணியராகப் பெறுவதற்கு வழி அன்னையின் அன்பு. ஆதலால் அன்னையின் கடைக்கண் பார்வை அவளுடைய அன்பர்களிடத்திலே ஒரு நாளும் தளர்வறியாத திண்ணிய மனத்தைத் தரும்.

அன்னையின் திருவருளில் ஈடுபட்டவர்களுக்கு வடிவழகு கூடச் சித்திக்கும் என்று சொல்கிருர் அபிராமிபட்டர்.

தூய்மையான உள்ளமும் தூய்மையான பழக்கமும் அவளுடைய அன்பர்களிடத்தில் இருப்பதால் அவர்களுக்கு அழகான வடிவம் உண்டாகும். நெஞ்சில் நிறைவும், எப்போதும் அம்பிகையின் தியானமும் இருப்பதனால் ஒரு வகையான தேசு உண்டாகும். உள்ளே இருக்கும் தெய்வத்தின் ஒளி புறத்திலே பொசிந்து பொலிவை உண்டாக்கும்.

தெய்வ வடிவும் தரும்

எனச் சொல்கிறார் அபிராமிபட்டர்.

செல்வமும், கல்வியும், திண்ணிய மனமும், அழகிய வடிவும் வந்தால் போதுமா? உலகத்தில் நாம் ஒரு சமுதாயத்தில் வாழ்கிறோம். பலரோடு கலந்து பழகுகிறோம். தனியாக மூக்கைப் பிடித்துக்கொண்டு தவம் செய்து கொண்டிருந்தால் யாருடைய தயவையும் வேண்டாமல் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் நாம் எந்தனையோ பேரோடு இணைந்து வாழவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நல்லவர்களோடு கூடும்போது நமக்கு நல்லெண்ணங்கள் வளர்கின்றன; நம்முடைய செய்கைகள் நலம் பெறுகின்றன. பொல்லாதவர்களோடு இணங்கும்போது நமக்கு நல்லெண்ணங்கள் தோன்றினாலும் அவை நாளடைவில் மங்கி மடிகின்றன. நல்லினத்தில் சேர்ந்தவர்கள் தொடக்கத்தில் திருந்திய மனம் இல்லாதவர்களாக இருந்தாலும், நல்லவர் இணக்கத்தினால் நாளடைவில் திருந்துவார்கள். வள்ளுவர் சிற்றினம் சேராமை என்றே ஓர் அதிகாரம் சொல்கிறார்.

சத்சங்கத்தினால் நம்மிடத்திலுள்ள நல்ல பண்புகள் வளரும்; தீய பண்புகள் மாயும். எத்தனைதான் வளங்கள் இருந்தாலும் தீயவர்களுடைய தொடர்பு இருந்தால் அத்தனை வளமும் பாழாகிவிடும். துன்பமே கடைசியில் நிற்கும். நம்மோடு பழகுகிறவர்கள், நெஞ்சில் வஞ்சம் இல்லாமல் பழகினால் நமக்கு நன்மை உண்டாகும். உள்ளே

ஒன்று வைத்துப் புறம்பே ஒன்று பேசுகிறவர்களோடு பழகினல் தீங்கே உண்டாகும்,

> ''உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
> உறவுகல வாமை வேண்டும்''

என்று அருட்பிரகாச வள்ளலார் முருகனை வேண்டுகிருர். நெஞ்சில் வஞ்சம் இல்லாத தொண்டர்கள் கூட்டத்தில் இருப்பவர்களுக்கு உள்ளத்தில் தோன்றுகிற நல்லெண்ணங்கள் வேலிக்கிடையே வளரும் பயிரைப்போல மேலும் மேலும் வளரும். ஆகவே அபிராமிபட்டர் அபிராமியின் கடைக்கண்களால் உண்டாகும் பேறுகளில் அடுத்ததாக,

> நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்

என்று சொல்கிருர்.

அன்னையின் திருவருளால் கிடைக்கின்ற பேறு ஒன்ரு, இரண்டா? தனம், கல்வி, திண்ணிய மனம், தெய்வ வடிவு, நல்லினம் என்று ஒவ்வொன்ருக அடுக்கிக்கொண்டு வந்தவர், இப்படியே சொல்லிக் கொண்டுபோனல் அதற்கு எல்லையே இல்லை என்று எண்ணினர். ஏதேனும் ஓர் எல்லை கட்ட வேண்டாமா? ஆகவே இறுதியாக, 'எவை எவை நல்லனவோ அவை எல்லாவற்றையும் தரும்' என்று முடிக்கிருர். அதற்குள் அடங்காததே இல்லை. அளந்து பார்க்கப் புறப்பட்டவர் அளந்து காண முடியாது என்றவுடன் இரண்டு கையையும் விரித்துக் காட்டுவதுபோல,

> நல்லன எல்லாம் தரும்

என்று முடிக்கிருர்.

யாருக்கு?

> அன்பர் என்பவர்க்கே.

உலகிலுள்ள மக்கள் நன்மை தீமை ஆகிய இரண்டு அநுபவங்களையும் பெறுகிருர்கள். எல்லோருக்கும் செல்வம்

முதலிய நலங்கள் எல்லாம் ஒருங்கே கிடைப்பது அரிது. அபிராமியின் கடைக்கண் பார்வைக்குள் அகப்பட்டவர்களுக்கு இந்தப் பேறுகள் கிடைக்கும். அப்படி அவள் பார்வையினால் நலம் பெறுகிறவர்கள் அவளுடைய அடியார்கள், அன்பர்கள் ஆகியவர்களுக்கே இத்தகைய நன்மைகள் எல்லாம் கிடைக்கும். முதலில் அப்படிச் சொல்லாமல் 'தனம் தரும் கல்வி தரும்' என்று தொடங்கிக் கடைசியில் 'அன்பர் என்பவர்க்கே' என்று ஏகாரம் போட்டு முடிக்கிறார், அது பிரிநிலை ஏகாரம். இந்த வரிசையைப் பார்க்கும்போது எல்லாருக்கும் ஆசை உண்டாகும். முதலில் ஆசையைத் தூண்டிவிட்டுப் பின்பு அன்பர்களுக்கே கிடைக்கும் என்று சொன்னதனால், நாமும் அன்பர் ஆகவேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

அம்பிகையை,

கனம் தரும் பூங்குழலாள்

என்று போற்றுகிறார். கனம்—மேகம். மேகம் போன்ற கரிய நிறமுடைய கூந்தலில் பூவை அணிந்துகொண்டிருப்பவள் அபிராமி. அந்தப் பெருமாட்டியின் கடைக்கண்கள் அன்பர்களுக்கு எல்லா வகையான நன்மைகளையும் செய்யும்.

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழலாள் அபி
ராமி கடைக்கண்களே.

[மேகத்தைப்போன்ற, பூவை அணிந்த குழலையுடைய அபிராமி அன்னையின் கடைக்கண்களின் பார்வை அன்பர்

என்பவர்களுக்கே செல்வத்தைத் தரும்; கல்வியை அளிக்கும்; ஒரு நாளும் தளர்வை அறியாத நெஞ்சத்தை உண்டாக்கும்; தெய்வத் தேசு நிரம்பிய வடிவத்தையும் அருளும்; மனத்தில் வஞ்சகம் இல்லாத நல்லவர்களின் கூட்டத்தைத் தரும்; நல்லனவாகிய எல்லாவற்றையுமே வழங்கும்.

கடைக்கண்கள்: ஆகுபெயர்; பார்வையைக் குறித்தது.]

நல்லன எல்லாம் தரும் என்பதில் சொர்க்க போகமும், முக்தியும் அடங்கும். இந்த உலகத்தில் இன்ப வாழ்வு வாழ்வதற்கு எவையெவை வேண்டுமோ அவற்றை எல்லாம் தருவதோடு அமையாமல், மறுமை வாழ்வில் தேவலோக இன்பத்தையும், அப்பால் மோட்ச சாம்ராஜ்யத்தையும் அம்பிகை அருளுவாள் என்பதைக் குறிப்பாகச் சொன்னார்.

இந்தப் பாடல் ஒரு வகையில் அபிராமி அந்தாதியின் பயனாக நின்று நிலவுகிறது. பெரும்பாலும் பல நூல்களில் அந்த நூலைப் பாராயணம் செய்வதனால் உண்டாகும் பயனைக் கடைசியில் சொல்லியிருப்பார்கள். இந்த நூலிலும் கடைசியில் அப்படி ஒரு பாடல் வருகிறது. ஆனால் அந்தப் பாடலைவிட இந்தப் பாடல்தான் பயனை விரித்துச் சொல்கிறது. நூலுக்கு நடுவில் அமைந்த இது பழத்திற்கு நடுவிலுள்ள விதைபோல, சத்துள்ளதாக, பயனைச் சொல்வதாக, அமைந்திருக்கிறது.

இது அபிராமி அந்தாதியின் 69-ஆவது பாடல்.

# கண்டு கொண்ட அழகு

அம்பிகை உலகில் உள்ள உயிர்களுக்குத் திருவருள் புரிவதற்காகப் பல வகையான திருவுருவங்களை எடுத்து நலம் செய்கிருள்; பல நாமங்களை உடையவளாக விளங்கு கிருள். மிகவும் நுட்பமான வடிவும் அவளுக்கு உண்டு; மிகவும் திட்பமான வடிவும் உண்டு. அணுவுக்கு அணுவாக வும் விபுவுக்கு விபுவாகவும் இருப்பவள் அவள்.

அந்தப் பெருமாட்டி மேற்கொண்ட வடிவங்களில் ஒன்று சியாமளாம்பிகையின் திருவுருவம். அவளைச் சியா மளா என்று லலிதா சகசிரநாமம் கூறும். சியாமளாம் பிகையை மகாகவிகாளிதாசர் துதித்துப் பாடிய சியாமளா தண்டகம் என்ற நூல் ஒன்று உண்டு. அதில் அந்த அன்னை யின் வடிவழகையும் இயல்புகளையும் விரிவாகச் சொல் கிருர்.

அபிராமியின் கடைக்கண் பார்வைக்கு இலக்காகிய வர்கள் பெறும் பயனைப் பாடிய அபிராமிபட்டர் இப் போது தாம் பெற்ற அநுபவத்தைச் சொல்ல வருகிருர். அம்பிகை தன்னை உள்ளவண்ணம் அவருக்குக் காட்டியருளி ளுள். ஆதலின் அவளுடைய எல்லாக் கோலங்களையும் தரி சித்தவர் அவர். புறத்தே விக்கிரக வடிவில் தரிசித்து, உள்ளே தியானம் செய்து, அங்கே உண்மை வடிவில் தரி சித்து இன்புற்றவர். "அந்தர்முக ஸமாராத்யா" என்று லலிதா சகசிரநாமம் சொல்வதை அவர் அநுபவத்திலே கண்டவர்.

இதோ தாம் புறம்பும் உள்ளும் தரிசித்த சியாமளாம்பி கையின் திவ்ய தரிசனத்தைச் சொல்கிருர்.

அம்பிகை அமுதக்கடலின் நடுவில் மணித்வீபத்தில் கடம்பவனத்தில் எழுந்தருளியிருக்கிருள். அங்கே பேரழகியாக வீற்றிருக்கிருள். கடம்பாடவியில் திவ்ய தரிசனம் தந்து தோன்றிய எம்பெருமாட்டியின் பேரழகை, அபிராமிபட்டர் வருணிக்கப் புகுகிருர். எதைச் சொல்வது? எதை விடுவது?

'வேதம் முதலிய நூல்களே அவள் பேரழகை முற்றும் சொல்ல முடியாதபடி திண்டாடும்போது மனிதர்கள் எம்மாத்திரம்? ஆனால் பக்தர்கள் அப்படி நினைக்கிறதில்லை. அவள் அழகாகிய கடல் முழுவதையும் உண்ண முடியாது. அது வற்ருத சமுத்திரம். ஆனால் அந்த அழகை நம்முடைய கண்ணிலும் கருத்திலும் நிரப்பிக்கொள்ளலாம் அல்லவா? அது போதுமே! அப்போது வேறு பார்வையும் வேறு எண்ணமும் எழ நியாயம் இல்லையே! அந்த மனோலயத்தில் உண்டாகும் இன்பம் இணையற்றதல்லவா?'

சின்ன வயிறு என்றும், பெரிய வயிறு என்றும் வயிறுகளில் வேறுபாடு உண்டு. உண்ணும் உணவோ அளவில்லாமல் குவிந்து கிடக்கிறது. பசிக்கிறவனுக்குத் தன் வயிறு நிரம்புவதுதான் முக்கியமே ஒழிய, உணவு முழுவதையும் உண்டுவிட வேண்டுமென்பது அல்லவே! அது நடக்கக்கூடிய காரியமா?

ஆகவே அபிராமிபட்டர் எடுத்துக்கொண்ட பாட்டின் அளவில் எம்பெருமாட்டியின் பேரழகை அநுபவிக்கிருர்.

> எம்பெருமாட்டிதன் பேரழகே....
> கண் களிக்கும்படி கண்டுகொண்டேன்

என்கிருர். அவள் பேரழகு எப்படி இருக்கிறது?

கடம்பாடவியில் தோற்றம் அளிக்கிருள் அப்பிராட்டி. அவள் கையில் வீணை இருக்கிறது. அதிலிருந்து எழும் பண்கள் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றன. அதைக் கண்டு களிக்கிருர்

பண் களிக்கும் குரல் வீணையும்

என்கிறார். "வீறுமிக்கமா வீணைகரே" என்று திருப்புகழில் வருகிறது.

அவளுடைய திருக்கரத்தில் அந்த வீணை ஒளிர்கிறது. வீணையும் கையும் இணைந்து காட்சி அளிக்கின்றன.

பண் களிக்கும் குரல் வீணையும் கையும்.

இதற்கு வேறு ஒரு வகையிலும் பொருள் கொள்ளலாம். 'பண்களெல்லாம் அவளுடைய குரலைக் கண்டு ஆகா என்ன இனிமை என்று களிப்பதற்குரிய குரலாகிய வீணை' என்றும் பொருள் கொள்ளலாம். எப்போதும் வேதகானம் செய்யும் சிவபெருமான் கண்டத்தை, "யாழ் கெழு மணிமிடற்று அந்தணன்" என்று அகநானூறு கூறுகிறது. ஆதலின் இனிய குரலை உடைய கண்டத்துக்கு வீணையை உவமை கூறுவதுண்டென்று தெரியவருகிறது.

அம்பிகையின் குரல், வீணையின் நாதத்தையும் தாழச் செய்யும் இனிமையையுடையது. ஸௌந்தர்ய லஹரியில் இப்படி ஒரு காட்சியைச் சங்கராசாரிய சுவாமிகள் அருளுகிறார். கலைமகள் அம்பிகையின் சந்நிதியில் வீணையை வாசித்தாள். கலைஞர்களைப் பாராட்டினால்தான் அவர்களுக்கு ஊக்கம் பிறக்கும்; கலையும் வளரும். அதனால் அம்பிகை கலைமகளின் வீணையொலியைக் கேட்டு, "நன்றாக இருக்கிறது!" என்று பாராட்டினளாம். அந்தப் பாராட்டினால் மேலும் ஊக்கம் அடைந்து பாடவேண்டியவளல்லவா கலைமகள்? அவள் அப்படிச் செய்யவில்லை. வீணையை உறையுள் போட்டுவிட்டாள். 'அம்பிகையின் குரலே இவ்வளவு இனிமையாக இருக்கும்போது, இவளுக்கு முன் இந்த வீணையை வாசிப்பதா?' என்று நாணி அப்படிச் செய்தாளாம்.

ஆகவே பண்களெல்லாம் களிக்கும்படியான வீணை போன்ற குரலுடையவள் என்று கொள்வது பொருந்தும்.

வீணையையும் கையையும் தரிசித்தவர், அம்பிகைக்குக் குழந்தையாகையால் ஞானப்பாலைத் தரும் தனங்களைத் தரிசிக்கிறார்.

பயோதரமும்.

இப்படியே அங்கங்களைச் சொல்லிக்கொண்டு போக நேரம் ஏது? எல்லைதான் ஏது? ஆகவே பிழம்பாக, சமுதாய சோபையாக, அவளுடைய திருமேனி வண்ணத்தை அடுத்தபடியாகச் சொல்கிறார். சியாம நிறம் என்பது ஒரு வகைப் பச்சை வண்ணம். அதைக் கண்டால் கண் குளிரும். பச்சையென்றால் குளிர்ச்சிக்கு அறிகுறிதானே? பூமியெல்லாம் பச்சைப் பசேலென்று பயிர்கள் நிரம்பியிருந்தால் கண்ணுக்கு அழகாக இருக்கிறது. அம்பிகையின் பச்சை வண்ணம் உலகில் உள்ளோர் யாரும் கண்டு களிக்கும்படி இருக்கிறது. அவளுடைய பச்சை வண்ணம் எங்கே தோன்றினாலும் அது அழகாக இருக்கிறது. அது பசும்பயிரில் தோன்றுகிறது; பசிய மரத்தில் தோன்றுகிறது; கர்ப்ப மகளிரின் நாடிகளில் தோன்றுகிறது; கடலில் தோன்றுகிறது; கிளியினிடம் காண்கிறது. எல்லாம் அழகு. பச்சையில்லாத நிலம் வெறிச்சோடிக் கிடக்கும். ஆகையால் அம்பிகையின் பச்சை வண்ணத்தை, ''மண் களிக்கும் பச்சைவண்ணம்'' என்கிறார் ஆசிரியர்.

மண் களிக்கும் பச்சை வண்ண மும்

இத்தகைய கோலத்தில், அம்பிகை மதங்க முனிவரின் பெண்ணாகத் தோன்றினாள். அதனால் மாதங்கி என்று பெயர் வந்தது. வீணையைப் பாடிப் பிழைக்கும் ஒரு குலத்துக்கு மதங்கர் குலம் என்று பெயர். அவர்களைத் தமிழில் யாழ்ப்பாணர் என்பர். அந்தக் குலத்தில் அவள் திருவவதாரம் செய்தமையாலும் அப்பெருமாட்டிக்கு மாதங்கி என்று திருநாமம் வந்தது.

"மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி"

என்பது சியாமளா தண்டகம். மதங்கர் குலப் பெண்களில் ஒருத்தியாகத் தோன்றிய பேரழகி எம்பெருமாட்டி.

மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி
மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன்
பேரழகே

கண்டு கொண்டேன் என்று பாடுகிருர் இந்தப் பக்தர்.

அம்பிகையின் திருவுருவத்தை நாமும் காண்கிரேம். சிறந்த பக்தர்களும் தரிசிக்கிருர்கள். இரண்டு பேர் தரிசிப்பதற்கும் வேறுபாடு உண்டு. மிட்டாய்க் கடைக்குப் போகிற ஏழையைப் போல அம்பிகையையும் அவள் அலங்காரத்தையும் தரிசித்துவிட்டு, "ஆகா! என்ன அழகு!" என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிரேம் நாம்.

அம்பிகையைத் தரிசித்தால் மட்டும் போதாது. உட்கொள்ள வேண்டும்; தியானிக்க வேண்டும். மிட்டாயைக் கண்டவனுக்கு அதன் சுவை தெரியாது. அதை உண்டவனுக்குத்தான் அதன் சுவை தெரியும். அதுபோலச் சகுண மூர்த்தியாக உள்ள அம்பிகையைத் தரிசிப்பதனுல் ஓரளவு கிளுகிளுப்பு உண்டாகும். மிட்டாயைக் கண்டவனுக்கு நாவில் நீர் ஊறுவது போல. நல்ல பயனைப் பெறவேண்டுமானுல் அவளை உள்ளே நிறுத்தித் தியானிக்க வேண்டும். கோவில், குளம், மூர்த்தி, உற்சவம் எல்லாம் இதற்காகத் தான் ஏற்பட்டிருக்கின்றன.

கண்டதோடு நிற்கக்கூடாது; கண்டு, கொள்ள வேண்டும். கண்டால் கண் களிக்கிறது. பிறகு உட்கொண்டால் உயிரே களிக்கும். அபிராமி பட்டர் அவ்வாறு கண் களிக்கும்படி அம்பிகையைத் தரிசித்துப் பின்பு அந்த வடிவத்தை உள்ளே கொண்டு தியானித்து மனேலயம் பெற்று இன்புற்றவர். அதனுல்,

கண் களிக்கும்படி கண்டு, கொண்டேன்

என்கிருர். கண்டு கொண்டேன் என்பதை ஒரு செயலாக எண்ணக்கூடாது. காண்பது முதல் செயல்; அடுத்தது கொள்வது; உட்கொள்ளுவது அதாவது அந்த வடிவத்தை உள்ளே தரிசித்துத் தியானித்தல்.

இராமலிங்க சுவாமிகள் சொல்கிருர்.

''களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட
தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்த
தொரு காய்தான்''

என்கிருர். கண்டபிறகு உள்ளே கொண்டதனுல் உள்ளம் மலர்ந்ததாம்; மேலே காய்த்ததாம். அருணகிரிநாதரும் இப்படிச் சொல்கிருர்.

''கந்தன் என்றுற்று உனை நாளும்
கண்டு கொண்டு இன்புற் றிடுவேனே?''

தினந்தோறும் கண்ணுல் கண்டு, கண்டதை உள்ளத்தே கொண்டு, தியானம் செய்தால் இன்பத்தை அடையலாம்.

கற்கண்டைக் காண்கிருேம். அது கல்லைப்போலத் தெரிகிறது. படிக்காரத்திற்கும் அதற்கும் வேறுபாடு தெரிகிறதில்லை. ஆனுல் அதை வாயில் போட்டுச் சுவைக்கத் தொடங்கினுல்தான் அது கரைந்து தன் சுவையைக் காட்டுகிறது. அதுபோல நாம் காணும் விக்கிரகங்கள் வெறும் வடிவமாகக் காட்சியளிக்கின்றன. அந்த வடிவத்தை உண் முகமாக்கித் தியானம் செய்யப் புகுந்தால் அந்த வடிவம் தேசுடையதாக மாறிச் சொல்ல வொண்ணு இன்பத்தைத் தரும்.

இந்த அநுபவத்தைப் பெற்ற அபிராமி பட்டர் கண்டேன் என்று மட்டும் சொல்லவில்லை; ''கண்டு கொண்டேன்'' என்று சொன்னுர். இரண்டும் ஒரே நிலை அல்ல. காண்பது ஒரு நிலை; அது கண்ணின் காரியம். கொள்வது ஒரு நிலை; அது மனத்தின் காரியம். கண்ணும் கருத்தும்

ஒன்றுபட வேண்டும். கண் வழியே உள்ளத்தில் வடிவம் செல்லவேண்டும். இத்தகைய அற்புத அநுபவத்தில் கைவந்த அபிராமி பட்டர் பாட்டும் அற்புதமாக இருக்கிறது.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம்
பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும்
பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி
மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன்
பேரழகே.

[கடம்பவனத்தில், இராகங்கள் நம்மைவிட இனிமையாக இருக்கின்றது என்று கேட்டுக் களிக்கும் குரலாகிய வீணையும், திருக்கரங்களும், திருத்தனமும், உலகத்தோர் தரிசித்து மகிழும் பச்சை நிறமும் ஆக எழுந்தருளி, யாழ்ப்பாணராகிய மதங்கர் குலத்தில் உதித்த பெண்களில் ஒருத்தியாகத் திருவவதாரம் செய்த எம்பெருமாட்டியாகிய சியாமளாதேவியின் எங்கும் காணாத பேரழகை, அடியேன் கண்டு களிக்கும்படி தரிசித்துப் பின்பு உள்ளத்தே தியானப் பொருளாகக் கொண்டேன்.

கடம்பாடவி=மதுரை என்றும் சொல்லலாம். குரல் வீணை. உருவகம். பயோதரம்-நகில்; கருணையாகிய பாலைத் தாங்குவது. மண்-உலகத்தோர்; ஆகுபெயர். பெண்களில்-பெண்களில் ஒருத்தியாக; பெண்களைப் போல என்றும் சொல்லலாம்.

பேரழகே கண்டு கொண்டேன். கடம்பாடவியில் தோற்றிய எம்பெருமாட்டி, வீணையும் கையும் பயோதரமும் பச்சை வண்ணமும் ஆகித் தோன்றிய எம்பெருமாட்டி என்று கூட்டுக.]

இது அபிராமி அந்தாதியில் 70-ஆம் பாடல்.

# என்ன குறை?

"இன்றைக்கு மனசு என்னவோமாதிரி இருக்கிறது" என்று நாம் சில சமயங்களில் சொல்லுகிறோம்; மனத்தில் அமைதி இல்லாதபோது அப்படி ஒரு நினைப்புத் தோன்றுவது இயல்பு. நமக்குத்தான் அப்படி என்றால் மிகவும் படித்தவர்களுக்கும், நிறையப் பொருளை உடையவர்களுக்கும் கூட மனத்தில் அப்படி ஒரு நிலை வரும். இதை மனத்தில் ஊக்கமில்லாத இறக்கம் (Mental depression) என்று சொல்வார்கள்.

அருளாளர்களுக்குக்கூட இப்படி ஒரு நிலை வரும் போலும்! அவர்களுடைய பாடல்களில் அடிக்கடி தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்ளும் பகுதிகள் இருக்கின்றன. இறைவனுடைய அருளுக்கு ஆட்பட்ட அவர்களுக்கு அப்படி உண்டாவதற்கும் ஒரு நியாயம் இருக்கிறது.

மடியில் கனம் உடையவனுக்கு வழியில் பயம் உண்டு. அதுபோல, அவர்கள் மிகப் பெரிய செல்வமாகிய அருளைப் பெற்றவர்கள். அதனால் யாரும் அடையாத உயர்ந்த நிலையில் இருப்பார்கள். இருந்தபோதிலும் பிராரப்த வினை என்பது ஒன்று இருக்கிறது. அதனால் ஏதேனும் சிறிதளவாவது தவறு நேருமோ, இறைவனை ஒரு கணமேனும் மறக்க நேருமோ என்று தோன்றும்.

அதனால் அவர்கள் தம்மைத் தாமே ஜாக்கிரதைப் படுத்திக் கொள்வார்கள். பக்தர்கள் ஒரு சமயம் மகிழ்ச்சியின் உச்சநிலையில் இருப்பார்கள். மறு சமயம் இறைவன் நம்மை மறந்து விடுவானோ என்று தவிப்பார்கள். வேறு ஒரு சமயம் உலகமாயை எங்கேனும் இடையிலே புகுந்து

ஏதாவது செய்துவிடுமோ என்று அஞ்சுவார்கள். இப்படியெல்லாம் உண்டாகும் அநுபவங்கள் பக்திக்கே உரிய விசித்திரங்கள்.

குழந்தை தாயைப் பார்த்து, "என்னை விட்டுப் போய் விடாதே அம்மா" என்று சொல்கிறதே, அது போலப் பக்தர்கள் சொல்வார்கள். "ஏ மனமே, நீ தாயை நினைக்காமல் இருந்தால் அதோகதிக்கு ஆளாவாய்" என்று எச்சரிப்பார்கள். "நல்ல நெஞ்சமே, நீ அன்னையை நினைப்பதனால் எத்தனை இன்பத்தைப் பெறுகிறோம்!" என்று தட்டிக் கொடுப்பார்கள். இப்படித் தம்முடைய மனத்தைப் பார்த்து வெவ்வேறு வகையில் பேசுவதும் பக்தியின் விசித்திரங்களில் ஒன்று.

இப்போது அபிராமிபட்டர் தம் நெஞ்சைப்பார்த்துப் பேசுகிறார்.

எதையோ இழந்துவிட்டதுபோல இருக்கிறது நெஞ்சு; போனதை நினைத்து வருந்துகிறது. அதுவும் பக்தர்களின் இயல்பு.

ஹரதத்த சிவாசாரியார் கஞ்சனூரில் வாழ்ந்தவர்; பெரிய சிவபக்தர். அவர் ஒருநாள் சிவாலயத்துக்குப் போனார். அவருடன் அவருடைய சிஷ்யர்கள் சிலரும் சென்றார்கள். அப்போது கோவிலில் தொண்டு செய்யும் ருத்திரகணிகையை தர்மகர்த்தா அடித்துக்கொண்டிருந்தார். அவள் அழுது புலம்பினாள்; "இனி அப்படிச் செய்ய மாட்டேன்" என்று சொல்லி அழுதாள்.

ஹரதத்தர் தர்மகர்த்தாவைப் பார்த்து, "இவள் என்ன குற்றம் செய்தாள்?" என்று கேட்டார் தர்மகர்த்தா, "கோவிலில் சேவகம் செய்யும் இவள் சொல்லாமல் நான்கு நாள் வெளியூருக்குப் போய்விட்டாள்" என்றார். அது கேட்டவுடனே ஹரதத்த சிவாசாரியார் அழுதார். யாவருக்கும் வியப்பாக இருந்தது.

ஆலய த்ரிசனம் செய்துவிட்டு வீட்டை அடைந்த போது சிஷ்யர்கள், "தேவரீர் அழுதது ஏன்?" என்று கேட்டார்கள். "அந்தப் பெண்பிள்ளை ஆண்டவனுக்குத் தொண்டு செய்யத் தவறினுள் என்று அடித்து வேலை வாங்குகிருர்கள். என்னை யாராவது இப்படித் தண்டித்திருந்தால் எப்பொழுதோ உயர்ந்திருப்பேனே!" என்ருராம்.

அதுபோல, "எவ்வளவோ காலத்தை வீணுகப் போக்கிவிட்டோமே!" என்று நெஞ்சு நைந்து சாம்பும் மகாபக்தர்கள் இருக்கிருர்கள்.

"பாலனுய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை யார்தம்
மேலனுய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனுய்க் கழித்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்;
சேலுலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே"

என்று அப்பர் சுவாமிகள் கழித்ததற்கு இரங்குவார்.

அவ்வாறு இரங்கிய நெஞ்சுக்கு ஆறுதல் சொல்லப் புகுகிருர் அபிராமிபட்டர்.

'கழிந்ததற்காக' இழவு பட்டாற்போல வருந்துகிற நெஞ்சமே, நீ வருந்தாதே!' என்கிருர்.

இழவுற்று நின்ற நெஞ்சே!
இரங்கேல்.

மனம் வருந்துவதற்குக் காரணம், ஏதாவது வாழ்க்கையில் குறை நேர்வது. பணத்தால் குறை உள்ளவர்கள் நமக்குப் பொருள் கிடைக்கவில்லையே என்று ஏங்குவார்கள். ஆனுல், வேண்டியபோது பணம் தரத் தந்தையோ, நண்பனே இருந்தால் ஏங்க வேண்டியதில்லையே! அறி

வின்மையினுலே குறை உண்டானுல் அப்போது வருந்த நியாயம் உண்டு. ஆனுல் நமக்கு வேண்டிய அறிவை எளிதில் வழங்கும் குருநாதன் இருந்தால் வருந்தவேண்டாம். நோய் வந்தால், மருத்துவர் துணை இருந்தால் வருந்த வேண்டாம்.

தமக்குத் துணையாகக் குறைவிலா நிறைவாகிய அன்னையைப் பெற்ற அபிராமிபட்டருக்கு வருந்துவதற்குக் காரணமே இல்லை. இதையே தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்வதுபோலச் சொல்கிருர். 'நம்முடைய அன்னையாகிய அபிராமி வேண்டியவற்றை எல்லாம் தர நமக்கு விழுத்துணையாக இருக்கும்போது, நமக்கு என்ன குறை இருக்கிறது? ஏன் வீணே வருந்துகிருய் நெஞ்சே? வருந்தாதே!' என்று தைரியம் சொல்கிருர்.

இழவுற்று நின்ற நெஞ்சே!
இரங்கேல்; உனக்கு என் குறையே?

'அபிராமி நமக்குத் துணையாக இருக்கிருள்' என்று சொல்ல வருகிருர்; அன்னையை வருணிக்கத் தொடங்குகிருர்.

எம்பிராட்டியின் அழகை வருணிக்க வார்த்தைகள் இல்லை. அந்தப் பேரழகைச் சங்கராசார்ய சுவாமிகள் சௌந்தர்ய லஹரியில் பலபடியாகச் சொல்கிருர்; அந்த அழகு அலையிலே தோய்ந்து தம்மை மறந்து குழந்தையாகிருர். அபிராமிபட்டர் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிருர்; 'நம்முடைய அன்னை எவ்வளவு அழகானவள்! இந்த உலகத்திலாகட்டும், வேறு உலகிலாகட்டும், அவளுக்கு ஒப்பான அழகுடையவர் வேறு யார் இருக்கிருர்கள்? அந்த அழகைப் பார்த்துக்கொண்டே இருந்தாலே பசி தீருமே; வினை தீருமே! எப்போது நினைத்தாலும் அந்த வெள்ளம் பூரணமாக நம் அகக்கண் முன் வந்து நிற்குமே! அவள் இருக்கும்போது உனக்கு என்ன குறை வந்தது? அந்தப் பூரணமான அழகு வெள்ளத்தில்

ஆழ்ந்து நம்மையே கரைத்துக்கொண்டால் நினைவு ஏது? வருத்தம் ஏது? அவள் இருக்கும் இடத்தில் வருத்தத்துக்கு ஏது இடம்?' என்று கேட்கிறார்.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி...
இருக்க, நெஞ்சே, உனக்கு என் குறையே?

'அவள் பூங்கொடி போன்றவள். அவளைத் துணையாக, அன்னையாகப் பெற்ற உனக்கு என்ன குறை வந்து விட்டது?'

இப்படிச் சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்.

'நம்முடைய தாய் அப்ராக்ருத சௌந்தர்யம் உடையவள். அவள் திருவடியை அல்லவா நாம் பற்றியிருக்கிறோம்? அதைவிடத் தகுந்த பற்றுக்கோடு வேறு என்ன இருக்கிறது? தாமரையைப் போன்ற அந்தத் திருவடி எல்லாக் கவலையையும் போக்குவதாயிற்றே!'

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்பது திருக்குறள். அன்னையும் அழகு முதலியவற்றால் தனக்கு உவமையே இல்லாதவள். அவள் தாளைச் சார்ந்த பிறகு மனக்கவலை ஏது?

அவளுடைய பாதாம்புயம் எத்தகையது? அது இயற்கையாகவே சிவந்தது; செந்தாமரை போன்றது. அந்த அடி வேதத்தின் அடியிலும் முடியிலும் நடுவிலும் இருப்பது. வேதப் பூஞ்சோலையிலே உலவுவது. வேதமே சிலம்பாக இருந்து அவள் திருவடியைப் பற்றிக்கொண்டு ஒலிக்கிறது. "ஆரண நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி" என்று திருவிளையாடற் புராணத்தில் வருகிறது. அந்த வேதத்தில் சஞ்சரிப்பதால் அன்னையின் அடியில் பின்னும் சிவப்பு ஏறுகிறதாம்.

எம்பெருமாட்டி எழுந்தருளியிருக்கும் திருமாளிகைக்குச் சிந்தாமணிக் கிருகம் என்று பெயர், அந்தத் திருமாளிகைக்கு நான்கு திருவாயில்கள். அந்த நான்கு வாயில்களிலும் படிகளாக விளங்குபவை வேதங்கள். அம்பிகையை அறிவதற்கு அந்தப் படிகளைத் தாண்டிப் போகவேண்டும். அம்பிகை அடியார்களுக்கு அருள் செய்ய வெளிப்படும் பொழுது அந்தப் படிகளில் இறங்கி வருவாள். மறுபடியும் அவற்றில் ஏறி உள்ளே புகுவாள். இப்படி அந்தப்படிகளில் ஏறி இறங்கிப் பழகுவதனால் அவள் திருவடித் தாமரைகள் பின்னும் சிவந்து அழகு மிகுந்து தோன்றும்.

அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தாள்.

'அத்தகைய பெருமாட்டி நமக்கு அருள் செய்யக் கிடைந்திருக்கும்போது அறிவினால் குறை வரக் காரணம் இல்லையே! உனக்கு என்ன குறை? நெஞ்சமே!'

அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள்
...இருக்க
...நெஞ்சே...உனக்கு என் குறையே?

அம்பிகையின் வடிவழகு முழுவதையும் எண்ணி, "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி" என்றார். அந்தப் பிழம்பாகிய அழகை லாவண்யம் என்று வடமொழியிலும் வனப்பு என்று தமிழிலும் சொல்வார்கள். அது திருமேனி முழுவதும் பரவியிருக்கும் பேரழகு. அபிராமி என்ற திருநாமமே அவளுடைய பேரழகை எண்ணி அமைந்தது தானே?

இவ்வாறு திருமேனி முழுவதும் பரவிய வனப்பை எண்ணிய பட்டர், அவள் அங்கங்களைச் சொல்ல வந்தார். முதலில் திருவடியைச் சொன்னார். அது அம்புயம் போன்றது. செவ்வண்ணத்தாலும், மென்மையினாலும், அருள்தேன் பில்குவதனாலும், தாபத்தை நீக்கும் தண்மை

யினுலும், அடியார் தலையில் அணிவதனுலும், விரிவுடைமையாலும், ஞானமணம் வீசுவதனுலும் அடியவர்களின் அன்பாகிய நீர் நிரம்பிய உளமாகிய குளத்தில் பூத்தலினுலும், வேதம் என்னும் வண்டுகள் மொய்த்துக் கானம் செய்வதனுலும் தாமரையை ஒத்து விளங்குகிறது.

திருவடியை எண்ணியவர் உடனே திருமுடியைத் தியானிக்கிருர். அடிமுடியாகிய இரண்டு கரைகளினிடையே அழகு வெள்ளம் ததும்பி நிற்கிறது. தாம் பற்றிய கரையாகிய திருவடியைப்பற்றிச் சொன்னவர் இப்போது மற்ருெரு கரையாகிய திருமுடியைப் பற்றிச் சொல்கிருர்.

அந்தத் திருமுடி விளக்கமாகத் தெரிகிறது. தலையிலே பிறைபோன்ற அணியைச் சூடுவது மகளிர் இயல்பு. அதைச் சந்திரப்பிரபை என்று சொல்வார்கள். அன்னையோ பிறையையே தலையில் அழகுபெற அணிந்திருக்கிருள். குளிர்ந்த அழகிய சந்திரன் இளம்பிறையாக இருக்கிறது; அந்தக் குழவித்திங்களைச் சூடியிருக்கிருள். குழந்தையைத் தலையில் வைத்துக் கூத்தாடும் தாயைப் போலத் தோன்றுகிருள் அன்னை.

அந்தச் சந்திரன் காரணமாகத்தான் தட்சப்பிரசாபதி சிவபெருமானை வெறுத்தான். சந்திரனை, "நீ தேய்ந்து போவாயாக" என்று தட்சன் சபித்தான். சந்திரன் இறைவன் காலில் விழவே அவனைத் தன் தலையில் தூக்கிவைத்துக் கொண்டான். அம்பிகை வேறு அல்ல; சிவபெருமான் வேறு அல்ல; ஆதலின் அவன் செய்த காரியத்தை அவளும் செய்கிருள். தன் தகப்பனுரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட குழந்தையை, அருளினுல் எடுத்துத் தலையில் வைத்துக் கொஞ்சுவதுபோல அன்னை அந்தப் பனிமா மதிக் குழவியைத் தன் திருமுடியில் அணிந்திருக்கிருள். 'அவ்வளவு தயையை உடையவள் நமக்கு வேண்டியதை அருள் செய்ய இருக்கும்போது உனக்கு என்ன குறை?' என்கிருர் ஆசிரியர்.

பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக்
கொம்பு இருக்க........
நெஞ்சே, உனக்கு என் குறையே?

அம்பிகை தன் தலையின்மேல் பிறையைச் சூடியிருப்பதை, "ஒளிர்மதிச் செஞ்சடையாளை" (84) என்று பின்னே ஒரு பாட்டில் கூறுவார். லலிதா சகசிரநாமத்தில் 243-ஆவது திருநாமமாக அமைந்திருப்பது, 'சாருசந்த்ர கலாதரா' என்பது. அம்பிகை அணிந்த பிறை என்றும் தேயாமலும் வளராமலும் ஒரே நிலையில் அழகாக இருக்கிறது. அதனால் சாருசந்த்ரன் (அழகிய திங்கள்) என்று அத்திருநாமத்தில் வருகிறது. ஆசிரிய மாலை என்னும் பழைய தமிழ் நூல், "இமயக் கிழவி, தனிக்கண் விளங்கும் நுதற்பிறை மேலோர், மிகைப்பிறை கதுப்பிற் சூடி" என்று பாராட்டும். சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில், "சடையும் பிறையும் தாழ்ந்த சென்னிக், குவளை உண்கண் பவளவாள் முகத்தி" (23:1-2) என்று வருகிறது. "தருண வாள் நிலா வீசு சடில மோலி மாகாளி" (107) என்பது தக்கயாகப்பரணி.

அம்பிகை மென்மையான வடிவுடையவள். அதனால் கோமளயாமளைக் கொம்பு என்றார். கோமளமாகிய, யாமளையாகிய பூங்கொம்பு போன்றவள் என்பது பொருள். 'கோமளாகாரா', 'கோமளாங்கி' (லலிதா சகசிர நாமம் 437, 721) என்பன அம்பிகையின் திருநாமங்கள்.

அம்பிகைக்கு சியாமளா என்பது ஒரு திருநாமம். அதுவே யாமளை என்று தமிழில் வந்தது. யாமளாகமத்தால் போற்றப் பெறுபவளாதலால் யாமளா என்பதே அவள் திருநாமம் என்றும் கொள்ளலாம். "யாமளைக் கோமளமே" (33)என்று இவ்விரண்டையும் சேர்த்து முன்பு ஒரு பாட்டில் சொன்னார்.

முன்பு வல்லி என்று தொடங்கி இப்போது கொம்பு என்றார். வல்லியென்றது திருமேனி ஒசிந்து நெடியதாக

இருப்பது கருதி. கொம்பு என்றது பல மலர்கள் பூத்த கொம்பு என்றபடி, அம்பிகையின் திருவடி, திருவதனம், திருக்கரங்கள். திருவிழிகள், திருவுந்தி முதலியவை பல வகை மலர்களை ஒத்திருப்பதனால் கொம்பு என்றார். தாளைப் பார்த்தபோது அம்புயமாக இருந்தது. முடிவரையில் பார்த்தபோது பல மலர்கள் பூத்த கொம்புபோல இருப்பதனால், 'திருமுடிக் கோமள யாமளைக் கொம்பு' என்றார்.

"இணையில்லாத பூர்ண லாவண்யமும் வேதங்களில் பழகிய திருவடித் தாமரையும் சந்திரனைத் தரித்த திருமுடியும் உடைய யாமளை இருக்க, உனக்கு ஏதுகுறை?" என்று கேட்கிறார் இவர்.

'அழகே இன்றி மாயையால் வெறிச்சோடிக் கிடக்கும் பிரபஞ்சத்தைக் கண்டு பயப்பட்டுக் கவலைப்பட வேண்டாம்; அழகில் இணையற்றவளை உள்ளே பார்க்கலாம். நாம் மிகத் தாழ்ந்திருக்கிறோமே என்ற கவலையே வேண்டாம். வேதத்தில் பழகும் தாமரை அடி நமக்குப் பற்றாக இருக்கிறது. அதைப் பற்றிக்கொண்டால் அவள் குழவிப் பிறையைத் தூக்கி வைத்துக் கொண்டதுபோல நம்மையும் உன்னதமான இடத்தில் வைப்பாள். அப்படி இருக்க ஏன் வருந்த வேண்டும்?' என்கிறார்.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி,
அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள், பனி
மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக்
கொம்புஇருக்க,
இழவுஉற்று நின்றநெஞ்சே! இரங்கேல்;உனக்கு
என்குறையே?

[கழிந்ததற்கு வருந்தி நின்ற என் நெஞ்சமே, தன் திரு மேனி அழகுக்கு வேறு ஒருவரும் ஒப்பே இல்லாத கொடி போன்ற அபிராமி, அரிய வேதங்களிலே பயிலுவதனால் சிவந்த திருவடித் தாமரைகளை உடையவள்; குளிர்ச்சியை யுடைய அழகிய பிறையைச் சூடும் திருமுடியை உடைய மெல்லியலாகிய யாமளை யென்னும் பூங்கொம்பு நமக்கு வேண்டியவற்றையெல்லாம் அருளிக் காப்பாற்ற இருக்கும் போது, நீ வருந்தாதே; உனக்கு என்ன குறை இருக்கிறது?

அழகு—ரூப சௌந்தர்யம், குண சௌந்தர்யம் இரண்டையும் கொள்ளலாம். வல்லி—கொடி போன்றவள்; அபிராம வல்லி, கோமள வல்லி, மரகத வல்லி என்று அடையடுத்தும் அடையடுக்காமல் தனியேயும் வருவதுண்டு. அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லி என்றது, அபிராம வல்லி என்ற திருநாமத்தை நினைந்துச் சொன்னதாகவும் கொள்ளலாம்.

அறிதற்கு அரியனவாதலின் அருமறைகள் என்றார். வெளிப்படையாகத் தெரியாத பல இரகசியங்களைத் தன்னிடத்திலே கொண்டிருப்பதனால் மறையென்னும் பெயர் பெற்றது.

பனிமா மதி—குளிர்ச்சியும் பெருமையும் உடைய மதி. பனி என்பதற்கு நடுக்கம் என்றபொருளும் உண்டு. தட்சன் சாபத்தால் நடுக்கத்தை அடைந்த மதி என்றும் ஒரு பொருள் சொல்லலாம். மதியின் குழவி-மதிக் குழவி; பிறைச்சந்திரன்; இன்: வேண்டாவழிச் சாரியை.

திருமுடி—அழகிய முடி, மங்கலமான முடி. அழகும் மங்கலமும் இழந்த மதிக்கு இடம் தந்து அதற்கு அழகும் மங்களமும் அருளியதாதலின் திருமுடி ஆயிற்று.

இழவு-இழந்ததனால் உண்டானவருத்தம்; ஆகுபெயர். நின்ற—ஒரு செயலும் செய்யமாட்டாமல் நின்ற. உனக்கு

என் குறையே என்றது, யாதொரு குறையும் இல்லை யென்றபடி. ஏ: அசைநிலை.]

அம்பிகையின் திருவருள் பெற்றவர்களுக்கு எந்த விதமான குறையும் இல்லை என்பது கருத்து.

இது அபிராமி அந்தாதியில் 71-ஆம் செய்யுள்.

# யார் குறை?

மனிதன் குறைபாடுடையவன். அவனுடைய ஆற்றல் நிறைவுடையதன்று; சிறிய ஆற்றல் உடையவன். அவனுடைய அறிவும் சிற்றறிவு. அவன் ஆயுளோ சில ஆண்டுகளே. 'சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடையவன்' அவன். அவனிடம் உள்ள செல்வமும் அருட்செல்வத்தை நோக்கும்போது சிறியது. இப்படி எல்லா வகையாலும் குறை உடையவன் மனிதன்.

அவனிடத்தில் உள்ள குற்றங்களுக்கும் அளவில்லை. அந்தக் குற்றங்கள் நாளாக ஆக அதிகமாகின்றன. மனிதன் வாழ்வு நீள நீள அவனிடம் குற்றங்கள் வளர்கின்றன; குணங்கள் தேய்கின்றன.

குறை என்பதற்கு, ஒன்று இல்லாக் குறை என்றும் குணமில்லாக் குறையாகிய குற்றம் என்றும் இருவேறு பொருள் உண்டு. முதலில் உள்ள குறைக்கு மறுதலை நிறைவு; மற்றொரு குறைக்கு எதிரானது குணம். மனிதன் நிறைவு இல்லாதவன்; குணம் நிரம்பாதவன்.

இதற்கு நேர்மாறாக இருப்பது பரப்பிரம்மத்தின் இயல்பு. அம்பிகையே பரப்பிரம்மம்; பரதேவதை. அவள் குறைவே இல்லாத நிறைவுடையவள். "குறைவிலா நிறைவே கோதிலா அமுதே" (திருவாசகம்) என்பது அம்பிகைக்கும் பொருந்தும். நிறைவுடையவள் என்பதற்கு பூர்ணா, புஷ்டி (லலிதா. 292, 444) என்ற அம்பிகையின் திருநாமங்களே சான்றாகும். அவள் என்றும் பூர்ணமாக இருப்பவள். அதிலிருந்து எதை எடுத்தாலும் அந்தப்

பூர்ணத்துக்குக் குறைவுவராது. அவளைச் சார்ந்த ஆன்மா வும் பூர்ணத்தை அடைகிறது.

குணங்களிலும் சிறந்தவள் அன்னை. அனந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடம் அவள். குண நிதி (லலிதா.604) என்பது தேவியின் திருநாமங்களில் ஒன்று.

ஏதேனும் ஒரு பொருளால் குறையுடையவன் அந்தப் பொருள் யாரிடம் மிகுதியாக இருக்கிறதோ அவனை அடைந்து யாசிக்கிறான். நூறு ரூபாய் சம்பளமுடையவன் தனக்குப் பத்து ரூபாய் கடன் வேண்டுமென்றால் இருநூறு ரூபாய்ச் சம்பளக்காரனைப் போய் நாடி யாசிக்கிறான். அவன் இவனுக்குப் பத்துரூபாய் கவுரவத்தை முன்னிட்டுக் கொடுக்கிறான். ஆனால், அவன் நானூறு ரூபாய்ச் சம்பளக் காரனை நாடுகிறான். இப்படியே ஒவ்வொருவனும் தனக்கு மேல்நிலையில் உள்ளவனை நாடித் தன் குறையைப் போக்கிக் கொள்ள முயல்கிறான். யாரும் குறையே இல்லா மல், யாரையும் நாடவேண்டிய அவசியம் இன்றி இருப்ப தாகத் தோன்றவில்லை. சிறுகுறையுடையவர்கள் நாடும் மக்கள் முன்னவர்களைவிடப் பெருங்குறையுடையவர்களா கவே இருக்கிறார்கள். ஆகையால் குறையை அடியோடு நீக்கிக் குறையேயின்றி இருப்பவர்கள் யாரும் இல்லை.

குறைவிலா நிறைவாக இருக்கும் அம்பிகையே எல்லோ ருடைய குறைகளையும் நீக்க வல்லவள். சிறிய குறைகளை நீக்கும் ஆற்றல் சில மனிதர்களிடம் இருக்கிறது. ஆனால் எல்லாவகையான குறைகளையும் போக்கும் ஆற்றல் யாரி டமும்இல்லை. நோயைப்போக்கும் ஆற்றல் மருத்துவரிடம் இருக்கிறது. ஆனால் அந்த மருத்துவரிடம் செல்லும் நோயா ளிகள் யாவரும் நோய் நீங்கிச் சுகம் பெறுவதில்லை. வறிய வர்களுக்குப் பொருள் வழங்கும் வள்ளல்கள் இருக்கிறார்கள். ஆனால்அவர்கள் வறுமை அடியோடுஒழியும்படி வழங்குவது

அரிது. அம்பிகையோ எவ்வளவு பெரிய குறைகளையும் நீக்கும் கருணையும் ஆற்றலும் உடையவள்.

அப்படியே குற்றங்களைப் போக்குகிறவளும் அவள் தான். மனிதர்களின் குற்றங்களை ஆறு வகையாகத் தொகுத்து உரைப்பார்கள். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவை அவை. அவற்றால் மனிதன் மேலும் மேலும் பிறவிக்கு ஆளாகிறான். அந்தக் குற்றங்களினின்றும் நீங்கி இன்புற வேண்டுமானால் அம்பிகையின் அருளைப் பெற வேண்டும்.

குறைகள் நீங்கி நிறைவு பெறுவதற்கும், குற்றங்கள் நீங்கிக் குணம் பெறுவதற்கும் பரிபூர்ணையும் குண நிதியுமாகிய அம்பிகையின் அருள் வேண்டும். அப்போதுதான் குறைவிலா நிறைவும் கவலையில்லாத அமைதியும் உண்டாகும்.

> ''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது''

என்பது திருக்குறள். மனக்கவலை அடியோடு மாற்றும் ஆற்றல் கடவுளுக்குத்தான் உண்டு.

இந்த உண்மையை அம்பிகையின் பக்தர்கள் அறிவார்கள். தங்களிடம் ஏதேனும் இல்லாத குறையோ, குற்றமோ இருந்தால் அவற்றைப் போக்கிக்கொள்ள உலகிலுள்ள மக்களை நாடமாட்டார்கள்; அம்பிகை ஒருத்தியையே சரணாகப் புகுவார்கள்.

அபிராமிபட்டர் இந்தக் கருத்தைச் சொல்ல வருகிறார். 'தாயே, நான் குறை உள்ளவன் என்பதை நன்றாக உணர்கிறேன். அந்தக் குறை போனால்தான் பிறவி என்னும் பிணிபோய் உன்னுடைய திருவருளால் ஆனந்தப் பிராப்தி உண்டாகும். எந்த விதமான குறைபாடு எனக்கு இருந்தாலும் அதை யாரிடம் சென்று நான் முறையிடுவேன்? என்குறையையும் குற்றத்தையும் போக்கும் ஆற்றல்

உடையவள் நீ. உன்னையே நம்பியிருக்கும் என் குறையைத் தீர்ப்பது உனக்குக் கடமையும் ஆகும். ஆகவே நான் உன் திருவடியையே வாழ்த்துகிறேன்; துதிக்கிறேன்; உன்னை வழிபடும் நிலையினின்றும் பிறழாமல், வேறு யாரையும் புகல் என்று எண்ணாமல், ஒரே நிலையாக நின்று ஏத்துகின்றேன்' என்று தொடங்குகிறார்

என் குறை தீர நின்று ஏத்துகின்றேன்.

எல்லாம் அம்பிகையின் பொறுப்பு என்று நம்பி அவளைச் சரணம் அடைந்தவர்களுக்கு அவள் அருள் செய்கிறாள்; அவர்களுடைய துயரங்களை நீக்குகிறாள், அதனால் அன்னைக்குத் துக்க ஹந்த்ரி(194) என்ற திருநாமம் அமைந்திருக்கிறது. குற்றங்களைப் போக்குகிறவளாதலின் தோஷ வர்ஜிதா (185) என்ற திருப்பெயரைக் கொண்டிருக்கிறாள். பாவங்களையெல்லாம் போக்குபவளாதலின், பாபநாசினி, பாபாரண்ய தவாநலா (167, 743) என்று லலிதா சகசிர நாமம் அன்னையைப் புகழ்கிறது. மகாபாதகமாக இருந்தாலும் போக்கும் மகாபாதக நாசினி (214) அவள். மோக நாசினி (163), விக்ன நாசினி (451) என்ற திருநாமங்களும் குற்றங்களையும் குறைகளையும் போக்குகிறவள் என்பதை வலியுறுத்தம். பந்த மோசினி (546) ஆதலின் பந்த பாசக் கட்டறுக்கிறாள். பிறவிப் பெருநோயையே மாற்றும் பெருங்கருணைப் பிராட்டி அன்னை; ஆதலால் அன்றோ பவாரண்ய குடாரிகா (144), பவநாசினி (175), பவரோகக்னி (842) என்ற திருநாமங்கள் அம்பிகைக்கு அமைந்தன!

இவற்றையெல்லாம் நன்கு அறிந்த அபிராமிபட்டர் அபிராமியை அணுகிச் சொல்கிறார்.

என் குறை தீர நின்று ஏத்துகின்றேன்.

குறையென்பது ஒன்று இல்லாத குறையையும் குற்றத்தையும் குறிக்கும் என்று முன்னேபார்த்தோம். இரண்டை

யும் தீர்ப்பவள் அன்னை. நின்று என்பது எழுந்து நிற்பதைக் குறிப்பதன்று; சலனமின்றி, நிலையாக, ஒன்றையே கடைப் பிடிப்பதைச் சுட்டுவது. யாரையேனும் நம்பி அணுகும் போது அவனால் உடனே உதவி கிடைக்காவிட்டால் மற்றொருவனை நோக்கி ஓடுவது மனித இயல்பு. நோய் வந்தால் ஒரு மருத்துவரை அணுகுவதும், சில நாளில் குணம் உண்டாகாவிட்டால் வேறு ஒரு மருத்துவரை நாடு வதும், உறவினர்களும் நண்பர்களும் ஆளுக்கு ஒரு மருத்து வரைப் பற்றிச்சொல்ல, மாறி மாறி அவர்களை நாடுவதும் உலக இயல்பு. எதிலும் விடாப்பிடியாக நின்று முயன்றால் தான் வெற்றி கிடைக்கும். இங்கே, நின்று என்ற சொல் இடைவிடாமல், சலியாமல், கடைப்பிடிப்பதைக் குறிக் கிறது.

'என் குறையைத் தீர்ப்பவள் நீயே என்ற நம்பிக்கை தளராமல் நின்று, நின் அருளைப் பெறுவதற்கு நின் திருவடியை ஏத்தி முறையிட்டுக் கொள்வதே வழி என்று அறிந்து, அந்த வழியில் விடாப் பிடியாக நின்று வழி படு கிறேன்' என்று சொல்கிறார்.

அன்பர்களுடைய கடமை, அன்னையைச் சார்ந்து சரணடைந்து வழிபடுவது. அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பது அவள் கடமை.

> ''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
> என்கடன் பணிசெய்து கிடப்பதே''

என்பது அப்பர் திருவாக்கு.

அம்பிகையைச் சரண் புகுந்துவிட்டால் குறைகள் எல்லாம் தீரும்; இந்தப் பிறவியிலேயே சாந்தி உண்டா கும்; ஞானம் சித்திக்கும்; இனிப் பிறவாத தன்மை அமையும்.

செய்ய வேண்டியதைச் செய்தவர்களுக்கு இனி நற் பயன் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற ஐயமோ அச்சமோ இருப்பதில்லை.

''சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றியது
தான்வந்து முற்றும்எனலால்
சகமீ திருந்தாலும் மரணம்உண்டு என்பதைச்
சதாநிஷ்டர் நினைவதில்லை''

என்பார் தாயுமானவர். ''யான் ஏதும் பிறப்பஞ்சேன்'' என்று உறுதியாகச் சொல்கிறார் மாணிக்க வாசகர். அபிராமி பட்டரும் அந்த உறுதியை உடையவர். 'நான் அம்பிகையைச் சரணம் அடைந்து விட்டேன். என் குறை தீருவதற்காக இடைவிடாமல், தளர்ச்சி இன்றி, அவள் திருவடியைத் துதித்து வாழ்கிறேன்; ஆகவே இனி எனக்குப் பிறப்பு இல்லை' என்ற நெஞ்சுறுதி உடையவர். ''ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை'' (31) என்று சொன்னவர் அல்லவா?

'இவ்வளவு உறுதியாக இருக்கிறீர்களே! மறுபடியும் உங்களுக்குப் பிறப்பு உண்டானால்-?' என்று நாம் அவரை வினவுகிறோம்.

'நிச்சயமாக இனிப் பிறப்பு இல்லை; அப்படிப் பிறப்பு வருவதானால் அதற்குக் காரணம் என் குறை அன்று; அவள் குறை என்றுதான் சொல்வேன். நம்பாத குறை என்னிடம் இல்லை; நம்பினவர்களைக் காப்பாற்றாத குறை அன்னையையே சாரும்' என்கிறார் பட்டர்.

இப்படி யாராவது கேட்பாரென்று கருதியோ என்னவோ தக்க விடையை அன்னையைப் பார்த்தே சொல்கிறார். 'தாயே! நான் நிலையாக நின்று, என் குறை நிச்சயம் போகும், பிறவிஇல்லையாகும் என்று உன்னை ஏத்துகிறேன். என் நம்பிக்கை வீண் போகாது என்ற உறுதி எனக்கு உண்டு. ஒருகால் இனிமேல் நான் பிறந்தால் அதற்குக் காரணம் என் குறையாக இராது; உன் குறைதான். நம்புகிற நானும் சரணாகதி அளிக்கும் நீயும் அன்றி இங்கே வேறு யாருக்கும் தொடர்பு இல்லை. நானோ உன்னைத்

தொழுவதனால் குறை தீர்ந்து நிற்கிறேன்; பிறவி இனி வராது என்ற உறுதி பெற்றிருக்கிறேன். பிறந்தாலோ குறை என்னுடையதன்று. என்னோடு வேறு யாருக்கும் தொடர்பு இல்லையாகையால் வேறு யாரும் அதற்குக் காரணமாக மாட்டார்கள். நீதான் குறையுடையவளா வாய். என்னைக் காப்பாற்றாத குறை நின்னையே சாரும்' என்று உரிமையோடு பேசுகிறார் இந்தப் பேரன்பர். அம்பிகையிடம் உள்ள நெருங்கிய அன்பும் நம்பிக்கையும் இப்படிப் பேச வைக்கின்றன.

இனி யான் பிறக்கின்
நின் குறையே அன்றி யார் குறைகாண்?

இப்படிச் சொன்னவுடன் இந்த அன்பருக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. 'குறைவிலா நிறைவாகிய என் தாயை இப்படிச் சொல்லிவிட்டேனே! பிறக்கின் என்று தானே சொன்னேன்? பிறக்கமாட்டேன். ஆகவே அவளுக்குக் குறை உண்டாகாது' என்று எண்ணியவர், அவளைத் தியானிக்கிறார். அவள் வடிவத்தை உள்ளத்தே நிறுத்திப் பார்க்கிறார். அவளுக்குக் குறையே இல்லை என்றவர், 'என் அன்னைக்கு உண்மையில் ஒரு குறைஉண்டு போல் தோன்கிறதே!' என்று சமட்காரமாகச் சொல்ல வருகிறார். ஆம்; அவளுக்கு இடையே இல்லை. அது குறை அல்லவா? இடைமி கமிக இளைத்திருக்கிறது. மின்னல்தான் மெல்லியது என்றால் அது என்ன மென்மை? அம்பிகையின் இடையை நோக்கினால் மின்னல் தடித்திருப்பது என்று தோன்றும். மின்னலினும் மிக மெலிந்து இருப்பது அம்பிகையின் இடை; ஆதலால் மெலிவை ஆராயும்போது அன்னையின் இடைக்கு முன் மின்னலுக்கு குறைவே உண்டாகும். அவ்வளவு மெலிவும் நுட்பமும் உடைய இடையை உடையவள் தாய். இதைச் சொல்கிறார் இந்தப் பக்தர்.

இரு நீள் விசும்பின் மின் குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்!

[விரிந்த உயர்ந்த வானத்திலுள்ள மின்னலுக்குக் குற்றத்தை உண்டாக்கி, அதனினும் மெலிந்திருக்கின்ற நுட்பமான இடையையுடைய மென்மையான தாயே.]

நேர் இடை—நுணுகிய இடை. அம்பிகை மென்மையானவள்; கோமளாகாரா, கோமளாங்கி (437, 721) என்பன அவளுடைய மென்மையைச் சுட்டும் திருநாமங்கள்.

மறுபடியும் பட்டருக்கு, 'அம்பிகைக்குக் குறை ஒன்று உண்டென்று சொல்லிவிட்டோமே!' என்ற எண்ணம் வருகிறது. அதை மாற்ற எண்ணுகிருர். 'தாயே, நீ நிறைவுடையவள். எங்களைப் போன்ற சிறியவர்களுடைய குறைகளைப் போக்கி நிறைவு தருவாய் என்பது உனக்கு ஒரு பெருமையா? பரிபூரணனுகிய பரமேசுவரன்கூட நின் அன்பு பெருவிட்டால் குறையுடையவனுகிருன். சிறிது நீ அவனைப் புறக்கணித்தாலும் அவனுக்கு வருத்தம் உண்டாகிறது. நீ ஊடல் கொள்ளும் காலத்தில் அது கண்டு அவன் மிகவும் குறைப்படுகிருன்; அந்தக் குறையைப் போக்குவதற்கு வழி என்ன என்று ஆராய்கிருன்; உன் திருவடிகளில் வீழ்கிருன்; தன்னுடைய சடைமுடியின் மேல் நின் திருவடித் தாமரைகளை வைத்துக் கொள்கிருன். அந்தத் திருவடித் தாமரை அவனுடைய குறையையே போக்கும் என்ருல், என் குறை எம்மாத்திரம்? ஆகவே அந்தத் தாமரைகளையே புகலடைந்து என் குறை தீர நின்று அவற்றை ஏத்துகிறேன்' என்கிருர்.

தன் குறை தீர எம்கோன்
சடைமேல் வைத்த தாமரையே.

அம்பிகை ஊடல் கொள்ளும் காலத்தில் பரமசிவன் அவளைப் பணிவதைப் பிற பக்தர்களும் கவிஞர்களும் சொல்லியிருக்கிருர்கள். இந்த ஆசிரியர்,

"வானந்த மான வடிவுடை
யாள்மறை நான்கினுக்கும்
தான் அந்த மான
சரணர விந்தம் தவள நிறக்
கானம்தம் ஆடரங் காம்எம்
பிரான்முடிக் கண்ணியதே" (11)

"திங்கள் பகவின் மணம்நாறும் சீறடி" (35)

"பனிமா மலர்ப் பாதம்வைக்க........
கொன்றை வார்சடையோன் மேலினும்" (6(

என்று முன்னும் இதை வெளிப்படையாகவும் குறிப்பாக வும் சொன்னார்.

"தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரற்கு" என்று (98) பின்னும் சொல்லுவார்.

இங்கே, ஊடலைப் போக்கச் சிவபெருமான் அம்பிகை யின் திருவடியை வணங்குவான் என்று வெளிப்படையாகச் சொல்லாமல், 'எம் கோனுகிய சிவபெருமானுக்குக் குறையே இல்லை. எப்போதேனும் குறை நேர்ந்தால் அவன் தன் சடைமேல் ஒரு தாமரையைச் சூடிக்கொள் வான். அந்தத் தாமரையை நான் ஏத்துகிறேன்' என்று நயமாகச் சொல்கிறார்.

'சிவபரம்பொருளே தன் குறை தீரும்படி உன் திருவடி களைத் தொழுது நிறைவு பெறுகிருன். நான் நிறைவு பெறுவதற்கு என்ன சந்தேகம்?' என்ற கருத்து இதில் அமைந்திருக்கிறது.

என்குறை தீர நின்று ஏத்துகின்
றேன்;இனி யான்பிறக்கின்
நின்குறை யே அன்றி யார்குறை
காண்? இரு நீள்விசும்பின்

மின்குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீரஎம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே.

[அகன்ற உயர்ந்த வானத்தில் உள்ள மின்னலுக்கு ஒரு குறையைக் காட்டி அதனினும் மெலிவு பெறுகின்ற, நுட்பமான இடையையுடைய மெல்லியலே! எம்முடைய பிராணுகிய சிவபெருமான் தன்னுடைய குறை தீரும் பொருட்டுத் தன் சடை முடியின்மேல் வைத்த நின் திருவடித்தாமரைகளை அடியேனுடைய குறை தீரும்பொருட்டு தளராமல் நின்று துதித்து வழிபடுகிறேன் (அதனுல் நான் இனிப் பிறக்கமாட்டேன்). ஒருகால் அடியேன் இனிமேல் பிறந்தால், அதற்குக் காரணம் நீ என்னைப் புறக்கணிக்கும் குறையே யன்றி வேறு யார் குறை?

பிறக்கின் என்பது பிறக்கமாட்டேன் என்ற குறிப்பை உடையது. செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அருமையைச் சுட்டி நிற்கும் என்பதைத் திருக்குறளில் பரிமேலழகர் பல இடங்களில் தெரிவிக்கிருர். காண்: அசை. இரு விசும்பு. நீள் விசும்பு. இங்கே நீளம் உயரத்தைச் சுட்டியது. குறை காட்டுவதாவது, இது மெல்லியதன்று என்று கூறும்படி உள்ள குறையை உண்டாக்குதல். நேர்தல்—நுட்பமாக இருத்தல். மெல்லியல் என்பது விளியேற்று மெல்லியலாய் என்று நின்றது. எம் என்றது பிற அடியார்களையும் உளப்படுத்தி. சிவபெருமானுடைய குறை, அம்பிகையின் ஊடல் தீரவில்லையே என்பது. அவள் அன்பைப் பெருத குறை அது. சடைமேல் வைத்த என்றது, குறிப்பால் இறைவன் சடைமுடி தேவியின் தாளில் பட வணங்குதலைப் புலப்படுத்தியது. தாமரை என்றது ஆகுபெயர்; திருவடிகளைக் குறித்தது. தாமரையே ஏத்துகின்றேன் என்று முடியும்.]

அம்பிகையை வழிபடுகிறவர்களுக்குப் பிறவித்துன்பம் இல்லைஎன்பது கருத்து.

**அபிராமி அந்தாதியில் 72-ஆவது பாடல் இது.**

# அவர் எழுதிய உருவம்

அன்பர்கள் தாம் போற்றும் தெய்வத்தை மூன்று கரணங்களாலும் வழிபட்டு இன்புறுவார்கள். மூர்த்தியைக் கண்ணால் கண்டும், தலையால் வணங்கியும், கையால் அர்ச்சனை செய்தும் காயம் என்னும் கரணத்தை ஈடுபடுத்துவார்கள்; வாக்கினால் அம் மூர்த்தியின் திருநாமங்களையும் புகழையும் சொல்லிச் சொல்லி இன்புறுவார்கள்; மனத்தினால் தியானிப்பார்கள்.

இவற்றில் உடம்பினால் செய்யும் செயல்கள் எளியவை. இறைவன் கோயிலுக்கு யாரும் சென்று வலம் வரலாம். கண்ணினால் இறைவனைக் காணலாம். கையால் தொழலாம். கீழே விழுந்து வணங்கலாம். இவை ஓரளவு முயற்சி செய்தால் நடக்கக்கூடிய காரியங்கள்.

அவனுடைய நாமத்தைச் சொல்வது அவற்றைவிடச் சற்றுக் கூடுதலான முயற்சியினால் அமைவது. இறைவன் நாமத்தைத் தெரிந்துகொண்டு அதைப் பிழையறச் சொல்லவேண்டும். அவன் புகழைச் சொல்லும் பாடல்களைப் பிழையறப் படித்துப் பழக வேண்டும்.

அடுத்ததுதான் எல்லாவற்றிலும் கடினமானது. இறைவனைத் தியானம் செய்வதென்பது எளிய செயலன்று. மனம் ஒரு நிலையில் நிற்கும் இயல்புடையது அன்று. அதில் இறைவனுடைய திருவுருவை நிறுத்திப் பழக வேண்டும். புறக்கண்ணால் கண்டு கண்டு அந்தத் திருவுருவத்தை அகத்திலே நிறுத்திப் பழகவேண்டும். வெளியிலே உள்ள வடிவங்களைக் கண்டு வழிபடுவதன் பயனே அதுதான்.

கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் பிறர் செய்யும் பூஜையைப் பார்ப்பதும் சரியை என்று சொல்லப்பெறும். நாமே பூஜைசெய்வது கிரியை. உண்முகத்திலே இறைவன் திருவுருவை நிறுத்திப் பயில்வது யோகம். அதற்குமேல் உண்டாகும் தெளிவு ஞானம். கோவிலையும் திருவுருவங் களையும் கண்ணால் கண்டதோடு நில்லாமல் உட்கொள்ள வேண்டும்; அகத்திலே வைத்துத் தியானம் பண்ணவேண் டும்; உண்முகப் பூஜை புரியவேண்டும். கோயிலில் உள்ள மூர்த்தியைக் கண்ணால் கண்ட அளவோடு நின்றுவிட்டால் பயன் இல்லை. காண்பது வேறு; கண்டதை உள்ளே கொண்டு நிறுத்தி இன்புறுவது வேறு.

மனத்தில் இறைவனுடைய திருவுருவத்தை நிறுத்தி வைப்பது மிக மிக அரிய காரியம் ஆனாலும் விடாப் பிடியாகச் சாதனம் புரிந்தால் தியானம் கைகூடும். அதற் காக அன்பர்கள் அடிக்கடி மூர்த்தி தரிசனம் செய்து, படம் பிடிப்பவன் இருட்டறையில் போய்க் கழுவுவது போல, கண்மூடி உள்ளே பார்க்க முயல்வார்கள்; அந்த வடிவத்தைப் பாடிப் பாடி நினைப்பூட்டிக் கொள்வார்கள்.

பெரியவர்களுடைய திருப்பாடல்களிலே இறைவ னுடைய அங்க வருணனைகள் வரும். அத்தகைய பாடல் களைப் படிக்கும் போதெல்லாம் அந்த அங்கங்களை உள்ளே பாவனை பண்ணிப் பார்க்கவேண்டும். இடை விடாமல் நினைத்தால் திருவுருவம் மெல்ல மெல்ல உள்ளே தோன் றும். முதலில் தெளிவு இல்லாமல் தோன்றும். மன ஒருமைப்பாடு முறுக, முறுக அந்தத் திருவுருவம் தெளி வாகத் தெரியும்.

"அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்று திருமூலர் சொல்வார்.

வெளியிலே கண்ட திருவுருவத்தை உள்ளே நிறுத்தி அன்புடனும் ஆவலுடனும் தியானம் செய்தால் அந்த

மூர்த்தி உயிர் பெற்று ஜோதி வடிவாகத் தோன்றும். பச்சையாக இருக்கும் அப்பளம் சுவையாக இராது. அதை எண்ணெயில் இட்டுப் பொரித்தால், நல்ல வெண்ணிறம் பெற்று உண்ணும் பக்குவமும் சுவையும் பெற்றுவிடு கிறது. அவ்வாறு நம்முடைய உபாசனு மூர்த்தியைப் பல காலும் தரிசித்து உள்ளே தியானித்தால் நம்முடைய அன்பெனும் எண்ணெயினுல் அந்தத் திருவுருவம் இன்பந்தரும் ஒளியுடன் விளங்கும்.

அடியார்கள் இறைவனுடைய அங்க லாவண்யத்தை அடிக்கடி சொல்வதும் நினைப்பதும் மனத்தில் தியானம் கைகூடி வருவதற்காகத்தான். அருளாளர்களின் பாடல் களைப் படிக்கும்போது அவற்றில் வரும் வருணனைகளில் ஈடுபட்டு உள்ளத்தே அவற்றை எழுதிப் பார்த்தால் மனம் மெல்ல மெல்ல ஒருமை நிலையை அடையும்.

> ''மௌனத்தை உற்று
> நின்னை உணர்ந்துஉணர்ந்து எல்லாம் ஒருங்கிய
> நிர்க்குணம்பூண்டு
> என்னை மறந்திருந் தேன்; இறந் தேவிட்டது
> இவ்வுடம்பே''

என்பது அருணகிரிநாதர் திருவாக்கு. சகுண உபாசனை யிலிருந்து நிர்க்குண அநுபவம் வர மனம் ஒருமுகப்பட வேண்டும்.

அபிராமிபட்டர் இந்தத் தியானம் கைவந்தவர்; அம்பிகையைப் புறக்கண்ணுல் தரிசிப்பதோடு நில்லாமல் அவள் அங்க நலன்களை உள்ளேயும் தரிசிப்பவர்; பல காலும் வாக்கினுல் சொல்லிச் சொல்லி, அவ்வாறு சொல்லும் போதெல்லாம் உள்ளே எண்ணி எண்ணி, அம்பிகையின் திருவுருவத்தை உள்ளத்தே எழுதி எழுதி இன்புறுகிறவர்.

இதோ வருகிறது அம்பிகையின் திருவுருவத்தை நினைப்பூட்டிக்கொள்ளும் பாடல்: திமிறிக்கொண்டு

போகும் மனத்தைத் தடுத்து நிறுத்தும் கடிவாளம் போலப் பயன்படுபவை இத்தகைய பாடல்கள்.

இப்போது அம்பிகையின் திருவுருவத்தைச் சொல்லால் எழுதுகிருர். அதைப் படிக்கும்போது நாமும் நம் உள்ளத்தில் எழுதிக்கொண்டு பார்க்க வேண்டும்.

அம்பிகை வீற்றிருக்கிருள். அவள் அழகிய கடம்ப மலர் மாலையை அணிந்திருக்கிருள். அது பளிச்சென்று கண்ணில் படுகிறது. அவள் கதம்பவனத்தில் வசிக்கிறவள்; கதம்பமலரைக் குழலில் அணிகிறவள்; செவியிலே செருகிக் கொள்கிறவள்; கடம்ப மாலையையே மார்பில் அணிந்து செம்மாந்து வீற்றிருக்கிறவள்.

தாமம் கடம்பு.

திருமார்பைப் பார்த்த பிறகு சற்றே தம் பார்வையைப் பக்கவாட்டில் திருப்புகிருர் அபிராமிபட்டர். அவள் திருக்கரங்களில் ஏந்தியிருக்கும் ஐந்து மலர்களாகிய பஞ்ச பாணத்தைக் காட்டுகிருர். பலமுறை அவர் அவற்றைப் பற்றிச் சொல்லியிருக்கிருர். சொன்னுல் என்ன? இன்னும் நாம் கண்ணை மூடிக்கொண்டால் அந்த வடிவம் தோன்றவில்லையே! இருட்டுத்தானே தெரிகிறது? எத்தனை தடவை சொன்னுலும் நிற்கவில்லையே! அதற்காக விட்டு விடலாமா? திருப்பித் திருப்பிச் சொல்கிருர். 'இதோ ஆயுதங்கள்' என்கிருர்.

படை பஞ்ச பாணமும்.

அம்பைச் சொன்னுல் வில்லையும் சொல்ல வேண்டியதுதானே? வில் இல்லாமல் அம்பு உண்டா? இதோ அம்பிகையின் திருக்கரத்தில் உள்ள கரும்பாகிய தனுவைக் காட்டுகிருர்.

தனுக் கரும்பு.

அம்பிகையை வழிபடுகிறவர்கள் எத்தனையோ பேர். யட்சர், கின்னரர், கந்தருவர், வித்தியாதரர், தேவர்கள் எல்லோரும் அம்பிகையின் திருவருளை யாசிக்கிறவர்கள். அந்தப் பெருமாட்டியின் மந்திரங்களை ஜபம் பண்ணுகிற சாதகர்கள் பலர். பைரவர்கள் என்று ஒரு கூட்டத்தினர், அவர்கள் அம்பிகையை வழிபடுகிறவர்கள். 'மயான வாசினியது மந்திர சாதகரான பைரவ வேஷதாரிகள்' என்று தக்கயாகப் பரணி உரையாசிரியர் எழுதுவார். "இறைவி பைரவர்களே" (தக்க. 429) என்று தக்கயாகப் பரணியிலே வருகிறது.

அவர்கள் அம்பிகையை நள்ளிருளில் வழிபடுவார்கள். சாக்தர்கள் நடுயாமத்தில் சிறப்பான பூஜையைப் புரிவார்கள். எல்லோரும் உறங்கும் நேரத்தில் அவர்கள் விழித்திருந்து அம்பிகையை வழிபடுவார்கள். இதை இந்தப் பக்தர் நினைப்பூட்டுகிறார்

யாமம், வயிரவர் ஏத்தும் பொழுது.

சிவபெருமானுக்கே மகாபைரவர் என்பது ஒரு பெயர். அவர் எம்பெருமாட்டியுடன் தனியே இருந்து அவளைப் புகழ்கிற காலம் நள்ளிரவு. மஹாபைரவ பூஜிதா, மார்த்தாண்ட பைரவாராத்யா (லலிதா சகசிர நாமம், 234, 785) என்று சிவபெருமானாகிய பைரவர் அம்பிகையை வழிபடுவதைக் குறிக்கும் நாமங்கள் லலிதா சகசிரநாமத்தில் வருகின்றன.

யார் வழிபட்டாலும் பூஜை பண்ணினாலும் அவளுடைய திருவடியையே லட்சியமாகக் கொள்வார்கள். அந்த அடியே யாவருக்கும் தாபத்திரயங்களைப் போக்கும் நிழலைத் தருவது. அதுவே மோட்ச சாம்ராஜ்யமாக விளங்குவது. பக்தர்களுக்குப் புகலிடமாகவும் பாதுகாப்புத் தரும் அரணமாகவும் இருப்பது அம்பிகையின் திருவடி.

எமக்கு என்று வைத்த சேமம், திருவடி.

அடியைத் தரிசித்து மறுபடியும் கண்ணை மேலே உயர்த்துகிருர். அம்பிகையின் நான்கு திருக்கரங்கள் தெரி கின்றன.

செங்கைகள் நான்கு.

மாலையையும், பஞ்சபாணங்களையும், வில்லையும், திரு வடிகளையும், திருக்கரங்களையும் கண்ட பிறகு ஒட்டு மொத்தமாக அந்தச் சமுதாய சோபை எப்படி இருக் கிறது? முதல் பாட்டிலேயே, 'உதிக்கின்ற செங்கதிர்" என்று தொடங்கினவர் அல்லவா? ஒரே செஞ்சோதிப் பிழம்பாக அம்பிகை ஒளிர்கிருள்.

ஒளிசெம்மை.

இப்போது அம்பிகையின் திருநாமத்தை நினைக்கிருர். திரிபுரசுந்தரியாகிய அவளுக்குத் திரிபுரை என்பதும் ஒரு பெயர். மூன்று மூன்ருக உள்ள பொருள்களெல்லாம் அவளாக இருக்கிருள்.

நாமம் திரிபுரை.

மூன்று என்றதைக் குறிக்கும் இந்தத் திருநாமத்தைச் சொன்னவுடன் இந்தப் பக்தருக்கு அம்பிகையின் திருமுக மண்டலத்திலுள்ள மூன்று திருவிழிகள் நினைவுக்கு வரு கின்றன. கதிரவனையும், சந்திரனையும், அக்கினியையும் மூன்று விழிகளாகக் கொண்டவள் அபிராமி. "கண் மூன்றும் கருத்தில் வைத்து" (53) என்று அம்பிகையின் மூன்று கண்களை முன்பும் சொன்ஞர். இப்போது,

ஒன்ருேடு இரண்டு நயனங்களே

என்கிருர், நெற்றிக் கண்ணுகிய ஞானக்கண் தனிச் சிறப்பு உடையது. எல்லோருக்கும் முகத்தில் இரண்டு கண்களே உண்டு. சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் யாருக்கும் இல்லாத தனிச்சிறப்பாக நெற்றியிலே கண் இருக்கிறது. அந்தச் சிறப்பை நோக்கி அதைத் தனியே வைத்து,

'ஒன்ருேடு' என்று சொல்லிப் பின்பு மற்றவற்றை, 'இரண்டு நயனங்களே' என்ருர். ''முக் கண்ணியை'' என்று பின்னும் சொல்வார். அம்பிகைக்கு, த்ரிநயனு, த்ரிலோசனு, த்ரயம்பகா (லலிதா. 453, 477, 762) என்றுள்ள திருநாமங்கள் அப்பெருமாட்டி மூன்று கண்களை உடையவள் என்பதைப் புலப்படுத்தும்.

இவ்வாறு அம்பிகையின் திருவுருவத்தைத் தம் உள்ளத்தில் எழுதிக்கொண்ட இவ்வாசிரியர் நாமும் எழுதிக் கொள்ளும்படி பாடுகிருர்.

தாமம் கடம்பு; படைபஞ்ச
பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது; எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி; செங்கைகள்
நான்கு; ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்ருேடு.
இரண்டு நயனங்களே.

[அபிராமி அம்மையின் மாலை கடம்பு; ஆயுதம் ஐந்து மலரம்புகள்; வில் கரும்பு; அவளுடைய மந்திர சாதகர்களாகிய வயிரவர்கள் அவளை வழிபடும் நேரம் நடுயாமமாகிய நள்ளிரவு; எம்மை ஆட்கொள்ளும் பொருட்டு வைத்துள்ள பாதுகாப்பு அவள் திருவடி; அவள் செம்மையான திருக்கரங்கள் நான்கு; அவள் திருமேனியின் ஒளி சிவப்பு; அவளுடைய திருநாமம் திரிபுரை; அவள் திருவிழிகள் ஒன்ருேடு இரண்டாகிய மூன்று.

தாமம்—மாலை; இது மார்பில் அணிவது. தனு—வில், சேமம்—பாதுகாப்பு. அம்மை என்பதை, தாமம், படை, தனு, திருவடி, செங்கைகள், நயனங்கள் என்பவற்ருேடும் கூட்டுக]

இது அபிராமி அந்தாதியில் 73-ஆம் பாடல்.

# அடியார் இயல்பு

அம்பிகையின் பக்தர்கள் எந்த விதமான போகங்களிலும் ஆசை வைக்கமாட்டார்கள். இறைவியின் உபாசனையிலே இன்பம் காணும் அவர்களுக்கு இந்த உலகத்திலுள்ள இன்பங்கள் சுவை தராமல் போவது ஆச்சரியம் அன்று. அவர்களுக்குச் சுவர்க்காதி போகங்களும் மதிப்புடையன அல்ல. ''இந்திர லோகம் ஆளும், அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே'' என்பது ஆழ்வார் திருவாக்கு.

அன்பர்களுடைய குறிக்கோள் அம்பிகையின் பாதாரவிந்தங்களே. அவர்கள் பெற நினைக்கும் பயன் அந்தத் திருவடிகளை அடைவதே. இறைவியின் அடியே மோட்ச ரூபமானது; சாட்சாத் மோட்சமே அது. மோட்சம் அடைந்தார் என்பதும், இறைவியின் திருவடியை அடைந்தார் என்பதும் ஒரே பொருளுடையவை.

திருமுருகாற்றுப்படையில், ''சேவடி படரும் செம்மல் உள்ளமொடு' (62) என்றதற்கு உரை எழுதுகையில் நச்சினார்க்கினியர், 'திருவடியே வீடாக இருக்கும்' என்றார். அது, ''தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவம்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி'' என்பதனாலும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றாலும் உணர்க' என்று எழுதுகிறார்.

அபிராம வல்லியின் அடியிணையையே தம்முடைய பெரும்பயனாகக் கொண்டவர்கள் அடியார்கள்; அடியை

லட்சியமாக உடையவர்களாதலின் அடியார் என்ற பெயர் வந்தது.

பதமுக்தி, பரமுக்தி என்று இரண்டு வகை முக்திகள் உண்டு. பதமுக்தி என்பது இந்திரபதவி முதலியவற்றைக் குறிப்பது. நாம் செய்யும் புண்ணியங்களுக்கு ஏற்ப அவை கிடைக்கும். ஆனால் அவை யாவும் ஒரு காலத்தில் அழியும் தன்மையை உடையவை. பரமுக்தி என்பது முடிவான விடுதலையைப் பெறும் பேரின்ப வாழ்வு. அதைப் பெற்ற வர்கள் என்றும் மாறாத இன்பத்தில் ஈடுபட்டிருப்பார்கள். அதையே வீடு என்று தமிழில் சொல்வார்கள்.

பதவிகளில் இருக்கும் இந்திராதி தேவர்கள் தம்முடைய பதவிகள் நிலைப்பதற்காக அம்பிகையைப் புகழ்ந்து வழிபடுவார்கள். அவர்களுடைய பதவிக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது அம்பிகையின் திருவருள். அந்தத் திருவருளை நாடும் அடியவர்கள் அம்பிகையின் திருவடியாகிய பரமுக்திக்குக் குறைவான எதையும் விரும்பமாட்டார்கள். அவள் திருவடியையே தாம் பெறவேண்டிய பயனாகக் கொண்டவர்கள், அவளைத் துதித்து அவளால் நிலைபெறுத்திக் கொள்ளும் பதவிகளை உடையவர்களை உயர்ந்தவர்களாக எண்ணமாட்டார்கள்; அவர்கள் பதவியையும் விழையமாட்டார்கள்.

''கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு''

என்பது திருவாசகம்.

அடியார்களுக்கு அபிராமவல்லி எல்லாரினும் உயர்ந்தவள் என்பது தெரியும். அவள் அருள் எல்லாவற்றினும் மேலான இன்பத்தைத் தரும் என்பதையும் அறிவார்கள். அவள் திருவடியாகிய முக்தி எல்லோருடைய பதவிகளுக்கும் மேலான தென்பதும், அழியாத வீடு என்பதும் அவர்கள் தெளிவாக அறிந்தவை.

அபிராம வல்லி எத்தகைய பெருமையை உடைய வள்? அபிராமிபட்டர் சொல்கிறார். அவளுடைய இன் பத்தை விரும்பி மூன்று கண்களையுடைய பரமசிவமே அவளைத் துதிக்கிறார்.

நயனங்கள் மூன்றுடை நாதனும்....பரவும்
அபிராம வல்லி.

லலிதா சகசிர நாமத்தில் மஹாபைரவ பூஜிதா (231) என்பது ஒரு திருநாமம். மஹாபைரவர் என்பது சிவபெரு மான் திருநாமம். அப்பெருமான் அம்பிகையைப் பூசிக் கிறாராம். சிவாரத்யா(406) என்பது மற்றொரு திரு நாமம். சிவபெருமானால் ஆராதிக்கப் படுபவள் என்பது அதன் பொருள். சிவபெருமானும் பரவும் பெருமாட்டி அபிராமி என்றால் அவளுக்கு மிஞ்சித் தெய்வம் ஏது?

வேதம் அம்பிகையின் பெருமையைச் சொல்லித் துதிக்கிறது.

வேதமும்............பரவும் அபிராம வல்லி.

'வேதத்தால் புகழப்பெறும் பெருமைகளை உடைய வள்' என்ற பொருளைத் தரும் ச்ருதி ஸம்ஸ்துத வைபவா (929) என்ற திருநாமம் அம்பிகைக்கு உண்டு. வேதந்தான் அம்பிகையின் பெருமையை அறிந்து கூறுகிறது. அதி லிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம். வேதத்தினால் அறியப்படும் அவளை, வேத வேத்யா என்று லலிதா சகசிர நாமம் கூறுகிறது. அவளை நன்கு அறிந்த வேதம் அவளைப் பரவுகிறது. அதுமட்டுமா? திருமாலும் புகழ்கிறார்.

நாரணனும்....பரவும் அபிராம வல்லி.

கமலாக்ஷ நிஷேவிதா (558) என்னும் அம்பிகையின் திருநாமம் இந்தக் கருத்தை உடையது.

மேலிருந்து கீழே படிப்படியாகச் சொல்கிறார், அம்பிகை யைப் பரவுபவர்கள் இன்னார் இன்னார் என்று. சிவபெரு

மான் புகழ்கிருர்; வேதம் பரவுகிறது; நாராயண மூர்த்தியும் துதிக்கிருர். இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம். அதற்கு முடிவு ஏது? மும்மூர்த்திகளும் பரவுகிருர்கள். இரண்டு மூர்த்திகளைச் சொல்லி விட்டார். கடைசியில் அயனைச் சொல்கிருர். அயனும் அபிராமவல்லியைப் பரவுகிருன்.

## அயனும் பரவும் அபிராம வல்லி.

இவர்களெல்லாம் போற்றுவதை லலிதாம்பிகையின் திருநாமங்களாகிய, ப்ரஹ்மோபேந்த்ர மஹேந்த்ராதி தேவ ஸம்ஸ்துத வைபவா (83), ஹரிப்ரஹ்மேந்த்ர ஸேவிதா (321) என்பவை புலப்படுத்துகின்றன.

நயனங்கள் மூன்றுடைய நாதன் அம்பிகையைப் பரவி இன்பம் பெறுகிருன். வேதம் அவளைப் புகழ்ந்து பெருமை அடைகிறது. திருமால் அவளைப் போற்றி நலம் பெறுகிருன். பிரமன் அவளை வழிபட்டு ஆற்றல் பெறுகிருன். மும்மூர்த்திகளும் அபிராமியைப் போற்றும் திறத்தை அபிராமிபட்டர்,

"கமலாலயனும், மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும், துதியுறு சேவடியாய்"

என்று முன்னும் சொன்னர்.

"முதல்தேவர் மூவரும் யாவரும்
போற்றும் முகிழ்நகையே"

என்று பின்னும் சொல்வார்.

இவ்வாறு மும்மூர்த்திகளாலும் வேதங்களாலும் போற்றப்பெறும் அபிராமவல்லியின் திருவடிகளையே தாம் அடைய வேண்டிய முடிவான பயன் என்று கொண்டவர்கள் அடியார்கள்.

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும்
நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி
அடியிணையைப்
பயன் என்று கொண்டவர்.

அத்தகையவர்கள் மேலே சொன்னவர்களைவிடத் தாழ்ந்தவனாகிய இந்திரனுடைய பதவியையா விரும்புவார்கள்? அவர்களுக்கு அது மிகவும் துச்சமானது. இதைச் சொல்ல வருகிறார் ஆசிரியர்.

இந்திர பதவி எத்தகையது?

இந்திரன் தேவலோகத்துக்கு அதிபதி. அது பொன்னுலகம். எங்கும் தங்கமயமாக இருக்கும். கற்பகவனம் அங்கே இருக்கிறது. அந்த மரங்களும் பொன்னிறம் பெற்றவை. அவன் படுக்கும் பாயல் கற்பகக் காட்டின் மத்தியில் இருப்பது. அதுவும் தங்கமயமானது. தேவலோகத்தில் உள்ள அரம்பை முதலிய மகளிர் நடனமாடக் கண்டும் பாடக் கேட்டும் இன்புற்று வாழ்பவன் இந்திரன். அவர்களோடு பொன்மயமாயன பாயலில் இன்புறுவன் அவன்.

இந்திரன் தேவலோக மகளிரின் ஆடல்பாடல்களில் ஈடுபட்டுக் களிப்பதைத் திருவிளையாடற்புராண ஆசிரியர் பின்வருமாறு வருணிக்கிறார்:

“முன்னதாம் முகத்தில் வண்டு
மூசுமந் தார நீழல்
பொன்னவிர் சுணங்குண் கொங்கைப்
புலோமசை மணாளன் பொற்பூண்
மின்னவிர்ந் திமைப்பச் சிங்கம்
சுமந்தமெல் லணைமேல் மேவி
அன்னமென் னடையார் ஆடும்
ஆடல்மேல் ஆர்வம் வைத்தான்.”

"மூவகை மலரும் பூத்து
வண்டுளே முழங்கத் தெய்வப்
பூஅலர் கொடிபேர்ந் தன்ன
பொன்னனூர் கூத்தும் அன்னார்
நாஅலர் அமுதம் அன்ன
பாடலும் நாக நாட்டுக்
காவலன் கண்டு கேட்டுக்
களிமதுக் கடலின் ஆழ்ந்தான்."

(இந்திரன் பழிதீர்த்த படலம்,2, 3.)

இவ்வாறு இன்புற்று வாழும் இந்திர பதவியையும் அம்பிகையின் அடியார்கள் விரும்பமாட்டார்களாம். சிவபெருமான் முதலியவர்கள் போற்றும் பெருமாட்டியாகிய அம்பிகையின் சரணாரவிந்தங்களையே லட்சியமாகக் கொண்டவர்கள் இந்திர பதவியை விரும்பிப் பெறுவார்களா?

பாவையர் ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில்
தங்குவரே?

எல்லாவற்றுக்கும் மேலான பதவியைப் பெற இருப்பவர்கள் தாழ்ந்த பதவியாகிய இந்திரபோகத்தை விரும்பமாட்டார்கள் என்ற கருத்தையே இப்படிச் சொல்கிறார் ஆசிரியர்.

நயனங்கள் மூன்றுடை நாதனும்
வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம
வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர்
ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக்
காவினில் தங்குவரே?

[மூன்று திருவிழிகளையுடைய சிவபிரானும், வேதங்களும், திருமாலும், பிரமதேவனும் புகழ்ந்து பாராட்டும் அபிராமவல்லியின் இரண்டு திருவடிகளையே முக்தியாகிய பயனென்று கொண்டு வழிபட்டுத் தியானிக்கும் அடியவர்கள், அரம்பை மகளிர் நடனம் புரியவும், இன்னிசைப் பாடல்களைப் பாடவும் அவற்றைக் கண்டும் கேட்டும் இன்புற்று, பொன்னிறம் பெற்ற படுக்கையில் அவர்களோடு பொருந்தி இன்புறுவதற்கு இடமாகிய கற்பகச் சோலையிலே இந்திரராகி வீற்றிருப்பார்களா?

பரவுதல்—புகழ்தல்; துதித்தல். பரவும் அபிராமவல்லி என்றும், பரவும் அடியிணை என்றும் இரண்டு விதமாகவும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். பயன்—எல்லாவற்றினும் மேலாம் பயனாகிய முக்தி. கொண்டவர்—லட்சியமாகக் கொண்டு தியானிக்கும் அடியார். பாவையர்—அரம்பை முதலிய தேவலோகத்து அணங்குகள். பொன் சயனம்—பொன்னாலாகிய படுக்கை. தமனியக் கா—பொன்னிறம் பெற்ற கற்பக மரங்கள் அடர்ந்த பூஞ்சோலை. தங்குவரே—தங்குவார்களா; ஏ: வினா. இந்திர பதவியைப் பெற்று இருப்பார்களா என்றபடி.

தங்குவரே என்பதை உடம்பாடாக்கி, ஏயை அசையாக்குவதும் ஒருவாறு பொருந்தும். தேவியின் திருவடியையே பயனாகக் கொண்டவர் எளிதில் இந்திரபதவியைப் பெறுவர் என்று அதற்குக் கருத்து உரைக்க வேண்டும்.]

இது அபிராமி அந்தாதியில் 74-ஆம் பாடல்.

# சொர்க்கமும் முக்தியும்

அம்பிகையின் திருவடிப் பேற்றையே முடிவான பயனாக எண்ணி வழிபடுகின்றவர்கள் இந்திர பதவியை யும் விரும்பார் என்று சொன்ன அபிராமிபட்டர், அத்த கைய லட்சியம் இல்லாமல், அம்பிகையின் திருக்கோலத் தைத் தரிசித்தும் தியானித்தும் வழிபடுகிறவர்கள் பெறும் பயனை அடுத்தபடி சொல்கிருர்.

ஒரு பள்ளிக்கூடத்தில் புகுந்தவன் பள்ளியிறுதி வகுப் பில் தேர்ச்சி பெற்று மேலே கல்லூரிக்குப் போகவேண் டும் என்று எண்ணிப் பயிலப் புகுகிருன். இடையிலே, "நீ இதோடு படிப்பை நிறுத்திவிடு; உனக்கு நல்ல வேலை தருகிறேன்" என்று யாராவது சொன்ருல் அவன் அதை விரும்பமாட்டான். கல்லூரியில் படித்துப் பட்டம் வாங்கு வதே அவனுடைய முடிவான நோக்கம். அந்த லட்சியம் கைகூடும் வரை அவன் தளர்ச்சி இல்லாமல் படிப்பான்.

வேறு ஒருவன், எதுவரைக்கும் படிக்கப் போகிரேம் என்ற நோக்கமே இல்லாமல் படிக்கிருன். ஒவ்வொரு வகுப்பிலும் நன்ருகத் தேர்ச்சி பெறுகிருன். பள்ளி இறுதி வகுப்பிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுகிருன். பிறகு அவனுக்கு வேலை கிடைக்கிறது. அவனைப் படிக்க வைத்த வர்கள் அவனுடைய அறிவாற்றலை உணர்ந்து, 'இவனை மேலும் படிக்க வைத்தால் கல்லூரியிலும் நன்ருகப் பயின்று பட்டம் பெற்றுச் சிறப்படைவானே' என்று எண்ணுகிருர்கள். சில மாதங்கள் வேலை பார்த்தவனை மறு படியும் கல்லூரியில் படிக்க வைத்துப் பட்டம் பெறச் செய்கிருர்கள். அவன் பட்டப் படிப்பில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுகிருன்.

அம்பிகையின் திருவடிப்பேற்றையே பரம லட்சிய மாகக் கொண்டவர்கள் முதலில் சொன்னவனைப் போன்ற

வர்கள். அவர்கள் இடையில் இந்திரபதவி முதலிய எந்தப் பதவியையும் விரும்பாமல் பரமுக்தியை அடைவார்கள்.

வேறு ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்கள் அம்பிகையை வணங்கினால் நல்வாழ்வு வாழலாம் என்று எண்ணுகிறவர்கள். அவர்கள் தங்கள் விருப்பம் நன்கு நிறைவேறப் பெறுவார்கள். இம்மையில் நன்றாக வாழ்வது என்ன வியப்பு? மறுமையில் சொர்க்கலோக பதவி அடைவார்கள்; இந்திர போகத்தை நுகர்வார்கள்; இந்திரனுடைய பதவியையே அடைவார்கள்.

நூறு யாகம் செய்தால் இந்திர பதவியை அடையலாம். அதனால் இந்திரனுக்குச் சதமகன் என்ற பெயர் உண்டு. அம்பிகையின் வழிபாடு பல யாகங்களைச் செய்த பயனை உண்டாக்கும். ஆகவே அம்பிகையை வழிபட்டவர்கள் இந்திர பதவியைப் பெறுவார்கள்.

அம்பிகையின் திருவுருவத்தைத் தரிசித்துத் தியானித்து வழிபட்டவர்கள் முக்தியைத் தம்முடைய லட்சியமாகக் கொள்ளாவிட்டாலும் அவர்களுக்கு அது இறுதியில் நிச்சயமாகக் கிடைக்கும். முதலில் அவர்கள் விரும்பிய சுகவாழ்வும், சொர்க்கவாழ்வும் கிடைக்கும்; பிறகு பிறவாத நிலையும் உண்டாகும்.

ஒரு குழந்தை, இனிய சுவையுள்ள உணவை உண்ணுகிறது. அந்த உணவின் சுவையிலே அது இனிமை காண்கிறது. அதை விரும்பி உண்ணுகிறது. அந்த உணவு உடம்புக்கு வளம் தருவதாதலால், வெறும் சுவை தருவதோடு நில்லாமல் அந்தக் குழந்தைக்கு உடல் நலத்தையும் தருகிறது. குழந்தைக்குச் சுவை ஒன்றே தெரிந்திருந்தாலும், உண்ட உணவின் சாரம் அதற்கு உடல் வளர்ச்சியையும் தருகிறது. அவ்வாறே அம்பிகையின் திருமேனியைத் தியானித்தவர்கள் சொர்க்கபோக வாழ்வை அடைவதோடு நிற்கமாட்டார்கள்; மோட்ச இன்பத்தையும் அடைவார்கள்; இனிப் பிறவாத பரமானந்தப் பிராப்தியைப் பெறுவார்கள்.

இந்தக் கருத்தை அபிராமிபட்டர் சொல்கிறார்.

'அம்பிகையின் திருமேனியைக் குறித்தவர் கற்பக நிழலில் வாழும் வாழ்வைப் பெறுவர்; பிறவி இல்லாத முக்தி நிலையை அடைவர்' என்று சொல்ல வருகிறார்.

அம்பிகை எல்லாப் பிரபஞ்சங்களையும் படைக்கிறவள். ஸர்வலோக ஜனனி அவள். புவனங்களைப் படைத்து யாவருக்கும் பிறப்பைத் தரும் அம்பிகையே தன்னை அண்டினவர்களைப் பிறவாத நிலையை அடையச் செய்கிறாள் என்று சுவைப்படக் கூறுகிறார் ஆசிரியர்.

அம்பிகை எவ்வுலகத்துக்கும் தாய். அவள் திருவுந்தியில் மலை, கடல், சதுர்த்தச புவனங்கள் யாவும் தோன்றுகின்றன. அவள் எல்லாவற்றையும் படைத்தாள் என்பதையே இவ்வாறு சொல்கிறார். தாய் ஆகையால் எல்லாவற்றையும் ஈன்ற திருவுந்தியை உடையாள் என்கிறார்.

பெரிய அலைகள் பொங்குகின்ற உப்புக் கடல் முதலிய கடல்களையும் ஈரேழ் புவனங்களையும் பூத்த உந்தியை உடையவள் அம்பிகை.

பொங்குஉவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்த உந்தி.

"பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும்" (13) என்று முன்பு பாடியவர் இவர். "அகில லோகம் ஈரேழும், உதர சோபி தாநாபி கமல வாயி னால்மீள உமிழும் நீலி" (110) என்பது தக்கயாகப் பரணி.

எம்பெருமாட்டியின் கூந்தல் இயற்கையான நறுமணத்தை உடையது. அதோடு மலரையும் அணிந்து கொண்டிருக்கிறாள். மலரை அணிவது மங்கலத்தின் அறிகுறி. நித்திய சுமங்கலியாகிய அம்பிகை என்றும் மலர் சூடிய குழலை உடையவள். மட்டுவார் குழலம்மை, ஞானப் பூங்கோதை, சுரும்பார் குழலி, வண்டுவார் குழலி, தேனார் குழலி என்று வெவ்வேறு தலங்களில் உள்ள அம்பிகையின் திருநாமங்கள் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும்.

உலகத்தை உண்டாக்கிய திருவுந்திக் கமலத்தையும், மணத்தையும் மலரையும் உடைய கூந்தலையும் பெற்ற அபிராமியின் அன்பர்கள் அந்தக் கோலத்தை வழிபட்டு மனத்திலே தியானிக்கிறார்கள்.

மால்வரையும்
பொங்கு உவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள்
திருமேனி குறித்தவரே.

அத்தகையவர்கள் பெறும் பயன் என்ன?

முதலில் இந்திர பதவியைப் பெற்றுக் கற்பகமரத்தின் நிழலில் தங்கி இன்புறுவார்கள்.

தங்குவர் கற்பக தாருவின் நீழலில்

முன் பாட்டிலும், "தமனியக் காவினில் தங்குவரே" என்று இந்திர பதவியைக் குறிப்பித்தார். தங்குவதாவது சில காலம் இருத்தல்; எப்போதும் நிலையாக இருப்பதன்று.

பிறகு அவர்கள் அடையும் நிலையைச் சொல்லுகிறார். சகல லோக மாதாவை ஆசிரயித்தவர்களுக்கு மறுபடியும் ஒரு தாய்க்குப் பிள்ளையாகப் பிறக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும்.

"ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை" (31)
என்று முன் ஒரு பாட்டில் இந்தக் கருத்தைச் சொன்னார்.

பற்று அறாமல் வினைகளை ஈட்டிக் கொண்டவர்களுக்கு அடுத்தடுத்துப் பிறவிகள் வந்து கொண்டே இருக்கும். கர்மம் உடையவர்கள் தப்பாமல் ஜன்மம் அடைவார்கள். இந்த நியதி வழுவாது. அவ்வாறு வழுவாமல் (தவறாமல்) மண்ணில் உண்டாகும் பிறவியை அன்பர்கள் பெறமாட்டார்கள். மற்றவர்களுக்கு முன் விளக்கமாகத் தோன்றும் பிறவித்தொடர் அவர்களுக்கு முன் இராமல் மங்கிப்போய்

விடும். பிறவிகளைத் தம் அளவில் மங்கச் செய்து விடுவார்கள், அம்பிகையின் அன்பர்கள்.

தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப்
பிறவியை.

தாயார் இருந்தால் குழந்தையாகப் பிறக்க வேண்டி வரும்; அதனால் பிறவிகள் அடுத்தடுத்து வந்து நிற்கும். இவர்களுக்கோ தாய்மார் இல்லை, பிறக்க வேண்டிய அவசியம் இல்லாமையால். மற்றவர்களுக்குத் தவறாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பிறவிகள் அவர்கள் முன் தோன்றாமல் மங்கிவிடும். பிறக்க மாட்டார்கள் என்பது கருத்து.

தங்குவர் கற்பக தாருவின்
நீழலில், தாயர்இன் றி
மங்குவர் மண்ணில் வழுவாப்
பிறவியை; மால்வரையும்
பொங்குஉவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழ லாள்திரு
மேனி குறித்தவரே.

[அட்ட குலாசலங்களையும் மேலே கிளரும் உப்புக்கடல் முதலிய ஏழு கடல்களையும் பதினான்கு புவனங்களையும் பெற்றெடுத்த திருவயிற்றையும், மணம் பரவியதும் மலரை அணிந்ததுமாகிய கூந்தலையும் உடைய அபிராமியம்மையின் அழகிய திருவுருவத்தைத் தியானம் செய்யும் அடியார்கள், இந்திர பதவி பெற்றுக் கற்பக மரத்தின் நிழலில் வீற்றிருப்பர்; பின்பு பூமியில் பிறந்து இறந்து தப்பாமல் வருகின்ற பிறவிைத் தம்மைப் பெறும் தாய்மார் இல்லாமையாலே மங்கச் செய்வர்.

தங்குவர்-சிலகாலம் இருப்பார்கள். தாரு-மரம். கற்பகதாருவின் நீழலில் தங்குவர் என்பது, இந்திர பதவி

யில் இருப்பார்கள் என்ற கருத்தை உடையது. தாயர்—பல பிறவிகளில் வெவ்வேருக வரும் தாய்மார்கள். மங்குவர்—மங்கச் செய்வர்; தன்வினை பிறவினைப் பொருளில் வந்தது. மண்ணில்-உலகத்தில். வழுவா-தவருமல் வருகின்ற- பிறவியை மங்குவர். உவர் ஆழியைச் சொன்னலும் உபலட்சணத்தால் மற்றக் கடல்களையும் கொள்ள வேண்டும். உந்தி என்றது நாபியைக் குறிக்கும்; இங்கே ஆகு பெயராய் வயிற்றைக் குறித்தது. கொங்கு இவர் குழலாள். பூங்குழலாள் எனத் தனித்தனியே கூட்டுக. கொங்குஇவர் என்பதைப் பூவுக்கு அடையாகவும்கொள்ளலாம். குறித்தவர்-நினைப்பவர்: தியானிப்பவர்.]

அடியவர்கள் இகம், பரம், வீடு என்ற மூன்று பயன்களையும் பெறுவார்கள் என்று முன்பு ஒரு பாட்டிலும் இவ்வாறு சொல்லியிருக்கிருர்.

"தண்ணளிக் கென்றுமுன் னேபல
கோடி தவங்கள்செய்வார்
மண்அளிக் கும்செல்வ மோபெறு
வார், மதி வானவர்தம்
விண்அளிக் கும்செல்வ மும்அழி
யாமுத்தி வீடும் அன்றே?
பண்அளிக் கும்சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியே." (15)

அம்பிகையை வழிபடுபவர்கள் பதமுக்தியையும் பரமுக்தியையும் முறையே பெறுவார்கள் என்பது இப்பாடலின் கருத்து.

அபிராமி அந்தாதியில் 75-ஆம் பாடல் இது,

அமுத நிலையம்